
தேவியின்
கண்மணி
20-10-2021
ரூ.20
லாவண்யா
நேசத்தின் உறைவிடம்


பெண்மணி
ஜி.ஏ.பிரபா
அக்டோபர்- 2021
ஆயிரம் மலரில் ஒரு மலர் நீயே...
-முழு நாவல்
ஆன்மிகம்:
நவராத்திரி, வெற்றித் திருவிழா!
சின்னத்திரை:
கொரோனாவில் இருந்து மீண்டு வந்தேன்!
-இலக்கியா
கோவில்:
திருமணத்தடை நீக்கும் கோவை - கோட்டைமேடு சங்கமேசுவரர்!
இசை:
இசையும், வயலினும் எனக்கு இறைவன் கொடுத்த வரம்!
-டெல்லி பி.சுந்தரராஜன்
சுற்றுலா:
ஹூப்ளி- ஒரு குட்டி மும்பை!
மருந்தே வாழ்க்கையாகி விடக்கூடாது!
-அக்கு ஹீலர் வைஷ்ணவி
ரூ.1000/- பரிசு அறிவுத்திறன் போட்டி
விலை ரூ.28/-

# தமிழீழ மக்களுக்கு தோள் தந்தவர்!

பலர் இராமச்சந்திர ஆதித்தனார் அவர்களைப் பல கோணங்களில் பதிவு செய்திருக்கிறார்கள்.

அவருடைய அன்பைப் பதிவு செய்தவர்கள் உண்டு. அறிவைப்பதிவு செய்தவர்கள் உண்டு. அனைத்துத் துறைகளிலும் தனித்தனியாக அவருக்கு இருந்த ஈடுபாட்டைப் பதிவு செய்தவர்கள் உண்டு.

இலங்கைத் தீவில் வாழும் தமிழீழ மக்கள் மீது அவர் கொண்டிருந்த இன உணர்வின் அடிப்படையிலான பற்றையும் – அவர்களின் இன்னல் கண்டு அவர் நெஞ்சின் ஆழத்தில் ஒவ்வொரு நொடியும் இடி ஓசையோடு வெடித்து நின்ற எரிமலை நெருப்பையும் பதிவு செய்வதே எனது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

-உணர்ச்சிக் கவிஞர்

**காசி ஆனந்தன்**



ஈழத்துக்குத் தமிழீழ மக்கள் ''சுயாட்சி கேட்ட காலத்தில், சுயாட்சி அல்ல - தமிழீம் இறையாண்மை கொண்ட தனி அரசு பெற வேண்டும்'' என்று கூறி இலங்கைப் படத்தில் இருந்த தமிழீழத்தின் எல்லைகளைத் தனியாகப் பிரித்து -முதன் முதல் 'தமிழீழ வரை படத்தை' உருவாக்கி - ஈழ மண்ணின் விடுதலைக்கு அடிக்கல் போட்ட ஈடிணையற்ற தலைவராய்த் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்கள் வரலாற்றில் இடம் பெறுகிறார்.

'உலகில் தமிழர்கள் பிழைக்கப்போன நாடுகள் பல உண்டு. ஆனால் தமிழ்நாடும் தமிழீழமும் தமிழர்களின் இரு தாய் நாடுகள்' என்று ஊர் ஊராகச் சென்று மேடை தோறும் தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்கள் உரத்துச் சொன்னார். தமிழ்-தமிழினம்-தமிழ் மண் என்று வாழ்ந்த தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் கைகளில் தமிழின உணர்வு தோய்ந்து வளர்ந்த தனையன் என்பதால் இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஒப்படைத்ததில் வியப்பில்லை.

இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் தந்தை வழியிலேயே எண்ணினார். தந்தை வழியிலேயே இயங்கினார்.


இராமச்சந்திர ஆதித்தனார் அவர்களோடு நெருங்கிப் பழகியவர்கள் மட்டுமே அவர் நெஞ்சில் இடைவிடாது கனன்று கொண்டிருந்த தமிழீழ நெருப்பை நேரில் பார்த்தவர்களாய் உணர்ந்தவர்களாய் இருப்பார்கள்.

தமிழீழ மக்களின் கண்ணீரையும், செந்நீரையும் தந்தை வழியில் இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் மாலைமுரசு இதழில் தமிழ்நாட்டை உலுக்கும் செய்திகளாக்கினார்.

சிங்கள இனவெறிப்படைகளின்

## அய்யா பா.இராமச்சந்திர ஆதித்தனார்
### நினைவு நாள் சிறப்பு கட்டுரை
### 16-10-2021

தமிழர்களுக்கு எதிரான கொலை வெறியாட்டத்தை 'மாலைமுரசு' இதழ் சினம் கொண்ட தலைப்புச் செய்தியாக்கிற்று.



தமிழ்நாட்டில் ஈழ விடுதலைப் போராட்டத்துக்குத் துணையாய் வெடித்த மக்கள் போராட்டங்களுக்கு மாலைமுரசு இதழில் முதலிடம் தரப்பட்டது.

தமிழீழத்தின் தலைவர்கள் யார் தமிழ்நாட்டுக்கு வந்தாலும் அவர்களைத் தன் அலுவலகத்துக்கு அழைத்து -தமிழ்நாட்டு மக்களின் துணை ஈழத்துக்கு என்றும் உண்டு என்று அவர்களைத் கட்டித்தழுவவும் அவர்களுக்கு ஆறுதல் கூறவும் இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் என்றுமே தவறியதில்லை.

இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் தமிழீழத்தின் மாபெரும் தலைவரான மேதகு வே.பிரபாகரன் அவர்களையும் ஒருமுறை சந்தித்து அவரோடு சில பொழுதுகள் இரண்டறக்கலந்தவர் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இராமச்சந்திர ஆதித்தனார் அவர்களோடு பழகிய காலமும் நினைவும் என் நெஞ்சில் என்றும் இருக்கும்.

என்னைச் சந்திக்கும் போதெல்லாம் 'நீங்கள் நலமா?' என்று அவர் என்றுமே கேட்டதில்லை. 'எப்படி இருக்கிறது உங்கள் நாடு?' என்றே கேட்பார்.

தமிழீழத்தில் சிங்கள இன வெறிப்படைகளால் தமிழர்கள் சுடப்பட்டுப் பிணங்களாய்க் குவியும் கொடிய நிகழ்வுகளை அவரிடம் நான் கூறும் வேளைகளில் ஓரிரு மணித்துளிகள் பேச்சற்றவராய் தலைகுனிந்து மேசையைப் பார்த்தபடி தன்னுள்ளேயே விம்மி வெதும்பி உட்கார்ந்திருப்பார் .

தமிழீழம் தலைநிமிர வாழ்நாளெல்லாம் உழைத்த மாலைமுரசு ஆசிரியர் இராமச்சந்திர ஆதித்தனார் அவர்களின் நினைவு நாளான இந்நாளில் தமிழீழம் மனநெகிழ்வுடன் தலைதாழ்த்தி அவரை வணங்குகிறது.




ஆசையாய் வளர்த்த செல்லப் பிராணி இறந்து போக, அதன் பிரிவை தாங்க முடியாமல் தவிக்கும் குழந்தையின் உணர்வுப் போராட்டம் தான் 'முகிழ்'.

ஊரில் உள்ள எல்லா தெருநாய்களிடமும் பாசத்தைக் கொட்டித் தீர்க்கும் அன்பின் பேரூற்றாய் இருக்கிறான் விஜய் (விஜய் சேதுபதி). ஆனால் நாய்களைக் கண்டாலே அவனுடைய மகள் காவ்யாவுக்கு (ஸ்ரீஜா) சுத்தமாக ஆகாது. அவளுடைய அச்சத்தை போக்க, ஒரு நாய்க்குட்டியை வீட்டுக்கு எடுத்து வந்து வளர்க்கிறான் விஜய். ஆரம்பத்தில் அதை எட்ட நின்று பார்க்கும் காவ்யா, தன் அம்மா ராதிகா, நாய்க்குட்டியை தூக்கிக் கொஞ்சுவதை பார்த்து அவளும் ஒட்டிக் கொண்டு நாளாக ஆக நாய்க்குட்டியுடன் பழகத் தொடங்குகிறாள்.

செல்ல நாய் ஸ்கூபி, அந்த வீட்டில் ஒரு ஜீவனாக மாறிப் போகிறது. ஒரு நாள் காவ்யா ஸ்கூபியை வாக்கிங் கூட்டிச் செல்லும் போது அது, கையில் இருந்து விடுபட்டு தெருநாயுடன் சண்டை போட ஓடுகிறது. இதனால் கோபித்துக் கொள்ளும் காவ்யா, ஸ்கூபியுடன் செல்லச் சண்டை போடுகிறாள். அந்த நேரம் பார்த்து வீட்டின் கேட்டைத் தாண்டி வெளியே போன ஸ்கூபி எதிர்பாராமல் ஒரு பைக்கில் அடிபட்டு நசுங்கி காவ்யா கண் முன்னே இறந்து போகிறது.

அந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமல் மன உளைச்சலுக்கு ஆளாகும் சிறுமி காவ்யா, பள்ளிக்குச் செல்லாமல், சாப்பிடாமல், சகஜமாக வீட்டில் யாரிடமும் பேசாமல் தன்னைத் தானே தண்டித்துக் கொள்கிறாள்.

தான் ஸ்கூபியிடம் கோபிக்காமல் இருந்திருந்தால் அன்றைய தினம் அது

இறந்திருக்காது என்று காவ்யா குற்ற உணர்சிக்கு ஆளாக, அவளை அதிலிருந்து மீட்டுக் கொண்டு வர முயல்கிறான் விஜய்.

மரணம் என்பது வாழ்வின் நியதி என்பதை காவ்யா புரிந்து கொண்டாளா? அவள் மனக் காயத்தை ஆற்றிய மருந்து எது? போன்ற கேள்விகளுக்கு விடை சொல்கிறது மீதிக்கதை.

செல்லப் பிராணிகளின் மீது பாசம் காட்டும் சராசரி குடும்பத் தலைவனாக விஜய் சேதுபதி, யதார்த்தமான ஹவுஸ் வைப் கேரக்டரில் ரெஜினா கசான்ட்ரா இருவரும் கேரக்டரில் பொருந்தி நடித்துள்ளனர்.

காவ்யா கேரக்டரில் நடித்திருக்கும் விஜய் சேதுபதியின் மகள் ஸ்ரீஜா, முதல் படம் என்று தெரியாத அளவுக்கு நடிப்பில் முத்திரை பதிக்கிறார்.

குறிப்பாக ஸ்கூபியாக வரும் மைலோ எனும் அந்த நாய் மனிதர்களைப் போலவே அத்தனை உணர்வுகளையும் இலகுவாக வெளிக்காட்டி ரசிக்க வைக்கிறது. ரேவாவின் பின்னணி இசையும், பாலாஜி தரணிதரன் எழுதிய மாண்டேஜ் பாடல்களும் ஓகே ரகம்.

பொன்மரின் ஒளிப்பதிவில் கேமரா கோணங்கள் கவனிக்க வைக்கின்றன.

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| விஜய்சேதுபதி | ● | ● | ◐ | ○ | ○ |
| ரெஜினா | ● | ● | ○ | ○ | ○ |
| ஸ்ரீஜா | ● | ● | ● | ○ | ○ |
| கதை | ● | ● | ◐ | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ○ | ○ | ○ |
| இயக்கம் | ● | ● | ○ | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ◐ | ○ | ○ |
| இசை | ● | ● | ○ | ○ | ○ |
| மொத்தத்தில் | ★ | ★ | ☆ | ☆ | ☆ |

விஜய் சேதுபதி புரொடக்ஷன்ஸ் தயாரித்திருக்கும் இந்த (குறும்)படத்தை கார்த்திக் சுவாமிநாதன் இயக்கியுள்ளார்.

செல்லப் பிராணி வளர்ப்பை தூண்டும் வகையிலான மேக்கிங், நாய்க்கும், சிறுமிக்குமான அன்பின் பரிமாற்றம் போன்றவை பாராட்டத்தக்க விஷயம். அதே சமயம், அரை மணி நேரத்தில் முடியும் யூடியூப் வெர்ஷன் ஷார்ட் பிலிம்மை, ஒரு மணி நேரத்திற்கு நீட்டி முழக்கி, ஒரு முழு நீளப் படத்துக்கான டிக்கெட் விலையை கப்பம் கட்ட வைத்தது டூமச்.





# என்னை நானே கரெக்ட் பண்ணிக்கிறேன்!

**எஸ்.கே. என்ற அடைமொழியுடன் உச்ச நடிகர்களின் படங்களுக்கு நிகராக ஓபனிங் வைத்திருக்கும் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவான 'டாக்டர்' படம் பலமுறை தள்ளிப் போய் ஒருவழியாக தியேட்டரில் ரிலீசாகியுள்ளது. நடிகர், பாடகர், பாடலாசிரியர், தயாரிப்பாளர் என பன்முகத்திறனுடன் திரையுலகில் வலம் வரும் அவருடன் அழகான சிட் சாட்.**

**டி.வி.யில் இருந்து வந்து பெரிய நடிகரா வளர்ந்திருக்கீங்க, உங்களுக்கான ஆடியன்சை எப்படிப் பிடிச்சீங்க?**

எந்தவிதமான இலக்கணமும் வகுத்துக்கிட்டு நான் எண்டர்டெயின்மெண்ட் பீல்டுக்குள்ள வரல. என்கிட்ட ஏதோ ஒண்ணு இருக்குன்னு ரசிகர்கள் நம்பினாங்க. ஒரே படத்துல எல்லா விதமான ஆடியன்சையும் நாம திருப்திபடுத்த முடியாது. ஆனா, ரசிகர்களின் அளவில்லாத அன்பும், ஆதரவும் எனக்குக் கிடைச்சது வரம்'னு தான் சொல்லணும்.

அதுக்காகவே நல்ல நல்ல கதைகளை தேர்வு செஞ்சு நடிச்சு அவங்களை சந்தோஷப்படுத்தணும்'னு நினைக்குறேன். எல்லா நேரத்திலும் அது சரியா அமையாது. தப்புப் பண்ணும் போதெல்லாம், அடுத்தமுறை அந்த தப்பு நடக்காம என்னை நானே கரெக்ட் பண்ணிக்குறேன்.

**லாக்டவுன் உங்களுக்கு எப்படிப் போச்சு?**

தொடர்ச்சியா ஷூட்டிங் போயிட்டு இருந்ததால, என்னோட சினிமா கெரியரை ஆராய்ஞ்சு பார்க்க முடியல. ஆனா இந்த லாக்டவுன் என்னை நானே சுய பரிசோதனை செஞ்சுப் பார்க்க உதவியா இருந்தது. உட்கார்ந்து பொறுமையா என்ன பண்ணோம், அடுத்து என்ன பண்ணணும்'னு தெளிவா யோசிக்க முடிஞ்சது. என் குடும்பத்தில் இருந்து சினிமா பீல்டுக்கு வந்த முதல் ஆள் நான்தான். எதை பண்ணணும், பண்ணக் கூடாதுன்னு சொல்லிக் கொடுக்க எனக்கு யாரும் இருந்ததில்ல. என்னுடைய நண்பர்களுக்கும் அப்படித்தான். எனக்கு கிடைச்ச அனுபவங்களை வச்சுத் தான், வெற்றி, தோல்வி, பாராட்டு, விமர்சனம் எல்லாம் சரிசமமா ஏத்துக்கிட்டு என்னை


டாக்டர்




நானே மேம்படுத்திட்டு வர்றேன்.

**❋ நீங்க நம்பிக்கைவச்சு நடிச்ச படங்கள் சரியா போகலையே?**

டீம் வொர்க்'ல எனக்கு நம்பிக்கை அதிகம். ஷூட்டிங் போறதுக்கு முன்னாடி வரைக்கும் நான் ஆயிரம் டவுட் கேப்பேன். ஆனா, ஸ்பாட்'க்கு போன பிறகு டைரக்டர் சொல்றதுக்கு மறு பேச்சு இருக்காது. நான் தேர்வு செஞ்சு கதைகளில் நம்பிக்கை இருந்தது.

'ஹீரோ ' படத்தில் மித்ரன் சார் வொர்க் பிடிச்சது. கடைசி சீனில் பெத்தவங்க தன்னோட பிள்ளைங்க ரஃப் நோட் எடுத்துப் பார்ப்பாங்க, அது தான் அந்த படத்தோட மெசேஜ்.

'வேலைக்காரன்' படத்தைப் பார்த்துட்டு பாஸ்ட் புட் சாப்பிடுறதை விட்டுட்டேன்'னு ஒரு குழந்தை என்கிட்ட சொல்லுச்சு. ஒரு படம் ஆடியன்ஸ் கிட்ட எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்'ங்கிறதுக்கு இதுவே பெரிய உதாரணம்.

**❋ உங்க அசுர வளர்ச்சியை நீங்க எப்படிப் பார்க்குறீங்க?**

என்னோட ஐடியா இதுதான்'ன்னு ஒரு லைன்'ல சொல்லிட முடியாது. நம்ம வளர்ச்சியை ரெண்டு பாகமா பிரிசைக்கணும். மனதளவில் நம்ம வளர்ச்சி, பொதுவெளியில் நம்ம வளர்ச்சி எப்படி இருக்குன்னு பிரிச்சுப் பார்த்து அதுல இருந்து நமக்கான அறிவை, அனுபவத்தை எடுத்துக்கணும். அதே சமயம், ஒரு நடிகனா என்னோட வளர்ச்சி தான் மற்ற ரெண்டையும் முடிவு செய்யுது. மிமிக்ரி பண்ணும் போது, சொந்த ஊரை விட்டு எப்படி போறதுன்னு யோசிச்சேன். டி.வி. ஆங்கரா இருந்தப்போ அடுத்த கட்ட வளர்ச்சி பத்தி யோசனை இருந்தது. மாற்றத்தை நான் புரிந்து

ஏத்துக்கலன்னா இந்த வளர்ச்சி இருந்திருக்காது.

**❋ பப்ளிக் இமேஜ், உங்க தனிப்பட்ட வாழ்க்கையை எந்த அளவுக்கு மாத்தியிருக்கு?**

என்னோட குடும்பத்து மேல நான் வச்சிருக்குற லவ் கொஞ்சம் கூட மாறல. நல்ல வீட்டுக்கு மாறிட்டோம், பெரிய கார் வாங்கிட்டோம்'னு வெளிப்பார்வைக்கு வாழ்க்கை மாறியிருந்தாலும், உள்ளுக்குள்ள பழைய வாழ்க்கை தான் வாழுறோம்.

பண்டிகைக்கு ஸ்வீட் செஞ்சு சாப்பிடுறது, ஒண்ணா கூடி அரட்டை அடிக்குறது'ன்னு எல்லாம் அப்படியே தான் இருக்கு. என்னதான் மரம் உயரமா வளர்ந்தாலும், வேரை மறக்காம இருக்குறது முக்கியம். முன்னலாம், எங்க பேவரிட் நடிகர் படத்துக்காக நண்பர்கள் வேண்டிக்குவாங்க, இப்போ என் படத்துக்காக பிரேயர் பண்றாங்க.

**❋ இன்னும் கூட மிமிக்ரி பண்றீங்களா?**

ஹ்ம்ம், இப்போவும் பிராக்டீஸ் பண்ணுவேன், ஆனா முன்ன மாதிரி இலகுவா பண்ண முடியல. யாராச்சும் என்னை மாதிரி மிமிக்ரி பண்ணா ஆச்சர்யப்படுவேன், உடனே கூப்பிட்டு பாராட்டுவேன். ஏன்னா, என் வாய்ஸ்'ல எந்த தனித்துவமும் இல்ல, அப்படி இருந்தும் மிமிக்ரி பண்றாங்கன்னா பெரிய விஷயம்.

**❋ உங்க ரசிகர்கள் கூட பெர்சனலா பேசவும் செய்யுறீங்க?**

ஒருத்தருடைய சந்தோஷத்துக்கு நாம காரணமாக இருக்குறது ரொம்ப ஸ்பெஷல். நான் இருக்குற இடம், அந்த பெருமையை கொடுத்திருக்கு. ரொம்ப முடியாத யாருக்காவது உதவி தேவை, உடல்நிலை சரியில்லாத



வேலைக்காரன்




என் ரசிகர் என்னைப் பார்க்க நினைக்குறார்'னா உடனே என் டீம் மூலமா தெரியப்படுத்தி சந்திக்குறேன். ஸ்க்ரீனை தாண்டி, ஆத்மார்த்தமான அன்போட இருக்குற ரசிகர்களை சந்திக்குறது பாக்கியம்.

**ஒரு நடிகரா, தயாரிப்பாளரா என்ன வித்தியாசத்தை உணருறீங்க?**

ஒரு நடிகரா என்னால முடியாத சில விஷயங்களை தயாரிப்பாளரா என்னால செய்ய முடியுது. ஒரு நடிகரா 'வாழ்' படத்தை என்னால செய்ய முடியாது, ஆனா தயாரிக்க முடிஞ்சதில் பெருமையா இருக்கு. ஏன், நெல்சன் 'கோலமாவு கோகிலா' மாதிரி ஒரு ஹிட் கொடுத்த பிறகும் கூட 'டாக்டர்' படத்தோட கதையைக் கேட்டு தயாரிப்பாளர்கள் யோசிப்பாங்க, ஆனா எனக்கு நம்பிக்கை இருந்ததால் தயாரிச்சேன்.

**சினிமா பீல்டுல வர்ற மனக்கசப்புகளை எப்படி எடுத்துப்பீங்க?**

மனக்கசப்பு, வெறுப்பு எதையும் மனசில் ஏத்தி வச்சிக்க மாட்டேன். கொஞ்ச கொஞ்சமா மறந்துடுவேன். அதுவும் கொரோனா காலத்தில் என்னோட எண்ண ஓட்டம் டோட்டலா மாறிடுச்சு. நமக்கு ரொம்ப பிடிச்ச, நாம நேசிக்குறவங்களோட கூடுதலா நேரம் செலவிடனும்'னு நினைக்குறேன்.

இருக்கும் போது இறுக்கமா இருந்துட்டு போன பிறகு புலம்பி புண்ணியமில்ல. அதான் வெறுப்பை யோசிக்க நான் விரும்பல. நான் கடந்து வந்த வாழ்க்கையை எப்போவும் மறக்க மாட்டேன். அதுதான் என்னை ஒழுங்குபடுத்தி இந்த அளவுக்கு வளர்த்து விட்டிருக்கு. அந்த அழகான காலம் திரும்ப வராதுன்னாலும் அப்பப்போ மனசுக்குள்ள வாழ்ந்து பாத்துடுவேன்.

–தவா

# மோடி அரசு அடிக்கிறதெல்லாம் அவசியமில்லாத ஆணிதான்?





**எதையோ விட்டுவிட்டு, எதையோ செய்த கதையாக தேவையான திட்டங்களை புறந்தள்ளிவிட்டு தேவையற்ற ஆணிகளை புடுங்கும் வேலையை ஒரு அரசு செய்தால் மக்கள் மனநிலை எப்படி இருக்கும்?**


டாய்கத்தான்-2021 உரை...

வாகனங்களின் ஹாரன்களில் இந்திய இசைக் கருவிகளின் இசை மட்டுமே இருக்குமாறு விரைவில் சட்டம் கொண்டுவர திட்டமிட்டு வருவதாக மத்திய நெடுஞ்சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் போலீஸார் வாகனங்கள், ஆம்புலன்களில் பயன்படுத்தப்படும் சைரன் ஒலி, காதுகளுக்கு இனிமையாகஇருக்குமாறு மாற்றவும், அதாவது 'ஆல் இந்தியா ரேடியோ'வில் உள்ள இசை போன்று இருக்குமாறு ஆக்கவும் ஆய்வு செய்து வருவதாக அவர் கூறியுள்ளார். அதாவது, கார் ஏற்றிக் கொல்லப்படும் விவசாயிகளின் கூக்குரலை காரின் ஹாரன் இனிமையானதாக இனி மாற்றிவிடும் என்று சொல்கிறார்கள் போல... இப்படி இணையவாசிகள் கலாய்த்து தள்ளுகிறார்கள்.

நிதின் கட்கரி மட்டுமல்ல, மோடி முதல் அவரது சகாக்கள் அனைவருமே நேரம் காலம் தெரியாமல் ஜோக்கடிப்பார்கள். கொரோனா காலத்தில் இவர்கள் அடிக்காத ஜோக்கா?

கடந்த ஜூன் 24ல் புதுமையான பொம்மைகளுக்கான 'டாய்கத்தான்-2021' போட்டி நடந்தபோது கொரோனா உச்சகட்டத்தில் இருந்தது. அப்போது காணொளிக் காட்சி கலந்துரையாடிய மோடி, ' இந்தியா சுமார் 80% பொம்மைகளை இறக்குமதி செய்கிறது, நாட்டில் இருந்து கோடிக்கணக்கான ரூபாய் விரயமாகிறது' என கவலைப்பட்டார். அதுமட்டுமல்ல, 'உள்ளூர் பொம்மைகளுக்கு நாம் குரல் கொடுக்க வேண்டும். இந்திய பொம்மைகள் சர்வதேச அளவில் போட்டியிடுவதற்கு ஏதுவாக புதிய கண்டுபிடிப்புகளின் நவீன மாதிரிகள் மற்றும் நிதி ஆதரவு அளிக்க வேண்டும்' என்றார்.

அதுமட்டுமல்ல, இணைய

வழி கல்விக்கே ஏகப்பட்ட இடையூறு இருக்கும் நிலையில், 'இந்தியாவில் மெய்நிகர், மின்னணு மற்றும் இணையதள விளையாட்டுகளின் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய வேண்டும்' என்று வேண்டுகோளும் விடுத்தார்.

கொரோனா காலத்தில் மக்களை சுத்தலில்விட்டாலும் மயிலுக்கு உணவிட்டு ஜீவ காருண்யம் பாராட்டியது, யோகா செய்து அசத்தியது எல்லாம் அந்த வகையில் பார்க்கப்படவேண்டியதுதான்.

மோடி அரசு அமைந்ததிலிருந்து கார்பரேட்களுக்கு ஆதரவான, ஆதாயமான திட்டங்கள் விறுவிறுப்பாக நிறைவேற்றப்படுகின்றன என்று பொருளாதார நிபுணர்கள் பலர் விமர்சிக்கின்றனர்.

ஒருவேளை வாகன ஹாரனில் இந்திய இசையை புகுத்தும் திட்டமும்



**ஃபோர்ப்ஸ் எழுதிய ஒரு கட்டுரையில், மோடியின் ஆட்சியில் கட்ச் வளைகுடா பகுதியில் மட்டும் அதானி குழுமத்துக்கு 7,350 ஹெக்டேர் நிலம், ஒரு சதுர மீட்டர் ஒரு ரூபாய் என்ற தொகைக்கு 30 வருஷக் குத்தகைக்கு வழங்கப்பட்டது. அப்படி அளிக்கப்பட்ட நிலத்தை சுமார் 15 மடங்கு அதிக தொகைக்கு 'இந்தியன் ஆயில்' உள்ளிட்ட நிறுவனங்களுக்கு அதானி குழுமம் உள்குத்தகைக்கு விட்டது என குறிப்பிட்டிருந்தது.**

அந்த வகையை சேர்ந்ததாக இருக்குமோ? என்று சில சந்தேகப் பிராணிகள் கேட்கின்றனர். செல்போனில் ஒலிக்கும் ரிங் டோனுக்கு ராயல்டி கேட்பது போல், ஒவ்வொரு முறை அடிக்கப்படும், ஹாரனின் சத்தத்துக்கும் கணக்கீடு செய்து பெரு நிறுவனங்களுக்கு ராயல்டி கிடைக்க ஏதேனும் திட்டம் இருக்குமோ என்னமோ என்பதே தற்போது மக்களின் ஐயம்.

ஏனென்றால் கொரோனா



உயர் பொருளாதார நிபுணர்கள்
பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பு....

காலத்தில் வறுமையில் தவித்த மக்களுக்கு உதவி செய்ய முன்வராத நிலையிலும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகையை அறிவித்த அரசு அல்லவா.. மோடி அரசு!

அதை வரவேற்பது போல், 2020ஆம் ஆண்டுக்கான தொழில் முனைவோர் விருது வழங்கும் காணொளி முறையிகான விழாவில், ''மோடி ஆட்சியில், இந்தியாவை பார்க்கும் போது தனியார் நிறுவனத்தின் தொழில்முனைவோர்களுக்கு சுனாமி போல ஏராளமான வாய்ப்புகள் உள்ளன'' என முகேஷ் அம்பானி பேசியுள்ளார்.

அதானியும் அவ்வப்போது மோடியின் அரசை பாராட்டத் தவறுவதில்லை. அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

நிலக்கரி சுரங்கம், எரிவாயு, துறைமுகங்கள் உள்ளிட்ட அவருடைய நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட ஷேர்களின் மதிப்பு கூடிக்கொண்டேதான் வருகிறது. இந்த வருடத்தில் மட்டும் அதானி க்ரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனம் ஆறு மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது.

என்னவோ, மத்திய அரசின் புதிய கொள்கைகள் இக்குழுமம் மேற்கொள்ளும் திட்டங்களுடன் ஒத்துப்போகிறது. அரசாங்கம் மேம்படுத்த வேண்டும் என்று நினைக்கும் துறைகளில் திடீரென அதானி குழுமம் மூக்கை நுழைக்கிறது.

பாதுகாப்புத் துறை சார்ந்த தயாரிப்புகளை இந்திய நிறுவனங்களே தயாரிக்க வேண்டும் என்றபோது அதானி பாதுகாப்பு கருவிகளைத் தயாரிக்கும் நிறுவனத்தைத் தொடங்கினார். மூன்று வருடங்கள் கழித்து, எரிவாயு துறையை அரசு ஊக்குவித்ததைத் தொடர்ந்து, எரிவாயுவை சில்லரை விற்பனை செய்யும் பெரிய

தனியார் நிறுவனமான தன்னை தகவமைத்துக் கொண்டது இந்நிறுவனம்.

விமான நிலையங்கள் தனியார் மயம் என்றதும், 2019ஆம் ஆண்டு விமான நிலையங்களைக் குத்தகைக்கு எடுப்பதில் கவனம் செலுத்தினார். சமீபத்தில் விடப்பட்ட ஏலத்தில் அதானி குழுமம் அதிக இடங்களை எடுத்த சர்ச்சை குறித்த வழக்கு இன்னும் உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது.

பிரதமர் மோடியின் புதிய இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஆத்மன் நிர்பார் உள்ளிட்ட ஸ்லோகங்களுக்கேற்ப தற்போது தரவு ஸ்டோரேஜ், நிதி நிறுவனங்களைத் தொடங்க அதானி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

தற்போது ஒன்றிய அரசு எரிவாயு விலையை தடாலடியாக 62 சதவீதம் உயர்த்தியுள்ளது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயுவில் 30 சதவீதத்தை மின்சார உற்பத்தி நிறுவனங்களும், 27 சதவீதத்தை விவசாய உரம் தயாரிப்பு நிறுவனங்களும் பயன்படுத்துகின்றன. இது அந்த துறைகளில் இருக்கும் அம்பானி, அதானி குழுமங்களுக்கு ஜாக்பாட்



என்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

அதேவேளை, எரிவாயு விலை உயர்வின் மூலம் உரங்களின் விலை அதிகரிப்பது மட்டும் அல்லாமல் விவசாய பொருட்களின் உற்பத்தி செலவுகளையும் அதிகரிக்கும். மின்சார உற்பத்தியும் அதிக செலவினமானதாக மாறும். இந்த செலவு எல்லாம் ஏழை விவசாயிகளின் தலையில் விடியும் என்பதையும் சொல்லாமலிருக்க முடியாது.

இந்தியாவில் ட்ரோன் உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்பதற்காகச் சுமார் 120 கோடி ரூபாய் அளவிலான பிஎல் ஐ ஊக்குவிப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு ரிலையன்ஸ் ஜியோ

**ஒன்றிய அரசு டீப் வாட்டர் மற்றும் இதர கடுமையான பகுதிகளில் இருந்து உற்பத்தி செய்யும் இயற்கை எரிவாயு விலையை 3.62 டாலரில் இருந்து 6.13 டாலர் வரையில் உயர்த்தியுள்ளது. இப்புதிய விலை உயர்வின் மூலம் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், கேஜி பேசின் பகுதியில் இருந்து உற்பத்தி செய்யும் இயற்கை எரிவாயுவுக்கு அதிக விலை கிடைக்க உள்ளது. ஆக, எரிவாயு விலை உயர்வு அறிவிப்பு அம்பானி அதானிக்கு லாபம், அப்பாவி பொதுமக்கள் பாவம் தான்.**

நிறுவனத்தின் கீழ் இருக்கும் ஏஸ்ட்ரியா ஏரோஸ்பேஸ், அதானி குழுமத்தின் கீழ் இருக்கும் அதானி டிபென்ஸ் அண்ட் ஏரோஸ்பேஸ், ஐடியாபோர்ஜ் டெக்னாலஜி, டைனமேட்டிக் டெக்னாலஜிஸ் என 4 நிறுவனங்கள் ட்ரோன் உற்பத்தி அல்லது அசம்பிளி பிரிவை விரிவாக்கம் செய்ய விருப்பம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக ஒன்றிய அரசு, கார்பரேட்டுகளுக்கு ஆதரவான திட்டங்களை மட்டும் நிறைவேற்றவில்லை, சட்டங்களையும் கொண்டு வருகிறது. தொழிலாளர் நலச் சட்டங்களை ஒழித்துக்கட்டவும் அது மசோதா தயாரித்துள்ளது.

இப்படி கார்பரேட்டுகளுக்கு வாரி வழங்கும் திட்டங்களை கொரோனா பேரிடர் காலங்களிலும் நிறுத்தாத ஒன்றிய அரசு, அப்பாவி ஏழை ஜனங்களுக்கு வழங்கும் சின்னச்சின்ன சலுகைகளுக்கு மட்டும் அவ்வப்போது ஃபுல் ஸ்டாப் போட்டுவிடுகிறது.

★ கியாஸ் சிலிண்டருக்கான மானியம் கொஞ்சம், கொஞ்சமாக குறைக்கப்பட்டு இப்போது நிறுத்தும் நிலைக்கு வந்துள்ளது. மின்சார மானியம் நிறுத்தப்பட்டு இலவச மின்சாரத்திட்டம் ஜாம் ஆகும் நிலை உள்ளது.

★ரயில் டிக்கெட் கட்டணத்தில்மக்களுக்கு வழங்கப்படும் வழக்கமான சலுகைகள் ரத்து செய்யப்பட்டன. குறிப்பாக, முதியோருக்கான டிக்கெட்

**அம்பானி ஒருபுறம் தொலைத்தொடர்பு, சூப்பர் மார்க்கெட்கள், பெட்ரோலியம் என வணிகம் சார்ந்து தொழில் செய்ய... அதானியோ, துறைமுகம், ரயில்வேத்துறை, விமான நிலையங்கள், எரிசக்தி என அடிப்படை சேவை சார்ந்த களத்தில் பயணித்து லாபமீட்டுகிறார். இரு கார்பரேட்டுகளும் முட்டிக்கொள்ளாமல், மோதிக்கொள்ளாமல் சமாதானமாக வளரும் வகையில் அரசின் திட்டங்கள் இருக்கின்றன.**

கட்டண சலுகை நிறுத்தப்பட்டு விட்டது. பிளாட்பாரம் டிக்கெட் விலையும் பலமடங்கு உயர்த்தப்பட்டது.

★ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பதற்கான விதிமுறைகளை கடினப்படுத்தியதோடு, அதற்கு 18 சதவீதம் ஜிஎஸ்டியும் விதிக்கப்பட்டுள்ளது. வங்கியில் கடன் வாங்கி 1 சென்ட் 1.5 செண்டில் வீடு கட்டும் மக்களிடம் ஜிஎஸ்டி வசூலிப்பது கொடுமை என்பதை அரசு கருத்தில் கொள்ளவில்லை.

★நிலத்துக்கு கீழ் உள்ள நீர் ஆதாரத்துக்கு உரிமை கோரும் மற்றொரு மசோதா மோடியின் ஆரம்ப கால ஆட்சியில் நீர் சட்டமாக கொண்டுவரத்தயாராக இருந்தது. அதன்மூலம் நிலத்தடி நீரை பயன்படுத்தவும் காசு கொடுக்க வேண்டியிருக்கும்.

★அதுமட்டுமல்ல, வேளாண் விளைபொருள் வர்த்தகம் மற்றும் வணிகம் (ஊக்குவித்தல் மற்றும் வசதி ஏற்படுத்துதல்) மசோதா, 2020, விலை உத்தரவாதம் மற்றும் வேளாண் சே வைக்கான விவசாயிகள் (அதிகாரம் அளிப்பு மற்றும் பாதுகாப்பு) ஒப்பந்த மசோதா 2020, என்ற 3 மசோதாக்கல் மூலம் விவசாயிகளை ஓராண்டுக்கு மேலாக போராட வைத்துள்ளது.

பயறுகள், அவரை வகைகள், எண்ணெய் வித்துகள், வெங்காயம்,



அதானி க்ரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனம்.




உருளைக்கிழங்கு ஆகியவற்றை அத்தியாவசியப் பொருள்கல் பட்டியலில் இருந்து அரசு நீக்கியதாலும் விளைபொருட்களை தனியார்கள் பெருமளவில் பதுக்கி வைத்து செயற்கை பற்றாக்குறை ஏற்படுத்துவார்கள் என்பதாலும் விவசாயிகளோடு, பல்வேறு அமைப்புகளும் அதை எதிர்க்கின்றன.

இத்தனைக்கு பிறகும் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏதோ நன்மை செய்ததை போல, அதை நிரூபிக்க மோடி தீவிரமாக முயன்று வருகிறார். சில நாட்களுக்கு முன்பு 'அஸாதி 75 புதிய நகர இந்தியா - நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்' என்ற தலைப்பில் எக்ஸ்போ ஒன்றில் கலந்து கொண்டார்.

அப்போது, 'பிரதான் மந்திரி சுயநிதி யோஜனா திட்டத்தின் மூலம் நாடு முழுக்க சாலையோரங்களில் கடைகள் வைத்திருக்கும் மக்கள் நலன் அடைந்துள்ளனர். அவர்கள் இன்று இந்த விழாவிற்கும் வந்துள்ளனர்' என்றதோடு அவர் நிறுத்தியிருக்கலாம்.

கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விழாவுக்கு வந்த பெண் ஒருவரிடம், ''உங்களுக்கு பிரதான் மந்திரி சுயநிதி யோஜனா திட்டத்தின் மூலம் நிதி கிடைத்ததா.. கணக்கில் நிதி சேர்க்கப்பட்டதா?'' என்று கேட்டுத் தொலைத்துவிட்டார்.

அந்தப்பெண்ணாவது பெரிய மனிதர் கேட்கிறாரே என்று சமாளிக்கும் வகையில் ஏதாவது சொல்லியிருக்கலாம். ஆனால், ''இல்லை சார்.. எனக்கு பணம் எதுவும் கிடைக்கவில்லை'' என்று போட்டு உடைத்துவிட்டார். ஆனாலும் அதற்கெல்லாம் அசந்து போகின்றவரா நமது பிரதமர், 'டக்'கென்று சுதாரித்துக்கொண்டு, 'ஓ அச்சா' என்று சொல்லி சமாளித்தார்.

ஆக, நாட்டின் செல்வங்கள் மக்களுக்கு சேராமல், கார்பரேட் கம்பெனிகளுக்கு போய் சேரும் நிலையில், இந்திய மரபு சார்ந்த ஹாரன் ஒலி இந்தியர்களின் விசும்பல் சத்தத்தை அமுக்குமா என்று தெரியவில்லை.

-பரிதிபாலன்

# வலையில் வசீகரித்தது



ஜோக்கர்@ItsJokker

உ.பி ல விவசாயிகள கார் ஏத்தி கொலை பண்ணிருக்காங்களே. #சங்கீஸ் ~ செத்தவன விடுங்க. இனிமே ஹார்ன்ல இந்திய இசைக் கருவிகளின் இசை மட்டுமே ஒலிக்கணும்னு புதிய சட்டம் போட்டுருக்காங்களே.. ஜீ மட்டும் இல்லன்னா...

காளையன்..@Giri47436512

படிச்சவன் சொன்னா'பர்பெக்டா' இருக்கும்..குடிச்சவன் சொன்னா'பார்'எபெக்டா இருக்கும்..

நா இரவீந்திரன்@RavindranRasu

திருமணம் 'ஸ்டார்ட் கேமரா ஆக்ஷன்', விவாகரத்து 'ஷாட் ஓகே கேமரா ஆஃப்' என்பது போல் ஆகிவிட்டது!



மயக்குநன்
@LAKSHMANAN_KL

உலகின் மிகப்பெரிய பசுமை எரிசக்தி மையமாக இந்தியா உருவெடுத்து வருகிறது! - பிரதமர் மோடி.#கேஸ் சிலிண்டர் உலை உயர்வால், மக்கள் விறகடுப்புக்கு மாறிட்டு வர்றதைச் சொல்றாரோ..?!





balebalu@balebalu
karakattakaran

ஏண்ணே அவனை அடிக்கிறீங்க ?
பின்ன என்ன ? வாட்சப்,
பேஸ் புக் கொஞ்ச நேரம்
முடங்கியதால ஓனருக்கு 7
பில்லியன் நஷ்டமாமே ? அப்போ
அதிலேயே 24 மணி நேரமும்
இருக்கோமே நமக்கெல்லாம்
எவ்வளவு
நஷ்டம் ன்னு புலம்புறாம்ப்பா...

எனக்கொரு டவுட்டு
@Thaadikkaran

பிளிப்கார்ட் அமேசான் ஆபர்
எல்லாம் பார்த்துட்டு ஏதாவது
வாங்கலமுன்னு ரொம்ப நேரம்
தேடிட்டு இருக்கும் போது மனசு
சொல்லும் 'எப்படியும் வேடிக்கை
பார்த்துட்டு வெளிய போக
போற அதுக்கு எதுக்கு இம்புட்டு
அலுப்பு'ன்னு..

செந்திலின்சுகிறுக்கல்கள்
@Annaiinpillai

பாஜக வில் கசப்புடன்தான்
இருக்கிறேன்- ராதாரவி #
சாணிய தெரிஞ்சே மிதிச்சா பின்ன
சந்தன வாசனைய அடிக்கும்
மொமெண்ட்..!

பாலசுப்ரமணி@balasubramni1

பெட்ரோல் விலையை லிட்டருக்கு
35 குறைக்க பாஜக தயாராக
உள்ளது : அண்ணாமலை
#'ஆனால் நேரு காலத்தில்
போடப்பட்ட பொருளாதாராத்
திட்டம்தான் அதைக் குறைக்கத்
தடுக்குது'... அடுத்து
அப்படித்தானே
சார் சொல்லுவீங்க ?

Mannar & company™
@RajaAnvar_Offic

நாட்டுக்கு சொந்தமாக
விமானம்கூட இல்லாத
நாடாகவும்,தனியாருக்கு
சொந்தமாக பிரதமரும் இருக்கும்
நாடு இந்தியா!

amudu@amuduarattai

நிழல் தந்த பெரிய மரத்தை வெட்டி
விட்டு, அந்த இடத்தில் நிழல்குடை
அமைப்பது என்ன டிசைனோ.



ஜோக்கர்...@ItsJokker

ஆட்டுக்குட்டி ~
'பெட்ரோல் விலையை
லிட்டருக்கு ரூ 35 குறைக்க
போறோம்.'
~ 'வாவ், சூப்பர் ஜி'
'ஆனா அதுக்கு முன்னாடி,
லிட்டருக்கு ரூ. 40 கூட்டிருவோம்.'



மயக்குநன்@LAKSHMANAN_KL
சில கொள்கை முடிவுகள் எடுத்ததால், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக வெற்றி வாய்ப்பைப் பெற முடியவில்லை!- ஓபிஎஸ்.#பாஜக கூட கூட்டணி வெச்சதுதானே அந்த கொள்கை முடிவு..?

முதியோன்@laksh_kgm
பாமரனைப் பற்றி கவலைப்படாமல்,அவனது வருமானத்தை இழக்கச் செய்ததால்தான், நாட்டின் வாங்கும் சக்தி குறைந்து, பொருளாதாரம் குப்புற வீழ்ந்துகிடக்கிறது



கடைநிலை ஊழியன்
@Suyanalavaathi karunas
Airtel ~நெட் slow வா இருந்தா கூட பரவாயில்ல யுவர் ஆனார்.. இன்ஸ்டாகிராம், பேஸ்புக் ஒர்க் ஆகலனா கூட என்னைய சந்தேக படுறானுங்க யுவர் ஆனார்..

இதயவன் @itz_idhayavan
ஸ்டாலின் இரண்டு லட்ச ரூபாய் சைக்கிளில் 2 கிலோ மீட்டர் செல்வதே பெரிய சாதனையாகப் பார்க்கப்படுகிறது ~ அண்ணாமலை #ஜி மாதிரி ஃப்ளைட் வாங்கி ஊர் ஊராக சுத்தினா தான் சாதனை னு ஒத்துபார் போல ?!

Mannar & company™
@RajaAnvar_Offic
நடப்பாண்டில் தீபாவளி சிறப்பு விற்பனை ரூ.200கோடியை இலக்காக நிர்ணயித்தது தமிழ்நாடு 'கோ-அப் டெக்ஸ்' நிறுவனம்! -செய்தி #ஆனாலும் வெற்றிப் பெறுவது என்னவோ 'டாஸ் மாக்' காதான் இருக்கும்.



**சரவணன். @saravankavi**

எல்லையில் சீனா ஊடுருவலை தடுக்காமல் 56 அங்குல மார்புடைய மோடி என்ன செய்கிறார்? -ராகுல் காந்தி.#போட்டோஷூட் பண்றது, புது டிரஸ் போடறது, பிளைட்ல ஊர் சுத்தறது, மான்கிபாத்ல பேசறதுன்னு ஏகப்பட்ட வேலை இருக்கே...

**மாஸ்டர் பீஸ் @Kannan_Twitz**

டயட்ல இருக்கனும்னா ரொம்பலாம் மெனக்கெட தேவையில்லை!நாம சமைச்சுதான் சாப்பிடம்னு முடிவு பண்ணிட்டாலே போதுமானது!சமையல் பண்ணனும்னு நினைச்சாலே பசியே மறந்திடுது!!!

**Selva Bharathi@asdbharathi**

கற்றது கையளவு கூட இல்லை என்பது ஓரளவு கற்றுக் கொள்ளும் போது தான் தெரியும்.



**mohanram.ko@mohanramko raguvaran**

54 ஆண்டு காலமாக அ.தி.மு.க.,தி.மு.க. மாறி மாறி ஆட்சி செய்தும் எந்த முன்னேற்றமும் அடையவில்லை ~ அன்புமணி ராமதாஸ்#குடும்பமா? கட்சியா? எதை சொல்றாரு...



**இதயவன் @itz_idhayavan mayilsamy**

என்னோடு ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்க சிவராஜ் சிங் சவுகான் தயாரா? ம.பி பாஜக முதல்வருக்கு கமல்நாத் சவால் ~#அது அனாவசியம் நழுவுற போட்டி இருந்தா சொல்லுங்க, அதுல தான் நாங்க எப்பவும் சாம்பியன்..?!



# அரசியல்ல... இது சாதாரணமப்பா


ஷெர்மான் அலி

அசாமில் மதரீதியாக மோதலைத் தூண்டும் வகையில் பேசிய காங்கிரஸ் எம்.எல்.ஏ ஷெர்மான் அலி அகமது கைது செய்யப்பட்டார். அவர் மீது தேசவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, அசாமில் 1983- ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தில்உயிரிழந்த 8 தியாகிகள் தொடர்பாக பேசிய ஷெர்மான் அலி அகமது 'அவர்கள் தியாகிகள் கிடையாது. சிறுபான்மையின சமுதாயத்தினரை கொலை செய்தவர்கள். முஸ்லிம்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே அந்த 8 பேரையும் தாக்கினர்' என்றார்.

ஒரு கிலோ உப்பு சுமார் ரூ.15 க்கு கிடைக்கிறது. ஆனால் உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள பித்தோரகார் மாவட்டத்தில் ஒரு கிலோ உப்பு ரூ.130க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதைப்போல அத்தியாவசிய பொருள்கள் யாவும் கூடுதல் விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன. சீனாவை ஒட்டியுள்ள மலைப்பாங்கான இந்த மாவட்டத்தில் போக்குவரத்து பெரும் பிரச்சினையாக உள்ளது. விலை ஏற்றத்திற்கு இது தான் பிரதான காரணம் என்று கூறப்படுகிறது.



திரிணாமுல் காங்கிரஸ் கோவாவிலும் வேரூன்றத் தொடங்கியுள்ளது. கோவா மாநில முன்னாள் முதல்வரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான லூயிசின்கோ பெலிரோ மேற்கு வங்காள முதல்வரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜியை சந்தித்து, கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். இன்னும் 5 மாதங்களில் நடைபெறவிருக்கும் கோவா சட்டமன்றத் தேர்தலில் எப்படியும் ஐந்துக்கு மேற்பட்ட இடங்களை கைப்பற்றி விடமுடியும் என்று திரிணாமுல் காங்கிரஸ் நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**–விறலேந்தல்**



# கேரக்டர் பற்றி கவலை இல்லை!

–ராசிகண்ணா

பாலிவுட்டில் தனது திரையுலக பயணம் அவ்வளவு எளிதாக இல்லை என்று கூறும் ராசி கண்ணா, தெலுங்கு மற்றும் தமிழ் படங்களின் மூலம் வெற்றி பெற்ற நடிகையாக வளர முடிந்தது என்கிறார். ஒரு நடிகையாக நிறைய கற்றுக் கொண்டேன். வாழ்க்கையின் மேடு, பள்ளங்களையும் பார்த்துவிட்டேன் என்பவருடன் ஒரு பேட்டி.

**❊ சினிமாவில் உங்களை யாருடனாவது ஒப்பிட்டுப் பார்க்க விரும்புகிறீர்களா?**

என்னை பொறுத்தவரையில் நான் என்னுடைய சிறப்பான நடிப்பை வெளிப்படுத்த விரும்புகிறேன். யாரிடமும் என்னை நான் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள மாட்டேன். ஏனென்றால் ஒவ்வொருவருடைய பயணமும் மிகவும் வித்தியாசமானது. எனக்கான நடிப்பை நான் தீவிரமாக எடுத்துக் கொள்கிறேன்.

**❊ மீண்டும் மலையாளத்தில் நடிக்கிறீர்களே?**

ஆமாம். இந்தி 'அந்தாதூன்' மலையாள ரீமேக்கில் ராதிகா ஆப்தே கதாபாத்திரத்தில் நடித்த எனக்கு வாய்ப்பு கிடைத்தது. முன்பு அந்த படத்தை நான் பார்த்திருந்தாலும் ராதிகாவின் நடிப்பு சாயல் என்னிடம் வந்துவிடக்கூடாது என்பதால் நான் அந்த படத்தை மீண்டும் பார்ப்பதை தவிர்த்தேன். மற்ற ஸ்கிரிப்ட்டை போலவே இதனையும் நான் அணுக விரும்பினேன். அந்த பாத்திரத்தை மக்களிடம் எப்படி கொண்டு செல்வது, எப்படி நடிப்பது என்று தான் யோசித்தேன்.

ராதிகா நடித்த விதத்தை விட நான் நடித்த விதம் மிகவும் வித்தியாசமாக இருந்தது என்று உண்மையிலேயே உணர்ந்தேன். இந்தியில் ராதிகா கொஞ்சம் கடுப்பானவராக அந்தப் பாத்திரத்தில் தெரிவார். நான் கொஞ்சம் இனிமையானவளாக தெரிவேன். எல்லா நடிகைகளுமே ஒரிஜினல் படத்தில்




இருந்து வேறு மொழிகள் அந்த படம் எடுக்கப்படும்போது தங்களுடைய நடிப்பை வித்தியாசமாகத்தான் வெளிப்படுத்துவார்கள். அதைத்தான் நானும் செய்திருக்கிறேன்.

**❊ இரண்டாவது நாயகியாக துணிந்து நடிக்கிறீர்களே?**

என்னைப் பொறுத்தவரையில் நான் எந்த கேரக்டரில் எந்த மொழிப் படத்தில் நடிக்கிறேன் என்பதுதான் முக்கியம். கதாபாத்திரங்களைப் பற்றி கவலைப்படாமல் ஒரு நடிகையாக நமது கேரியர் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டும்.

படத்தில் நான் 2 நிமிடங்கள் வந்தாலும் இந்தப் படத்தில் நான் இருக்கிறேன் என்பதை ரசிகர்கள் உணர வேண்டும். அப்படத்துக்கு கூடுதலாக என் பங்கு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

2017-இல் வில்லன் என்ற என்ற மலையாளப்படத்திலும் 2018 -இல் இமைக்கா நொடிகள் தமிழ் படத்திலும் துணை கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன். எனக்கு அளிக்கப்படும் கதாபாத்திரம் ஒரு அடையாளத்தை தரும்போது,இல்லை நான்



கதாநாயகியாகத் தான் நடிப்பேன் என்று நான் வற்புறுத்துவது கிடையாது. கதாநாயகி ரோல்களைப் போலவே ஒருசில துணை ரோல்களுக்கும் முக்கியத்துவம் இருக்கிறது என்று நான் உணர்கிறேன்.

**❊ ஹீரோயின்களுக்கு படங்களில் முக்கியத்துவம் வேண்டும் என்ற குரல் இப்போது அதிகம் கேட்கிறதே?**

கடந்த சில வருடங்களாக நடிகைகளுக்கு முக்கியமான பாத்திரங்கள் தரப்படுகின்றன. ஆண் பெண் என்ற வித்தியாசம் மெல்ல மறைந்து வருகிறது. எனினும் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. ஆனால் இன்னும் நிறைய மாற்றங்கள் வர வேண்டும்.

**❊பலமொழி நடிகையான நீங்கள் மொழிகளுக்கு ஏற்ப உங்களை எப்படி மாற்றிக் கொள்கிறீர்கள்?**

ஒவ்வொரு மொழி படங்களிலும் நடிக்கும்போது, மொழி மட்டுமல்ல; கலாச்சாரமும் மாறுபடுகிறது. அப்போது அதை நாம் கற்றுக்



கொள்ளவும் வசதியாக இருக்கிறது. கேரக்டர், நான் அணிகின்ற உடை அந்த மொழி கலாச்சாரத்துக்கு பொருத்தமாக இருக்க வேண்டும். மாநிலங்களை கடந்து நாம் நடிக்கும்போது பல்வேறு விஷயங்களை, அவை சிறிய விஷயங்களாக இருந்தாலும் உன்னிப்பாக கவனித்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தென்னிந்திய மொழி படங்களில் நடிக்கும்போது அந்த மொழிகளைக் கற்றுக் கொள்கிறேன். அந்த மொழி பேசும் மக்களுடன் நெருக்கமாக இருக்க முயற்சிக்கிறேன். இது தான் என்னுடைய குறைந்தபட்ச முயற்சி.

**❊ வடக்கிலிருந்து தென்னக சினிமா வந்து நடிப்பது பற்றி?**

தென்னக சினிமா படங்களில் பணியாற்றுவது இனிமையாகத் தான் இருக்கிறது. என்னை வளர்த்தது தென்னிந்திய சினிமாவும் தென்னிந்திய ரசிகர்களும் தான் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். இன்றைக்கு நான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் தான்.

**திருமகன்.**




# ஆப்கான் தலிபான் – 7

மினி தொடர்

இன்றைய நிலவரப்படி ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான்களுக்கு அனுசரணையாக பாகிஸ்தான், சீனா ஆகிய 2 நாடுகள் மட்டுமே இயங்கி வருகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் தலிபான்களுக்கு சாதகமாக இல்லை. இந்தியாவும் இந்த பட்டியலில் தான் இடம்பெற்றுள்ளது.

# திசையெங்கும் திணறல்!



ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் தலிபான்களை ஆதரிப்பது பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் தற்காலிக ஆதாயத்தை அளிக்குமே தவிர நெடுந்தொலைவுக் கண்ணோட்டத்தில் அபாயகரமான விளைவுகளே மேலோங்கும் என்ற கருத்தையும் உதறித்தள்ளிவிட முடியாது.

ஆப்கானிஸ்தான் மக்கள் தங்கள் நாட்டை உயிரினும் மேலாக நேசிக்கின்றனர். ஆனால், அடிமைகளாக இருக்க அவர்கள் விரும்பவில்லை. தலிபான்கள் தங்களுக்குச் சாதகமான ஆணாதிக்கச் சட்டதிட்டங்களை நிறைவேற்றுவார்களே அன்றி மக்கள் நலனைக் கருத்தில் கொள்ள மாட்டார்கள் என்ற குரலை புறந்தள்ளி விட முடியாது.

தலிபான்களிடம் ஆப்கானிஸ்தானை கட்டமைப்பதற்கான தெளிவான வலுவான செயல்திட்டம் எதுவும் இல்லை.



**ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக தங்கியிருந்த அமெரிக்கப் படையினருக்கு மொழிபெயர்ப்பு உள்பட பல்வேறு பணிகளில் அந்நாட்டைச் சேர்ந்த ஏராளமானோர் உதவினர். தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அமெரிக்கப் படையினருக்கு உதவிய ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை விஸ்வரூபம் எடுத்தது.**

**இதையடுத்து, அவர்களை தங்கள் நாட்டில் குடியேற்ற அமெரிக்கா முடிவு செய்தது. இதன் ஒரு பகுதியாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் அமெரிக்காவுக்கு முதல்கட்டமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.**

**ஆப்கானிஸ்தான் மக்களுக்கு அமெரிக்காவில் அகதி அந்தஸ்து வழங்குவதற்கு 72 சதவீத அமெரிக்கர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.**

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பிரபல பாப் பாடகி அரியானா சயித், தலிபான்களின் ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. எல்லா துறைகளிலும் பெண்கள் களையெடுக்கப்பட்டு வருகிறார்கள். ஆட்சியைக் கைப்பற்றிய சில வாரங்களிலேயே ஆப்கானிஸ்தானை தலிபான்கள் நரகமாக்கிவிட்டார்கள்.

நான் ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பியது அல்லாவின் அருளால் தான் என்று நம்புகிறேன். எனக்கு அடுக்கடுக்காக அச்சுறுத்தல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. உலகில் எங்கும் இசை கச்சேரி நடத்த முடியாது என்று என்னை மிரட்டுகிறார்கள். ஆனால் நான் இதற்கு பயப்பட மாட்டேன். எனது கலைப் பயணம் தொடரும். ஆப்கானிஸ்தான் இன்று இல்லாவிட்டால் நாளை எப்படியும் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுபடும் என்று உறுதியாக நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தானுடனான நீண்ட எல்லையானது ஆப்கானிஸ்தானுக்கு மட்டுமின்றி, தலிபான்களை உருவாக்கிய பாகிஸ்தானுக்கும் தொடர் தலைவலிதான் என்பதை மறுக்க முடியாது. இந்த எல்லையின் இருபுறங்களிலும் ஆப்கானிஸ்தானின் பெரும்பான்மை இனமான பாஸ்டூன் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த எல்லையைப் பயன்படுத்திதான் தலிபான்கள் தங்களுக்குத் தேவையான ஆயுதங்கள், போக்குவரத்து மற்றும் நிதி உதவிகளை பாகிஸ்தானிடமிருந்து தொடர்ந்து பெறுவதோடு, போதைப் பொருட்களைக் கடத்துவதால் தங்கள் இயக்கத்துக்குத் தேவையான நிதியையும் திரட்டிவருகின்றனர்.



அரியானா சயித்

முன்பு பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவின்

துணையுடன் சோவியத் ஒன்றியத்தை எதிர்த்துப் போராடிய முஜாஹிதீன்கள், சோவியத் ஆதிக்கத்தை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றினர். அதன் பின்னர், பாகிஸ்தான் இந்த முஜாஹிதீன் போராளிகளை இந்தியாவில், குறிப்பாக ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாபில் பிரிவினைவாதிகளுடன் சேர்ந்து இந்தியாவுக்கு எதிராகப் போராடத் தூண்டிவிட்டது.



தற்போது அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின், தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில்... இந்தப் போராளிகள் பாகிஸ்தான் உதவியுடன் இந்தியாவில் குறிப்பாக ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாபிலும் சீனாவில் முஸ்லிம்கள் மிகுதியாக வாழ்ந்து வரும் 'ஜின்ஜியாங்' மாகாணத்திலும் மற்றும் மத்திய ஆசிய நாடுகளான முன்னாள் சோவியத் ஒன்றிய உறுப்பு நாடுகளிலும் உள்ள பிரிவினைவாதிகளுக்குத் துணைபோவார்கள் என்பதற்கான சாத்தியம் வலுத்து வருகிறது.



தெற்காசியாவுக்கும், முன்னாள் சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த மத்திய ஆசிய நாடுகளுக்கும் போதைப் பொருட்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து தான் எளிதாகக் கடத்தப்படுகின்றன. இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானில் இருந்து சரஸ், கோகையின் உள்ளிட்ட போதைப் பொருள்கள் கிலோ கணக்கில் கடத்தப்படுகின்றன என்பதை அண்மைக் கால நிகழ்வுகள் பிரதி பலித்துள்ளன.

இது ஒருபுறமிருக்க அமெரிக்கா, ஜப்பான், உள்ளிட்ட பொருளாதார ரீதியாக வலுவான நாடுகளும் தலிபான்களுக்கு அங்கீகாரம் அளிக்க தொடர்ந்து தயக்கம் காட்டி வருகின்றன. திசையெங்கும் திணறலுக்கு ஆளாகியுள்ளதால் தலிபான்களின் எதிர்கால அரசியல் பயணம் கேள்விக் குறியாகவே உள்ளது.

**-காதவம்புல்லுநர்**

**அடுத்த வாரம் நிறைவடையும்.**

# நேசத்தின் உறைவிடம்!

வெளிச்சக் கதிர்கள் மெல்லச்சாளரம் வழி நுழைந்து அறையின் இருட்டைக் கிழித்துப்பிரகாசமாக்கிக் கொண்டிருந்தன. அதற்கு நேர்மாறாக கடந்தநாட்களின் நிகழ்வுகள் இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கினுள் தள்ளிவிட்ட உணர்வையே தந்தது நிவேதிகாவுக்கு.



—லாவண்யா

கடந்திருந்தது என்னவோ பத்தே நாட்கள். இருந்தும் பல யுகங்களை விழுங்கியது போன்ற அயர்வில் களைத்திருந்தாள். நம்பிக்கையைத் தளரவிடக் கூடாது. அது மட்டுமே வலிமையைத் தரவல்லது என்பதை வலுக்கட்டாயமாக நினைவில் நிறுத்தியவள், இழுத்து, பெருமூச்சொன்றை வெளியிட்டாள். அன்று முதல் முதலாக அங்கே வேலையைத் தொடங்கப் போகிறாள். இதுவே எல்லாவற்றிக்கும் இனிய துவக்கமாக இருக்கட்டும் என மனதில் உருப்போட்டவாறே கைப்பையை மேஜையின் மேலே வைத்துவிட்டு, கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

அவள் தன் பணியை ஆரம்பிப்பதற்கு இன்னும் முப்பது நிமிடங்கள் இருந்தன. அதற்குள்அவனைப் பார்த்துவிட்டு வந்துவிடலாமேஎனக் கணக்கிட்டது மனது.

ஏனோ வழக்கத்துக்கு மாறாக இதயம் தட் தட்டென்று ஒலிம்பிக்ஸில் ஓடி, மூச்சிறைத்து, சுவாசத்துக்குத் தவிப்பது போலுணர்ந்தது.

கடந்த மூன்று மாதங்களாகவேமனம் பரபரப்பிலும், பயத்திலும் நிலையில்லாமல் விடாது துடித்துக் கொண்டிருந்தாலும்இப்போது இதயம் நெஞ்சக்கூட்டை விட்டு வெளியே குதித்துவிடுமோ என்ற அச்சத்தை அவளுக்களித்தது.

இதயச் சத்தத்துக்கு மொத்தமாய்விடையளிப்பதைப் போல் அலைபேசி அறையின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு அதிர்ந்தது.

ஒளிர்ந்த எண்ணைப் பார்த்ததும் புருவ மத்தியில் தோன்றிய முடிச்சுடனும்ஒருவித எச்சரிக்கையுடனும் அழைப்பை எடுக்க, ''நிவி, ஏர்போர்ட் வருவேன்னு ரொம்ப எதிர்பார்த்தேன்'' எனமறுமுனையில் இருந்தவனின் குரலில் கட்டி வைத்திருந்த கோபம் எட்டிப் பார்த்தது.

கோபம் அவளின் மௌனத்தை உடைப்பதாக இல்லை. ''நிவி''.... என எதிர்முனையில் இருந்தவனின் உரத்த குரல் செவிகளைத் தாண்டி இரத்தம் பாயும் இதயத்தைச் சுத்தமாக எட்டவில்லை.

அவள் இதயத் துடிப்புகள் மொத்தமாக வெடித்துக் கொண்டிருப்பது வேறொரு உயிருக்கென்று எப்படிப் புரிய வைப்பாள்? அவன் எப்படியும் புரிந்து கொள்ளப் போவதில்லை. இவ்வளவு ஏன்? புரிந்து கொள்ளமுயற்சிக்கக் கூட இல்லையே.

நேரமாவதை உணர்ந்து ஆழ்ந்த பெருமூச்சொன்றை வெளியிட்டவள், ''ஆல் த பெஸ்ட் விக்ரம்'' என்றாள்நிதானத்தை வரவழைத்துக் கொண்டகுரலில்.

''ப்ச்.. ஓவராப் பண்ணற நிவி. ஏதோ நடந்திடுச்சு. அதற்கு இவ்வளவு ரியாக்ட் பண்ணத் தேவையில்லை'' மிதமிஞ்சிய ஆத்திரத்தில் விக்ரம் பட் பட்டென்று பொரிய, பேசிப் பயனில்லை என அமைதி காத்தாள்.

சற்றுநேரம் அவளிடம் தர்க்கம் செய்தவன், தனக்கு நேரமாவதை உணர்ந்து, உன்னைத் திருத்த முடியாது. பிடிவாதம் பிடிக்கிற... திரும்பவும் கூப்பிடறேன் என்று சொல்லி, வேண்டாம் என்றுஅவள் முணுமுணுப்பதைக் கேட்பதற்குள் அழைப்பை வைத்துவிட்டான்.

என்னவோ கைப்பேசிக்கு எல்லா விடைகளும்தெரியும் என்பதைப் போல அதையே சில தருணங்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் நிவேதிகா.

மீண்டும் திரை ஒளிர்ந்தது.அவளுள் பதற்றம்தொற்றிக் கொள்ள அவசரமாக அழைப்பை ஏற்றாள்.

டாக்டர், ஐ சி. யூல இருக்கிற பேசண்ட்டை நேத்து நைட் கோமால இருந்து வெளியில்கொண்டு வந்துட்டாங்க. காதில் விழுந்த செய்தியில்அவள் தேகம் மெல்ல நடுக்கம் கொண்டது.

நடந்தே விட்டதா? இன்று... நாளை... எனக் கடந்த பத்து நாட்களாகக் காத்திருந்தவளின்பொறுமை மெல்லத் தேய ஆரம்பித்த நிலையிலும் விடாமல் பற்றிக் கொண்டிருந்த நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை.

நேற்றிரவு என்றாரே செவிலியர்....பிறகு ஏன்இத்தனை தாமதமாக அவளிடம் சொல்கிறார்கள்?

'உன்னிடம் எதற்குச் சொல்ல வேண்டும்?' மனசாட்சி உரத்துக் கத்தியது.

அவனுக்கும் அவளுக்கும் என்ன சம்மந்தம்? அவன் வீட்டினருக்குத் தகவல் போயிருக்கும்.ஆனால் அவர்களும் ஏன் அவளிடம் சொல்லவில்லை?

கேள்விகளின் அணிவகுப்பு விண்கலத்தில் ஏறி அசுர வேகத்தில் பல அண்டங்களையும் கடந்து வந்தது.

இப்படித்திடீரென்று ஏதாவது நடந்தால் அதைத்தன்னிடம் சொல்ல வேண்டும் எனச் சொல்லி வைத்திருந்த ஆட்களும் தன்னை மதிக்கவில்லையா? இவ்வளவு தாமதமாகத்தெரியப்படுத்துகிறார்களே!. அழுகையும், கோபமும் ஒருங்கே போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

‘இன்னும் இங்கே வேலையைத் துவங்கவில்லை என்ற மெத்தனமா?’ அடிமனதில் புதைந்திருந்த வேதனை சுறுசுறுவென்று எரிச்சலாக மேலெழுந்தது. நேத்தே ஏன் சொல்லலை? எனப் பொங்கிய ஆற்றாமையைக் கட்டுப்படுத்த மிகவுமே பிரயாசைப்பட்டுப் போனாள்.

சாரி டாக்டர்...நேத்து நைட் ஷிப்ட்டுக்கு நான் வரலை. திடீர்னு வீட்ல ஒரு பிரச்சனை. எனக்கும் தெரியாது. இப்போ தான் வந்தேன்.. எதிர்முனையில் இருந்த செவிலியர் தவறை உணர்ந்தவராகத்தயக்கத்துடன்விளக்கமளிக்க, தேவையில்லாமல் கோபத்தை அவர் மேல் கொட்டியதை எண்ணி வெட்கினாள்.

நேற்று மாலையில் அவள் செல்லும் வரையிலுமே தலைமை மருத்துவரும்அவளிடம்எதுவும்சொல்லவில்லை. ஒருவேளைஅவன் உடல்நிலை முன்னேற்றத்தைப் பார்த்துமருத்துவர்கள் திடீரென்று இம்முடிவை எடுத்திருப்பார்கள். மனம் ஒருநிலைப்பட்டது.

சாரி என உணர்ந்து மன்னிப்புக் கேட்க,

அவர் வீட்டுக்கும் காலையில் தான் சொன்னாங்க... என அவர் மேற்கொண்டு பேசிக் கொண்டிருக்க, ‘தனக்கு ஏற்கனவே தெரியும்என நினைத்துத் தன்னைத் தொந்தரவு செய்திருக்க மாட்டார்கள் அவன் வீட்டினர்’ என்று மனம் நேர்வழியில் சிந்திக்க ஆரம்பித்திருந்தது.

இப்போதெல்லாம் அனைத்தையும் தப்புத் தப்பாகவே யோசிக்கிறாள். இயலாமை அவளது இயல்பை மாற்றிவிட்டதா என்ன?

மேற்கொண்டு அவளை யோசனையில் உழல விடாமல், “இப்போ கண் முழிச்சு எல்லோரையும் பார்க்கிறார்... அடையாளம் தெரியுது. உங்களைக் கேட்டார் என்றவரின் குரல் அவளைக் கட்டி இழுத்தது.

‘தன்னைக் கேட்டானா?’ என உணர்வுகள் அவளுள் பொங்கி நுரைத்தன. ‘கண்டிப்பாகக் கேட்டிருப்பான்’ உணர்வுகளுக்குப் போட்டியாகக்கண்களில்நீர்த்துளிகள்திரண்டு, கன்னங்களில் வழிந்து கோலம் வரைய ஆரம்பித்தன.

எதிர்முனையில் இருந்தவர் சொல்வதை முழுவதுமாகக் கேட்டுக் கொண்டவள், அவருக்கு நன்றியுரைத்துஅலைபேசியை அணைத்துவிட்டு,கதவைத் திறந்து வேக நடையுடன் அவசர சிகிச்சைப் பிரிவை நோக்கி நகர்ந்தாள் நிவேதிகா.

“கடந்த பத்து நாட்களாக அவள் பட்ட நரக வேதனையை யாரிடம் சொல்லி அழுவது என்று கூடத் தெரியவில்லை. அத்தனை மனச்

சஞ்சலம்!

தன் வேதனைகளுக்கான மருந்து அவனிடம் மட்டுமே கொட்டிக் கிடக்கிறது என்பதைப் போல் அவசர எட்டுகள் வைத்து நடந்தாள். குறிப்பிட்ட அந்த அவசர சிகிச்சைப் பிரிவின் அறைவாயிலில் உள்ளே இருந்தவனின் அன்னை, பார்வதிநின்று கொண்டிருப்பது தெரிந்தது.

''அத்தை'' என அவரருகில் செல்ல, ''தமிழைப் பார்க்கலாமா?'' என விசும்பலுடன் கேள்வி எழுப்பினார் பார்வதி.

''நான் பார்த்துட்டு வந்து கூப்பிடறேன் அத்தை'' என அவருக்கு ஆறுதல் மொழிசொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

தலைமை மருத்துவர் அவனைப் பரிசோதித்தவாறே உடன் நின்றிருந்த மற்ற மருத்துவர்கள் மற்றும் மாணவர்களிடம் அவன்உடல்நிலையைக் குறித்து விளக்கிக் கொண்டிருந்தார்.

'அவனுக்கு இனி எந்த அபாயமுமில்லை' என்று அவர் சொல்லவதைக் கேட்டதும் அதுவரையில் தலையில் தூக்கி வைத்திருந்த சுமையை இறக்கி வைத்த நிம்மதி அவளுள். அப்படியே ஓரமாக ஒதுங்கி நின்றுவிட்டாள் நிவேதிகா.

எத்தனையோ நோயாளிகளைத் தினமும் பார்த்திருக்கிறாள் என்றாலும் அவள் மனதைத் தொட்டவனின் நிலை அவளை நிலைதடுமாறச் செய்தது உண்மை. அங்கே அறையில் நடுநாயகமாகப் படுத்திருந்தவனின் மேல் பார்வையைத் திருப்பினாள்.

அவன் தமிழினியன்! பெயருக்கு ஏற்ப இனியனே!

பத்து நாட்களுக்கு முன்னர் பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்?

அன்றைய அவனது பேச்சும், செய்கையும் துள்ளல்களால் நிறைந்திருந்தன. இன்று வார்த்தைகள் துண்டுகளாய் வந்து விழுந்தன. தலையில் இருந்த முடியைச்சவரம் செய்து, கட்டுகள் போடப்பட்டு, மெலிந்து, பார்க்கவேபரிதாபமாகக்காட்சியளித்தான்.

கிழிந்த நாராகப் படுத்திருந்தவனைப்பார்க்கையில் அவளிடமிருந்த பலம் முழுவதையும் யாரோ உறிஞ்சுவதைப் போலிருந்தது.

'எல்லாம் தன்னால்' என்ற உணர்வில் அவள் அதரங்கள் கோபத்தால் துடித்தன.அதை வெளிப்படுத்துவதற்கு அவள் இருந்த சூழ்நிலையும், ஏற்றுக் கொண்ட பதவியும் இடமளிக்கவில்லை.

கண்விழித்திருந்தவனின் விழிகள் அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தன. ஒலிம்பிக்ஸில் ஓடுவதைப் போல அசுர வேகத்

தில் கேள்விகள் அவன் மண்டைக்குள் ஓடிக் கொண்டிருப்பதைச்சு ளித்திருந்த அவனது நெற்றியும், புருவமும் அவளுக்கு எடுத்துரைத்தன.

ஒவ்வொருவராக அலசியவனின்பார்வைஇறுதியில் அவள் முகத்தில் வந்து படிந்ததும் சட்டென்று மலர்ந்தது.மருத்துவர்கள் சொல்வதில் கவனத்தை வைத்திருந்தாலும் விழிகளை எதிரில் இருந்தவளின் மேலேயேபதித்திருந்தான் தமிழினியன்.

தன்னிச்சையாக மருத்துவர்களுக்குத்தலையசைத்துப் புன்னகை த்தவனின் உதடுகள் வறண்டு போயிருந்தன. அப்புன்னகையில் அவள் உலகம் மலர்ந்து போனது. அவனைப் பார்த்து மென்மையாக முறுவலித்தாள்.

அவளைத் தலை முதல் பாதம் வரை அவசரமாக அலசி, நெற்றியில் மற்றும் இடது மணிக்கட்டின் அருகே இருந்த பிளாஸ்டர்களில் சில கணங்கள் தயங்கி, மீண்டும் அவள் முகத்தை ஆராய்ந்து,'அப்பாடா' என அவன் திருப்திப்பட்டுக் கொண்டது புரிந்தது.

மருத்துவக்குழு மேலும் பத்து நிமிடங்கள் அங்கேயே நின்று அவனைப் பரிசோதித்து, செவிலியர்களிடம் சில அறிவுரைகளைவழங்கிவிட்டுஅங்கிருந்து கிளம்பியது.

அப்போது நிவேதிகா அங்கே நின்றிருப்பதைப் பார்த்த தலைமை மருத்துவர் அவளருகில் சென்று, ''இப்படியே இருந்தா சீக்கிரம் அவரை ரூமுக்கு மாத்திடலாம்'' எனச்சொல்லிவிட்டு, ''இப்போ உங்களுக்கு எப்படி இருக்கு?'' என அவள் உடல்நிலையைப் பற்றியும் விசாரித்துக் கொண்டார்.

''இன்னைக்கு வொர்க் ஸ்டார்ட் பண்ணறீங்களா? ஆல் த பெஸ்ட்'' என அவளை வாழ்த்திவிட்டு வெறியேறினார்.

அறையில், 'பீப் .. பீப்..'என மருத்துவச் சாதனங்களின் ஒலி மட்டுமே கேட்டது. அவன் விழிகளை ஏறிட்டு நோக்க, அவன் பார்வையும் அவள் முகத்தில் தான் நிலைத்திருந்தது.

'இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' விழிகள் தொடுக்கும் மொழிகளற்ற கேள்விக்கு அவளால் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அதற்கான நேரமும், சூழ்நிலையும் அதுவல்ல.

ஆழ்நெஞ்சைத் துளைத்தெடுக்கும் பார்வையைத் தவிர்ப்பதற்கெனஅவன் மருத்துவக் குறிப்பு அடங்கிய அட்டையை எடுத்துப்புரட்ட ஆரம்பித்தாள் நிவேதிகா.

'அவனிடம் பேசு.'மூளை கட்டளையிட்டாலும் நாக்கு

கிஞ்சித்தும் புரளவில்லை. எதில் ஆரம்பிப்பது? எங்கே நிறுத்துவது? எதுவும் தெரியவில்லை. அவன் கண்விழித்ததே போதும். துவண்டு போயிருந்தவள் மீண்டுவிட்டாள். இனி எதையும் தைரியமாக எதிர்நோக்குவாள்.

''பிளான் பண்ணி போட்டுத் தள்ளப் பார்த்தியா?'' அறையின் அமைதியைக்கிழித்துக்கொண்டுதிடீரென்றுஒலித்தஅவனின்தீனமான குரலில்கருவிழிகளில்நீர்க்கோர்த்துக்கொள்ளஅவனைக்கலக்கத்துடன் ஏறிட்டாள்.

அவன் எப்போதும் கிண்டலாகப் பேசுவான் என்று தெரியும். ஆனாலும் குற்றவுணர்வால்அது குத்தீட்டியாய் நெஞ்சைத் தாக்கியது.

அதற்குமேல் அங்கேயே நின்றால் வலியில் சுருண்டு அவன் முன்னே உடைந்து போக வாய்ப்பிருந்ததால், 'இதோ வரேன்' என முணுமுணுத்துவிட்டு அறையிலிருந்து வெளியேறினாள்.

அவள் மீண்டும் திரும்புகையில் அவன் அன்னை, பார்வதியை அழைத்துக் கொண்டு வந்திருந்தாள். அவரைப் பார்த்ததும் முகம் மலர்ந்தவன், 'அம்மா' என வாயசைத்தான்.

''தமிழ்'' என விறுவிறுவென்று அவனருகில் சென்ற பார்வதிக்கு அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியவில்லை. பேரழுகையில் வெடித்தார்.

''அத்தை என்னதிது? அவருக்கு ஒண்ணும் ஆகாதுன்னு சொன்னேனே'' என அவரருகில் விரைந்துசென்று தன்னோடு அணைத்துக் கொண்டாள் நிவேதிகா. அதற்குள் முற்றிலும் தன்னைச் சேகரித்து விட்டிருந்தாள்.

பார்வதியின் அழுகை நிற்கவேயில்லை. ''அத்தை, இப்படியே அழுதுட்டு இருந்தா உங்களுக்கும் அவர் பக்கத்துல ஒரு பெட் ரெடி பண்ணனும் போல. அப்புறம் அவரை யார் கவனிச்சுக்கிறது?'' என மென்னகையுடன் அவனைப் பார்த்தாள்.

தமிழினியனின் பார்வையின் கூர்மை அதிகரிக்க,'என்ன செஞ்சுட்டிருக்க?' எனக் கேட்பதுபுரிந்தாலும் எந்த விளக்கமும் கொடுக்க அவள் விழையவில்லை.

''இன்னைக்கு எப்படி விடிய வேண்டிய நாள்?'' திடுமென ஒலித்த பார்வதியின் குரலில் இருவருமே திடுக்கிட்டனர்.

தமிழினியனின் உடல்நிலை குறித்த கவலையில் நிவேதிகாவுக்கு மற்றதெல்லாம் மறந்து போயிருந்தன. பார்வதி ஞாபகப்படுத்தியதும்

சில நொடிகள் திகைத்தாலும் சட்டென அதிலிருந்து வெளிவந்துவிட்டாள்.

தன்னைச் சரி செய்து கொண்டு இயல்பாக இருக்க முயன்றாள்.

''இன்னைக்கு என்ன தேதி?'' அவன் இதழ்கள் கேள்வியை உதிர்க்க, அவள் பதில் தந்தாள். அவன் மருத்துவமனையில் சேர்ந்து பத்து நாட்கள் ஆகிவிட்டதா என ''அதற்கு மேல அவனுக்குப் பேச்செழவில்லை.

அப்படியென்றால்? நிவேதிகா இங்கே என்ன செய்கிறாள்?''

''அத்தை, எல்லாம் நல்லபடியா நடக்கும். கவலைப்படாதீங்க எனப் பார்வதிக்கு அவள் தைரியம் சொல்லிவிட்டு, மீண்டும் யோசனையில் ஆழ்ந்திருந்த தமிழினியனைப் பார்த்தாள்.

''ரொம்ப யோசிக்காதீங்க'' என அவன் யோசனைகளுக்கும் நிவேதிகா தடை போட, 'என்ன சொல்கிறாய்?' என அவளைக் கண்ணிமைக்காது நோக்கினான்.

புன்னகையைஉதட்டில்தேக்கி, ''நான்இங்கேடாக்டராஇருக்கேன்'' என அவனின் கேள்விகளுக்கு மொத்தமாகப்பதில்தந்துவிட்டு,

''பிஸியோதெரபி ஆரம்பிச்சதும் சீக்கிரம்நடக்க ஆரம்பிச்சிடுவீங்க. உடம்புக்கு வேற எந்தப் பிரச்சனையும் இல்லை'' என மருத்துவராக மாறி பதிலளித்தாள்.

கால்களில்பெரிதாகஅவனுக்குஅடியில்லைஎன்றாலும்தொடர்ந்து பத்து நாட்களாக ஒரேஇடத்தில் படுத்துக் கிடப்பதால் அவன் உடல் மொத்தமும் வலுவிழந்து போயிருந்தது. அதற்காகவேமருத்துவர்கள் பரிந்துரைத்திருந்தனர்.

மகனின் கைப்பிடித்து அவனை வாஞ்சையாகத் தடவியபடி இருந்த பார்வதியைச் சுட்டிக் காட்டி, 'அவருடன் பேசு' என நிவேதிகா குறிப்புத் தர, அதைப் புரிந்து கொண்டவனாக அன்னையிடம் திரும்பினான்.

அவர்கள் பேசுவதைச்சற்றுநேரம் கேட்டுக் கொண்டிருந்தவள், ''அத்தை,அவர் ரெஸ்ட் எடுக்கட்டும்'' என அவரை அங்கிருந்து அழைத்துச் சென்றாள்.

அவள் செல்வதை ஒருவித கையாலாகாத்தனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு மருந்தின் வீரியத்திலும், அயர்ச்சியிலும் இமைகள் தாமாகவே மூடிக் கொண்டன.

ஆனால் அடுத்துக் கிடைத்த சந்தர்ப்பத்தில் அவளிடம் அவன் கேட்ட கேள்வியில் அவளுள்ளம் புரண்டு போனது.

## 2

அடுத்து வந்த நான்கு நாட்களும் தமிழினியனை அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து கண்காணிப்பில் வைத்திருந்தமருத்துவர்கள்அவன் உடல்நிலையில் ஏற்பட்ட முன்னேற்றத்தில் பெரிதும் திருப்தி கொண்டனர்.

ஆகவே அவனைக்கூடிய விரைவில் வேறு அறைக்கு மாற்றச் சொல்லிப் பரிந்துரைக்கவும்,செவிலியர்களும்ஆக வேண்டியதைச் செய்துவிட்டு நிவேதிகாவிடம் தகவலைப் பகிர்ந்தனர்.

பிசியோதெரபிஸ்ட்டை உடன் அழைத்து வந்தவள் தமிழினியனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அவனுக்குச்செய்யப் போகும் பயிற்சியைப் பற்றி அவர் விளக்கிக் கொண்டிருக்க, அவனது மருத்துவ அட்டவணையை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தாள் நிவேதிகா.அவன் உடல்நிலையில் நினைத்ததை விடவும் நல்ல முன்னேற்றமே.

சற்றுநேரம் பிசியோதெரபிஸ்ட் பேசிவிட்டு மாலை வருகிறேன் என எழ, ''ரெஸ்ட் எடுங்க... ''என நிவேதிகாவும் கிளம்பினாள்.

டாக்டர் என்ற அவனது அவசரமான அழைப்பில் இருவரும் திரும்பிப் பார்த்தனர். அவன் பார்வை நிவேதிகாவிடம் இருந்ததைப்பார்த்த பிசியோதெரபிஸ்ட்புருவம் சுருக்கினாலும் எதுவும் சொல்லாமல் கதவைப்பாதி சாத்திவிட்டு வெளியேறினார்.

அவர் சென்றதை உறுதிப்படுத்திக் கொண்டவன், ''நீ ஏன் லண்டன் போகலை?'' எனக் கேட்டான்.

இந்நிலையிலும் அவளின்நலனில் அக்கறை கொண்டு பேசுகிறானே என அவளுள்ளம் புரண்டு போனது. 'இவனுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம்' என்ற முடிவும் உள்ளுக்குள் திரண்டு நின்றது.

''டாக்டர்னு சொல்லாதீங்க. பெயர் சொல்லியே கூப்பிடுங்க'' கேள்வியின் தாக்கம் உள்ளத்தை உலுக்கினாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவன் கேட்டதற்கும் பதிலளிக்காமல் வேறொன்றைப் பேசினாள்.

''நான் கேட்டதுக்கு இது பதிலில்லை நிவேதிகா'' குரல் வந்து விழுந்த வேகத்திலும், பெயரை உச்சரித்த அழுத்தத்திலும் தன் விருப்பமின்மையை வெளிப்படுத்தினான்.

இந்நிலையில் அவனைக் கோபப்படுத்துவது சரியல்ல என்று புரிந்ததால், ''போகலை. அவர் மட்டும் கிளம்பிட்டார்'' எனஅவனை ஆழ்ந்து நோக்கினாள்.

''ஓ.... நீ...நீயும் போயிருக்கலாமே'' மேடு பள்ளத்தில் ஏறி இறங்கும் வண்டியைப் போல் தடுமாறி வெளிவந்தன அவன் வார்த்தைகள்.

''இப்போமுடியாது. கொஞ்ச நாள் போகட்டும். அப்புறம்...'' என அவள் முடிக்கும் முன்னரே,

''எனக்காகப்பார்க்காத. ஐயம் ஆல்ரைட்'' என அவசரமாகத் தன்னைப் புரிய வைக்க முயல, அவள் இதழ்களில் பூட்டி வைத்திருந்த புன்னகை மெல்ல எட்டிப் பார்த்தது.

''நீங்க எப்போ டாக்ருக்குப் படிச்சீங்க?'' எனக் கேலியாகப் புருவம் உயர்த்தியவள், தன்கழுத்தில் மாலையாகப் போட்டிருந்த ஸ்டெதஸ்கோப்பை எடுத்துக் காதில் வைத்து அவன் இதயத் துடிப்பைக் கேட்டவாறே, ''அதை நான் சொல்லணும்'' என்றாள்.

'லப் டப்' எனத் துடித்த அவனது இதய அதிர்வுகள் அவள் கவலைகளை உதிர்த்துப் பொடியச் செய்வதாய் இருந்தன. விசித்திரமாய்ஓர்வித ஆழ்ந்த அமைதியையும்அவளுக்களித்தது.

தேவைக்கும்அதிகமான நொடிகள் அவன் இதயத் துடிப்பைக் கேட்டுக் கொண்டிருக்க, ''என்ன சொல்லுது என் ஹார்ட்?'' உடம்புல இருக்கிற பார்ட் எல்லாம் ஹர்ட் ஆகியிருக்குன்னு சொல்லுதா? எனத் துள்ளலாய்த்தெறித்து விழுந்தன அவன் கேள்விகள்.

புன்னகையுடன் ஏறெடுத்துப் பார்த்தவளை, ''நீ இப்படியே சிரிச்சுட்டு இருக்கணும் நிவேதிகா'' என்றான் கரகரத்தகுரலில்.

''அன்னைக்கு எதுக்கு அப்படிப் பண்ணினீங்க?ஹர்ட் ஆகாம நீங்க தப்பிச்சிருக்கலாமே?''அவன் உள்ளத்தின்அடி ஆழத்தில் இருப்பதை உறிஞ்சி எடுத்துவிடும் விதமாக அவனையே ஊடுருவினாள்.

மௌனமென்னும் ஆயுதத்தைக் கையிலெடுத்திருந்தான். ''பதில் சொல்லமாட்டீங்க இல்ல? ரெண்டு பேருக்கும் நிறையக் கேள்விகள்இருக்கும் தமிழ்.. அப்புறம் பேசலாம்...'' என அவள் மேற்கொண்டு தொடரும் முன்னர், யாரோ கதவை மெதுவாகத் தட்டிவிட்டு உள்ளே வரும் அரவம் கேட்க, இருவரின் கவனமும் அங்கே சென்றது.

''அண்ணா'' என்றவாறே அவன் தங்கை, தர்ஷினி

வேகமாகஅவர்களை நெருங்கினாள்.கடந்த இரண்டு வாரங்களாக அவள் இருந்த நிலையை எளிதாக வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. தன் அண்ணன் மேலிருந்த பிரியத்தை நிவேதிகாவுக்குப் புரிய வைத்துவிட்டாள்.

அவனை வேறு அறைக்கு இன்று மாற்றுகிறார்கள் என்று ஏற்கனவே தெரியும் என்பதால் தர்ஷினியைத் தொடர்ந்து அவன் அன்னை பார்வதியும், தந்தை சதானந்தனும் அறையினுள் நுழைந்தனர்.

பார்வதியை வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்துவிட்டு, திரும்பி வருகையில் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு வரச் சொல்லியிருந்தாள் நிவேதிகா.அதன்படியே அவர்களும் கிளம்பி வந்திருந்தனர்.

குடும்பமே அவனைச்சுற்றி நின்று கொண்டிருக்க, ''படிப்பெல்லாம் எப்படிப் போகுது ?'' எனத் தங்கையிடம் விசாரித்தான் தமிழினியன்.

வலது கையைக்காற்றில் மேலேறுவதைப் போல் காட்டி,ராக்கெட்ல ஏறி விர்ருன்னு போகுது. ஆனா எந்த டைரக்ஷன்ல போறதுன்னு தெரியாம சுத்திட்டு இருக்கு அண்ணா'' என அவள் தாடையில் கை வைத்து யோசிப்பதைப் போல் சொல்ல,

''கூகுள் மேப் வாங்கி மாட்டிவிட்டிருந்தா அது 'சொய்ன்னு' இலக்கை நோக்கிப் போயிருக்குமே'' என்றான் தமிழினியன்.

''ம்க்கும்...அந்தக் கூகுள் மேப்பைக் கண்டுபிடிச்சுப் போறதுக்கே வழி தெரியலையாம்...'' என அவனைப் போலவே கேலியாகப் பேசி விட்டு, ''சாரிண்ணா.. காலேஜ்ல எக்ஸாம் டைம். அதான் அடிக்கடி உங்களைப் பார்க்க வரலை'' எனத் திடீரென்று கண்ணீரை உதிர்த்தாள்.

''நல்லாதானே போயிட்டிருந்தது... எதுக்குத் திடீர்னு இடி, மின்னல் மழை எல்லாம்? ரொம்ப நனைய வைக்காதடா'' எனத் தங்கையைக் கலாய்த்தவன், ''என்னடா இது, நீ வரலைன்னு ஜாலியா இங்க பெட் ரெஸ்ட்ல இருக்கேன். அடிக்கடி வரலைன்னு சொல்லி ஹார்ட்டை பார்ட் பார்ட்டா பிச்சி வீசறியே'' என வாரியும்விட்டான்.

அவனை விடவும் எட்டு வருடங்கள் சின்னவள் என்பதால் அவனுக்கு அவள் மிகவுமே செல்லம். கடைசி வருடம்பொறியியல் படித்துக் கொண்டிருக்கிறாள்.

''பாருங்கம்மா அண்ணனை'' எனத்தர்ஷினி சிணுங்க, அனைவரின் முகத்திலும் இத்தனை நாட்களாக மண்டியிருந்த வேதனை மொத்தமும்காலாவதியாகியிருந்தது உண்மையே.

''அண்ணா, உங்ககிட்ட ஒரு முக்கியமான விசயம் சொல்ல வந்தேன்... போங்க...இப்போ சொல்ல மாட்டேன்'' தங்கை முகத்தைத் திருப்பிக் கொள்ள,

''சாரிமா தர்பூசணி.. ஐ மீன் தர்ஷினி.. சொல்லுடா...'' என மேலும் அவளை வம்புக்கிழுக்க, சற்றுநேரம் பிகு செய்துவிட்டு, ''உங்களை ரொம்ப மிஸ் பண்ணினேன் அண்ணா. இனிமேல் இப்படி எல்லாம் செய்யாதீங்க'' என்றாள்.

''என்னமோ வான்டெட்டா போய் ஸ்டண்ட் பண்ணின மாதிரி பேசற. ஆக்ஸிடென்ட்மா...'' என அவளைச்சமாதானப்படுத்திவிட்டு, ''என்னவோ கொல்லி மலை இரகசியம் சொல்லறன்னு பில்ட் அப் கொடுத்த? நெல்லி சைஸ்ஸூக்காவது இருக்கானு பார்க்கிறேன்... சொல்லுடா..'' எனத் தூண்டில் போட,

பெற்றோர்களைப் ஒரு பார்வைப் பார்த்துவிட்டு, ''கோர்ட் கேஸ் நமக்குச் சாதகமா வந்திடுச்சுண்ணா'' என இரகசியத்தை உடைத்தாள்.

அவசரமாக விழியசைத்துத் தந்தையைப் பார்த்தான் தமிழினியன். அவர் முகத்தில் குடிகொண்டிருந்த ஆழ்ந்த அமைதியில், 'அப்பாடா' என்ற நிம்மதியுணர்வு அவனையுமறியாமல் வெளிப்பட்டது. ஆனால் தங்கை தொடர்ந்து பேசியதில் பட்டென்று தன் எரிச்சலைக் கொட்டிவிட்டான்.

நிவேதிகாவின் அருகில் சென்று அவளைத்தன்னோடு இறுக்கி விடுவித்த தர்ஷினி, ''எல்லாம் நம்ம அண்ணி வந்த நேரம்'' என்றாள்.

''தர்ஷினி, என்ன பேச்சு இது?'' திடுமென வந்த வேகத்திலும், தொனியிலும் குடும்பமே அவனைக் கேள்வியுடன் நோக்கினர்.

விழிகளை அவசரமாகநிவேதிகாவின் புறம் திருப்ப,அவளும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.அவள் முகத்திலிருந்து அவனால் எதையும் படித்தறிய முடியவில்லை.

''இல்லை... இங்க வேலை பார்க்கிற இடத்துல சொந்தம் வச்சிக்கூப்பிட வேண்டாம்னு...'' விளக்கம் தந்தவனின் குரல் கிணற்றிலிருந்து வெளி வருவதைப் போல் சன்னமாக ஒலித்தது.

''அடப் போங்கண்ணா'' எனத்தங்கை தன் அதிருப்தியைக் காட்டிவிட்டு, ''அவங்க டாக்டரா இருந்தாலும்,ஆக்டரா இருந்தாலும் எனக்கு அண்ணி. இவங்க இல்லைன்னா என்ன பண்ணியிருப்போம்னே தெரியாது'' என நிவேதிகாவை மீண்டும் தன்னோடு அணைத்துக் கொண்டாள் தர்ஷினி.

சற்றுநேரம் குனிந்து தன் இரண்டு பெருவிரலையும் சுற்றியவாறே அதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன், ''அப்போ ட்ரீட்மெண்ட்டுக்குப்பணம் பிரச்சனையில்லை தானே?'' எனக் கேட்டான்.

''தமிழ், அதைப் பத்தியெல்லாம் குழப்பிக்காத. நாங்க பார்த்துக்கிறோம். நல்லா ரெஸ்ட் எடுத்துட்டுச்சீக்கிரம் வீட்டுக்கு வா'' எனப் பெற்றவர்கள் உருகிவிட்டனர்.எந்த நிலையில் எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறான்?

அவன்தந்தை,சதானந்தன்தன்நண்பனுடன்சேர்ந்துபல இடங்களில் உணவகம் நடத்திக் கொண்டு வந்தார்.தொழிலில் திடீரென்று நஷ்டம் ஏற்பட, இருவரும் கலந்து பேசித் தொழிலை விற்றுவிட முடிவெடுத்தனர்.அதுவரையில் எப்பிரச்சனையும்எழவில்லை.

தொழிலை விற்றுக்கடன்களை எல்லாம் சரிசெய்யும் வேளையில்தொழிலிலிருந்து பணத்தை எடுத்து குடும்பத்தினர் பெயரில் சொத்து வாங்கிவிட்டதாகச்சதானந்தன் மேல் வழக்குப் பதிவு செய்துவிட்டார் நண்பர்.

அதனால் அவர் சொத்துக்கள் எதையும் விற்கக் கூடாது என்றும் ஏற்பட்ட நஷ்டத்துக்கும் மனஉளைச்சலுக்கும் நஷ்ட ஈடாகப் பணம் தரவேண்டும் என்றும்வழக்குத் தொடுத்திருந்தார்.

''அவர்களிடம் இருந்த மிச்ச சொத்துக்கள் அனைத்தும் பார்வதி மற்றும் சதானந்தனின் குடும்ப வழியே வந்த பூர்வீகச்சொத்துக்களை விற்று வாங்கியது.''

வழக்கு இதுவரையில் இழுபறியாகவே இருந்தது.அவன் மருத்துவமனையில் இருந்த பொழுது தீர்ப்பு வழங்கும் நாளும் வந்தது. சதானந்தன் நீதிமன்றத்துக்குப் போகப் போவதில்லை என மறுத்துக் கொண்டிருக்க, நிவேதிகா தான் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாள். அத்தீர்ப்பைப் பற்றியே தர்ஷினி விலாவாரியாக விவரித்துக் கொண்டிருந்தாள்.

குடும்ப விஷயங்களை ஆழ்ந்து பேசிக் கொண்டிருக்க, அவர்களுக்குத்தனிமையைக் கொடுக்க எண்ணி, ''பேசிட்டு இருங்க... வேலையிருக்கு'' எனநிவேதிகா ஒதுங்கிக் கொண்டாள்.

அவளிடம்பேசவேண்டிய பேச்சுத்தடைப்பட்டுப் போனதில் தமிழினியனுக்கும் வருத்தமே. அவளிடம் பேசித் தெளிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஏராளமாக இருக்கிறதே.

'இவளது திட்டம் என்னவாக இருக்கும்?' எனச்செல்லும் அவளையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்குத் தலை விண்விண்ணென்று வலிப்பதைப்போலிருந்தது.

கதவருகில் சென்றவள் திரும்பி நின்று கடிகாரத்தைத் தொட்டுக் காட்டி, 'நேரமாகிறது' எனக் குறிப்புக் காட்டி , இரு கைகளையும் ஒன்று சேர்த்து வலது கன்னத்தில் வைத்து, கண்களை மூடி, 'தூங்குங்க..' எனச்சைகையால் சொல்லிவிட்டுச் சென்றாள்.

அதீத அக்கறை பொதிந்த அவளதுசெய்கையில் அவன் குழப்ப முடிச்சுகள் நீங்கி நெஞ்சில்இதம் பரவுவதை உணர்ந்தான். தலையில் ஏறியிருந்த பாரமும் மெல்ல இறங்கியது.

## 3

அதன்பிறகு வந்த நாட்களில் தமிழினியனின் உடல்நிலையில் ஏறுமுகம் மட்டுமே. காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் நிவேதிகா அவன் அறைக்குச் சென்று நலம் விசாரித்து, அவள் பங்குக்கு அவன்இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு என அனைத்தும் சரியாக இருக்கிறதா எனப் பரிசோதித்துத் திருப்தி அடைந்தாள்.

கூடுதலாக அவளது ஓய்வு நேரங்களிலும் அவனருகில் இருந்து அவனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டாள்.

இப்போதெல்லாம் மாலை வேளைகளில் அவனுக்குநடைப்பயிற்சி ஆரம்பித்திருக்க, மெதுவாக நடக்கவும் ஆரம்பித்திருந்தான்.

தமிழினியன் சென்னையில் உள்ள ஒரு புகழ்பெற்ற பொறியியல் பல்கலைக்கழகத்தில், பயோடெக்னாலஜி (உயிரிதொழில்நுட்பவியல்) துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறான்.

சென்னையில் படித்துமுடித்து முனைவர் பட்டம் பெற்றவன், கனடாவில் இரண்டு வருடங்கள் ஆராய்ச்சியாளராக வேலையில் இருந்தான். அதன்பிறகு இங்கேகடந்த ஒன்றரை வருடங்களாக உதவிப்பேராசிரியராக இருக்கிறான்.

குறைந்த காலமே என்றாலும் மாணவர்களின் மனதில் நீக்கமற இடம் பிடித்திருந்தான் எனஅலை அலையாகத் திரண்டு வந்த மாணவர் கூட்டம் நிரூபித்தது. உடன் பணிபுரிபவர்கள் வருவது இயல்பு. ஆனால் மாணவர்களும் படை திரண்டு வந்தது நிவேதிகாவுக்கு ஆச்சரியம் தரும் விஷயமாக இருந்தது.

அன்றும் அதே போல் கையில் தன் அலைபேசியுடன் அவனிருந்த

அறைக்குள் நுழைய, மாணவர் கூட்டம் ஒன்று உள்ளே இருந்தது.

''தர்ஷினி போன்ல'' எனக் கைப்பேசியைத்தமிழினியனிடம் தந்துவிட்டு, அங்கு நின்றிருந்தவர்களைப் பார்த்துச் சம்பிரதாயமாகப் புன்னகைத்தாள்.

அவர்களில் ஒன்றிரண்டு பேரை முன்பே பார்த்திருக்கிறாள். அந்நாளின் நினைவுகளின் சுழற்சியில் முகம் இருண்டு போனது. இதிலிருந்து மீட்சியே கிடையாதா?

அதற்குள் நிவேதிகா யாரென்று தெரிந்திருந்த மாணவர்களுள் ஒருவனான தினேஷ், ''டாக்டர், நீங்க பிராக்டீஸ் பண்ணறதுக்கு எங்க புரொபசரை பேசண்ட் ஆக்கிட்டீங்களே?செம பிளான் போங்க'' என அவளைக் கலாய்த்தான்.

அக்குரலில் அவளின் சிந்தனை தடைபட, ''உங்க புரொபசர் தப்புத் தப்பா பாடம் சொல்லிக் கொடுத்தா,பாவம் உங்களுக்கு இப்படித் தான் யோசிக்கத் தோணும் போல...'' எனத் தமிழினியனைச் சுட்டிக் காட்டிக் கேட்க, அனைவரும்,... ''ஓஹோ...'' எனக் கலவையான குரலில் மெல்ல இராகம் போட்டனர்.

குறுஞ்சிரிப்புடன்அதைக் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு நிஜங்களின் பாரம் நெஞ்சைஅழுத்தியது. இவனைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமல் முட்டாள்தனமாகநடந்து கொள்ள இருந்தாளே. சுயநலத்தின் மொத்த உருவமாக இருந்திருக்கிறாள்!

மீண்டும் புதைகுழியாய் எண்ணங்கள் அவளை உள்ளிழுக்க முயல அவளால் அதற்குமேல் அங்கே நிற்க முடியவில்லை. ஆகவே அவர்களிடம் வேலையிருக்கிறது என்று சொல்லிவிட்டு வெளியில் செல்ல நினைத்தாள்.

அதற்குள் தங்கையுடன் அலைபேசியில் பேசி முடித்திருந்த தமிழினியனும் அவர்களின் பேச்சைக் கேட்டவாறே, ''போதும்.. எல்லோரும் கிளம்புங்க.. கிளாஸ்க்கு லேட்டாகலை?'' என அதட்டினான்.

''என்ன டாக்டர், தனியா டைம் ஸ்பெண்ட் பண்ண நினைச்சு வந்தீங்களா? உங்கதனிமையைக் கெடுத்துட்டோமா? சார் ரொம்பக் கோபப்படறார்'' எனத் துடுக்குத்தனமாகதினேஷ் வினவ, அப்படியே திரும்பி அனைவரையும் பார்த்தாள்.

டெய்லி உங்களோட இருக்கிறாரே. இன்னைக்கு ஒருநாள் மட்டும் எங்களுக்குச் சாரைக்கடனா கொடுங்களேன் ''மற்றொருவன் வம்பிழுத்தான்.

சட்டென மனநிலை மாறிப்போனது அவளுக்கு. புன்முறுவலுடன், சாரோட அறுவையிலிருந்து தப்பிச்சுட்டோம்ன்னு என்ஜாய் பண்ணுவீங்கன்னு நினைச்சேன். வான்டட்டா வந்து டிராக்டர்ல ஏறினாஇந்த டாக்டர் ஒண்ணும் பண்ண முடியாது'' என அவளும் குறும்புடன் சொல்ல,

''எங்களுக்கே பல்பா?'' என அனைவரும் வாய் மேல் கையை வைத்துக் கொண்டு சிரிப்பை அடக்க முயன்றனர். மருத்துவமனை என்பதால் அவர்களின் குரல்கள் தணிந்தே ஒலித்தன.

''சார், உங்க லைப் ரொம்ப இண்டரெஸ்ட்டிங்கா இருக்கும் போல'' என மாணவர்கள் அனைவரும் சேர்ந்து சொல்ல, தமிழினியன் அவளை யோசனையுடன் பார்த்திருந்தான்.

கலாட்டவாகப் பேசிய மாணவர்களுள் ஒருவன், ''சாரைப் பார்த்துக்கோங்க'' என உருக்கமாகச் சொல்ல,

''அதானே அவங்க செஞ்சுட்டு இருக்காங்க. நீ என்னடா புதுசா சொல்லற'' என மீண்டும் நிவேதிகாவைக் கலாய்த்துவிட்டே விடைப்பெற்றான் தினேஷ்.

அவர்கள் கிளம்பிச் சென்றதும், ''என்ன பண்ணிட்டு இருக்கன்னு புரிஞ்சுதான் செய்யறியா நிவேதிகா?'' எனச் சுள்ளென்று வினவினான் தமிழினியன்.

கேள்விவெளிவந்த வேகத்திலேயே போய்மனதில் படாரென்று மோதி கவிழ்ந்திருந்த வலியைத் தோண்டியெடுக்க, விழிநீர் படி தாண்டியது.

அவள் பதில் சொல்லும் முன்னர் அவன் கையிலிருந்த அலைபேசி ஒலியெழுப்ப விழிகளை அதன் மேல் பதித்தான் தமிழினியன். அவளிடம் தர வேண்டும் என்ற சுரணையில்லாமல்அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'கொடு' என்பதைப் போல்நிவேதிகா அவனிடம் கையை நீட்டியவாறு நின்றிருந்ததைச் சில நொடிகள் கழித்தே உணர்ந்தான். ஒன்றும் சொல்லாமல் கைப்பேசியை அவளிடம் தந்தான்.

திரையில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்ததும், 'இவன் ஏன் இப்போது அழைக்கிறான்?' என உள்ளுக்குள் திடுக்கிட்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அங்கிருந்து நகர எண்ணித் திரும்பினாள் நிவேதிகா.

''நீ எல்லோருக்கும் தேவையில்லாமல் நம்பிக்கையைக் கொடுக்கிற

நிவேதிகா'' என்ற குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

திரும்பி அவனைத் தீர்க்கமாகப் பார்த்தவள், ''நடக்கிறது கண்டிப்பா நடக்கும்'' என அவள் நிதானமாகச் சொல்ல அவனுக்குத் தன் இயலாமையைக் குறித்துக் கோபம் கிளர்ந்தது.

அவன் முக மாறுதல்களை வைத்து அவன் எண்ணவோட்டத்தைப் புரிந்து கொண்டவளாக, ''உங்க ஹெல்த் ரொம்ப முக்கியம் தமிழ். பிளீஸ் எதுவா இருந்தாலும் நிதானமாகப்பேசலாமே'' என்றாள்இதமளிக்கும் குரலில்.

விழியுயர்த்தி அவளைப் பார்த்தவன், ''உன் அம்மா-அப்பா ஏன் என்னைப் பார்க்க வரலை?அவங்களுக்கு என்னைப் பிடிக்கலையா? இல்லை, இப்படி ஆகிடுச்சுன்னுவேற மாதிரி யோசிக்கிறாங்களா?'' எனக் கேட்டான்.

'ஐயோ' என்றிருந்தது அவளுக்கு. அவனிடம் இப்போதே அனைத்தையும் கொட்டிவிடலாம் என்று தோன்றியது. ஆனால் ஒரு மருத்துவராக அதை அவள் செய்யவேமுடியாது. அவன் உள்ளமும், உடலும் மிகவும் சோர்ந்து போயிருக்கிறது. இரண்டுக்குமே ஓய்வு அவசியம்.

''அது எப்படி வருவாங்க தமிழ்?'' அவள் பதில் சொல்வதில் இருந்து தப்பிப்பதற்கு வாய்ப்பைத் தந்தவாறுஅறையினுள் வந்தார் பார்வதி.

புருவங்கள் சுருங்க தன் அன்னையைப் பார்க்க, ''நிவியோட அம்மாவுக்கு பிரஷர் அதிகமாகி மயங்கிட்டாங்க.அவங்களும் மூணு நாள் இங்கே அட்மிட் ஆகியிருந்தாங்க. நீ மனசைப் போட்டு அலட்டிக்காத'' என்றார்.

''இப்போ எப்படி இருக்காங்க?'' என அவன் நல்ல குணம் தலைதூக்க, ''சரியாயிடுச்சு. எல்லாம் மன அழுத்தம்'' எனப் பார்வதி பதில் சொல்லிக் கொண்டிருக்கையில் நிவேதிகாவின் அலைபேசி மீண்டும் மெல்லிய ஓசையுடன் சிணுங்கியது.

''நீங்க பேசிட்டு இருங்க அத்தை'' என அவர்களிடம் செ ால்லிவிட்டு, வெளியில் சென்றாள் நிவேதிகா.

அன்னையிடம் பேசிக் கொண்டிருந்தாலும் அவன் எண்ணம் மொத்தமும் நிவேதிகா மட்டுமே நிறைந்திருந்தாள். எதற்காக இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்?சீக்கிரம் இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அதற்கு அவன் தேறி வர வேண்டும் என முடிவு செய்து கொண்டு கண்களை மூடினான்.

வெளியில் சென்று அழைப்பை ஏற்ற நிவேதிகா, ''லண்டன் போய்ச் சேர்ந்துட்டீங்களா?'' எனக் குரலில் வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் கேட்டாள்.

எதிர்முனையில் இருந்தவன் சொன்னதை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தவள், இறுதியாக, ''இனி எதுவும் மாறாது விக்ரம். நான் ஏற்கனவே சொல்ல வேண்டியதைசொல்லிட்டேனே. ஆல் த பெஸ்ட்'' என அழைப்பை வைத்துவிட்டுத்தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

நிவேதிகா தன் வேலைகள் அனைத்தையும் முடித்துவிட்டு வீடு செல்லும் முன்னால் தமிழினியனைப் பார்த்து வர அங்கே சென்றாள்.

''என்னால தானேஉன் அம்மாவுக்கு இந்த நிலைமை?'' என்ற கேள்வியே அவளை வரவேற்றது. தமிழினியனின் உள்ளப் பதட்டத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள்.

''கண்டிப்பா...'' இடைவெளிவிட்டு, ''உங்களால தான் அவங்க உயிரோட இருக்காங்க'' என அழுத்தம் கொடுத்து முடித்தாள்.

'மேலே சொல்லு' என்பதைப் போல் அவன் அமர்ந்திருக்க, ''நான் லண்டன் போயிருந்தா இதை விடவும் பயங்கரமா நடந்திருக்கும்'' என்றாள்.

சற்றுநேரம் ஆழ்ந்த அமைதி இருவரிடத்திலும்.

''உங்களுக்கு ஆக்சிடென்ட் ஆனதும் ஒருவித மனஅழுத்தத்தில் இருந்தாங்க காரணத்தை விளக்க ஆரம்பித்தாள்.

அமெரிக்காவில் வசிக்கும் அவள் அண்ணன் தான் விரும்பும் அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டி வீட்டில் அனுமதி கேட்டிருக்கிறான்.

காதல் திருமணம் என்றாலே யாரும் வெற்றிலைப் பாக்கு வைத்து வரவேற்கப் போவதில்லை. இதில் அப்பெண் அமெரிக்கப் பெண் என்றதும் அவர்களால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை.

வீட்டில் பலத்தஎதிர்ப்புக்கிளம்ப, அமெரிக்காவில் இருப்பவனுக்கு அங்கேயே அவளைத் திருமணம் செய்து கொள்ள எதுவும் தடைக் கல்லாக இருக்கவில்லை.

பெண்ணின் வாழ்க்கை என்ன ஆகுமோ என ஏற்கனவே மனஅழுத்தத்தில் இருந்த அவள் அன்னைக்கு,மகனும் எந்தவித ஆதரவும் காட்டவில்லை என்றதும் மேலும் அழுத்தம் கூடியது. அதன் பிரதிபலிப்பே நெஞ்சம் பலவீனப்பட்டு இதயத்தைப் பதம் பார்த்தது.

உடனே மருத்துவமனைக்கு அழைத்து வர, மூன்று நாட்கள்

மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு, 'எவ்வித அதிர்ச்சி தரும் விஷயமும் பேசாதீங்க' என்ற அறிவுரையுடன் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

பகலில் கணவர் மற்றும் செவிலியர் ஒருவர் துணையுடனும் இரவில் மகளின் கவனிப்பிலும் வீட்டில் ஓய்வெடுக்கிறார்.

அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தவனுக்கு எதிரில் நிற்பவளை எண்ணிப்பரிதாபம் சுரந்தது.

''சாரி.. என்னால உனக்கு ஹெல்ப் பண்ண முடியலை'' என்றவனின் உருவம் அவளுக்கு மங்கலாகத் தெரிந்தது.

சதா சர்வ காலமும் மற்றவர்களின் நலனைப் பற்றி மட்டுமே யோசிக்கும் இவனின் குணம் எத்தகையது? அதுவும் தனக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்யும் இவனுக்காக எதையும் இழக்கலாம்.

''இப்படி ஒரு நிலையில'' உண்மையைச் சொல்லறது சிரமம் இல்லையா? அவன் தொடர்ந்து பேச, அவள் மௌனித்தாள்.

''பார்க்கலாம்... இப்போ நான் வந்துட்டேனே...'' என அவன் அவளுக்குத் தைரியமளிக்க, ''உங்களால் என் அம்மா உயிரோட இருக்காங்க. அதுக்கு நான் தேங்க்ஸ் சொல்லணும். சீக்கிரம் குணமாகி வாங்க. மத்ததை அப்புறம் பேசிக்கலாம்'' என்றாள் மீட்டெடுத்த புன்னகையுடன்.

அவன் மேற்கொண்டு பேசுவதற்கு முன்னால் அவனுக்குப் பயிற்சி தரும் நபர் உள்ளே வர, ''நீங்க பாருங்க'' என அவனிடம் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

மேலும் பதினைந்து நாட்கள் அவன் அந்த மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று நன்கு தேறினான்.

மருத்துவர்களே ஆச்சரியப்படும் வகையில் அவன் உடல்நிலை நல்ல முன்னேற்றம் கண்டது.

மிஸ்டர் தமிழ், மருத்துவர்கள் நாங்க எவ்வளவு போராடினாலும் நோயாளிகளும் ஒத்துழைப்புக் கொடுக்கணும். அது உங்ககிட்ட அதிகப்படியா இருக்கு. வெரி குட் எனமருத்துவர் அவனை மெச்சுதலாகப் பார்க்க,

என்னால யாரும் கஷ்டப்படக்கூடாதுன்னு நினைப்பேன் டாக்டர். அப்படி இருக்கிறப்போ எனக்கு ஏதாவது ஆச்சுன்னா என் குடும்பம் ரொம்பக் கஷ்டப்படுவாங்க. அவங்களுக்கு அப்படியொரு வலியை நான் எக்காலத்திலும் கொடுக்கமாட்டேன் என்றான்.

குடும்பத்துக்கு வலியைத் தரமாட்டேன் என்று சொல்பவன் அவன் உயிரையும் பணயம் வைக்கத் துணிந்தானே? 'இவன் ஏன் இவ்வளவு நல்லவனாக இருந்து தொலைக்கிறான்?' என ஆயாசத்துடன்நிவேதிகாஅவனையே வெறித்துப் பார்க்க, அவள்புறம் திரும்பியவன் புருவம் சுருக்கினான்.

''நீங்க இன்னும் இரண்டு நாள்ல வீட்டுக்குப் போகலாம். ஆனா தொடர்ந்து பிஸியோதெரபி செய்யணும்'' என மருத்துவர் தொடர்ந்து பேச, தேங்க்ஸ் டாக்டர்'' என அவரை நோக்கிப் புன்னகைத்துத் தலையசைத்தான்.

அவனால் இப்போது நன்றாகவே நடக்க முடிந்தது. என்ன, நிறைய நேரம் நடந்தால் சற்று சோர்ந்து போய்விடுகிறான். அதுவும் இன்னும் ஒன்றிரண்டு வாரங்களில் சரியாகிவிடும் என அவனுக்குத் தைரியமூட்டும் வகையில் பேசினார் மருத்துவர்.

தொடர்ந்து மருந்து மாத்திரைகள் எடுக்க வேண்டும் என்றும், மேலும் சில அறிவுரைகளையும் வாரி வழங்கிவிட்டுஅங்கிருந்து நகர்ந்தார் மருத்துவர்.

''இனிமேல் அடிக்கடி என்னை வந்து பார்க்காத...'' என்ற அவனது குரலில் திடுக்கிட்டு அவனை நோக்கினாள் நிவேதிகா

## 4

மொத்தமாக ஒரு மாதமருத்துவமனை வாசத்துக்குப் பிறகு தமிழினியனின் உடல்நிலையும்மனநிலையும்சீராக, அவன்வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

அங்கிருந்து கிளம்பும் வரையில் நிவேதிகாஅவன் கண்களில் படவேயில்லை. அடிக்கடி தன்னைப் பார்க்க வரவேண்டாம் என்று சொல்லியது அவனே. அதைக்கேட்டதும்அவள்திடுக்கிட்டுப்பார்த்தது சில நொடிகளே.

பின்னர் சுதாரித்து, ''உங்க இஷ்டம். வேற டாக்டரை வரச் சொல்லறேன்'' என்றவள் அதையே பின்பற்றி அவன் அறைக்குச் செல்வதைத்தவிர்த்துவிட்டாள்.

ஆனால் சொல்லிவிட்டதை மறந்துவிட்டவனாக அவன்விழிகள் காலையிலிருந்து அவள் வரவை நோக்கி வழி மேல் பதிந்திருந்தன. அதரங்கள் தூரம் போகச்சொல்லிவிட்டாலும் நெஞ்சம் ஏனோ

கையில் ஒட்டிக் கொண்ட செந்தூரமாய் அவளைச்சுற்றியே ஒட்டிக் கொண்டு அலைந்தது.

மருத்துவமனையில் இருந்து வீடு செல்லும் வழிநெடுகிலும் கடந்த நாட்களில் நடந்தவைகள்தமிழினியனின் விழித்திரையில் படமாக ஓடவெறுமை அவனைச் சூழ்ந்து கொண்டது.

இனிமேல் நிவேதிகாவைப் பார்க்கவே முடியாதா? கடந்த இருபது நாட்களாக அவளின் இருப்பை உள்ளுக்குள்ளும் உணர்த்திவிட்டாள். ஆனால் இது போகாத ஊருக்கு வழி தேடுவது போல்.

மகனின் சோர்ந்த முகத்தைப் பார்த்ததும்,என்ன பண்ணுது? என அருகில் அமர்ந்திருந்த பார்வதி பதற்றம் கொள்ள,தலையைப் பின்னால் சாய்த்து அமர்ந்து கொண்டு, ''ஒண்ணுமில்லைம்மா.. எல்லாமே வித்தியாசமா, புதுசா இருக்கு'' என்றான்.

சில நொடிகளில் காரை வீட்டுக்கு முன்னால் நிறுத்தியிருந்தார் சதானந்தன். கீழே இறங்கி, மகன் இறங்குவதற்குக் கார் கதவைத் திறந்து வைத்து உதவியவர், பின்னர்மருத்துவமனையில் இருந்து கொண்டு வந்த பொருட்களை எடுக்கப்பின்னால் நகர்ந்தார்.

காரிலிருந்து இறங்கிய தமிழினியனும் அவருக்கு உதவ முன்வர, தர்ஷினி, நீ அண்ணனை வீட்டுக்குள்ள கூட்டிட்டுப் போம்மா.. பாரு, போம்மா'' என அவர்களை விரட்டிவிட்டார் சதானந்தன்.

அவர்கள் வீட்டினுள் சென்றதை உறுதிபடுத்திவிட்டு மீண்டும் பொருட்களின் பக்கம் கவனம் செலுத்த, ''என்ன சதா, பையனை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துட்டியா?'' என்ற குரல் கேட்டது.

சதானந்தன் திரும்பிப் பார்த்தார்.வாக்கிங் போய்க் கொண்டிருந்த அதே தெருவில் குடியிருக்கும் நண்பர் ஒருவர் கேட்டின் வெளியே நின்றுகொண்டிருந்தார்.

நண்பனைப் பார்த்ததும் கேட்டின் வெளியே சென்று அவருடன் பேச ஆரம்பித்துவிட்டார்.

''நல்லவேளை இதோட போச்சு. நல்லவங்களுக்குத்தான் இப்படி நடக்குது'' என நண்பர் தொடர்ந்து மனவருத்தத்தைக் கொட்ட, 'பச்' என்று மட்டுமே அவரால் சொல்ல முடிந்தது.

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த சதானந்தனின் பார்வையில்தூரத்தில் நிவேதிகா தன் இரண்டு சக்கர வாகனத்தைத் தள்ளிக் கொண்டு வருவது விழுந்தது.

'எதற்காக வண்டியைத் தள்ளிக் கொண்டு வருகிறாள்?' என்ற யோச

னை பிறந்த அதே சமயத்தில் அவள் வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியிருந்தாள்.

'வண்டி ரிப்பேரோ?' எனப் புருவம் உயர்த்தியவர், ஒரு நிமிஷம் என நண்பரிடம் சொல்லிவிட்டு நிவேதிகாவை நோக்கி விரைந்தார்.

அவர் அங்கே செல்வதற்குள் அங்கு நின்றிருந்த நான்கு இளைஞர்களின் அருகில் நெருங்கியிருந்தாள் நிவேதிகா.

'என்ன செய்கிறாள்?' என அவர் யோசித்து முடிப்பதற்குள் குனிந்து காலில் போட்டிருந்த செருப்பைக் கழற்றி அங்கிருந்த ஒருவனின் சட்டையைப் பிடித்துப் பட் பட்டென்று சரமாரியாக அடிக்க ஆரம்பித்திருந்தாள்.

''ஹே... என்ன பண்ணற?'' என அடிவாங்கிய இளைஞன் திமிற அவனின் மற்ற நண்பர்கள் அவளை விலக்க முயன்றனர். அவள் பிடி உடும்பு பிடியாயிருந்தது.

கலகலப்பில் கூட்டம் கூட, சாதானந்தன் கிட்டத்தட்ட அவர்களுக்கருகில் ஓடினார்.

''இனிமேல் இப்படிப் பேசுவியாடா... பேசுவியா?'' பட் பட்டென்று தொடர்ந்து அவனை அடித்தவாறே நிவேதிகாசொன்னது அவர் காதில் விழுந்தது.

''உன் அம்மாவும் ஒரு பொண்ணு தானே? வெட்கமாயில்லை?'' மீண்டும் செருப்படி.

''நிவி என்னாச்சும்மா?'' எனப் பதற்றத்துடன் சதானந்தன் வினவ, நடப்பதை பார்த்துக் கொண்டிருந்த சதானந்தனின் நண்பரும் அவரைத் தொடர்ந்து அங்கே வந்திருந்தார்.

இத்தனை நேரமாகியும் வீட்டுக்குள் வராமல் கணவர் என்ன செய்கிறார் என வெளியில் சென்று பார்வதி பார்க்க, வெளிக்கேட் திறந்திருக்க, கணவரைக் காணவில்லை.

கேட்டுக்கு வெளியில் வந்து எட்டிப் பார்த்தவருக்குநான்கைந்து வீடுகள் தள்ளி ரோட்டில் பெரிய கூட்டம் கூடியிருந்தது மட்டுமே தெரிந்தது. ஏற்கனவே மகனின்விபத்தினால்கதிகலங்கியிருந்தவருக்கு அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல் கணவருக்கு ஏதோ ஆகிவிட்டதோ என்றே பதறினார்.

விடுவிடுவென்று கூட்டம் கூடியிருந்த இடத்துக்குப் பார்வதியும் விரைந்துசென்றார்.

ஒருவன் மட்டும் அடி வாங்கிக் கொண்டிருக்க, மற்ற

நண்பர்கள்என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைந்தனர்.

தவறு அவர்களின் நண்பன் மீது என்று தெரியுமே. அத்தோடு இவள் என்ன செய்து விடுவாள் என்ற தெனாவெட்டில் நண்பனை அடக்காமல் உடன் நின்று சிரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவள் இப்படிச் செருப்பைக் கழற்றி அடிப்பாள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

அத்தெருவில் குடியிருப்பவர்கள் ஒன்று கூடிப் பிரச்சனை என்னவென்று விசாரிக்க, நிவேதிகா நடந்ததைச் சொல்லிவிட்டாள்.

அங்கிருந்தவர்களின் பார்வை அந்த மாணவர்களின் மேல் அருவருப்புடன் படிய, அத்தெருவில் குடியிருக்கும் இளைஞன் குன்றிப் போனான். அவன் நண்பர்கள் இத்தோடுகிளம்பிவிடுவார்கள். அவன் அதே தெருவில் அல்லவா இருக்க வேண்டும்.

தப்புக்குத் துணை போவதும் தவறு என்று காலம் கடந்து புரிந்தது. அவன் பயந்ததைப் போலவே அவனின் நல்ல பையன் என்ற பிம்பம் சரிந்ததை அக்கம் பக்கம் உள்ளவர்களின் பேச்சு உணர்த்தியது.

ஆத்திரமடைந்த அவன் அன்னை, ''இனிமேல் இவனுங்களோட உன்னைப் பார்த்தேன் தோலை உரிச்சிடுவேன்'' எனக் கொதித்தார்.

அவர்களில் பலரும் அத்தெருவில் பல வருடங்களாகக் குடியிருப்பவர்கள். நிவேதிகா யாரென்று தெரியவில்லை என்றாலும் சதானந்தன் குடும்பத்தைத் தெரியுமல்லவா?அவருக்குத் தெரிந்த பெண் என்பதால் அனைவருக்கும் கண்மண் தெரியாமல் கோபம் வந்துவிட்டது.

''சாரி சிஸ்டர் ''என அத்தெருவில்வசிக்கும்இளைஞன் முணுமுணுக்க, ''வாம்மா'' என நிவேதிகாவைச் சமாதானம் செய்து அழைத்து வந்தனர் பார்வதியும், சதானந்தனும்.

பஞ்சராகிப் போயிருந்த தன் வண்டியை உருட்டியவாறே அவர்களுடன்வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் நிவேதிகா.

★★★★

**வீ**ட்டினுள் சென்ற தமிழினியன் தன் தங்கையிடம், ''என் ஃபோன் எங்கேடா?'' எனக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

அன்று விபத்து நடந்த இடத்தில் அவன் அலைபேசி மாட்டிக் கொண்டது. விபத்து குறித்து விசாரித்த காவலர்கள் அதைச் சேகரித்துக் கொண்டு வந்து வீட்டினரிடம் தந்திருந்தனர்.

கைப்பேசி உடைந்து போயிருக்க, புதிதாக ஒன்றை வாங்கி வைத்திருந்தாள் அவன் தங்கை.

''சாரிண்ணா. நீங்க ஆசையா கனடால இருந்து வாங்கிட்டு வந்த போன் உடைஞ்சு போச்சு'' எனத் தர்ஷினி வருந்த, ''உனக்கில்லாம நான் மட்டும் வாங்கின போன் உடைஞ்சதுக்கு நீ சந்தோஷப்படுவேன்னு நினைச்சேன்'' எனக் கிண்டல் செய்தான்.

''போங்கண்ணா'' எனச்சிணுங்கியவள், ''இருங்க...அம்மா உங்களுக்குக் குடிக்கக் கொடுக்கச் சொன்னாங்க'' என்றவாறேச மையலறைக்குள் ஓட, கையிலிருந்த அலைபேசியில் கவனத்தைத் திருப்பினான்.

பல அழைப்புகள், குறுஞ்செய்திகள்.தெரியாத சில எண்கள் என ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருக்க, கைப்பேசி சிணுங்கியது. புதிய எண்ணாக இருக்க, புருவத்தைச் சுளித்தவாறே எடுத்துப் பேசினான்.

எதிர்முனையில் சொன்னதைக் கேட்டதும்அவன் முகத்தில் குழப்ப ரேகைகள். அவனால் மட்டுமே இதற்கொரு தீர்வைக் காண முடியும்என்ற நிதர்சனம் முகத்திலறைந்தது.

சொன்னதைப் போலவே தர்ஷினி அவன் குடிப்பதற்கு எதையோ எடுத்துக் கொண்டு வர, அழைப்பைப் பேசி முடித்துவிட்டு அவள் கையிலிருந்ததை வாங்கிக் கொண்டான்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, பெற்றோர்கள் இல்லையென உறுதி செய்தவன், ''ஏன்டா, உன்னைத் தொல்லை செஞ்சவன் இன்னும் வம்பு பண்ணறானா?'' எனத் தணிந்த குரலில் கேட்க,

''அதெல்லாம் அண்ணி அவனை அடிச்சு தூள் கிளப்பிட்டாங்க. இனிமேல் வாலாட்ட மாட்டான்'' எனக் கண்களில் தோன்றிய மின்னலுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

கேட்டவனுக்குத் தான் இடியை இறக்கியது போலிருந்தது. என்ன சொல்லற ? ''பதட்டம் மேலோங்க, உணவறையில் இருந்தஇருக்கையில் அமர்ந்து கொண்டு தங்கையை ஏறிட,, அவள்நடந்த விஷயங்களை ஏற்ற இறக்கங்களுடன் சொல்ல ஆரம்பித்தாள்.

தன்னைக் காதலிக்க வேண்டும் என்று ஓர் இளைஞன் தர்ஷினியை அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டிருந்தான். அதுவும் தமிழினியன் மருத்துவமனையில் இருக்கையில் அவனின் அத்துமீறல் எல்லையைக் கடந்தது.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் அவனின் குரோதத்தில்

தர்ஷினியின் மன உளைச்சல் அதிகமானது. யாரிடம் சொல்வது எனத் தெரியாமல் தர்ஷினி திணறிக் கொண்டிருக்க, அவளின் முக வாட்டத்தை வைத்தே ஏதோ பிரச்சனை என நிவேதிகா கண்டுகொண்டாள்.

சரியான சந்தர்ப்பத்தில் தர்ஷினியிடம் விசாரிக்க, விஷயத்தைக் கொட்டிவிட்டாள்.

''உன் அண்ணன் பெரிய பருப்பு.. அவன் என்னைத் தொலைச்சிடுவேன்னு மிரட்டினான். இப்போ பிஞ்சு போன செருப்பு மாதிரி எதுக்கும் உதவாம கிடக்கிறான்'' எனத் தெனாவெட்டாகப்பேசியிருக்கிறான் அந்த இளைஞன்.

தர்ஷினி சொல்வதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாலும் உள்ளுக்குள் இரத்தம் கொதித்தது. அவன் யாரென்று விசாரித்து, முனைப்புடன் அவன் வீட்டைக் கண்டறிந்து தர்ஷினியுடன் நேராக அவன் வீட்டுக்கே போய் நின்றாள் நிவேதிகா.

தர்ஷினியைப் பார்த்ததும் அதிர்ந்து நின்றிருந்தவனிடம், ''மத்தவங்களோட நிலைமையை பத்தியோசிக்க மாட்டியா?நீயெல்லாம் மனுசனா, இல்லை, மிருகமா?'' எனச் சீறினாள் நிவேதா.

''கலாட்டா பண்ணறீங்களா? போலீஸைக் கூப்பிடட்டுமா?'' தன் தவறை உணர்ந்து கொள்ளாமல் அவன் எகிறினான்.

''கூப்பிடு.. பார்க்கலாம்'' நிவேதிகா அவனையும் விட அதிகமாகச் சத்தம் போட, உனக்குப் பிரச்சனை பண்ண என் பையனா கிடைச்சான்? அவன் அப்படியெல்லாம் பண்ணற ஆளில்லை என அவன் அன்னை ஒரு பக்கம் கூச்சலிட்டார்.

ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த இயலாமல் தெனாவெட்டாக நின்று கொண்டிருந்தவனை நெருங்கிஓங்கி அறைந்தாள் நிவேதிகா.

''ஏய், என் பையனை என் வீட்டுக்கே வந்து அடிப்பியா?'' என அவன் அன்னை கையை ஓங்கிக் கொண்டு அவளை நெருங்க,

என்ன பண்ணினான்னு தெரியாமப் பேசாதீங்க. இவனை மாதிரி ஆளுங்கடார்ச்சர் தாங்காமஎத்தனை பேர் மனநலம் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்கு வர்றாங்கன்னு ஹாஸ்பிடலுக்கு வந்து பாருங்க'' எனத் தொடர்ந்து சீறினாள்.

சத்தம் கேட்டு முன்னறைக்கு வந்த அவன் தந்தை நல்லவராக இருந்திருக்க வேண்டும். ''இவனைக் கெடுக்கிறதே நீ தான்'' என மனைவியை முறைத்தவர், என்ன விஷயம் எனக் கேட்டறிந்து, ''நான் பார்த்துக்கிறேன்மா. சாரி'' என அவர்களிடம் மன்னிப்பை வேண்டி

அனுப்பி வைத்தார்.

தர்ஷினி நடந்தவைகளைச் சொல்லி, ''அண்ணியும் உங்களை மாதிரியே ரொம்பக்கோிங்என முடித்தாள்.

பேச்சற்று அமர்ந்திருந்தான் தமிழினியன். அவர்களின் நிலை இடியாப்பச் சிக்கலாய் உருமாறிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அவனுள்ளம் அலைபாய ஆரம்பிக்க, சம்மந்தப்பட்டவளிடம் உடனே பேச வேண்டும் என்ற அவசரமும் அவசியமும் தோன்றியது.

அப்போது வாசலில் அரவம் கேட்க, தலையுயர்த்திப் பார்த்தான். பார்வதியும், சாதானந்தனும் உள்ளேவர, வலுக்கட்டாயமாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, என்னம்மா வீட்டுக்குள்ள வராம வெளியிலேயே நின்னுட்டீங்க? என்றான்.

அதே தருணத்தில் அவர்களுக்குப் பின்னால் வந்த நிவேதிகாஅவன் பார்வையில் பட்டாள்.

'வந்துவிட்டாயா?' என அதுவரையில் மனதில்ஓடிக் கொண்டிருந்த ஒருவித தேடல் முடிவுக்கு வந்ததைப்போல் உணரவும் அதிர்ந்தான்.

கூடாது! வறண்ட பாலைவனத்தில் உலர்ந்து போகும் நீரைப் போன்றது இது. சாத்தியப்படாது!இன்றே இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். ஒரு முடிவுடன் தந்தையை நோக்கி வாயைத் திறப்பதற்குள் அவர் மகனை நோக்கி அக்கேள்வியைஉதிர்த்திருந்தார்.

தமிழ், சொல்லுப்பா எப்போ உங்ககல்யாணத்தை வச்சுக்கலாம்?

## 5

**த**ந்தையின் கேள்வியில், 'அப்பா!' என அதிர்ச்சியைக் கொட்டிவிட்டு, ''இப்போ தான் வீட்டுக்கே வந்திருக்கேன். வேலைக்குப் போய் ஜாயின் பண்ணனும்'' என அவன் தொடர்ந்து காரணங்களை வரிசைப்படுத்திக் கொண்டிருக்க,

''நீ ஹாஸ்பிடல்ல இருந்து வந்ததும் பேசலாம்னு சொன்னியே... இனி அப்படியெல்லாம் ஆராய்ச்சி செஞ்சுட்டு இருக்கறதுக்கு நேரமில்லை. ஊர்ல இருக்கறவங்க கண்டதையும் பேசறாங்க'' எனப்பார்வதி விசும்பலுடன் வெடித்தார்.

''என்னாச்சும்மா?'' மகனின் கேள்விக்கு என்ன சொல்வது எனத் தடுமாறியவரின் பார்வை மகள் மேல் படிந்து மீள, அவரின் சங்கடம் உணர்ந்தவனாக,

''தர்ஷினி ரூமுக்குப் போ'' எனத் தங்கையை அனுப்பி வைத்தான் தமிழினியன்.

''தர்ஷினிக்குத் தொடந்து ஒருத்தன் தொல்லைக் கொடுத்துட்டு இருந்தான்னு உனக்குத் தெரியுமில்ல?'' அவள் சென்றதும் பார்வதி கேட்க, ''ம்ம்''. என மெல்லத்தலையசைத்தவாறே, 'இவள் சொல்லியிருப்பாளோ?' என நிவேதிகாவை அளவிட்டான்.

''அவன் வீட்ல போய் அறைஞ்சுட்டு வந்ததை நிவி சொன்னா'' எனப் பார்வதி சொன்னதும்,அவனுள் விழுந்திருந்த நெருப்புத் துண்டமொன்றுதிகுதிகுவென்றுபற்றி எரிய ஆரம்பித்தது.

''அறிவிருக்கா? எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம்னு பண்ணுவியா?'' நிவேதிகாவிடம்சிடுசிடுத்தான் தமிழினியன்.

''அவன் பேசினதுக்கு இன்னும் செஞ்சிருக்கணும்.'' முகம் சிவந்து போய் நிவேதிகாவும்கோபாவேசமாகப்பதிலளிக்க, ''அதான் செருப்பைக் கழட்டி அடிச்சுட்டியே'' என்று சதானந்தம் சிலாகித்தார்.

'இது வேறயா?' எனத்தமிழினியன் அவளை விழிகளால் சுட்டெரிக்க, ''நீங்க வேலையைப் பாருங்க'' எனப்பெரியவர்கள் இருவரையும் அனுப்பிவிட்டு,

''அவன் அசிங்கமா பேசினான். செருப்பால அடிச்சேன்'' என்றாள், 'நான் தப்பு செய்யவில்லை' என்றநேர்மையுடன்.

''என்ன சொன்னான்?'' எனக் கூர்மையுடன் வினவ, சற்றுமுன்னர் வண்டிபஞ்சரானதும்கீழிறங்கிவண்டியைஉருட்டஆரம்பித்ததிலிருந்து சொன்னாள்.

பின்னர் தயங்கிவிட்டு, ''கல்யாணம் பண்ணாம உங்களுக்கு வொய்ப்பா நான் வாழ்ந்துட்டு இருக்கேனாம். அதாவது எல்லா விதத்திலும்..'' எனச் சொன்னதும் அவன் கைமுஷ்டி இறுகியது.

''அந்த மாதிரிகுடும்பம்னு தெரியாம தர்ஷினிகிட்ட லவ் பண்ணச் சொல்லி, டைம் வேஸ்ட் பண்ணிட்டானாம்'' என அவள் தொடர்ந்ததும் அவன் முகமெல்லாம் சிவப்பேறி, நெருப்புத் துண்டங்களாய் கண்கள் ஜொலித்தன.

''கோபம் வருதில்லை?அதான் அடிச்சேன். என்னைச் சொன்னாலும் பரவாயில்லை. உங்களைப் போய்...'' என அவள் கோபத்துக்கு நியாயம் கற்பித்தவள், ''உங்க உடம்புல பலம் வந்ததும் ஹீரோயிசத்தைக் காட்டுங்க. அதுவரைக்கும் ரசம் குடிச்சுட்டு பேசாம உட்காருங்க'' என்றாள் முறைத்தவாறே.

அவள் பேசிய விதத்தில் அவன் உதடுகள் லேசாக வளைந்து

குறுஞ்சிரிப்பை உதிர்க்க, இறுகியிருந்தஉடலும் தளர்ந்தது. அவளையே சற்றுநேரம் விழியகலாது நோக்கியவன், மெல்ல எழுந்து முன்னறைக்குச் சென்று, ''அப்பா நின்னு போன கல்யாணம் நின்னதாகவே இருக்கட்டும்'' என்றான்.

தமிழினியன் தெளிவாக அழுத்தத்துடன் சொல்ல, ''என்னப்பா சொல்லற?'' எனச்சதானந்தன் அதிர்ந்து போனார்.

''நானே நிவேதிகாவீட்ல பேசறேன். அதுக்கு முன்னாடி அவளோட தனியாப் பேசணும்'' உறுதியான குரலில் சொல்ல அவன் பெற்றோர்கள் இருவரும் நிவேதிகாவைஅவசரமாக அளவிட்டனர்.

அவள் முகபாவனையிலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இவனுக்கு என்னவாகிவிட்டது என உள்ளுக்குள் மருகினாலும் எதையும் அவர்கள் வெளியில் காட்டிக் கொண்டிருக்கவில்லை.

''குளிச்சிட்டு வரேன். நாங்க கோவிலுக்குப் போயிட்டு வர்றோம்'' என அவன் சொல்ல, தனித்துப் பேசவிரும்புகிறான் என அவர்களுக்குப் புரிந்தது. நிவேதிகாவுக்கோ திக்கென்றிருந்தது.

அவனிடம் என்ன பேசுவது, எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை. உடல்நிலை ஒரு காரணம் என்றாலும் அவன் கேள்விகளில் இருந்து நழுவும் சந்தர்ப்பங்களையும் இதுவரையில் அவள் உருவாக்கிக்கொண்டாள். இன்று அது முடியவே முடியாது.

''தெரிஞ்ச மெக்கானிக்க வரச் சொல்லறேன்ம்மா. அவன்கிட்டே வண்டிச் சாவியைக் கொடுங்க'' என அன்னையிடம் சொன்னவன்,

நேரா வண்டியை வீட்ல கொண்டு வந்து தரச் சொல்லறேன்'' என நிவேதிகாவிடம் சொல்லிவிட்டு யாரும் மறுப்புச் சொல்லும் முன்னால் தன்னறைக்குள் புகுந்து கொண்டான்.

அவன் கிளம்பி வரவும், கால் டாக்சி ரெடியாக அவர்கள் வீட்டின் வாசலில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

இடது கை சட்டையை மடித்துவிட்டவாறே, ''கிளம்பலாமா?'' என முன்னே நடக்க, ''கொஞ்ச நாள் போகட்டுமே'' என நிவேதிகா தடுக்க முயன்றாள்.

''ஒரே ரூம்குள்ள அடைப்பட்டிருக்க ஒரு மாதிரி இருக்கு. பிளீஸ்'' என்றதும் அவள் மனம் இளகிப் போனது.

ஒரு மாதமாக ஒரே அறைக்குள் அடைபட்டிருந்ததால் மனஅழுத்தம் கண்டிப்பாகக் கூடியிருக்கும். வெளியில் சென்று வருவது அவனுக்கு நல்லது என ஒரு மருத்துவராகச்சிந்திக்கவும்அதற்கு மேல்

அவள் தடை சொல்லிக் கொண்டிருக்கவில்லை.

நிவேதிகா டாக்சியில் ஏறி அமர்ந்ததுமே அவள் தந்தை அவளை அழைத்திருந்தார்.

''அப்பா, தமிழோட கோவிலுக்குப் போயிட்டுச்சீக்கிரம் வந்திடறேன்'' எனச் செல்லும் கோவிலைப் பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொண்டு அழைப்பை வைத்தாள்.

மூன்றாம் மனிதரான கார் ஓட்டுநரின் முன்னால் இருவருமே அந்தரங்கத்தைப் பற்றிப் பேச விரும்பாததால் பலத்த மௌனமும் அவர்களுடன் பயணித்துக் கொண்டிருந்தது.

கோவிலுக்குள் சென்று கடவுளைத் தரிசித்துவிட்டு ஓர் ஓரமான இடம் பார்த்து அமர்ந்து கொண்டான் தமிழினியன். குளிர்ந்த காற்று சிலுசிலுவென முகத்தில் மோதநிவேதிகாவும் சற்று தள்ளிச்சம்மணமிட்டு அமர்ந்து கொண்டாள். அமைதி நிலவும் ரம்மியமான சூழல் அவர்களின் மனப்புழுக்கத்துக்கு இதமளித்தது.

ஆனால் அவனுள் புதைந்திருந்த உணர்வுகள் நெஞ்சை உதைத்துக் கொண்டு வெளியேறியதில்அவளுள் விதைத்துச் சென்றிருந்த துளி தைரியமும் புள்ளியாய் தேய்ந்து போனது.

''என் குடும்பத்துக்கு வீணான நம்பிக்கையைத் தராதே, நிவேதிகா. வீட்ல நம்ம கல்யாணம் நடக்கும்னு நம்பறாங்க. நம்ம கல்யாணம் நடக்காது. இத்தோட எல்லாத்தையும் முடிச்சுக்கலாம்'' எனத் தீவிரமாகக் கனத்து ஒலித்த அவன் குரலில் தலையுயர்த்தி, வெற்று விழிகளுடன் அவனை வெறித்தாள்.

''உண்மையைச் சீக்கிரம் சொல்லிடணும். இனிப்பான பொய்யை விடவும் கசப்பான உண்மைமேல்'' என அவன் தொடர்ந்து பேச, தொண்டைக்குழிக்குள் வார்த்தைகள் சிக்கிக் கொண்டு விக்கின அவளுக்கு.

''எ...எனக்குமே இந்தச் சுகம் பழகிடும். அப்.. அப்புறம் ரொம்ப எதிர்பார்க்க ஆரம்பிச்சிடுவேன். வெறும் ஏ..ஏமாற்றம் வேற. எதிர்பார்த்து ஏமாந்துபோறது வேற. வலியோட வீரியத்தின் தீவிரம் உனக்குப் புரியாது'' தூரத்தில் தெரிந்த மரக்கிளையைப் பார்த்தவாறே பேசிக் கொண்டிருந்தான்.

வார்த்தைகள் தடுமாறி வெளிவந்தாலும் உணர்வுகள் உருமாறாமல் அவளிடம் கடத்தப்பட்டன.

''ஏற்கனவே எதிர்பார்த்து ஏமாந்திருக்கிறேன் . திரும்பவும்வீண் நம்பிக்கையைக் கொடுக்காத. உனக்கு வேணா அது பழக்கமா

இருக்கலாம். ஆனால் அதைத் தாங்கிக்கிற சக்தி எனக்கோ என் குடும்பத்துக்கோ சத்தியமாஇல்லை. இப்போவே சொல்லிட்டா வலியோட வலியா போயிடும்.''

தொடர்ந்து வார்த்தையென்னும் சம்மட்டியால் இதயத்தின்மத்தியில்ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்தான். விசித்திரமாக அவளுக்கு அது இதமளித்தது. காயங்களுக்கு மருந்திட்டுக் கொண்டிருகக்கிறான் அவன். இதழ்களில் சன்னமாகப் புன்னகை மலர்ந்தது.

அவனைப் போலவே அவளும் தூரத்தில் தெரிந்ததை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எந்தஎதிர்வினையும்ஆற்றாமல்அமைதியாகஉட்கார்ந்திருக்கிறாளே என அவளைத் திரும்பிப் பார்க்க, அவளின் விரிந்த புன்னகையை அவன் விழிகள் சிறையெடுத்துவிட்டன.

''வேதிகா, ஏன் அமைதியா இருக்க? இப்படியே செட்டில் ஆகிடலாம்னு முடிவு செஞ்சுட்டியா? எங்க குடும்பச் சொத்துக் கைக்கு வந்ததும் மனசை மாத்திக்கிட்டியா என்ன?'' அவன் கேட்டதில், கனவுகள் அனைத்தும் கசக்கி எறியப்பட்டதைப் போல் துடித்தாள்.

பேசி மனதில் இருப்பதை வெளிப்படுத்த நினைத்தவளின் வாய் மீண்டும் மூடிக் கொண்டது. இவள் அதை யோசிக்கவேயில்லையே.

வெடுக்கென்று திரும்பி அவனைப் பார்த்தாள். ஆரம்பத்தில் தப்புச் செய்ய விழைந்தாள் தான். ஆனால் இப்போது நன்கு அலசி ஆராய்ந்து ஒரு முடிவெடுத்திருக்கிறாள். தப்புச் செய்ய நினைத்த பொழுது தோழனாகத் தோள் கொடுத்தவன் இன்று தேளாக மாறிக் கொட்டுவதன் காரணம் புரியவில்லை.

'இவன் இப்படிப் பேசுபவனல்ல. அழுத்தமான நினைவுகளில் அநியாயமாகப் பேசுகிறான்' மனம் மராத்தானில் ஓடிக்கொண்டிருக்க, வாயோ ஓர் எட்டு கூட எடுத்து வைக்கவில்லை.

இச்சமயத்தில் அவள் எதுவும் பேசாமல் இருப்பதே நல்லது.

சற்று தள்ளி ஒலித்த மணிச்சத்தத்தின் சந்தத்தைச் செவியுற்றவள் தலையைத் திரும்பி அதில் தன்னைத் தொலைக்க முயன்றாள். அவளையுமறியாமல் கண்கள் கரித்தன. கசிந்த நீரைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்.

ஆழ்ந்த மௌனம் இருவரிடத்திலும். என்ன நினைத்தானோ, ''நானே நிறுத்தறேன். உன்னை நம்ப முடியாது'' எனத் திடுமெனச்

சொல்லிவிட்டு அவன் எழ, அவசரமாகதத் ததும்பிய விழிகளைத் துடைத்துக் கொண்டு அவளும் உடன் எழுந்தாள்.

''நான் இன்னும் ரெண்டு வாரத்துல வேலைக்குப் போகலாம்னு இருக்கிறேன்'' நடந்தவாறே அவன் சொல்ல, ''போங்க. ஆனா, ரொம்பவும் ஸ்ட்ரைன் பண்ண வேண்டாம்'' என முதல் முறையாக வாயைத் திறந்தாள்.

''உன் அக்கறை ஒரு டாக்டரா மட்டும் இருக்கட்டும். வரேன்'' மண்டையில் அடித்ததைப் போல் சொல்லிவிட்டுக் கைபேசியை எடுத்தவாறே வாயிலை நோக்கிச் செல்ல, அவனைச் சற்று இடைவெளிவிட்டுத் தொடர்ந்தாள்.

வெளியில் அவன் போய் ஓர் ஓரமாக நிற்க, நிவேதிகாவும் அவனுடன் சேர்ந்து நின்று கொண்டாள். மாலை வேளை காற்று இதமாக இருவரையும் வருடிச் சென்றது.

இமையோரத்தில் விழுந்தவளின் பிம்பத்தை ஆராய்ச்சியாக நோக்கினான். ஒரு மாதத்துக்கு முன்னால் இருந்ததை விடவும் மெலிந்து போய், சோர்வில் முக்கியெடுத்த விழிகளுடன் காட்சியளித்தாள். காற்றில் அவள் கேசம் கலைந்து போய் அப்படியும் இப்படியும் அசைய அதை விலக்கிவிடும் எண்ணத்தில் கையைச் சற்றே உயர்த்திவிட்டான்.

சாலையில் சென்ற கார் ஒன்று 'ஹாரன்' ஒலியுடன் அவர்களை ஒட்டி வந்து நிற்க, தன்னைச் சுதாரித்துக் கொண்டு கையைப்படக்கென்று இழுத்துக் கொண்டான்.

''என்னடா பண்ணற?' என அவன் தன்னையே அடக்கிக் கொண்டு, ''கிளம்பறேன்'' என அங்கே வந்து நின்ற காரில் ஏறிக் கொண்டான். அவன் விடைபெற்றதை சற்றும் சட்டைச் செய்யாமல் அவளும் அவனைத் தொடர்ந்து ஏறிக் கொண்டாள்.

பொதுஇடத்தில் வைத்து அதற்கு மேல் தர்க்கம் செய்ய விரும்பாமல் முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டவன்எதுவும் பேசினானில்லை.

அவன் வீட்டின் முன்னால் கார் போய் நின்றதும், அவசரமாகக் கீழே இறங்கி,, அவள் பக்கம் வந்து அவள் கதவைத் திறக்க முடியாதவாறு மறித்து நின்று கொண்டான்.

பின்னர் குனிந்து, ''உன் வண்டி ரெண்டு நாள்ல கிடைச்சிடும். இனிமேல் அடிக்கடி நாம சந்திக்க வேண்டாம்'' என அவளுக்கு மட்டும் கேட்கும் வகையில் முணுமுணுத்துவிட்டு, 'பை வேதிகா'

எனச் சத்தமாகச் சொல்லிவிட்டு அகன்றான்.

'பை' என முகத்தில் அறைந்ததைப் போல் சொல்லிவிட்டுத்திரும்பி நடக்க ஆரம்பித்ததும் அதற்குமேல் அவளால் அவனுடன் இறங்க முடியாமல் போனது. ஆனாலும் அவனின் வேதிகா என்ற அழைப்பு இனித்தது.

வீட்டுக்குச் சென்ற தமிழினியனுக்கு எதுவும் ரசிக்கவில்லை. சற்றுநேரம் தொலைக்காட்சியில் தன்னைத் தொலைத்தவன், இரவு உணவையும், மாத்திரைகளையும்அமைதியாக எடுத்துக் கொண்டு, அசதியாக இருக்கிறது என்று சீக்கிரமே படுக்கைக்குச் சென்றுவிட்டான்.

படுக்க வந்தவனின் நெஞ்சம் பந்தயத்தில் ஓடும் காரைப் போல் அசுர வேகத்தில் கடந்த காலத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்க, விழிகளோ உறக்கத்தைவெறித்தனமாகத் தட்டி விட்டுக் கொண்டிருந்தது.

படுக்கையில் படுத்தவாறே மேற்கூரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தமிழினியனைஅழுத்தமான ஞாபகங்கள்ஆதிக்கத்துடன்உள்ளே இழுத்துக் கொண்டன.

## 6

பல்கலைக்கழகம் சார்பாகத் தன் ஆராய்ச்சியைப் பற்றியஅறிக்கைஒன்றைகனடாவில்நடைபெறவிருக்கும் ஒரு கருத்தரங்குக்கு அனுப்பி வைத்திருந்தான் தமிழினியன்.அதிலுள்ள தகவல்கள் சுவாரசியமானதாக இருப்பதால் அவன் ஆராய்ச்சி பற்றிக் கருத்தரங்கில் பேசுவதற்கு அவனுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

அவன் சென்று வருவதற்கான மொத்தச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொள்வதாகச் சொல்லியிருந்ததால் கனடாவுக்குச் செல்ல தயாராகிக் கொண்டிருந்தான்.

அச்சமயத்தில் அவனிடம் சென்ற அவன் தந்தை, சதானந்தன், ''தமிழ், ஒரு ஜாதகம் உனக்குப் பொருந்தி வந்திருக்குப்பா. எங்களுக்கு ரொம்பத் திருப்தியாயிருக்கு. நீயும் பொண்ணைப் பார்த்திடறியா?'' எனக் கேட்டார்.

''அப்பா இப்போவா? எனக்கு விசா வாங்கணும்... இன்னும் நிறைய வேலையிருக்கு'' எனத் தயங்க, ''முதல்ல பொண்ணு

பிடிச்சிருக்கான்னு பாரு'' எனப்பல்கலைக்கழகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தவனிடம் ஒரு கவரை நீட்டினார்.

'ஒரு நிழற்படத்தை வைத்துத்தன் வாழ்க்கைத் துணையை நிர்ணயம் செய்ய முடியுமா என்ன?' குறுகுறுப்புடன் வாங்கினான். ஆனால் அந்நிழற்படமே இவள் தான் தன் வாழ்க்கை எனத்தீர்மானித்தது.

சதானந்தன்அங்கிருந்து நகர்ந்ததும், மெல்லப் புகைப்படத்தை வெளியில் எடுத்தான். கைக்கெட்டும் தூரத்தில் இருப்பவளை அப்படியே நெஞ்சுக்குள் புதைத்துக் கொள்ளும் பேராவல் உண்டானது.

குப்பென்ற மகிழ்ச்சி ஊற்றெடுக்க இனிமை உயிர்பெற்றதை இரத்த நாளங்களில் உணர்ந்தான். ஹார்மோன்கள் அணுக்களுக்குள் சுழன்று அட்டகாசம் செய்ய,தன்னையே கண்ணாடியில் பார்த்து, 'இதைத் தான் ஸ்பார்க் என்பார்களா?' என வெட்கப் புன்னகையை உதிர்த்தான்.

அப்பொழுது தான் சீவி முடித்திருந்த கேசத்துக்குள் வலது கையைஅளைந்து கலைத்துவிட்டுக் கொண்டான்.

அவள்கன்னத்துக் குழி, பெரிய விழிகள், காதோரம் சுருண்டிருந்த முடி என மொத்தமாக அவனைச் சுருட்டிப் போட்டது. முக்கியமாக அவளது தெற்றுப் பல் சிரிப்பில்சலிக்காமல் தோற்றுப் போனான்.

இதுவரையில் பெண்களைப் பார்க்காதவனில்லை. ஆனால் இவளைப் பார்த்ததும், அதுவும் பெற்றோர்களின் அனுமதியுடன் பார்க்கவும் அவன் நெஞ்ச சிம்மாசனத்தில் ஏற்றி வைத்துக் கொள்ள அவனுக்கு எந்தத் தடையும் இருக்கவில்லை.

நிழலே இவ்வளவு உணர்வுகளைக் கொட்டிக் குமிக்கிறதென்றால் நிஜம்? தன்னையுமறியாமல் உதடுகள் வளைய, 'டேய், நீ ரொம்ப ஓவராப் போற. பொண்ணுக்கும் உன்னைப் பிடிக்கணும்' என அவன் பகுத்தறிவு அவனுக்கு ஒரு குட்டு வைக்க, பரவசம் வடிந்து தன்வசம் திரும்பினான்.

ஆனாலும் உணர்ந்தஉணர்வுகளுக்கு அழிவில்லை. குறுகுறுப்புக் குறையவும் வழியில்லை. மெல்லப் புகைப்படத்தைத் திருப்பிப் பார்த்தான்.

பெயர்: நிவேதிகா

படிப்பு:டாக்டர்

மேலும் அவளைப் பற்றி எழுதியிருந்த விவரங்களைப் பார்த்ததும்

அவன் விருப்பங்களுடன் ஒத்துப் போகவியப்பில் ஆழ்ந்தான்.

தன்னறையிலிருந்து வெளியேறி, அப்பா உங்களுக்குப் பிடிச்சிருந்தா எனக்குச் சம்மதம். ஆனா முடிவு பண்ணறதுக்கு முன்னாடி பொண்ணோட பேசணும்'' எனச் சம்மதம் தெரிவித்தான்.

அதன்பிறகு சதானந்தன் வெகு முனைப்புடன் செயல்பட ஆரம்பித்தார். இருவீட்டினரும் ஒருவரை ஒருவர் பார்க்க விருப்பப்படுவார்கள் என்ற நிதர்சனம் புரிந்ததால் இரு குடும்பங்களும் பொதுவான ஓர் இடத்தில் சந்திக்கலாம் என முடிவு செய்து இதோ ஓர் உணவகத்தில் கூடியிருந்தனர்.

நிவேதிகா நேரில் இன்னுமே வசீகரமாகத் தோற்றமளித்தாள். ஒருவேளை மனதுக்குப் பிடித்துப் போனதால் இப்படி உணர்கிறோமோ என உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டான் தமிழினியன்

கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் ஓரவிழிப் பார்வையில் அவளை ஆர்வமாய்ப் பார்த்துப் பரவசமடைந்தான். அவள் அதிகம் பேசவில்லை என்ற போதிலும் அவள் விழிகளின் விசையால் அவன் இதயத்தில் இசையமைத்துக் கொண்டிருந்தாள்.

இருவரின் பெற்றோர்களும் தர்ஷினியும் ஒரு மேஜையிலும், நிவேதிகாவும், தமிழினியனும் தனித்துச் சற்றுத் தள்ளியிருந்த வேறொரு மேஜையிலும் அமர்ந்திருந்தனர்.

நிவேதிகாவின் அமைதியை ரசித்தவாறே, ''என்னங்க டாக்டர், பேசறதுக்குக் கூட பீஸ் கேட்பீங்களோ?'' எனப் புருவம் உயர்த்திக் கேட்க, அவளது இதழ்களில் மென்னகை.

''அது.. வந்து... அப்படியில்ல...'' என்ன சொல்வது எனத் தெரியாமல் தடுமாறினாள்.

மீண்டும் ரசனை மேலோங்க, ''நான் அப்படியில்லை. கேட்க ஆள் கிடைச்சா பேசித் தள்ளிடுவேன். புரொபசர் இல்லையா?'' என அவள் இதழ்களை மீண்டும் மலரச் செய்தவன்,

''சுத்தி வளைக்க விரும்பலை. எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருந்தா மேற்கொண்டு வீட்ல பேசலாம்'' என மடமடவென்று அவனைப் பற்றிய விருப்பு-வெறுப்பு... பிடித்தம்- பிடித்தமின்மை...எனப் பட்டியலிட்டான்.

தொடர்ந்து, ''உங்களை ஏன் பிடிச்சது, எதுக்குப் பிடிச்சது எனச்

சொல்லத் தெரியலை. பார்த்ததும் பிடிச்சது. மனசுக்குள்ள இதுவரைக்கும் தோன்றாத ஒரு புதிய உணர்வு. அது பிடிச்சிருக்கு'' என நெஞ்சத்து உணர்வுகளைப் பளிச்சென்று அவளிடம் பகிர்ந்து கொண்டான்.

''வந்து.. எனக்கு...'' எனப் பேச அவள் தடுமாற, ''சொல்லுங்க,எதுக்கு இந்தப் புரபஷன் சூஸ் பண்ணினீங்க?'' என அவள் தடுமாற்றத்தைச் சமன் செய்வதற்குப் பொதுவான ஒரு கேள்வியைக் கேட்டான்.

நினைத்தைப் போலவே அவள் வாய்ப்பூட்டு அகன்றது. மருத்துவப் பணியின் உன்னதத்தைப் பற்றியும் எதற்காக அதைத் தேர்ந்தெடுத்தாள் என்பது குறித்தும் சுருக்கமாக அவள் சொல்ல,

''உங்க வேலையை ரொம்ப நேசிக்கறீங்க. எனக்கும் டாக்டருக்குப் படிக்க ஆசை. ஆனால் ரொம்ப அறிவாளியில்லை போல. 'சீட்' கிடைக்கலை'' எனக் கலகலவென்று சிரித்தான்.

தொடர்ந்து, ''ஆனா எப்படியோ டாக்டர் பட்டத்தை வாங்கிட்டேன். பி. ஹச். டி. படிச்சு. போலி டாக்டர் ஆகிட்டேன்'' என மனதில் உள்ளதை வெளிப்படையாகப் பேசியவனுடன் சேர்ந்து இப்போது மென்னகை புரிந்தாள்.

''சொல்லுங்க. என்னைப் பிடிச்சிருக்கா. பிடிக்கலைன்னாலும் ஓ.கே. லக் இல்லைன்னு சோக கீதம் பாடிட்டுக் கடந்து போயிடறேன்'' என அவன் இலகுவாகப் பேச,

''நீங்க ரொம்பநல்லவங்க... கலகலன்னு பேசறீங்க.எனக்கு... வந்து... உங்களை.. ஏற்கனவே...'' என அவள் பெற்றோர் இருந்த மேஜையைப் பார்த்தாள். பின்னர்திரும்பிவாயைத் திறக்க, அந்த உணவகத்தில் ஆறு, ஏழு பேர் கொண்ட ஆண்கள் குழு ஒன்று தடதடவென்று உள்ளே நுழைந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

வந்த தோரணையிலும், சலசலப்பிலும் அனைவரின்பார்வையும் அவர்கள் மேல் படிந்தன.

உரத்தக் குரலில் பேசியவாறே ஒவ்வொரு டேபிளையும் பார்வையால் அலசிக் கொண்டே கடந்து சென்றனர். அவர்களுள் இருவர்வேறொரு மேஜையை நோக்கி நகர, மேலும் மூன்று நபர்கள் தமிழினியன் அமர்ந்திருந்த மேஜைக்கு வந்தனர்.

என்ன நடக்கிறது என்று புரியும் முன்னரே, தமிழினியனின் ச

ட்டையைப் பிடித்து, ''எழுந்திரிடா'' எனஅவனை எழுப்பியிருந்தனர்.

''சார், என்ன வேணும்? யார் நீங்க?'' என அவன் விடுபடத்திமிற, கலாச்சாரத்தைக் கெடுக்கறதுக்குன்னே வருவீங்களா? அறிவில்லை உனக்கு என உடனிருந்த மற்றொருவன் நிவேதிகாவிடம் கர்ஜித்தான்.

அதற்குள் நிவேதிகா எழுந்து நின்றிருந்தாள். ''என்ன உளறுறீங்க'' எனத்தன் பிடித்தமின்மையை வெளிப்படுத்த, ''இப்படி இவனோட தனியா வெளில வர்றதுக்கு அசிங்கமாயில்லை?'' என அவளிடம் உரத்த குரலில்கத்தினான்.

''புரியாம பேசாதீங்க. அவங்க நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு'' எனத்தமிழினியன் தன் சட்டையை விடுவித்துக் கொள்ள இன்னுமே போராடிக் கொண்டிருந்தான்.

நிவேதிகா செய்வதறியாது திகைத்துப் போய் அனைவரையும் மாறி, மாறிப் பார்க்க,

''எல்லோரும் சொல்லறது தான். அப்படின்னா இப்போவே தாலியைக் கட்டு'' என அவர்களுள் ஒருவன் சட்டைக்குள் கையை விட்டுத் தாலியை எடுத்து அவர்கள் இருவருக்கும் இடையில் நீட்ட, அக்கயிறு இப்படியும் அப்படியுமாக ஆடிக் கொண்டிருந்தது.

அதற்குள் இருகுடும்பத்தினரும் அங்கே வந்திருந்தனர்.

''யார் நீங்க? எதுக்குப் பிரச்சனை பண்ணறீங்க? போலீஸூக்குக் கூப்பிடவா?'' எனச் சதானந்தன் உரத்த குரலில் சத்தம் போட, தமிழினியனின் சட்டையை விட்டுவிட்டுக் குழப்பத்துடன் ஏறிட்டனர் அவர்கள்.

''தாலி கட்டறது எல்லாம் காபி சாப்பிடற மாதிரி ஆகிடுச்சு உங்களுக்கு. அதையெல்லாம் பெத்தவங்க நாங்க பாத்துக்கறோம்'' என சதானந்தன் மீண்டும் கோபத்தில் கத்த,

''சாரி சார்.. லவ்வர்ஸ்னு நினைச்சுட்டோம்...'' என அவர்கள் பின்வாங்கினர்.

அவர்கள் வந்ததன் நோக்கமும் புரிந்தது. அன்று காதலர்தினம்! அதாவது காதலர்தினக் கொண்டாட்டத்தைஎதிர்த்து, 'கலாச்சாரத்தைக்கெடுக்கிறார்கள்' எனக்காதலர்களைவிரட்டிவிடவே இப்படிக் கலாட்டா செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள்இருவரும்தனியாக அமர்ந்திருப்பதைக் கண்டு காதலர்கள் என ஊகம் செய்து அவர்களைத் துரத்திவிடவேகலாட்டா செய்தனர். அதற்குள் குடும்பம் மொத்தமும் வரசுதாரித்தனர்.

அவர்களைப் பற்றி உணவகத்தில் புகாரளித்து அனைவரும் மீண்டும் தங்கள் இருக்கைகளில் அமர்வதற்குள் கிட்டத்தட்ட இருபது நிமிடங்கள் கடந்து போயிருந்தன.

தமிழினியன் தன் தந்தையுடன் பேசியவாறே அனைவரும் ஒன்றாக அமர்ந்திருந்த டேபிளுக்கு வந்தவன், நிவேதிகாவின் பெற்றோர்களின் முகத்தில் குழப்பமும், இறுக்கமும் குடியேறியிருந்ததை உணர்ந்து கொண்டான்.

வந்த பொழுது இருந்த மலர்ச்சி மருந்துக்கும் தென்படவில்லை. ஏதோ முட்களின் மேல் அமர்ந்திருப்பதைப் போல் நெளிந்து கொண்டிருந்தனர்.

'எடுத்ததும் தடங்கல் வருகிறதே எனத் தன்வீட்டில் நினைத்துக் கொள்வார்களோ என்ற அவர்களின் மனநிலை அவனுக்குப் புரியாமலில்லை. நடந்த எதற்கும் இவர்கள் பொறுப்பில்லை. அதுவுமில்லாமல் இதைத் தடங்கலாக ஏன் கருத வேண்டும்?'

தந்தையின் காதருகில் குனிந்து அவன் சன்னக் குரலில் ஏதோ சொல்ல, அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சதானந்தன் மனைவியிடம் திரும்பி அதைப் பகிர்ந்து கொண்டார்.

பின்னர் நிமிர்ந்து நிவேதிகாவின் பெற்றோரிடம், ''எங்களுக்குப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு. மேற்கொண்டு என்ன செய்யலாம்னு நீங்க சொல்லுங்க'' எனப் பட்டென்று தங்கள் விருப்பத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டார்.

கேட்ட விஷயத்தில் களையிழந்திருந்தவர்களின் முகங்கள்மலர்ந்து போயின; இறுக்கமும் தளர்ந்தன. ஏற்கனவே விசாரித்துப் பிடித்துப் போய்த் தான் பெண் பார்க்கவே ஒத்துக் கொண்டார்கள்.

அவர்களின் எளிமையான, இயல்பான அணுகுமுறையில் தமிழினியனின் குடும்பத்தை மிகவும் பிடித்திருந்தது.அவர்கள் உள்ளூரிலேயே இருப்பது கூடுதல் மகிழ்ச்சி.

''எங்க முடிவு தான் பொண்ணுக்கும்'' என அவள் தந்தை, கேசவன் பெருமையுடன் சொல்லிவிட்டு, என்னம்மா நிவி, உனக்கும் சம்மந்தம் தானே? ''என வினவ'', ''நீங்க என்ன சொல்லறீங்களோ.. உங்க இஷ்டம்பா'' என முணுமுணுத்துவிட்டுஅவன் விழிகளை நோக்காது குனிந்து கொண்டாள் நிவேதிகா.

''எங்களுக்கும் சம்மதம்'' எனக்கேசவன் அப்பொழுதே திருமணத்தை உறுதி செய்துவிட்டார்.

நாணமேற அமர்ந்திருந்தவளை எண்ணி உள்ளுக்குள் சிலிர்ப்பு ஓடியது தமிழினியனுக்கு. யார் கவனத்தையும் கவரா வண்ணம், ''வேதிகா, உன் நம்பர் சொல்லு'' என மென்குரலில் உரிமையுடன் கேட்டதும் திடுக்கிடலுடன் விழியுயர்த்தினாள்.

''இல்லை.. அடுத்த வாரம் கனடா கிளம்பிடுவேன்.. அதான்... என வலது கையைக் கேசத்துக்குள் விட்டு அளைந்தான்.

'அலையாதடா' எனத் தன் வேகத்தை எண்ணி அவனுக்கே சிரிப்பு வர, வெட்கப் புன்னகை ஒன்றை உதிர்த்தான்.

அவளும் எந்தவித பிகுவும் செய்யாமல் எண்ணைப்பகிர்ந்து கொள்ள, தன் கைப்பேசியில்,'ஸ்வீட்டி' எனச் சேமித்து வைத்தான்.

இருவீட்டினரும் கலந்து பேசி, காரியங்கள் மளமளவென்று நடக்க, நிவேதிகாவின் அண்ணன் அமெரிக்காவில் இருந்து வருவதற்கேற்ப அடுத்த மாதத்தில் திருமணம் என முடிவும் செய்தனர்.

அதன்பிறகு நிவேதிகாவை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிட்டவில்லை. கருத்தரங்குக்கு என்று அடுத்த வாரமே கனடாவுக்குக் கிளம்பிச் சென்றான்.

தமிழினியன் கனடாவில் இருந்து வந்ததும் பத்து நாட்களில் திருமணம். கனடாவுக்குச் செல்லும் முன்னரே எப்போது திரும்பி வருவோம் என்ற பரபரப்பு அவனைத் தொற்றிக் கொண்டது.

இதுவரையில் குடும்பம், தங்கை எனப் பொறுப்புணர்ந்து மனதை எதிலும் அலைபாயவிடாமல் இருந்தவனுக்கு இந்தக் கட்டுப்பாடுகளற்ற தட்டுப்பாடில்லா மனச் சுதந்திரம் பிடித்திருந்தது.முழுவதுமாக அதில் திளைத்தான்.

அவன்,தன் வண்ணமயமான கனவுகள் நிறமிழந்து மாயமாகும் எனச் சற்றும் நினைக்கவில்லையே. ஆனால் ...மாயமானது!மனதில் உருவான வலி உயிரைக் காயம் செய்தது.

கருத்தரங்கிலும், பிரயாணத்திலும் இருந்ததால் தமிழினியனால் அதிகம்நிவேதிகாவுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. கூடுதலாக, நேர வித்தியாசம், அவளின் மருத்துவப்பணி என எதுவும் அவனுக்கு உதவவுமில்லை.

அவளுக்கான அவசரஅழைப்புகளுக்கு இடையே அவனின் காதல் ஆல் போல் தழைத்து விருட்சமாக வளர்ந்தது. தினமும் அழைத்து ஓர் ஐந்து நிமிடங்களாவது அவளிடம் பேசி விடுவான். ஒன்று அவனிருக்கும் இடம் ஏதுவாக இருக்காது,

அல்லது,அவளிருக்கும்இடம்தோதுப்படாது. ஆகவே எப்போதும் 'வீடியோ காலில்'அழைப்பதில்லை.

அவனது அழைப்பில் முக்கியமாக அவனின் நாள் பற்றி இருக்கும், அல்லது அவளின் நாள் எப்படிச்சென்றது போன்ற பேச்சுகளே அடங்கியிருந்தன. அவன் பேச்சு எல்லையைத் தாண்டியதில்லை. கண் தீண்டிப் பேசுவதில் தான் சுகம் என இருந்துவிட்டான்.

அவள் எதிர்வினையாற்றாமல் மௌனமாக இருந்தால் அவள் நிலையுணர்ந்து, ''சாரி வேதிகா, உனக்கு ரொம்ப லேட்டாகியிருக்கும். வேலை செஞ்ச களைப்பில் இருப்ப.. ஸ்வீட் ட்ரீம்ஸ்'' என அக்கறையுடன் மன்னிப்பை வேண்டிவிட்டு வைத்துவிடுவான்.

பதினைந்து நாட்கள் கருத்தரங்கில் கழித்துவிட்டு, மேலும் ஒரு வாரம், நண்பர்கள், சொந்தம் என அவர்களின் வீட்டுக்கும் சென்றுவிட்டு மூன்று வாரங்கள் கழித்து மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பினான் தமிழினியன்.

அன்று அதிகாலையில் தான் கனடாவில் இருந்து திரும்பி வந்திருந்தான். சற்றுநேரம் ஓய்வெடுத்தவனுக்கு உடனே நிவேதிகாவைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு கூடியது.

அவளுக்குள்ளும் உணர்வுகள் இப்படி அதிர்வுகள் தருமா? அவளுக்குள் ஏக்கத்தை விதைத்திருப்பேனா? விடலைப் பையனைப் போலப்பரவசப்பட்டவன் இந்நிலையையும்விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டான். பத்தே நாட்கள்! அவள் தன்னுடையவள் ஆகிவிடுவாள்.

இனிய ஆச்சயர்மாக இருக்கட்டும் என்றெண்ணி அன்று மதியம் அவள்பணிபுரியும்மருத்துவமனைக்குச் சென்றான். அங்கே ஓர் அதிர்ச்சி அவனைத் தாக்கப் போவதை அறியாமல் தன் இரண்டு சக்கர வாகனத்தை உற்சாகத்துடன் உதைத்து, 'டர்.. டர் என முறுக்கிவாறே கிளம்பினான்.

## 7

நிவேதிகா வேலை செய்யும் மருத்துவமனைக்குச் சென்ற தமிழினியன் வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு அவளை அழைக்க எண்ணி அலைபேசியை எடுத்தான். 'ஸ்வீட்டி' என்ற எண்ணை அழுத்தியவாறு காதில் பேசியை வைத்தான்.

அப்போது அவன் பார்வை வட்டத்தில் கடந்து சென்ற காரில் நிவேதிகா அமர்ந்திருப்பது விழுந்தது.

புன்னகையுடன் அழைப்பைத்தூண்டித்துவிட்டுத் தலையை மட்டும் திருப்பி அக்காரைப் பார்த்தவாறே நின்றிருந்தான். அதிலிருந்து இறங்கியவளின் முகம் கலக்கத்தை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்திருந்தது.

பதறி ஒரெட்டு முன்னே எடுத்து வைத்த தமிழினியனின் கால்கள் அடுத்த அடி அங்கேயே வேரோடிப் போனது.ஏனெனில் காரிலிருந்து இறங்கிய வேறொரு இளைஞன் அவளுக்கு வெகுஅருகில் நெருங்கி நின்றிருந்தான்.

என்ன பேசுகிறார்கள் என்று கேட்கவில்லை என்றாலும் அவர்களின் நெருக்கம் ஓர்வித உரிமையைப் பறைசாற்றியது. நெஞ்சில் உருவான வலி அவன் மொத்த உணர்வுகளையும்உருக்குலைத்துப் போட்டது. பனிக்கட்டியாய் உறைந்து நின்றிருந்தான்.

அந்த இளைஞன் நிவேதிகாவிடம் பேசிவிட்டு உடனே கிளம்பியும் சென்றுவிட்டான். வெறுமனே ஓர் இளைஞனுடன் பேசினால் உடனே அதைத் தவறாக நினைப்பவனல்ல அவன். ஆனால் அவர்களின் உடல்மொழியும் நிவேதிகாவின் எதிர்வினையும் அவனுக்கு உவப்பளிக்கவில்லை.

கூடுதலாக அந்த இளைஞன் கிளம்பும் முன்னால் இயல்பாக அவள் தலையில் தட்டி, குனிந்து அவள் முகத்தைப் பார்த்து, 'சிரி' என்பதைப் போல் சமிங்ஞை செய்து அவளைப் புன்னகைக்க வைத்துவிட்டே சென்றான். பலரையும் எடை போடத் தெரிந்தவனுக்கு விடை தெரிந்து போனது.

தான் பாதுகாத்துப்பத்திரப்படுத்திய பொக்கிஷத்தை யாரோ வலுக்கட்டாயமாக அபகரிப்பதைப் போல் உணர்ந்தான். உடலும் உள்ளமும் கல்லாய் இறுகிப் போனது. சமீபத்தில் தோன்றிய உரிமையுணர்வுஅடி ஆழத்தில் புதைந்திருந்த கோபத்தைத் தூர் வாரி வெளியில் இறைக்கத் தயாராக இருந்தது.

அவன் இப்படியெல்லாம் முன்பு கோபப்பட்டதில்லை. இரத்தம் சூடேறி, முகம் கருத்துப் போக, இப்போதே அவளிடம் போய்க் கேட்க வேண்டும்என்ற வேகம் பிறந்தது.

நெஞ்சுக்குள் திகுதிகுவென்றுநெருப்பெரிந்ததைப் போல் உணர்ந்தான். விடுவிடுவென்று அவளை நோக்கி எட்டுகள் வைக்க, அவனது அலைபேசி அதற்குத் தடை போட்டது.

எதிர்முனையில் சொன்னதைக் கேட்டவன், ''வரேன் சார்''

எனப் பதில் சொல்லியவாறு நிவேதிகாவையேவெறித்துப் பார்த்தபடிவண்டியில் ஏறினான். அவன் துறையின் ஹெச். ஓ. டி. அவனை ஆராய்ச்சி சம்மந்தமாக உடனே பார்க்க வேண்டுமென்று கூற, தட்டமுடியாமல்கோபத்தைக் கட்டுப்படுத்தியவாறு கிளம்பினான்.

கல்லூரிக்குச்சென்று வேலையில் ஆழ்ந்தாலும் நிவேதிகா இன்னொருவனுடன் பேசியது மட்டுமேவிழித்திரைகளில் படமாக ஓடி, நெஞ்சினுள் நிழலாகப் படிந்து,உணர்வுகள் மொத்தத்தையும் கீறிக் கொண்டிருந்தது.

ஏற்கனவே நேர மாற்றம், பயணக் களைப்பு எனச் சோர்ந்திருந்தவனுக்கு யாருமற்ற தனிமை அவசியமாகப் பட்டது. தன் வீட்டில் கண்டிப்பாகக் கிடைக்கும். அதுவும் நேற்று நள்ளிரவு தாண்டியேகனடாவில் இருந்து வந்திருக்கையில் வீட்டினர் ஏனென்று கேட்கப் போவதில்லை.

வீட்டுக்குச் சென்று சமையலறையில் வேலையாயிருந்த அன்னையிடம் சற்றுநேரம் ஓய்வெடுப்பதாகச் சொல்லிவிட்டு,மாடியிலிருக்கும் தன் அறையை நோக்கி நடந்தான்.

மேலே தன் தங்கையின் அறையைக்கடந்து செல்கையில், ''என் அண்ணனுக்குத் தெரிஞ்சுது?அவ்வளவு தான்?'' எனத்தர்ஷினி அலைபேசியில் பேசிக் கொண்டிருந்தது செவிகளில் விழுந்தது.

'எனக்குத் தெரியக் கூடாத விஷயம் என்னவாக இருக்கும்?எதற்காகத்தர்ஷினிஇப்படித் தயங்கிப் பேசிக் கொண்டிருக்கிறாள்? அதுவும்அறைக்குள் சென்று யாருக்கும் தெரியாமல்? எதையாவது மறைக்க நினைக்கிறாளா?'என யோசனைகளின் அணிவகுப்புடன் தனதறைக்குள் நுழைந்தான்.

'தங்கை யாரையாவது காதலிக்கிறாளா?' என மைக்ரோ செகண்ட் தோன்றிய எண்ணத்தை, 'ச்சே நானே என் தங்கையை விசாரிக்காமல் தவறாக எண்ணக் கூடாது' எனஅதையும் விட வேகமாக அழித்துவிட்டான்.

'ஒருவேளை அவளுக்கு ஏதாவது பிரச்சனையாக இருக்குமோ?' என ஓர் அண்ணனாக ஐம்புலன்களும் உயிர்ப்பெற்று மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்தன. தங்கையின் அறைக் கதவைமெல்லத் தட்டிவிட்டு உள்ளே சென்றான்.''

அதே சமயத்தில் , ''திரும்ப, திரும்பத்தொந்தரவு பண்ணின, என் அண்ணன்கிட்டே சொல்லிடுவேன் என மிரட்டிய தங்கையின்

குரலில் நடுக்கம் இழையோடியது.

'தான் நினைத்தது சரியே' எனத் தன்னையே மெச்சிய தமிழினியன்,தன்உதடுகள் மேல் ஆட்காட்டி விரல் வைத்துத் தங்கையிடம், 'உஸ்' என எச்சரித்துவிட்டு, ஸ்பீக்கரில் போடுமாறு சமிக்ஞை செய்தான்.

அண்ணனைப் பார்த்ததும் தைரியம் வரப்பெற்றவளாக அவன் சொன்னதை அப்படியே செய்தாள்.

''உன் அண்ணன் என்ன பெரிய பருப்பா? ஒழுங்கா என் காதலை ஒத்துக்கோ. இல்லைன்னா உன்னை நாறடிப்பேன்...'' என எதிர்முனையில் இருந்தவன் மிரட்டல் விடுக்க,

''பண்ணுடா பார்ப்போம். உன்னைப் பத்தி ஏற்கனவே போலீஸ்ல சொல்லிட்டோம். இனிமேல் என் தங்கச்சியைத் தொந்தரவு செஞ்ச அப்புறம் நீ கம்பி எண்ண வேண்டி வரும்'' எனத்தமிழினியன் உரக்கச் சொல்ல, அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

தர்ஷினி கண்கள் கலங்கியவாறே, ''நம்ம தெருவுல இருக்கிற கிஷோரோட ப்ரெண்ட். கடந்த ஒரு மாசமா சாயந்திரமானாஅங்க வந்து நின்னுட்டுஎன்னை டீஸ் பண்ணறான்'' என்றாள்.

''மிரட்டினா பயப்படக் கூடாதுடா. அது அவங்க பலமா மாறிடும். இனி வாலாட்டட்டும் ஓங்கி ஒண்ணு விடு . அண்ணன் இருக்கிறேன்'' தங்கைக்குத் தைரியமளித்துவிட்டு மீண்டும் தனதறைக்குள் சென்றவனுக்குச்சுரீரென்று ஒன்று உறைத்தது.

தன் வீட்டுப் பெண் என்றால் மைக்ரோ செகண்ட்டுக்கும் குறைவாகக் கூடத்தவறாக எண்ணத் தோன்றவில்லையே. அவளைத் தவறாக எண்ணி விட முடியாது எனத் தீர விசாரித்தே செயல்படுகிறான்.

இதுவே வேறொரு வீட்டுப் பெண் என்றதும் மளமளவென்று அவள் மேல் தவறைத் திணித்துவிடத் துணிந்தானே என நிவேதிகாவைக்குறித்து எண்ணினான். வார்த்தைகளை இறைத்துவிடாதே! சேர்த்துக் குவித்து வாரியெடுப்பது கடினம்.

முதலில் அவளிடம் பேசித் தெளிந்து கொள்ள வேண்டும் என முடிவு செய்தவனுக்குக் கோபம் வெகுவாகக் குறைந்திருந்தது.

உடலும் மனமும் அயர்ந்து போயிருந்தால் மூளையும் சிந்திக்கும் திறனை இழந்துவிடும் போல!அவளிடம் இன்று பேசாமல் விட்டதே நல்லது எனத் தன்'ஹச். ஓ. டி'க்கு மானசீகமாக நன்றி சொல்லிவிட்டு

அன்றிரவு பயணக் களைப்பில்விரைவிலேயேஉறங்கிப் போனான்.

மறுநாள் வேலைக்குச் சென்றவனுக்கு எதையும் சீர்த் தூக்கிப் பார்க்கும் நிதானமும்,தெளிவும் திரும்பியிருந்தது.

கிடைத்த இடைவெளியில் நிவேதிகாவை அழைத்தான். இரண்டு, மூன்று முறை அழைத்த பின்னரே அழைப்பை எடுத்தாள்.

எடுத்தவுடனே, ''சாரி, ஹாஸ்பிடல்ல பேசண்ட்ட பார்த்துட்டு இருந்தேன் என அவள் எப்போதும் சொல்லும் அதே வாக்கியத்தை அட்சரம் பிசகாமல் சொன்னாள்.

இதுவரையில் அவள் சொல்கையில் அது பணியின் மேலுள்ள அர்ப்பணிப்பு என்று நினைத்தான்.

'அப்படியில்லையோ?' மனம் வலிக்க ஒரு நொடி யோசித்தவன், தன்னையே திட்டிக் கொண்டு, 'பேசி முடிவெடுக்கலாம்' என மீண்டும் தனக்குள் உருப்போட்டுக் கொண்டான்.

''உன்னை நேர்ல மீட் பண்ணனும் வேதிகா. மதியம் வரேன் ''

அனுமதி கேட்காமல் திடீரென்று இப்படிச் சொல்லவும், ''அது..'' எனத் தடுமாறியவள், ''சாரி, திடீர்னு வர... '' என முடிக்கவில்லை, ''நேத்து உன் ஹாஸ்பிடலுக்கு வந்திருந்தேன். உன்னை ஒருத்தரோட பார்த்தேன். பேசணும்'' எனப் பட்டென்று போட்டு உடைத்தான்.

மறுமுனையில் தேவைக்கும் அதிகமாகவே ஆழ்ந்த அமைதி. அதன் ஆழமே அவனுக்கு ஆயிரம் அர்த்தமான விளக்கங்களைச் சொல்லிவிட்டன.

''மீட் பண்ணலாமா?'' என அவனே மீண்டும் பேச, ''ப்ளீஸ்... வீட்டுல சொல்லிடாதீங்க..'' எனப் பதறினாள். அந்த 'ப்ளீஸே' அவனைப் பீஸ் பீஸ்ஸாகப் பிய்த்துப் போட்டது.

'அதுவா, இதுவா?' என்ற குழப்பங்களுக்கு விடை கிட்டிவிட்டது. நெஞ்சில் தேளாய்க் கொட்டியும்விட்டது.

''ஹாஸ்பிடல் வாசலில் பிக் பண்ணிக்கிறேன்'' என நேரத்தைச் சொல்லிவிட்டு அவள் மறுத்துப் பேச இடம் தராமல் அழைப்பைத் துண்டித்தான் தமிழினியன்.

அவன் சொன்ன நேரத்துக்கு நிவேதிகாவை மருத்துவமனை வாசலில்தன் காரில் ஏற்றிக் கொண்டு நகரைவிட்டுச் சற்றுத் தள்ளியிருந்த பிரபல உணவகத்துக்குச் சென்றான். காரில் மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது.

அடிக்கடி அவனை ஓரக்கண்ணால் பார்த்த நிவேதிகாவும்

வாய்திறந்தாள் இல்லை.

உணவகத்தில் சற்று ஒதுக்குப்புறமாக ஒரு டேபிளில் அமர்ந்ததும், ''பொதுவெளியில கொஞ்சம் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்குவேன்'' என்ற அவனது விளக்கத்தில் கண்களில் நீர்க் கோர்த்துக் கொண்டன.

அவனுக்குப் பயங்கரப் பசியாக இருந்ததால் வேண்டியதைச் சொல்லிவிட்டு அவள் முகம் பார்க்க, 'ஒரு காபி' மட்டும் போதும் என்றாள்.

பணியாளர் நகர்ந்ததும் அங்கே வந்த அவன் வகுப்பு மாணவர் குழு ஒன்று, ''சார், இதுக்காகவா அவசரமா கிளாஸ கேன்ஸல் பண்ணினீங்க?எங்க மேலே இருக்கிற அக்கறையிலன்னு நினைச்சு ட்டோமே?'' எனத்தமிழினியனை வம்புக்கு இழுத்தனர்.

''தினேஷ், நீ எங்க இங்க?'' எனக் கேட்க,

தொடர்ந்து ரெண்டு பீரியட் இல்லைன்னு சொன்னாங்க. அதான் 'செவிக்குண வில்லாத போது சிறிது

வயிற்றுக்கும் ஈயப் படும்'எனத் திருக்குறளை இழுத்து வைத்துப்பதில் சொன்னான் தினேஷ்.

''நான் சொன்னதைத் திரும்ப எனக்கே திருப்பறீங்களா'' என்றவனின் முறைப்பில், ''நீங்க சொல்லிக் கொடுக்கிறதை எவ்வளவு உன்னிப்பா கவனிச்சிருக்கோம் பாருங்க. பாராட்டணும் சார்'' என்றான் தினேஷ்.

''அது சரி'' எனப்போலியாக வியந்துவிட்டு, ''சீக்கிரம் சாப்பிட்டுட்டு அடுத்தக் கிளாஸ்க்குப் போங்க'' என அவர்களை அனுப்பி வைக்க முயன்றான் தமிழினியன்.

''மேடம்,சாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறது நீங்களா?'' எனக் கேட்டு பதிலை எதிர்பார்க்காமல், ''தொடரட்டும் உங்கள் சேவை. உங்களால் இன்னைக்கு எங்களுக்குக் கிளாஸ் ப்ரீ. இப்படியே கல்யாணம் முடிஞ்சதும் அப்பப்போ வெளில கூட்டிட்டுப் போயிடுங்க. உங்களைத் தனியா கவனிச்சுக்கிறோம்'' எனக் கலாய்க்க, அவளால் வாய்திறந்து பேச முடியவில்லை.

நிவேதிகா அவனைச் சங்கடமாகப்பார்க்க,முதல்ல ''உன் அசைன்மென்ட்டைக் கவனி'' எனப்புன்னகைத்து, அவர்களை வழியனுப்பி வைத்தான் தமிழினியன்.

அவர்கள் சென்றதும், ''கல்யாணமே நடக்குமான்னு தெரியலை.

இதுல இவனுங்க வேற'' என முணுமுணுத்தவாறே அவர்கள் முன்னால் கொண்டு வைத்த உணவின் மேல் கண் பதித்தான்.

சற்றுநேரம் அவள் காபி கோப்பையின் விளிம்பைத் தடவி கொண்டிருக்க, ''நீயா சொல்லப் போறியா, இல்லை, நானே வினாடி வினா மாதிரி கேள்விகள் கேட்கணுமா?'' என்ற கேள்விகளுடன் புன்னகையை உதிர்த்தான்.

இதழ்கள் சிரித்தாலும், விழிகள் ஏமாற்றப்பட்டதன் வலியைஉலராது நிரப்பி வைத்திருந்தன.

பெண்ணவளின் கண்களில் நீர்த் திரள, ''சாரி.. ஐ அம் சாரி.. வீட்ல சொல்லாம இருக்கிறதுக்குத் தேங்க்ஸ்'' என அவள் வார்த்தைகள் உதிரி உதிரியாக வெளிவந்தன.

''ப்ச்ச்... அதெல்லாம் வேண்டாம்.. உன் லவ் ஸ்டோரி சொன்னா வந்ததுக்குச்சாப்பாடு,காபியோட ஒரு லவ் ஸ்டோரி கேட்ட திருப்தியிருக்கும்'' என்றான்.

அவள் முகம் தொட்டாச்சுருங்கியாய்ச் சுருங்கவும், ''கிண்டலில்லை. மேற்கொண்டு என்ன செய்யணும்னு யோசிக்கணுமே'' என விளக்கமளித்தான்.

''வி.. விக்ரம் எனக்குக் கடந்த ஒரு வருஷமா பழக்கம்'' என ஆரம்பித்தாள்.

## 8

''அட பேர் கூட ஸ்டைல்லா இருக்கில்ல.. கிக்காவும் இருக்கு'' என அவளிடம் நட்பு ரீதியில் பேச்சை வளர்க்க, அதற்கு மேலே அவள் தயங்கவில்லை.

''ஒருதரம் விக்ரம் டென்னிஸ் விளையாடுகையில் கால் இடறி, பிசகிவிட்டது. ஆகவே நண்பனின் மருத்துவமனை என்று நண்பனிடம் காட்ட வந்திருந்தான் விக்ரம். அங்கு தான் நிவேதிகா புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்தாள்.

படிப்பை முடித்துவிட்டு, அரசு மருத்துவமனையில் ஒரு வருடம் வேலை செய்துவிட்டு வந்திருந்தாள்.

அடிபட்டு வந்த விக்ரமின் காலுக்கு மட்டும் அவள் வைத்தியம் பார்க்கவில்லை. இளமை பொங்கும் அவன் உணர்வுகளுக்கும் மருந்தானாள். பார்த்ததுமே பிடித்துப் போனது. அவளைக் காணவே அடிக்கடி மருத்துவமனைக்கு வர ஆரம்பித்து இறுதியில் அவன் மனதில் இருந்ததையும் அவளிடம் பகிர்ந்து கொண்டான்.

நிவேதிகா ஆரம்பத்தில் தயங்கி, பயந்தாலும்அழகானவன், அன்பானவன், தினமும் தொடர்ந்து வந்து காதல்பேசியதில் மயங்கிப் போனாள். இறுதியில் சம்மதித்தும்விட்டாள்.

கடந்த ஒரு வருடம் பேசியும், சந்தித்தும் அவர்கள் தங்கள் காதலை வளர்த்தனர்.

''ம்ம்.. ஒரு வருஷ கேப்ல மிஸ் பண்ணிட்டேனா?'' என இடையிட்ட தமிழினியன் தொடர்ந்து,

''ஏன் வீட்ல சொல்லலை'' எனக் கேட்க, ''விக்ரம் வசதியானவர். அவர் வீட்ல இதுக்கு ஒ..ஒத்துக்க மா... மாட்டாங்க'' எனத் திக்கித் திணறினாள்.

''அப்போ என்ன பண்ணறதா இருந்த?'' ஒரு வாய் காபியை உறிஞ்சியவாறே கேட்க, அதற்குப் பதில் சொல்ல அவளுக்கு நா புரளவில்லை.

''என்ன கல்யாணத்தன்னைக்கு ஓடிப் போறதா பிளான் பண்ணியிருந்தீங்களா?'' சற்றே உயர்ந்த அவன் குரலில் அவளால் தலையை உயர்த்த முடியவில்லை.

தலை குனிந்து மௌனமாக இருந்ததிலேயே அவள் அதைத்தான் செய்ய நினைத்திருந்தாள் எனப் புரிந்தது அவனுக்கு.

பட்டென டேபிளைஇடது கையால்சற்று பலமாகவே தட்ட, அருகிலிருந்தவர்கள் எல்லாம் அவர்களைத் திரும்பிப் பார்த்தனர்.

''ப்ளீஸ்...மெதுவா.எல்லோரும் பார்க்கிறாங்க'' என விழிகளில் நீர்க் கோர்த்துக் கொள்ளஇறைஞ்சினாள் நிவேதிகா.

சற்றுநேரம் ஆழ்ந்த மௌனம் அவனிடத்தில். ம்ஹ் எனச் சிரிப்பொன்றை உதிர்த்தவன், ''இங்கே கொஞ்ச பேர் பார்க்கறதுக்கே உனக்கு அவமானமா இருக்கே. கல்யாணத்தன்னைக்கு ஊரே பார்க்குமே. அப்போ எனக்கு எப்படியிருக்கும் என யோசிச்சுப் பார்க்கலையா வேதிகா?'' எனத் தணிந்தகுரலில் கேட்க, அவள் திடுக்கிட்டாள்.

அக்கேள்வி நடுமண்டையில் ஓங்கி நச்சென்று அடித்திருக்கும் போல. அவளிடம் எந்தப்பதிலுமில்லை. கைகள் நடுங்க, காபிக் கோப்பையைப் பற்றுக்கோலாக பற்றிக் கொண்டிருந்தாள்.

''என்னைவிடு. உன்அம்மா-அப்பாவை நினைச்சுப் பார்க்கலையா? நீ என்ன சின்னக் குழந்தையா?'' என்ற அதட்டலில், துருத்திக் கொண்டிருந்த கண்ணீர்முணுக்கெனக் கோபித்துக் கொண்டு இமை தாண்டியது.

''கண்ணீர் இதற்குத் தீர்வு கிடையாது'' ஒலித்த அவனது கரகரத்தக் குரலில் வழியும் கண்ணீரை வலது கரத்தால் துடைத்துக் கொண்டாள். துடைக்க, துடைக்கப்பாரபட்சமில்லாமல் பொழிந்து கன்னங்களில் சங்கமிக்கும் நீர்த்துளிகளை என்ன செய்வது என்று தெரியவில்லை.

அவமானம் தாங்காம உன் அம்மா-அப்பாக்கோ, இல்லை, எங்க வீட்டிலேயோ யாருக்காவது...ஏதாவது ஆனா என்ன பண்ணுவ?

காச் மூச்சென்று திட்டியிருந்தால் பதில் சொல்லி இருப்பாளோ என்னவோ? ஆனால் அது அவன் குணமில்லையே. தவறு செய்த சிறு குழந்தைக்கு எடுத்துச் சொல்வதைப் போல் இதமாகவே எடுத்துரைத்தான்.

மராத்தானில் ஓடுவதைப் போல் சளைக்காமல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தவனின் கேள்விகள் எதற்கும் அவளிடம் விளக்கமில்லை.

''படிச்சிருந்தா மட்டும் டாக்டராகிட முடியாது. பின்விளைவுகளை யோசிக்கணும். உன் புரபஷனுக்கு அது ரொம்ப முக்கியம்'' மென்குரலில் எடுத்துரைத்தாலும் இடியென்று அவள் இதயத்தைத் தாக்கியது போலும்.கண்கள் விரிய அவனைத் திகைத்து நோக்கினாள்.

''எதையும் பேசி சரி பண்ணப் பார்க்கணும். இப்படி அடாவடியா முடிவெடுத்தா ரெண்டு பக்கமும் வேதனை தான்'' மீண்டும் சிறு குழந்தைக்குப் பாடம் புகட்டுவதைப்போல்பேசினான்.

அவன்முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்கத் திராணியற்று குனிந்து காஃபி கோப்பையை வெறித்துக் கொண்டிருந்தாள். இப்போது கண்களின் நீர் வரத்துக் குறைந்து போயிருந்தது.

''காதலிக்க இருந்த தைரியம், வீட்ல சொல்லறதுக்கும், போராடறதுக்கும் இருக்கணும். இப்படி ஓடி ஒளிஞ்சா சம்மந்தப்பட்டவங்களுக்கு மட்டுமில்லை, சம்மந்தமே இல்லாதவங்களுக்கும் வேதனையும் வலியும் தான்''

அவன் பேச்சில்உள்ளம் துண்டாகஉடையலாயிற்று. ''விக்ரம் வீட்டில ஒத்துக்கலை. எனக்கும் வீட்ல சொல்ல பயமா இருந்தது. அதுவும் அண்ணன் யாரையோ லவ் பண்ணறான்னு சொன்னதும் அப்பா பயங்கரமா டென்ஷன்ல திட்டிட்டார்'' என்றாள்.

பெருமூச்சொன்றை எடுத்து வெளியில் விட்டவன், ''என்கிட்ட சொல்லியிருக்கலாமே?வாழ்க்கையின் எல்லை வரைக்கும் வருவேன்னு நினைச்சேன். ப்ச் என எவ்வளவு முயன்றும் ஏமாற்றத்தை

அவனால் மறைக்க முடியவில்லை.

உயிருடன் இருக்கையிலேயே அவன் உயிருக்குப் பூமாலையைச் சூட்டிவிட்டாள்.

''சாரி, அந்த வாழ்க்கையே இல்லாம பண்ணிட்டேன்'' என்றவளின் குரல் நடுங்கியது.

அவளை விழிகளில் ஊடுருவியவன், ''முன்னாடியே சொல்லியிருந்தா இங்க...'' என இதயம் இருக்குமிடத்தை மெதுவாகத் தட்டிக் காட்டியவன், ''சேதாரம் கம்மியா இருந்திருக்கும்'' என்றான்.

கலக்கம் தேக்கிய விழிகளுடன் பார்த்திருந்தவளிடம், ''காதல்னா என்னன்னு காதல்ல விழற வரைக்கும் தெரியாது. உன்னைப் பார்த்ததும் காதல் வந்துச்சு. காதலைத் தெரியவச்சதுக்குத்தேங்க்ஸ்'' என இடைவெளிவிட்டு, ''காதல் வலியைப் புரிய வச்சதுக்கும் தேங்க்ஸ்'' என்றான் குறுஞ்சிரிப்புடன்.

''சாரி... தெரியாம.. என்னோட பிரச்சனை மட்டுமே கண் முன்னாடி தெரிஞ்சது. உங்களைப் பத்திக் கொஞ்சமும் நினைச்சுப் பார்க்கலை எனச் சுயநலத்துடன் யோசித்துச் செயல்பட்ட தன் தவறை உணர்ந்து மனப்பூர்வமாக அவனிடம் மன்னிப்புக் கோரியவளுக்கு அதற்கு மேலே கட்டுப்படுத்த முடியவில்லை.

உடைந்து போய்அப்படியே மேஜையில் கவிழ்ந்து குலுங்கி அழ ஆரம்பிக்க, நாழிகைகள்மெல்ல ஊர்ந்தன.

அழாத வேதிகாப்ளீஸ்... ஒரு தலை காதலெல்லாம் ஜெயிக்குதா என்ன? டோன்ட் வொர்ரி. இதுக்காகச்சினிமால வர்ற மாதிரி உன்னைப் பழி வாங்க மாட்டேன் ''

மெல்லத் தலையுயர்த்திப் பார்க்க, ''சாரி. இப்போ யோசிச்சுப் பார்த்தா எனக்கே என் மேலே வெறுப்பா இருக்கு'' என்றாள். கண்களைத் துடைத்துக் கொண்டு தன் பக்க விளக்கங்களைத் தர ஆரம்பித்தாள்.

விக்ரம் முதலில் தங்கள் காதலைப் பற்றியும், அவளைப் பற்றியும் வீட்டில் சொன்னால் அல்லவா அதற்கேற்ப அவளும் தன் வீட்டினரைத் தயார் செய்ய முடியும்.

அவளுக்கு ஏற்கனவே தந்தை குறித்து பயம். இதுவரையில் அவளுக்குப் பிடிக்குமோ இல்லையோ, அவர் சொல்வதைக் கேட்டே நடந்து கொண்டிருக்கிறாள். அவள் மருத்துவம் படித்ததும் அப்படியே. அவளுக்கு வானியல், வான சாஸ்திரம் பற்றிப் படிக்க

ஆசை. ஆனால் சிறுவயதில் இருந்தே மருத்துவம் படிக்க வேண்டும் என்றார்கள் வீட்டில். அதன்படியே நடந்து கொண்டாள்.

காதலில் விழுந்ததும் சிறகு முளைத்ததைப் போலிருந்தது அவளுக்கு. அதுவரையில் அவளிடம் இல்லாத தைரியத்தைவிக்ரம் அவளுக்கு அளித்திருக்கிறான் என எண்ணினாள். அதனால் பின்விளைவுகளைப் பற்றி அவள் யோசிக்கவில்லை.

'நம்ம காதலைப் பத்தி வீட்டில சொல்லிடலாமே' என நிவேதிகா அவனிடம் சொல்ல,

விக்ரமோ, 'இப்போவே என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். அதுவரைக்கும் ஒருவரை ஒருவர் புரிஞ்சுக்கலாம்' எனச் சமாதானம் செய்தான்.

'அதானே?' என அவளுக்கும் தோன்றவும் மற்றதெல்லாம் மறந்து போனது.

காதலில் திளைத்தவர்களுக்கு எப்படி ஒருவருடம் ஓடியது என்று கூடத் தெரியவில்லை. விக்கிரமிற்குத் தொழில் விஷயமாகலண்டனில் அடுத்து இரண்டு வருடங்கள் வேலையிருக்கிறது என்பதால் அவளையும் லண்டனில் மேற்படிப்பு படிக்க விண்ணப்பிக்கச் சொல்லியிருந்தான்.

நிவேதிகாவுக்கும்இந்த ஏற்பாடு எல்லா விதத்திலும் உகந்ததாகத் தெரிய அதன்படியே விண்ணப்பிக்க, இடமும் கிடைத்துவிட்டது. அதைப் பற்றி இன்னும் வீட்டில் அவள் சொல்லவில்லை.

விசா கிடைக்கட்டும். அதன்பிறகு இரண்டு வீட்டிலும் தங்கள் காதலைச் சொல்லலாம். அவர்கள் சம்மதிக்கவில்லை என்றால் பதிவு திருமணம் செய்து கொண்டு லண்டன் பறந்துவிடலாம் என மிகத் துல்லியமாகத் திட்டமிட்டனர்.

விக்ரமின் அறிவுக்கூர்மையை எண்ணி சிலாகிக்கவும் செய்தாள். வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்ததைப் போல் அவளுக்கு விசா கிடைப்பதற்குள் அவள் வீட்டில்திருமண ஏற்பாடு செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

திடீரென்று தந்தை கேசவன் அவளிடம் வந்து, உன்னைப் பார்த்துப் பேச மாப்பிள்ளை விருப்பப்படறார் எனவும் திடுக்கிட்டாள்.

''என்னப்பா திடீர்ன்னு'' என அவள் தடுமாற, உன்கிட்டே சொல்லிட்டு தானே மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சோம். ''உனக்கும் வயசாகிட்டே போகுதே. வந்த முதல் ஜாதகமே பொருந்தியிருக்கு''

என்றார் கேசவன்.

தந்தை சொன்னார் என்றாலும் உடனே நடந்துவிடுமா என மெத்தனமாக இருந்துவிட்டாள்.

''மாப்பிள்ளை அடுத்த வாரம் கனடா போகணுமாம். அதான் நாளைக்கே பார்க்கலாம்னு சொன்னாங்க'' எனத் தொடர்ந்தார் அன்னை, லலிதா.

''நாளைக்கா?'' மீண்டும் அதிர்ச்சியைக் காட்டினாள் முகத்தில்.

''நாளைக்கு எந்த வேலையும் இல்லைன்னு சொன்னியே?'' எனத் தந்தை கேள்வியாகப் பார்க்க,

''சும்மா பேசிட்டு நிக்காதீங்க. நடக்க வேண்டியதைப் பாருங்க. ரொம்ப நல்ல குடும்பம். பையன் ரொம்பவும் நல்லவனாம்'' என லலிதா தமிழினியனின் குடும்பத்தைப் பற்றிப் புகழ்ந்து பேச ஆரம்பித்துவிட்டார்.

அதெல்லாம் அவள் செவிகளில் ஏறவில்லை. நாளைக் குக் காதலர்தினம். விக்ரமும் அவளும் சந்திக்க ஏற்கனவே திட்டமிட்டிருந்தனர். வீட்டில் இப்படி ஒரு குண்டைப் போட்டதும் விக்ரமை உடனே தொடர்பு கொண்டாள்.

ஆனால் அவனோ இவளின் பதட்டத்தில் ஒரு சதவிகிதத்தைக் கூடக் காட்டவில்லை.

'பொண்ணு தானே பார்க்க வர்றாங்க. வீட்டில பிடிக்கலைன்னு சொல்லிடு' என்றான்.

அவனளித்த தைரியத்தில் தமிழினியனைச் சந்திக்க அன்று உணவகத்துக்குக் குடும்பத்துடன் சென்றாள். தமிழினியனிடம், 'உன்னைப் பிடிக்கவில்லை' என்று முகத்தில் அடித்ததைப் போல் அவளால் உடனே பேச முடியவில்லை.

அன்று தன் காதலைப் பற்றிச் சொல்லிவிடலாம் என்று எண்ணியே வாயைத் திறந்தாள். ஆனால் கண்கள் பயத்துடன் அவள் தந்தை அமர்ந்திருந்த மேஜையைப் பார்க்க, அவரும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதற்குமேல் அவளுக்குப் பேச்சு எழவில்லை. அத்துடன் அன்று எதிர்பாராமல் நடந்த கலாட்டாவில் அனைத்துமே அவசரகதியில்நடந்தேற, எதையும் தடுக்கும் வழி தெரியாமல் விழி பிதுங்கி நின்றாள்.

ஆனால் அவன் தன் அலைபேசி எண்ணைக் கேட்டதும், 'அவன்

அழைத்தால் இவனிடம் உண்மையைச் சொல்ல ஒரு சந்தர்ப்பம்' என்று எண்ணியே மறுக்காமல் அவனிடம் பகிர்ந்து கொண்டாள்.

வீட்டில் எப்படியும் சொல்லிவிட வேண்டும் என்ற அவளது தவிப்பை விக்ரமிடம் பகிர்ந்து கொள்ள,

''வேண்டாம் நிவி. அப்பாவுக்குநம்ம மேலே சந்தேகம் வந்திடுச்சு. இந்த ஏற்பாடு எல்லா விதத்திலேயும் நமக்கு நல்லது. உனக்குக் கல்யாணம்னு தெரிஞ்சா இப்போதைக்கு அவர் பிரச்சனை பண்ணமாட்டார்'' என அவளைத் தடுத்தான் விக்ரம் .

அவன் தந்தை, ஆள் பலம் மற்றும் பணப் பலம் கொண்டவர் என்பதால் விக்ரம் சொல்வதை மீறும் தைரியமும் வரவில்லை. திருமணக் காரியங்கள் மளமளவென்று நடக்க இருதலைக் கொள்ளி எறும்பைப் போல் தவித்தாள்.

விஷயம் கைமீறிக் கொண்டிருக்கிறதே எனப் பயம் தொற்றிக் கொள்ள, எறியப்பட்ட பந்தாக விக்ரமிடமே போய் நின்றாள்.

அவனுக்கோ இதுவொரு நல்ல சந்தர்ப்பமாகவே தெரிந்தது. அவள் திருமணம் நின்று போனதைக் கேள்விப்பட்டால் அவன் தந்தைக்கு முதல் சந்தேகம் அவர்கள் மேல் தான் திரும்பும் என மீண்டும் சமாதானப்படுத்தினான்.

''அதே தேதியில நம்ம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிட்டு உடனே லண்டன் கிளம்பிடலாம்'' என்றான்.

''அது தப்பில்லையா விக்ரம்? ஏமாத்தற மாதிரி இல்ல. வேணும்னா மாப்பிள்ளைகிட்ட பேசலாமா?'' என அவள் தயங்க,

''பெத்தவங்களே புரிஞ்சுக்காதப்போ அவன் மட்டும் புரிஞ்சுக்குவானா? உடனே கலாட்டா பண்ணினா உள்ளதும் போச்சு. அப்போ என்ன பண்ணுவ?'' எனக் கேள்விகளை அடுக்க, அவளுக்குப் பயம் தொற்றிக் கொண்டது. அதற்குமேல் வாதிடும் தைரியம் வரவில்லை.

''நிவி, அப்பா நம்மளைகண்டிப்பா ஒண்ணு சேர விடமாட்டார். அவருக்கு ஸ்டேட்டஸ், பணம் ரொம்ப முக்கியம். நம்ம லண்டன் போயிட்டா அப்புறம் நமக்கு லைப்ல எந்தத் தடங்கலும் இல்லை'' என விக்ரம்உடைந்த குரலில் உருக்கமாகத்தங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிப்பேசவும் அப்போதைக்கு அவள் நெஞ்சம் சமாதானமடைந்தது.

ஆனால் வீட்டுக்குச் சென்று திருமண வேலை நடப்பதைக் கண்டதும் மனம் மாறிவிட,தந்தையிடம் பேச முடிவு செய்தாள்.

சமயம் பார்த்து வாயைத் திறப்பதற்கு முன்னர் அவள் அண்ணன், திலீப்அமெரிக்காவில் இருந்து கேசவனுக்கு அழைத்திருந்தான்.

அவன் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகவும் அவளையே திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் சொல்ல, 'உன் மனசுல என்ன நினைச்சுட்டு இருக்க?' எனக் கன்னாபின்னாவென்று கத்த ஆரம்பித்துவிட்டார் கேசவன்.

சத்தம் கேட்டு அவள் அன்னை, லலிதாவும் முன்னறைக்குவந்துவிட்டார்.

அதுவும் திலீப் காதலிப்பது அமெரிக்கப் பெண் என்றதும் லலிதாவும் உடன் சேர்ந்து புலம்ப ஆரம்பித்தார். காதல் என்றாலே பெரும்பாலானோருக்கு எட்டிக்காயாகக் கசக்கும். இதில் பெண் அமெரிக்கப் பெண் என்றதும் எதிர்ப்புஇரட்டிப்பானது.

''என்ன நினைச்சுட்டிருக்க. கிளம்பி வா. நிவி கல்யாணம் முடியட்டும். அப்புறம் பேசலாம்'' எனக் கேசவன் பேச்சை முடிக்க, திலீப் தன் காதலியையும் உடன் அழைத்து வருவதாகக் கூறினான்.

''அப்படியெல்லாம் கூட்டிட்டு வந்திடாத. சொந்தக்காரங்க ஏதாவது சொல்வாங்க. நாம அப்புறம் பேசலாம்'' எனச் சிறுபிள்ளைக்கு எடுத்துச் சொல்வதைப் போல் சற்றுநேரம் பேசி விட்டு அழைப்பை வைத்தார் கேசவன்.

லலிதாவோ, இவனை எப்படியெல்லாம் வளர்த்தேன் என வளர்ப்பில் ஆரம்பித்து அவனுக்குத்தங்கள் மேலிருந்த பாசம் வற்றிவிட்டது என்பது வரையில் அவரே ஓய்ந்து போகும் வரைக்கும் அங்கேயே தரையில் அமர்ந்து அழுகையிலேயே கரைந்தார்.

நிவேதிகாவுக்கு தகதகவென்று எரியும் நெருப்புத் தணலின் மேலிருப்பதைப்போலிருந்தது. தன் உணர்வுகளைக் கொட்டவும் முடியாமல், தட்டிக் கழிக்கவும் முடியாமல் திணறினாள்.

மகள் கையைப் பிசைந்து கொண்டு முகமெல்லாம் வெளிறிப் போய் நிற்பதைக் கண்டகேசவன், ''என்னம்மா நீயும் ஏதாவது தலையில இடியை இறக்கப் போறியா?'' என வள்ளென்று விழ,

''அப்பா...'' என உடைந்து போய் அழ ஆரம்பித்தாள்.

மிதமிஞ்சிய கோபத்திலே மகள் மேல் எரிந்து விழுந்தார். ஆனால் அவள் பொங்கி அழுவதைப் பார்த்ததும் கேசவனுக்குக் கால்களெல்லாம் வலுவிழந்து போகப் பொத்தென நாற்காலியில் அமர்ந்தார்.

''விக்ரம் நல்லவர்ப்பா. என்னை நல்லா பார்த்துக்குவார்...'' நிவேதிகாஅதற்கு மேல் வார்த்தைகளை உச்சரிக்கவில்லை. தடாலென்று இருக்கையிலிருந்து எழுந்து கையை ஓங்கியவாறே அவளை அடிக்கப் போய்விட்டார்.

''என்னங்க?'' என லலிதா அவரமாகக் கீழிருந்து எழ, கையைக் கீழே இறக்கிய கேசவன், நாங்க பார்த்த மாப்பிள்ளை நல்லாப் பார்த்துக்க மாட்டாரா?முன்னாடியே சொல்ல என்னவாம்?இத்தனை தூரம் வந்ததுக்கப்புறம் கல்யாணத்தை நிறுத்தணுமா? எனக் கத்தினார்.

முன்னாலேயே சொல்லியிருந்தால் ஒருவேளை அவளுக்கு ஒரு சந்தர்ப்பமாவது கிடைத்திருக்கலாம். இப்போது அனைத்து வழிகளிலும் அடைத்து வழியில்லாமல் போய்விட்டது.

''அவர் வீட்ல விடமாட்டாங்க...'' என அவள் திணற, அப்போ நம்ம வீட்ல சந்தோஷமா தலையாட்டிடுவோமா? எனக் குதர்க்கமாகக் கேட்டார் கேசவன்.

''அவங்க ரொம்பப் பணக்காரங்க.. அவரோட அப்பா ஏதாவது செஞ்சிடுவார் என்கிற பயத்துல..'' என அவள் முடிக்கவில்லை, ''உனக்கே தெரியுதில்லை. இவங்களோட எல்லாம் போராடி, பயந்துட்டே இருக்க முடியாது. நாங்க எல்லாம் சராசரி ஆளுங்கம்மா'' எனக் கேசவன் சொல்ல,

''காதல் எல்லாம் நமக்கு ஒத்து வராது. உன் அண்ணன்கிட்டே அப்பா சொன்னது கேட்டயில்ல. ஏன் ரெண்டு பேரும் இப்படி இருக்கீங்க?'' எனலலிதா தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

காதலில் வேதனைகளும் வலிகளும் இருக்கும் எனப் படித்திருக்கிறாள். ஆனால் இன்று அதை அவள் நேரடியாக அனுபவிக்கையில் தொண்டைக் குழியிலிருந்துஅடி நெஞ்சம் வரையில் ஒருவித இறுக்கம் அவளை அழுத்தியது.

''அம்மா வேண்டாம்மா'' என லலிதாவின் கைகளைப் பற்றிக் கொள்ள முயல, கேசவனின் அலைபேசி ஒலித்தது.

வரவழைத்த புன்னகையுடன் அழைப்பை எடுத்து, ''மாப்பிள்ளை, கனடா போயிட்டீங்களா?'' எனப் பேச ஆரம்பித்தார்.

அதுவரையில் நிவேதிகா அறிந்திராத வகையில் அவள் இதயம் தடதடத்தது. 'ஐயோ, தன்னிடம் அலைபேசியைக் கொடுக்கக் கூடாது' என நினைத்து முடிக்கவில்லை,

''இருங்க...நிவி, பக்கத்துல இருக்கா'' என அலைபேசியை அவளிடம் தந்து, 'பேசு' எனக் கண்களாலேயே உத்தரவிட்டார் கேச

வன். அன்று எப்படியோ தமிழினியனிடம் பேசி ஒப்பேற்றிவிட்டாள்.

விக்ரமிடம் சென்று மனக்குமுறலைக் கொட்டினால்அவனோ, ''என்ன நிவி இப்படி அவசரப்பட்டுட்ட? நம்ம திட்டம் பற்றி உன் வீட்டில சந்தேகம் வந்தா என்ன பண்ணறது? சரி இப்படியே அமைதியா இரு. யோசிக்கலாம்'' எனத் தைரியமளித்தான்.

அதுவுமில்லாமல் தமிழினியனின் அழைப்புகளை எல்லா நேரமும் தவிர்த்துக் கொண்டிருக்கவும் முடியவில்லை. அவ்வப்பொழுது பேசினாள். ஆனால் உண்மையைச் சொல்லவும் முடியவில்லை.

அதன்பிறகு நிவேதிகாவும்வீட்டில் இதைப் பற்றி எதுவும் பேச முயற்சிக்கவில்லை. ஏனெனில் அவள் அண்ணன் அதற்க டுத்துப்பேசிய தொலைபேசி அழைப்புகள் எல்லாம் வீட்டைப் போர்க்களமாக்கியது.

''ஆகவே அவளுக்குத் திருமணம் என்று குறித்த நாளுக்கு முன்தினம் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் திருமணம் செய்து கொண்டு, மறுநாள் லண்டன் கிளம்பிவிடலாம்'' என இரகசியமாகத் திட்டமிட்டனர்.

லண்டன் செல்வதற்கான முக்கிய வேலையை முடித்துவிட்டு விக்ரமுடன் திரும்புகையில் தான் நேற்றுதமிழினியன் அவளைப் பார்த்திருக்கிறான்.

## 9

நிவேதிகா சொல்லி முடிக்கவும், ''விசா கிடைச்சி டுச்சா?'' எனத் தமிழினியன் கேட்க, ''ம்ம்ம்...'' எனத் தலையசைத்தாள். எதுவும் சொல்லாமல் போய்க் கையைக் கழுவி கொண்டு மீண்டும் வந்தமர்ந்தான்.

''முன்னாடியே சொல்லியிருந்தா அநாவசியக் கற்பனைகளை வளர்த்திருக்க மாட்டேன். அத்துமீறின கனவுகள்.. சாரி..'' எனச் சற்றுநேரம் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான். நெஞ்சிற்குள்பொங்கும் உணர்வுகள் சதிராட்டம் போட்டன.

சில நாழிகைகளில் அவனே சுதாரித்துக் கொண்டு, '' உன் நிலைமைபுரிஞ்சாலும் வலிக்குது வேதிகா'' எனத் தன்வலது கையை இதயம் இருக்கும் இடத்தில் தட்டிப் பேசியவனின் ஆழ்ந்த குரலில் திகைத்துப் போய் அவனை வெறித்தாள்.

''சாரி மனசுக்குள்ள நெருக்கமா கூப்பிடற மாதிரி கூப்பிட்டுட்டேன்'' என ஒரு கணம் கண்மூடி அமர்ந்திருந்தான். நெஞ்சை அடைக்கும்

துக்கத்தை விழுங்கிக் கொண்டிருக்கிறான் என்பதை ஏறி இறங்கிய தொண்டைக் குழி உணர்த்தியது.

''வீட்ல பேசறேன்'' எனஅவனே மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டான்.

'என்ன செய்யப் போகிறாய்?' எனப் பதட்டமாக அவள் பார்த்திருக்க, ''நல்ல காஸ்ட்லி மாடல் பைக் பேர் ஒண்ணு சொல்லு'' என அவன் கேட்க, அவள் முகம் சுருக்கினாள்.

''அந்தப் பைக் வாங்கித் தந்தா கல்யாணம்னு கலாட்டா பண்ணப் போறேன். நடிப்பு வருமா தெரியலை. அதையும் டெஸ்ட் பண்ணிப் பார்த்துடலாம்'' எனப்பற்கள் பளீரிடச் சிரித்தான்.

''நீங்க எல்லோரையும் சிரிக்க வைக்கறீங்க. இட்ஸ் எ பிளஸ்சிங்'' அந்த இறுக்கமான சூழலை இயல்பாக்க, அவளும் மனம் திறந்துஅவனைப் பாராட்டினாள்.

''ஆனா அந்த எல்லோரிலும் நீ அடக்கம் இல்லையே'' என அவன் வருந்த, அவள் முகம் நத்தையாய் மீண்டும் சுருங்கியது.

''கவிதைமா... ரசிச்சிடு ப்ளீஸ் ...'' என்றான்.

அவன் சொன்ன விதத்தில் மென்னகை இதழ்களில் விரிய, ''நீங்க இவ்வளவு இயல்பா எடுத்துக்குவீங்கன்னு நினைக்கலை. ஐ பீல் கில்டி.. என நிஜம் பேசினாள்.''

''ரொம்பவும் நல்லவனில்லை. முதல்ல செமையா கோபம் வந்தது. ஆனா என் தங்கச்சியால கோபம்நமத்துப் போன பாட்டாச ாகிடுச்சு'' என நேற்று மாலையில் தங்கை அலைபேசியில் யாருடனோ பேசியதையும், பின்னர்நடந்ததையும், அவனின் எண்ணங்களையும் பகிர்ந்து கொண்டான்.

பின்னர் கையில் வைத்திருந்த ஒரு பெட்டியை அவளிடம் தந்து அதைத் திறந்து பார்க்கச் சொன்னான்.

அவளும் கவனத்துடன் திறந்து பார்க்க, உள்ளே காபி கோப்பை ஒன்று இருந்தது. ஆனால் அதைப் பார்த்ததும் திகைத்துப் போனாள்.

பட்டென்று அதை மேஜையில் வைத்துவிட்டு, பின்னால் சாய்ந்து அமர்ந்து கொண்டு அவனை ஊடுருவினாள்.

''சாரி.. இதைக்கனடாவிலிருந்து கொண்டு வந்தேன். இதை உடைக்க எனக்கு மனசு வரலை. நீயே ஏதோ பண்ணிடு'' என்றான்.

அக்கோப்பையில் இருவரும் அருகருகே நிற்பதை போன்ற புகைப்படம் அச்சடிக்கப்பட்டிருந்தது. இருவருக்குமிடையில்

சிகப்பு இதயம் வேறு பிணைத்திருந்தது.

என்ன சொல்வது என்று தெரியாமல் உதடுகள் துடிக்கத்திணறிக் கொண்டிருந்தாள். மூளை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதைப் போல் அமர்ந்திருந்தாள்.

அப்போது பக்கத்து டேபிளில் ஏதோ சலசலப்புக் கேட்கத்தமிழினியனின் கவனம் அங்கே சென்றது.

உணவருந்த வந்திருந்தமூன்று இளம் வயது பெண்கள், ''சார்.. ப்ளீஸ்..'' என மன்றாடுவதுகேட்டது.

ஏதோ பிரச்சனை என நிவேதிகா மீண்டும் தலையைத் தமிழினியனை நோக்கித் திருப்ப அவன் கவனம் இன்னமும் அப்பெண்களிடமே நிலைத்திருந்தது.

''சார்.. ஏமாத்தலை. நிஜமா வச்சிருந்த பணம் பஸ்ல வர்றப்போ காணாம போயிடுச்சு'' எனஅப்பெண்கள்அங்கு வேலை செய்யும் பணியாளரிடம் சொல்வதைக் கேட்டான்.

''அப்போ உங்க செல்போன கொடுத்துட்டுப் போய்ப் பணத்தை எடுத்துட்டு வாங்க'' எனத் தீர்வொன்றைச் சொன்னார்.

செய்யலாம் தான். ஆனால் சுந்தா விவரங்கள், புகைப்படங்கள் எனச் சொந்த விஷயங்கள் அடங்கியஅலைபேசியை யாரோ ஒருவரை நம்பி எப்படி விட்டுவிட்டுப் போவது என அப்பெண்கள் தயங்குவது அவனுக்குப் புரிந்தது.

யாராவது ஒருத்தர் செல்லலாம் என்றாலும் அதற்கெல்லாம் நேரமில்லை என்பதைப் போல்அவர்கள் கைக்கடிகாரத்தைப் பார்த்ததிலேயே புரிந்தது.

''உங்களை மாதிரி நிறையப்பேரைப் பார்த்துட்டோம்'' என்றபணியாளர் அப்பெண்களைநம்புவதாக இல்லை.

படக்கென்று தன் இருக்கையிலிருந்து எழுந்த தமிழினியன், அவர்களிடம் சென்று ''என்ன பிரச்சனை'' என வினவினான். அந்த மூன்று பெண்களில் ஒருத்திக்கு அன்று பிறந்தநாள் என்பதால் கல்லூரி இடைவேளையின் பொழுது வெளியில் சாப்பிட வந்திருந்தனர்.

அப்பெண் சிறுகச்சிறுக சேர்த்த பணம் பேருந்தில் வருகையில் களவு போய்விட்டது. அதை அறியாமல் இவர்கள் உணவருந்திவிட்டுப் பணத்தைச் செலுத்த நினைக்கையில் பையில் பணமில்லை.

மற்றவர்களிடமும் அவ்வளவு பணமில்லை. அத்தோடு அவர்களால் தேவையான பணத்தைப் புரட்ட முடியும் என்றும்

தோன்றவில்லை.

அவர்கள் சொன்னதைக் கேட்டதும் அவர்களுக்கு உண்டான பணத்தைச் செலுத்திவிடுவதாகத் தமிழினியன் சொல்ல,

அப்பெண்கள் மூவரும், ''ரொம்பத் தேங்க்ஸ் சார். உங்க போன் நம்பர் கொடுங்க'' எனக் கேட்டு, அவன் கடனாகத் தந்த பணத்தை எப்படியும் திருப்பித் தந்துவிடுவதாகச் சொன்னார்கள்.

''யாருக்கு பர்த்டே?'' எனக் கேட்டுத் தெரிந்து கொண்டு, ''ஹாப்பி பர்த்டே. உன் பிறந்த நாளைக்கு இந்த அண்ணனோட கிப்ட்.. என்ஜாய்'' என அவர்களை அனுப்பி வைத்தான்.

ஆரம்பத்தில் தயங்கினாலும் அவனின் வற்புறுத்தலால் லட்சம் முறை நன்றி சொல்லிவிட்டு அகன்றனர்.

வியப்பில் விழுந்தவளின் அசையாத விழிகளை ஊன்றிப் பார்த்தவாறே வந்தவன், 'என்ன?' எனப் புருவம் உயர்த்திக் கேட்டான்.

''தலைக்கு மேலே பெரிய பிரச்சனைகாத்திருக்கு உங்களுக்கு. இருந்தும் அவங்களுக்கு ஹெல்ப் பண்ணற அந்தகுணத்தைப் பாராட்டணும்'' என மனதில் நினைத்ததை அவனிடம் மறைக்கவில்லை.

''என் தங்கச்சியைஅவங்க இடத்துல வச்சி பார்த்தேன்'' குறுஞ்சிரிப்புடன்விளக்கம் தந்தவன்,

''நீ மட்டும் விதிவிலக்கா இருந்த...'' எனத் தொடர்ந்து ஆழ்ந்த குரலில் சொன்னான்.

அவள் ஒருத்தியை மட்டும் அன்பையும் தாண்டி காதல் என்னும் கோட்டைக்குள் அனுப்பிவிட்டிருந்தான்.

முன்னே பின்னே போயிருந்தால் அதன் வலியையும் மீண்டு வரும் வழியையும்அறிந்திருப்பான்.ஆனால் இது பிரமாண்டமானகோட்டை என்று அதில் நின்று கொண்டு வழி தெரியாமல் முழிக்கையில் அல்லவா தெரிகிறது.

பார்த்திருந்தது குறைந்த நாட்கள் என்றாலும்அந்தப் பரபரப்பிலும் நெஞ்சப் பரப்பளவில் அவள் நினைவுகளைப் பரப்பிவிட்டு விட்டாளே. காலம் ஓடிவிடும். மனக் காயங்கள் போகுமா என்ன?

அவளும் நுண்உணர்வுகளால் அலைக்கழிக்கப் படுவதை உணர்ந்து, சட்டென்று மீட்டுக் கொண்டான்.''கொஞ்சம் யோசிக்க டைம் வேணும். கவலைப்படாத. என்ன செய்யலாம்னு சொல்றேன்''

எனச் சாப்பிட்டதற்குரிய பணத்தைச்செலுத்திவிட்டு அங்கிருந்து எழுந்தான்.

''இனி எப்போ பார்ப்போமோ தெரியலை. நானே டிராப் பண்ணறேன்'' என்றதும் அவளும் மறுப்புச் சொல்லவில்லை. அவளுக்காக வேலைமெனக்கெட்டு வந்திருப்பதால்மறுக்கவில்லை என்று எண்ணியவன் அவளுடன் சேர்ந்து தன் காரிருக்கும் இடதுக்குச்சென்றான்.

கார் நிறுத்துமிடத்தில் அவன் காரின் மேல் ஒய்யாரமாகச் சாய்ந்து நின்று கொண்டிருந்த ஒருமனிதன்,'உங்க காரா?' என அவசரமாக விலகினான்.

புன்னகையுடன், ''கார் விழாம தாங்கிப் பிடிச்சிட்டிருந்ததுக்குத் தேங்க்ஸ் பாஸ்'' என்றவாறே உள்ளே ஏறினான் தமிழினியன்.

ஒரு மாதிரி அசடு வழிந்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் அந்த மனிதன். நிவேதிகா காரினுள் ஏறியதும், மெதுவாகக் காரைக் கிளப்பிச் சாலையில் கலந்தான்தமிழினியன்.

''அன்பு ஒண்ணு தான் அநாதைன்னு சொல்வாங்க. எவ்வளவு உண்மை இல்லை?'' திடுமென ஒலித்த தமிழினியனின் குரலில் புரியாமல் அவனை நோக்கினாள்.

''எனக்கான உன் அன்பு, இனி எனக்கும் சொந்தமில்லை... உனக்கும் சொந்தமில்லை... அப்போ அது அநாதை தானே?'' விளக்கம் தந்தவனின் வார்த்தைகளில் அதுவரையில் அடக்கி வைத்திருந்த அவளது வேதனையும், வலியும் கேவலாக வெளியேறியது.

சற்றுநேரம் அவளை அழவிட்டவன், ''போதும் வேதிகா. நிதர்சனம் அது தான்'' எனச் சமாதானம் செய்தான்.

''பிளீஸ் தமிழ், ரெண்டு திட்டாவது திட்டிடுங்க'' எனக் கேவலுக்கிடையில்வெடிக்க,

தன்னைஏமாற்றநினைத்தாலும்அவள்அப்படி ஒன்றும்மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கவில்லை. வேதனையில்துடிக்கிறாள் என மனம் இளகிப் போனது அவனுக்கு.

குறுஞ்சிரிப்புடன், ''எனக்குப் பழக்கமில்லையே. நிறைய ஸ்டுடண்ட்ஸ் பார்க்கிறேன் வேதிகா. அவங்கதப்பு பண்ணறாங்கன்னு திட்டிட்டே இருந்தா அப்புறம் என் இயல்பை தொலைக்க வேண்டியிருக்கும் என்றான் நிதானமாக. ''

மாணவர்களிடம் காட்டும் நிதானத்தை அவளிடமும் காட்டுவதை

உணர்ந்து கொண்டாள் போலும்.தவறு செய்துவிட்டமாணவியாய் கூனிக் குறுகி, தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.அவன் பார்வை அவளைத் தொட்டு தொட்டு மீண்டது.

''கல்யாணத்தை நிறுத்திடறேன். வீட்ல சம்மதம் வாங்கி உங்க வாழ்க்கையைத் தொடங்குங்க... வாழ்க்கை உங்களுக்குள் இருக்கிற காதலோட முடிஞ்சுடாது... அன்பு, பாசம், குடும்பம், சொந்தம் என எல்லாம் சேர்ந்தது தான்வாழ்க்கை... அதுவே இனிக்கும்...''

அவன் தந்தகாபி கோப்பையை மடியில் வைத்திருந்தாள். அதையே வெறித்துப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் நிவேதிகா.

பக்கவாட்டில் தெரிந்த அப்புகைப்படம் தான் நிவேதிகாவை அவனுக்குப் பரிச்சயம் செய்து வைத்தது. கோப்பையின் மறுபக்கத்தில் அவன்இருக்கிறான். சேர்ந்திருப்பது போலிருந்தாலும் வெவ்வேறு திசையில் இருக்கின்றனர். தற்போதைய நிலையை எடுத்துரைப்பது போல். விரக்திப் புன்னகையை உதிர்த்தவன் காரை இடது பக்கம் திருப்புவதற்கு வேகத்தைக் குறைக்க முயன்றான்.

பலனில்லை. கார்அசுர வேகத்தில் செல்வதைப் போலிருந்தது. எதற்காக இவ்வளவு வேகம் எனஎண்ணி நிவேதிகாவும்அவனைத் திரும்பிப் பார்ப்பதும் புரிந்தது, காரின் பிரேக்கை பலமுறை விடாமல் அழுத்தியும் பலனில்லை.

''என்னாச்சு தமிழ்?'' என அவளுக்கும் பதட்டமேறியது. அவன் உடல்மொழியும், முகத்திலிருந்த கலக்கமும் சேர்ந்து ஏதோ சரியில்லை என்பதை உணர்த்தியது.

''பி.. பிரேக் பிடிக்கலை. மூணு வாரம் ஓட்டாம வச்சிருந்தேன். காலையில வரும்போது நல்லா இருந்துச்சு'' என அவளுக்கு அவசரமாகப் பதில்தந்தவன், சீட் பெல்ட் கழட்டு எனஉத்தரவிட்டான்.

அவளும் சொன்னதைச் செய்ய, பின்னாலிருந்த குஷனை எடுத்து வைத்துக் கொள்ளச் சொன்னான். கார் ஓட்டும்போதும் அதில் அமர்ந்து ஓட்டினால் தான் சாலை தெரியும் என்று எப்போதும் தன் அண்ணனின் காரில் அதை வைத்திருப்பாள் தர்ஷினி. அது தக்க சமயத்தில் உதவுகிறது.

அப்போது எதிரில் வேகமாக வந்த லாரியைப் பார்த்தவாறே அவள் பீதியில் அமர்ந்திருக்க, தமிழினியன் காரை அதற்குள் சாலையில் இருந்து இறக்கி மண்ணில் ஓட்ட ஆரம்பித்திருந்தான்.

''பயப்படாத வேதிகா. உனக்கு எதுவும் ஆகாது'' என அவன்

லாவகமாகச் செயல்பட்டுகாரை ஓடித்துச்சற்று மேடான இடத்தை நோக்கித்திருப்பி விட்டிருந்தான். வேகம் சற்று மட்டுப்பட்டதைப் போலிருந்தது.

''பார்த்து'' என அவள் கத்த, ''ஆல் த பெஸ்ட் வேதிகா. அங்கே தெரியுது பாரு காய்ந்த வைக்கோல் கட்டு. அங்கே குதிச்சிடு.. குவிக்'' என்றான்.

தலைக்குப் பத்திரமாகக் குஷனைக் கட்டிக் கொண்டு அவன் சொன்னதைப் போலவே அவளும் குதித்துவிட்டாள். அடுத்தச் சில நொடிகளில் அவன் கார் டமாரென்று பலத்த சத்தத்துடன்அங்கிருந்த பள்ளத்தில் விழுந்திருந்தது.

''ஐயோ தமிழ்'' என நிவேதிகா அலறுவது எங்கோ கேட்க அப்படியே ஆழ்ந்த மயக்கத்துக்குச் சென்றான்தமிழினியன்.

வீட்டினர் திருமணம் என்று முடிவு செய்திருந்த அன்று தான் மீண்டும் அவனுக்கு நினைவு திரும்பியது.

கடந்த கால நிகழ்வைப் பற்றியயோசனையில் அப்படியே உறங்கிப் போயிருந்தான் தமிழினியன்.

## 10

**கோ**விலுக்குச் சென்றுவிட்டுத் தமிழினியனை வீட்டில் இறக்கிய பின்னர் மிகவும் ஓய்ந்து போய் வீடு திரும்பினாள் நிவேதிகா. யாருமில்லாத தீவுக்குச் சென்று 'ஓவென்று' கதறி அழ வேண்டும் என்றிருந்தது.

அவள் என்ன நினைக்கிறாள் என்று யாருமே புரிந்து கொள்ள மறுக்கிறார்களே. தவறிழைத்த மனதில் ஒருவித தேடல் உண்டானது. என்றாவது இத்தேடல் தீருமா? பார்க்கப் போனால் தன் மேல் நேசம் வைத்தவர்களை எல்லாம் தான் ஏமாற்றிவிட்டதாக உணர்ந்தாள். ஒருவித மனஅழுத்தம் அவளை ஆட்கொண்டது.

வீட்டில் தந்தை, கேசவன் இல்லை.

''என்னடா இது? முகம் எல்லாம் வாடியிருக்கு'' எனக் கேட்டவாறே அவள் சித்தி அவளிடம் வர, ''சித்தி, எப்போ வந்தீங்க?'' என்றாள்முகம் மலர்ந்து.

கோவிலுக்குச் செல்லும் முன்னர் அவளை அழைத்திருந்த தந்தை அவள் சித்தியின் வருகையைப் பற்றிச் சொல்லியிருந்தார். இவர் இருப்பதால் தான் தந்தைவெளியில் கிளம்பியிருப்பார் போலும்.

நிவேதிகாவின் கேள்விக்குப் பதில் தந்தவர், ''உன் நிலைமை இப்படி ஆகிடுச்சே'' எனத் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தினார்.

''நடந்ததைப் பத்திப்பேசாதீங்க. அம்மா இப்போ தான் கொஞ்சம் தேறியிருக்காங்க'' என அவரிடம் தணிந்த குரலில் கண்டிப்புடன் சொன்னவள், இருங்க வரேன் எனத்தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

தமிழினியன் தன்னைத் தவறாக நினைத்துவிட்டானா என அவளுக்கு இதயம் வெடித்துச் சிதறுவதைப் போலிருந்தது. தன் படுக்கையில் விழுந்தவளுக்கு பாரபட்சமில்லாமல் கண்கள் பொழிந்த மழையில் கன்னங்கள் நனைந்தன. அழுகையை நிறுத்தவும் தெரியாமல், துடைக்கவும் தோன்றாமல் அப்படியே புசுபுசுவென்று அழுதவாறேசற்றுநேரம் படுத்திருந்தாள்.

திடீரென்று அவள் தோள் மேல் ஒரு கை விழ, படக்கென்று எழுந்து பார்க்க, ''என்னம்மா?'' என்ற கேள்வியுடன் தந்தை, கேசவன் நின்று கொண்டிருந்தார்.

பரபரவென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''ஒண்ணுமில்லைப்பா'' என ஒருவித அவசரத்துடன் பதிலளிக்க, நானும் கோவிலுக்கு வந்திருந்தேன் என்றார்.

அவர் குரலில் தெரிந்த நிதானமும், தெளிவும் நீங்கள் பேசியதையெல்லாம் கேட்டுவிட்டேன் என்பதைச் சொல்லாமல் சொல்லியது.அதிர்ந்து போனாள்.

''அம்மாவைப் பார்த்துட்டு வரேன்.சித்தி வேற இருக்காங்க. நைட் பேசலாம்'' எனமுகத்தைச் சரி செய்து கொண்டு முன்னறைக்குச் சென்றாள். இன்னுமே அவள் சித்தி நடந்த சம்பவங்களைப் பற்றி அங்கலாய்த்துப் பேசிக் கொண்டிருந்தார்.

அவரை எப்படியோ திசை திருப்பி வேறு விஷயங்களைப் பேச வைத்தவள், இரவு உணவைத் தயாரித்து அனைவரையும் உண்ணச் செய்தாள். அன்னையையும், சித்தியையும் தனித்து விட்டுவிட்டுத்தந்தையிடம் சென்றாள்.

யார் முதலில் ஆரம்பிப்பது என்ற தயக்கத்தில் இருவருமே பேச ாமல் அமைதி காத்தனர்.

''விக்ரம் பத்தி அவருக்குத் தெரியுமா?'' கேசவனே மௌனத்தை உடைத்தார். சொற்கள் வெளிவந்த தொனியில் அவர் அனைத்தையும் ஊகித்துக் கேட்கிறார் எனப் புரிய அப்படியே சிலையென

அமர்ந்திருந்தாள்.

அவளிருந்த நிலையே உண்மையைச் சுட்டிக் காட்ட, ''எனக்கு அழறதா, சிரிக்கிறதான்னு தெரியலை'' என அழுகையில் குலுங்கினார் கேசவன். கடந்த சில வாரங்களாக தந்தை காட்டும் நிதானத்தில் தான் அவள் உடையாமல் இருந்ததே.

''அப்பா, பிளீஸ்ப்பா'' என அவளுக்கும் தேற்ற வார்த்தைகளில்லை. ஆனால் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருக்கும் துக்கத்தை யாரிடமாவது இறக்கி வைக்க வேண்டும் என்ற தூண்டுதல் மட்டும் குறையவில்லை. இல்லையென்றால் பாழாய்ப் போன இதயம் பழுதடைந்துவிடும்.

அவளைப் பொறுத்தவரையில் ஒரு தீர்மானத்துடன் எடுத்த முடிவு சரியே. யார் என்ன சொன்னாலும் அது ஒரு பொருட்டல்ல. ஆனால் சம்மந்தப்பட்டவன் புரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

''தமிழினியன் புரிந்து கொள்வானா?'' அவனைக் குழப்பி வைத்ததே அவளல்லவா?

தமிழோட நிலைக்கு நானும் ஒரு காரணம்ப்பா என அதுவரையில் நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் சுமையைத்தந்தையிடம் இறக்கி வைத்தாள்.

அன்று காரிலிருந்து தமிழினியன் அவளைக் குதி என்று சொன்னதும் அவனும் அதே போல் மறுபக்கம் குதிக்கப் போகிறான் என்றெண்ணி பேச்சை வளர்க்காமல் அப்படியே செய்தாள்.

அவள் குதித்த இடத்தில் சற்று மணலும், காய்ந்த செடிகொடிகளும் உடன் லாரியில் ஏற்றிச்சென்றிருந்த வைக்கோல் கட்டுகள் இரண்டும் விழுந்து சிதறியிருக்க, அவள் அதிகம் அடிபடாமல் சிராய்ப்புகளுடன் தப்பிக்க முடிந்தது.

அவள் மடியில் வைத்திருந்த காபி கோப்பை அவளுடன் சேர்ந்து விழுந்ததில் இரண்டாகப் பிளந்து கீழே கிடக்க, அவளையும் தமிழினியனையும் வெற்றிகரமாகப் பிரித்து வைத்திருந்தது.

கூராக நீட்டிக் கொண்டிருந்த அக்கோப்பையின் ஒரு பகுதி அவளது இடது கையில் பட்டுக்கீறி ரத்தம் வழிய ஆரம்பித்திருந்தது. கீழே விழுந்து, உருண்டுதிரும்பிக் காரைப் பார்ப்பதற்குள், பலத்தசத்தத்து டன் கார் அங்கிருந்த சிறிய பள்ளத்தில் உருண்டு விழுந்திருந்தது.

அவள் சுற்றும் முற்றும் பார்க்க, கண்களுக்குத்தமிழினியன் தட்டுப்படவில்லை. ஏனென்று தெரியாமலேயே அவள் நெஞ்சுக்

கூடு காலியானதைப் போல் உணர்ந்தாள்.சுவாசத்துக்குத் திணற ஆரம்பித்தாள்.

''ஐயோ தமிழ்..'' என அலறியவாறே, வேகமாக எழுந்து காரினருகில் ஓடினாள்.தமிழினியன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். நல்லவேளையாக அவனை வெளியிலெடுக்க ஆட்கள் வந்து உதவ, உடனே வெளியில் எடுத்துவிட்டனர்.

மருத்துவ மூளை அதற்கு மேல் பதறிக் கொண்டிருக்க விடவில்லை. விபத்து நடந்ததும் அதற்கடுத்து வரும் நாழிகைகள் பொக்கிஷமானவை என்று தெரிந்திருந்ததால் உடனே துரிதமாகச் செயல்பட்டு, அவனுக்கு முதலுதவி செய்தவாறே புகழ்பெற்ற மருத்துவமனைக்கு அழைத்து உடனே வரச் சொன்னாள்.

அவர்களும் அங்கே வர, ஆம்புலன்ஸிலேயே அவனுக்குச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவமனைக்குச் சென்றதும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

அவன்மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு, வீங்கிப்போயிருப்பதால் அதிகமாகச் சிந்திப்பதைத் தடுக்கவென மருந்துகளின் உதவியுடன் அவனை ஆழ்ந்த மயக்கத்தில் வைத்திருந்தனர்.சீட் பெல்ட் அணிந்திருந்ததால் மற்ற பாகங்களில் பலத்த அடியில்லை.

தமிழினியனுக்கு விபத்து நடந்து அவன் மருத்துவமனையில் இருந்த பத்து நாட்களும் அவளுக்கு நரக வேதனையாகிப் போனது. சிவனே என்று தன் பாட்டுக்கு இருந்தவனை அவள் காதல் அல்லவா அங்கே கூட்டி வந்து நிறுத்தியிருக்கிறது. தன் வாழ்வில் அவன் வராமல் இருந்திருந்தால் இது நடந்தே இருக்காது என்ற எண்ணம் தோன்றுவதைத் தடுக்க முடியவில்லை.

ஆர்ப்பாட்டமில்லாமல் பிரச்சனையைத் தீர்க்கலாம் எனப் பேச வந்தவனுக்கு இப்படி ஆகிவிட்டதே என மருகினாள். அவளுக்கு அடிபட்டிருந்தால் கூட இத்தனை துன்பமும் வேதனையும் அடைந்திருக்கமாட்டாள்.

அவனை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு இரு வீட்டினருக்கும் தகவல் சொல்வதற்குள் அவள் செத்து செத்துப் பிழைத்தாள். அவளுக்கும் ஆங்காங்கே அடிபட்டு ரத்தம் கட்டிச் சதைக் கன்னிப் போயிருந்தது. அதற்கும் வைத்தியம் செய்தனர்.

விஷயம் கேள்விப்பட்ட அவள் அன்னை, லலிதா, ஐயோ ஊர்ல என்னென்னவோ பேசுவாங்களே எனக் கலங்கி மயங்கி விழுந்தார்.

தமிழினியனின் பெற்றோர்களின் நிலையை அவளால் விவரிக்கவே முடியாது. அதுவும் அண்ணனை விட எட்டு வயது குறைந்த தர்ஷினி பேயறைந்ததைப் போல் அரற்றினாள்.

நிவேதிகாவுக்கும் நெஞ்சை அழுத்தும் வேதனை என்றாலும் அவளும் உடைந்து போய்விட்டால் இரண்டு குடும்பங்களையும் அவளால் மீட்கவே முடியாது.

தமிழினியனைச் சேர்த்திருந்த மருத்துவமனையில் அவளும் ஒரு மருத்துவர் என்றறிந்ததும்அவன்உடல்நிலையைப் பற்றி விலாவாரியாகப் பகிர்ந்து கொண்டனர்.

ஒரு வாரம் போனால் தான் அவன் உடல்நிலை பற்றி எதுவுமே சொல்ல முடியும் என மருத்துவர்கள் தெரிவிக்க, அவளுக்கு 'ஓவென்று' இருந்தது.

மருந்து மாத்திரைகள் வாங்கி வருவதிலிருந்து அனைத்தையும் அவளே பார்த்துக் கொண்டாள். அவள் தந்தை கேசவனும் உடைந்து போகாமல் எக்கேள்வியும் கேட்காமல் மகளுக்கு உறுதுணையாக நின்றது அவளை மேலும் சங்கடத்தில் ஆழ்த்தியது.

அவள் ஒருத்தியின் சுயநலத்தால் எத்தனை இன்னல்கள்?

கூடுதலாக விபத்து நடந்ததைப் பற்றிக் காவலர்களும் வந்து விசாரித்த வண்ணம் இருக்க, எங்காவது மாயமாகிப் போய்விடலாமா என்று தோன்றியது. தமிழினியனுக்குச் சரியாகாமல் அவனை விட்டு எங்கேயும் செல்வதற்கும் தைரியமுமில்லை. அப்படிச் சென்றால் அவனுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்றும்பயந்தாள்.

சாகாமல் நரகத்தை அனுபவித்தாள்! அன்றும் அப்படித் தான். இரவு முழுவதும் மருத்துவமனையில் இருந்ததால் சற்றுமுன்னரே சதானந்தன் வீட்டுக்குச் சென்றிருந்தார். அவர் போய்ப் பார்வதியை அனுப்பிவிட்டு, சற்று ஓய்வெடுத்துக் கொண்டு திரும்புவார். அதுவரையில் நிவேதிகாவும், அவள் தந்தையும் மருத்துவமனையில் இருப்பார்கள்.

எப்பொழுதும் போல் தன் வேதனையில் உழன்று கொண்டிருந்தவளை அலைபேசிகலைத்தது.எடுத்துப் பேசியவள், ''அப்பா, பார்த்துக்கோங்க. பக்கத்துல கோவிலுக்குப் போயிட்டு வரேன்'' எனத் தந்தையை இருக்கச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

தன் வண்டியைக் கோவில் முன்னால் ஓரமாக நிறுத்திவிட்டு உள்ளே சென்றநிவேதிகாவின் எண்ணத்தை முழுவதுமாகத்தமிழினியன் மட்டுமே ஆக்ரமித்திருந்தான்.

'கடவுளே, தமிழுக்கு எதுவும் ஆகக்கூடாது. அவனைப் பத்திரமாக மீட்டெடுத்துக் கொடுத்துவிடு' என்ற ஒரே ஒரு பிரார்த்தனையை மட்டுமே கடவுளிடம் தொடர்ந்து முன்வைத்துக் கொண்டிருந்தாள்.

நெஞ்சில் தைரியம் ஊறிப் போயிருந்தாலும் உடல் உத்துழைக்கவில்லை. தொய்ந்து விழுந்து விடுவோமோ எனப் பலகீனமாக உணர்ந்தாள். அவளுக்கும் அடிபட்டது என்றாலும்அவனை ஒப்பிடுகையில் அதெல்லாம் ஒன்றுமே இல்லை.

கடவுளை வழிபட்டுவிட்டுநகர்ந்து போய் ஒரு தூணின் அருகில் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டாள். அப்போது யாரோ அவளருகில் வந்துஅமர்வது விழியோரத்தில் தெரிந்தது.

வந்திருப்பது யாரென்று அவளுக்குத் தெரியும். இருந்தும் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை.

## 11

நிவி, என்னதிது? மூணே நாள்ல இப்படிப் பாதியாயிட்ட கரிசனக் குரல் கேட்டும் அவள் அசையவில்லை.

வெறித்துப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தவளின் கருவிழிகள்கண்ணீரை உதிர்த்தன.

''ஹேய் நிவி..'' என அவளருகில் வர எத்தனிக்க, அவசரமாகக்கண்களைத் துடைத்துக் கொண்டவள், ''வேண்டாம் விக்ரம். போதும்'' என்றாள் ஒரு தீர்மானத்துடன்.

''என்ன போதும்?'' என அவன் குழப்பத்துடன் புருவம் சுருக்க, அவன் கண்களைப் பார்த்து, ''இனிமேல் நம்ம சந்திக்க வேண்டாம்'' என்றாள்.

''வாட்?'' அதிர்ந்து போய் ஒலித்த அவன் குரலில் அவளின் திடம் உதிர்ந்து போய் விடவில்லை. அவன் முகத்தை எவ்வித சலனமுமில்லாமல் நேருக்கு நேராக ஏறிட்டுப் பார்த்தாள்.

விக்ரம் வாயைத் திறக்கும் முன்னர், ''எதுவும் சொல்லாதீங்க. உங்களை இப்படி வந்து சந்திக்கிறதே ஏதோ தப்பு பண்ணற மாதிரி ஃபீல் பண்ணறேன்'' என்றாள்.

அதுவரையில் பொறுமையைக் கடைப்பிடித்திருந்தவன், ''வாட்? உனக்கும் மண்டையில ஏதாவது அடிபட்டிடுச்சா?'' என எழுந்துவிட்டான்.

''அப்படி ஆயிருந்தா பிரச்சனையில்லை'' வெடுக்கென்று அவளிடமிருந்து பதில் வந்தது.

அப்போது அவர்களுக்கு எதிரில் இருந்த தூணருகே குழந்தையை ஏந்தியவாறு ஒரு பெண் வந்து அமர்ந்தாள். அக்குழந்தை அன்னையின் கையிலிருந்த தேங்காய் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்க, அப்பெண், பாதியாக உடைந்திருந்த தேங்காயை எடுத்துக் கீழே தரையில் ஓங்கித் தட்டி, சிறு துண்டொன்றை குழந்தையிடம் தந்தாள்.

குழந்தையும் கையைத் தட்டி வாங்கி வாயில் வைத்துக் கொறிக்க ஆரம்பித்தது. நிவேதிகாவின்பார்வை அக்குழந்தையின் மேலேயேபதித்திருந்தது.

''நிவி, உனக்குக் குற்றவுணர்ச்சி அதிகமாயிருக்கும். அது ஒரு விபத்து. அவ்வளவு தான்'' என அவன் மீண்டும் கீழே அமர்ந்து கொண்டு அவளைச் சமாதானம் செய்ய விழைய,

''தமிழ் கண் முழிக்கிற வரைக்கும் என் உயிர் என்கிட்ட இருக்காது என அவள் உதிர்த்த சொற்களைக்கேட்டதும் தேள் கொட்டியதைப் போல் திகைத்தான் விக்ரம்.

காதலிக்கும் பெண்ணின் வாயிலிருந்து இது போன்றதொரு வாக்கியத்தைக் கேட்பதற்கு எந்தக் காதலனும் விரும்பமாட்டான் என்பதை அவன் முகமே காட்டிக் கொடுத்தது.

''நான் லண்டன் வரலை. நீங்க கிளம்புங்க'' சிலையென அமர்ந்திருந்தவனின் தலையில் மேலும் இடியென இறக்கினாள்.

''வராம, இங்க உட்கார்ந்து அவனுக்குச் சேவகம் செய்யப் போறியா?'' எனச் சிடுசிடுத்தான்.

அவள் எதுவும் பேசவில்லை. ஆனால் அந்த மௌனமே அவனுக்கு ஓராயிரம் அர்த்தங்களைத் தந்தது.அவன் காதலுக்கு இப்படியெல்லாம் தடைவரும் என்று அவன் எண்ணவில்லையே.

''வீண் பிடிவாதம் பிடிக்காத. உன் மேற்படிப்பு, நம்ம வாழ்க்கை என நமக்காகக் காத்திட்டிருக்கு. எவ்வளவு பணம் வேணாலும் கொடுத்துட்டுக் கிளம்பிட்டே இருக்கலாம்'' என அவன் திட்டமிட, 'ப்ச்ச்' என ஒற்றைச் சத்தத்தில் அத்திட்டத்தைச் சுக்கு நூறாக்கினாள்.

''இது என்ன ரியாக்ஷன்?நீ இப்போ வரலைன்னா உன் படிப்பு... வேலை...'' எனக்கிளிப்பிள்ளைக்குச் சொல்வதைப் போல் எடுத்துரைக்க,

''தமிழ் கண்முழிக்கிற வரைக்கும் என்னால வேற எதிலும் கவனம்

செலுத்த முடியாது. சாரி...'' எனத் திட்டவட்டமாகக் கூறினாள்.

''அவன் கண்ணே முழிக்கலைன்னா என்ன..'' என அவன் முடிக்கும் முன்னால், ''விக்ரம்!'' என அதிர்ந்து போய்க்கத்திவிட்டாள்.

சுற்றி இருப்பவர்கள், 'கோவிலில் வந்து என்ன இது?' என்பதைப் போல் இருவரையும் மாறி, மாறிப்பார்க்க, ஆழ்ந்த பெருமூச்சொன்றை வெளியிட்டாள்.

''உங்களால் என்னைப் புரிஞ்சுக்க முடியாது விக்ரம். அவருக்கு என்னாகும்னு நான் தவிக்கிறது புரியாது. சாப்பிட முடியலை, தூங்க முடியலை. அவர் கண்முழிக்கிறவரைக்கும் என்னால எதையும் யோசிச்சுப் பார்க்கவே முடியலை. தமிழ் நல்லவர்'' என அவள் சொல்ல,

''அப்போ அவனையே கல்யாணம் பண்ணிக்கப் போறியா?'' பட்டென்று பட்டசாக வெடித்தான்.

கேட்காமலேயே ஒருவன் உயிர் ஊற்றிவிட்டு உணர்வின்றிக்கிடக்கிறான். தன் உணர்வின் அதிர்வுகளை இவனிடம் கடத்திவிடலாம் என்றெண்ணியே வந்தாள். ஆனால் அவள் இங்கே வந்ததே தப்பு போலிருக்கிறதே. ஏனோ தமிழினியனை உடனே பார்க்க வேண்டும் எனத் தோன்றியது.

''சாரி விக்ரம். நீங்க லண்டன் போய் உங்க வேலையைப் பாருங்க'' என்றாள்.

''ஒரு ஆளை ஏற்பாடு செய்து பார்த்துக் கொள்ளச் சொல்லிவிடலாம் நிவி'' அவள் சொல்ல வருவதைப் புரிந்து கொள்ளாமல் ஏற்கனவே திட்டமிட்டதன் படி லண்டன் கிளம்ப வேண்டும் எனத் திரும்ப திரும்பச் சொல்லிக் அவளைச் சலிப்படையச் செய்தான்.

அதிர்ச்சியில் பிதற்றிக் கொண்டிருக்கிறாள். எடுத்துச் சொன்னால் கேட்டுக் கொள்வாள் என நினைத்துவிட்டான் போலும். அதிர்ச்சியில் தோன்றியதல்ல. மனமுதிர்ச்சியில் முடிவெடுத்தது.

''விக்ரம், ஆக்சிடென்ட்ல நான் கோமாவுக்குப் போயிருந்தா எனக்காகக்காத்துக்கிட்டு இருந்திருப்பீங்களா?'' திடுமென அவள் கேட்க,

''இப்படி நடக்காததைக் கேட்டு என்ன பண்ணப் போற? பிராகட்டிகல்'' என அவளிடம் கோபத்துடன் போர்க்கொடியை உயர்த்தினான்.

நெஞ்சத்து உணர்வுகளைத்திரையிட்டு மறைக்காமல்

கொட்டமுயன்றவள், 'என்னைப் புரிந்து கொள்ளேன்' என்ற மன்றாடலை அவன் முன் வைத்தாள். சாவின் விளிம்பின் இருக்கும் ஒருவனை அப்படியே விட்டுவிட்டு அவளால் எங்கும் வரமுடியாது என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை. இவ்வளவு ஏன்? புரிந்து கொள்ள முயற்சிக்கக் கூட இல்லை.

அனலில் பட்ட புழுவாகத் துடித்தாள்.

அப்போது, எதிர் தூணில் அமர்ந்திருந்த குழந்தை பலமாக இருமிக் கொண்டிருக்க, அக்குழந்தையின் அன்னைபதட்டமானாள்.

வாய்க்குள் கையை விட்டு அதக்கியிருந்த தேங்காயை எடுக்க நினைக்கிறாள் என உணர்ந்த நிவேதிகா படக்கென்று எழுந்து, வேண்டாம்என அவர்களை நோக்கி ஓடினாள்.

''எங்க போற?'' என வினவியவாறே அவளைக் கைப்பற்றித் தடுத்திருந்தான் விக்ரம்.பற்றியிருந்த பிடியில் மூர்க்கம். முகத்தில் அத்தனை ஆத்திரம். பின்னே இங்கே அவன் வாழ்க்கையே அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இதில் பொதுச்சேவை அவசியமா?

அவன் கைகளை ஆவேசமாக உதறிவிட்டு அவர்களை நோக்கி ஓடினாள் நிவேதிகா. சாப்பிட்டுக் கொண்டிருந்த தேங்காய்ச் சில்லு, குழந்தையின் உணவுக் குழாயில் சிக்கி, மூச்சு விடுவதற்குத் திணறிக் கொண்டிருந்தாள். அதை வெளியில் எடுப்பதற்குஅவள் அன்னை வாய்க்குள் விரலை விட்டிருந்தாள். அது இன்னுமே உள்ளே போய்ச் சிக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கு.

அந்நேரத்தில் எப்படிச் செயல்பட வேண்டும் என்று அவளுக்குத் தெரிந்திருந்ததால் அக்குழந்தையை இடது கைமேல் குப்புற படுக்கச் செய்து, வலது கையால் முதுகில் பலமாகத் தட்டினாள்.

சில நொடிகளில் அந்தத் தேங்காய்ச் சில்லு குழந்தையின் வாயிலிருந்து கீழே விழுந்தது.

''பார்த்து... பத்திரம்...'' என அவள் சொல்வதற்குள், ''அறிவில்லை. இப்படியா குழந்தையைப் பார்த்துக்கிறது?'' என அருகில் வந்த விக்ரம் எரிந்து விழுந்தான்.

ஏற்கனவே பயத்தில் இருந்த அப்பெண் இன்னுமே மருண்டு விழிக்க, ''ஒண்ணுமில்லை.. கவனமா இருங்க'' எனச் சொல்லி, குழந்தையைத் தட்டிக் கொடுத்துவிட்டு வந்தாள் நிவேதிகா.

''எதுக்கு இப்படி நடந்துக்கறீங்க? என அவள் தன் ஆற்றாமையை

வெளிப்படுத்த'', இங்கே என் லைப்பே கேள்விக்குறியா இருக்கு. அதை விட்டுட்டு என்னென்னவோ பண்ணிட்டிருக்க. உனக்கு என் மேலே காதலே இல்லையா?'' என்றான்.

திடீரென்று அன்று சம்மந்தமேயில்லாத அப்பெண்களுக்கு உதவியதமிழினியனின் முகம் அவளையுமறியாமல் அவள் விழித்திரையில் வந்து போனது.

'உன்னை என்னால் திருமணம் செய்ய முடியாது' என்று சொல்லிய அவளும் கூட அவனுக்கு யாரோதானே? அப்படியிருந்தும் அவளுக்கு உதவ முன் வந்தானே.தன் உயிரையும் துச்சமென மதித்து அவளைக் காப்பாற்றினானே.

தன்னைக் காரை விட்டு இறக்குவதில்காட்டிய தீவிரத்தை அவன் காரிலிருந்து குதித்துத் தப்பிச் செல்வதில் காட்டியிருந்தால் அவன் இந்நேரம் எவ்வித சேதாரமும் இல்லாமல் தப்பித்திருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை.

அவளிடம் ஒட்டியிருக்கும் உயிர் அவனுக்குச் சொந்தமானது. சுயநலமில்லாமல் செயல்படும் அவனது அன்புஎல்லாவற்றையும் விட உசந்தது. அப்படிப்பட்டவனைக்கண்டிப்பாக அவள் மீட்க வேண்டும்.

அதற்காக எதையும் இழக்கலாம். அவளது காதலாக இருந்தாலுமே.

''தன்னை மீட்டுக் கொண்டு, அன்பிருக்கு... அதையும் விட முக்கியமா மனிதாபிமானம் இருக்கு...மனிதநேயமிருக்கு. எப்படியோ போன்னு அவரை விட்டுட்டு வந்தா என்னை விடச் சுயநலவாதியாரும் இருக்க மாட்டாங்க. அதையும் விட, அது நான் என் பணிக்கு செய்யும் அநியாயம்'' என்றாள்.

''நான் கேட்ட கேள்விக்கு இது பதிலில்லை நிவி'' விக்ரம் முறைத்துக் கொண்டு நிற்க,

''மனசுல அடிப்படை அன்பு இருந்தா மட்டுமே காதல் வரும். என்ன செஞ்சும் ஓர் உயிரைக் காப்பாத்தப் போராடுவோம். ஒரு டாக்டரா இருந்துட்டு அப்படி எல்லாத்தையும் உதறிட்டு வர முடியாது'' என்றாள்.

அடுத்த மன்டே ஃப்ளைட்..சரி, இப்போ கல்யாணம்வேண்டாம். அட்லீஸ்ட் லண்டன் போவோம். அப்புறம் மிச்சத்தைப் பார்த்துக்கலாம் எனக் கடுஞ்சினத்தில் கத்தினான்.

''இவனுக்குப் புரியவே புரியாதா? அவள் படும் வேதனையையும்,

வலியையும் உள்வாங்கிக் கொள்ளாமல் சுயநலமாகவே யோசிக்கிறான்''.

கடந்த ஒரு வருடத்தில் அவனைப் புரிந்து கொண்டு அவன் சொல்வதற்கெல்லாம் தலையாட்டினாளே.இப்போது அவள் உள்ளத்து உணர்வுகளை மதிக்கவே மாட்டேன் என்கிறான்.

விக்ரமுடன் சேர்ந்து அவர்கள் வாழ்வு குறித்துத் திட்டமிடுகையில் புத்திசாலித்தனமாகத் தோன்றியது எல்லாம் இப்போது படு முட்டாள்தானமாகப் பட்டது. கேவலமாகவுமே!

யார் எப்படிப் போனால் நமக்கு என்ன எனச் சுயநலத்தின் மொத்த உருவமாக இருந்திருக்கிறாள். இனிமேலும் அப்படி இருப்பது நியாயமில்லை.

''உங்களுக்கு நான் சொல்ல வர்றது புரியலையா? சொன்னதையே சொல்லிட்டிருக்கீங்க. கிவ் மீ சம் டைம் அண்ட் ஸ்பேஸ்...'' என அவளும் குரலை உயர்த்த,

''நீ அதிர்ச்சியில் உளர்ற நிவி. குறையட்டும்... திரும்பவும் வரேன்..'' என விடுவிடுவென்று அங்கிருந்து வெளியில் சென்றுவிட்டான்.

''அவன் நடந்த வேகமே அவன் கோபத்தின் அளவைக் காட்டியது. அவளுக்கு அது பொருட்டாகப் படவில்லை. 'தமிழ்.. பிளீஸ் கண் முழிச்சுடுங்க' என்ற முணுமுணுப்பு மட்டும் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அவள் கோவிலை விட்டு வெளியில் வரவும், அவளது அலைபேசி ஒலிக்கவும் சரியாக இருந்தது. தமிழினியனுக்கு ஏதோ ஆகிவிட்டதோ எனப் பதற்றத்துடன்கைப்பேசியைப் பற்றினாள்.

அவன் அன்னை, பார்வதி மருத்துவமனையில் இருப்பதாகத் தகவல் சொல்ல,உடனே கிளம்பி வருவதாகச் சொல்லிவிட்டு வண்டியைக் கிளப்பினாள்.

## 12

**மீ**ண்டும் மருத்துவமனைக்குச் சென்ற நிவேதிகாவுக்கு மனம் சற்று அமைதியாக இருப்பதைப்போலிருந்தது.

அவள் சென்ற அதே வேளையில் விபத்துக் குறித்து விசாரிக்கும் காவல்துறை அதிகாரியும்வந்திருந்தார்.பார்வதியிடம் துகள்களாக உடைந்து போயிருந்த தமிழினியனின் கைப்பேசியைத்

தந்துவிட்டு மேலும் விசாரணையில் இறங்கியிருந்தார்.

விபத்துக் குறித்து மருத்துவமனைக்கும், காவல்துறைக்கும் தகவல் தந்ததால் நிவேதிகாவை யாரென்று அவருக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அவளைப் பார்த்ததும், ''எப்படிம்மா இருக்க?'' எனஅறிமுகப் புன்னகை ஒன்றை உதிர்த்தார்.

பின்னர், விசாரணையில ''காரோட 'பிரேக்கைக் கட்'பண்ணியிருக்காங்கன்னு தெரிய வந்திருக்கு. சொல்லுங்க... உங்களுக்கு யார் மேலேயாவது சந்தேகம் இருக்கா?'' என அவளைப் பார்த்துக் கேட்கநிவேதிகா திடுக்கிட்டாள்.

அவள் என்ன பதில் சொல்வதென்று திணறிக் கொண்டிருக்க, ''அவனுக்கு யாருங்க விரோதி இருக்கப் போறாங்க? எல்லாம் விதி'' எனப் பார்வதி விசும்பலில் ஆரம்பித்துப்பேரழுகையில் வெடித்தார்.

'அதானே, இவனுக்கு யார் எதிரிகள் இருக்கக் கூடும்?' எனப் பார்வதியைச் சமாதானப்படுத்தி இயல்பு நிலைக்குத் திருப்பியவள், காவலரிடம் மேற்கொண்டு பேசி அவரை அனுப்பி வைத்தாள்.

அவர் சென்றதும் அவசர சிகிச்சை பிரிவுக்குச் சென்று தமிழினியனைப்பார்த்தாள். மருத்துவச் சாதனங்களின்உதவியுடன், தலையில் பெரிய கட்டுடன்சலனமில்லாமல் படுத்துக் கிடந்தான்.

'சாரி இனியன். உங்களுக்கு ஒண்ணும் ஆகாது' என அவள் இதய அறைகள் முழுவதும் சத்தமிட்டு அரற்றின. எல்லோருக்கும் அவள் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஆனால் அவளுக்கு யாரிடம் சென்று தன் மனக்குமுறலைக் கொட்டுவது என்று தெரியவில்லை.

இத்தனை நாட்களாக தன்னிடம் இல்லாத தைரியத்தை அவளுக்குத் தமிழினியன் தந்திருந்தான். இதுவரையில் மற்றவர்கள் சொல்லி அதன்படி செய்து கொண்டிருந்தவள் இன்று தானே சுயமாக முடிவெடுத்து அனைவரையும் வழிநடத்துகிறாள். இதற்குக் காரணம் தமிழினியன் மட்டுமே.

அச்சத்தின் உச்சம் தைரியம் என்பது அவள் விஷயத்தில் உண்மையாகிவிட்டது.

இரண்டு குடும்பங்களுக்கும் தைரியத்தையும் ஆறுதலையும்வாரி வழங்குவது அவளென்றால் அவள் அழுது கரைவதற்குத் தோளொன்று வேண்டுமே.

விக்ரம் அவள் சொல்ல வருவதைக்காது கொடுத்துக் கேட்கவே மாட்டேன் என்கிறான். குதிரைக்குக் கண்களை மறைக்கக் கட்டும்

முகப்படாம்போல்தன் வாழ்க்கை, தன் எதிர்காலம் என அந்த வட்டத்துக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கிறான்.

சரி, ஆறுதலளிக்க வேண்டாம். ஆதரவுக் கரமாவதுநீட்டலாமே? நீட்டிய கரங்களையும் அவனை நோக்கி வலுக்கட்டாயமாக இழுத்துக் கொள்ளப் பார்க்கிறானே.

தமிழினியன் தவிர வேறு யாராலும் அவள் எதிர்பார்க்கும் ஆறுதலையும், ஆதரவையும் தந்துவிட முடியாது என்ற எண்ணம் தலைதூக்க, நிதர்சனம் அவளைத் திடுக்கிடச் செய்தது.

மருத்துவமனையில் மாலை வரைஇருந்துவிட்டு அவளுக்கு வேறொரு அதிர்ச்சி காத்திருப்பதை அறியாமல் வீடு நோக்கிச் சென்றாள்.

விபத்து நடந்ததில் இருந்தே அவள் வேலைக்குச் செல்லவில்லை. தமிழினியன் கண்விழித்துப் பார்க்கும் வரையிலும் அவளால் மனம் ஒன்றி எதையும் செய்ய முடியாது என்று புரிந்ததால் விடுப்பு எடுத்துக் கொண்டாள்.

அத்தோடு அவளுக்குமே கைகளிலும், கால்களிலும் சிராய்ப்புகள் இருந்ததால் அதற்கு மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொள்கிறாள்.

அவள் வீட்டினுள் நுழைகையில், அவள் தந்தை, கேசவன், என்னடா சொல்லற? என அதிர்ச்சியில் கத்த, லலிதாவும் உள்ளிருந்து ஓடி வந்தார்.

மறுமுனையில் அவள் அண்ணன் திலீப் என்ன சொன்னானோ, ''இப்படி மானத்தை வாங்கிட்டியே'' என்றவாறே அழைப்பை 'ஸ்பீக்கரில் போட்டார் கேசவன்.

அமெரிக்காவில் காதலித்தவளை சற்றுநேரத்துக்கு முன்னால் மணந்து கொண்ட தகவலைப் பகிர்ந்து கொண்டான் திலீப்.

''அப்பா, நிவியோட கல்யாணம் முடியற வரைக்கும் வெயிட் பண்ண நினைச்சேன். ஆனா அவளுக்கு எப்போ கல்யாணம் நடக்கும்னே தெரியாது. அதுவும் தமிழுக்கு என்னஆகுமோ?'' என அவன் முடிக்கவில்லை,

''அண்ணா!'' எனவீறிட்டுக் கத்தினாள் நிவேதிகா. எல்லோரும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அன்று காலையில் விக்ரமும் இதே போல் எதையோ உளறிக் கொட்டினான். இப்போது இவனும் வதைக்கிறான்.

இவர்களுக்கெல்லாம் தங்கள் வாழ்க்கையைப் பற்றி முடிவெடுக்க வேண்டுமென்றால் தாராளமாக எடுக்கட்டும். அதற்காக உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவனின் உடல்நிலையைப் பந்தாடிஎதிர்மறையாகப் பேச வேண்டுமா என்ன?

'ஐயோ! இனியன் நல்லபடியாகத் திரும்பி வரவேண்டும்' என்றுஅவள் பதறிக் கொண்டிருப்பது புரியாமல் ஆளாளுக்கு என்னென்னவோ பேசுகிறார்களே. அதுவும் முற்றும் முதல் காரணம் அவளாக இருக்கையில்.

சத்தமில்லா உணர்வுகள் சடுகுடு ஆட ஆரம்பித்தன. தன் உயிரை யாரோ பிய்த்துக் கொண்டு போவதைப் போல் துடித்தாள். உள்ளம் கொதித்தது! கோபம் கொப்பளித்தது!

விறுவிறுவென்று தந்தையின் அருகில் சென்று, ''அவருக்கு ஒண்ணும் ஆகாது. ஆகவும்விடமாட்டேன். நீங்கசுயநலவாதியா மாறிப் பேசறீங்க'' எனக் பெருங்குரலெடுத்து கத்தினாள்.

''நிவி, பி. பிராக்டிகல்.''

''மனுசத் தன்மையோட நடக்கிறது தான் எனக்குத் தெரிஞ்சு பிராக்டிகல்'' என வெடுக்கென்று சொல்லிவிட்டுத் தன்னறைக்குள் சென்று கதவைச்சாத்தினாள்.

'நீயும் இப்படிச் சுயநலத்துடன் உன் வாழ்க்கை, உன் எதிர்காலம் என்று திட்டமிட்டதை மறந்துவிட்டாயா?'மனசாட்சி அவளைக் கேலித் தீயால் பொசுக்கியது.

நல்லவேளையாக அவள் எந்த முட்டாள்தனத்தையும் செய்யவில்லை. இந்த விபத்து அவளுக்குமே ஒரு கண்திறப்பு. அதற்காகத் தமிழினியன் சிலுவையைச் சுமந்திருக்க வேண்டாம்.

''லலிதா..'' என்ற தந்தையின் அலறலில் முன்னறைக்கு ஓட, அவர் கேசவனின் மடியில் மயங்கிச் சரிந்திருந்தார்.

''அம்மா'' என அவசரமாக அவரிடம் சென்றவள், உடனே செயல்பட்டு முதலுதவி தந்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்றாள். இந்த வாரத்தில் இரண்டாம் முறையாக வேதனை ஆக்டோபஸ் கரங்கள் கொண்டு அவளை இறுக்கியது.

லலிதாவைப் பரிசோதித்த மருத்துவர்கள் ''பெரிதாகப் பயப்பட ஒன்றுமில்லை'' என்றனர். அதீத மனஉளைச்சல் காரணமாக அவருக்குநெஞ்செல்லாம் அடைப்பது போல் ஓர் உணர்வு. அவரதுஇரத்த அழுத்தம் எகிறி, மூச்சு விடத் திணறியிருக்கிறார்.

''இதை 'புரோக்கன் ஹார்ட் சிண்ட்ரோம்' என்பர். இதைக் கவனிக்காமல் விட்டால் பின்னாளில் உயிருக்குப் பெரிய ஆபத்தாக முடிய வாய்ப்பிருக்கு'' என வலியுறுத்தி தேவையில்லாத விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டாம் என்றனர்.

ஏற்கனவே மகளின் திருமணம் தடைபட்டதில் அதீத மனஅழுத்தத்தில் இருந்திருக்கிறார். அச்சமயத்தில் மகனும்பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் திடீரென்று திருமணத்தை முடித்துக் கொண்டதும்மனஅழுத்தம் கூடிப் போனது.

கூடுதலாக வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி, ஊசலாடிக் கொண்டிருக்கும்நம்பிக்கையையும்உலுக்கிவிட்டான்.

பெரிதாக ஆபத்தில்லை என்ற பின்னரே நிவேதிகாவால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது. தமிழினியனைச் சேர்த்திருந்த அதே மருத்துவமனையில் அன்னையையும் சேர்த்திருந்தாள்.

அப்போது சதானந்தனும்அங்கே இருந்தார். பெரியவர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்க, இருங்க, உங்களுக்குக் குடிக்க ஏதாவது வாங்கிட்டு வரேன் எனச் சொல்லிவிட்டு, மருத்துவமனையின்கேண்டீன் நோக்கி நகர்ந்தாள்.

சாப்பிடாமல் இருந்து தன் தந்தைக்கும் ஏதாவது நேர்ந்தால் அவளால் தாங்கிக் கொள்ளவே முடியாது. யோசிக்காமல் அவள் முடிவு செய்து வைத்திருந்த திட்டங்கள் அனைத்தும் அறிவீனத்தின் உச்சமாகத் தோன்றியது. அதைத் தடுத்த தமிழினியனின் மேல் நன்றியுணர்வு பெருகியது.

அவளுக்கு இப்போது வேறு பிரச்சனையொன்று கண் முன்னால் பூதாகரமாகஅச்சுறுத்திக் கொண்டிருந்தது. மருத்துவமனைக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தையெல்லாம் தன் தந்தையிடம் வாங்கிக் கட்டியிருந்தாள்.

ஏற்கனவே திருமணச் செலவுகள் வேறு. கையில் இருக்கும் பணம் இப்போது அன்னையின் சிகிச்சைக்குப் போதுமானதாக இருக்கும். ஆனால் மேற்கொண்டு ஆகும் செலவுகளுக்கு என்ன செய்வது என்ற யோசனை அவளை அரித்துக் கொண்டிருந்தது.

தமிழினியனின் குடும்பத்தாரிடம் அசையாச் சொத்துகள் நிறைய இருக்கிறது. ஆனால் பிரச்சனை என்னவென்றால் அதன் மேல் தொழில்முறை நண்பர் ஒருவர் வழக்குத் தொடர்ந்து அது நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. எதையும் விற்கவோ,

அடமானம் வைத்துக் கடன் வங்கவோ முடியாது.

பணத்தை எப்படிப் புரட்டுவது என்ற அவளது சிந்தனையைத் தடை செய்வதைப் போல் அவள் அலைபேசி சிணுங்கியது. புது எண்ணாக இருந்தது. அழைப்பை எடுத்துப் பேசியவளுக்குக்கை கால்கள் எல்லாம் வலுவிழந்து நடுங்க ஆரம்பித்தன.

அங்கே கேன்டீனில் போடப்பட்டிருந்தஇருக்கையில் சென்று அமர்ந்து கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். இது சோர்ந்து, பயந்து போய் அமரக் கூடிய நேரமல்ல. யோசித்து முடிவு செய்ய வேண்டிய நேரம்.

தன்னைச் சேகரித்துக் கொண்டவள் மீண்டும் அலைபேசியை எடுத்துச்சற்றுமுன்னர் தனக்கு அழைப்பு விடுத்திருந்தஎண்ணுக்கு அழுத்தினாள். இதற்குள் தைரியம்ஊறிவிட்டிருந்தது.

''உங்களைப் பார்த்துப் பேசணும்'' என நிவேதிகா கேட்டு இடத்தையும், நேரத்தையும் சொல்லிவிட்டு அழைப்பை வைத்தாள்.

தந்தை மற்றும் சதானந்தனுக்குச் சாப்பிட வாங்கிச் சென்றவள், ''தெரிஞ்சவங்ககிட்டபணத்துக்கு ஏற்பாடு செஞ்சுட்டேன். ரெண்டு பேரும் எதற்கும் கவலைப்படாதீங்க'' என அக்கறையுடன் சொன்னாள். பிற்காலத்தில் திருப்பிக் கொடுத்துவிடலாம் என இருவருக்கும் தைரியமளித்தாள்.

அடுத்த இரண்டு நாட்களில் அவள் அன்னை உடல்நலம் தேறி வீட்டுக்கு வந்துவிட்டார். ஒரு மாத மருத்துவமனை வாசத்துக்குப் பிறகு தமிழினியனும் இன்று நல்லபடியாக வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டான்.

இன்னும் சில நாட்களில் வேலைக்கும் சென்றுவிடுவான். அவன் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பிவிடும்.

இனி என்ன?பதில் தெரியவில்லை என்பது அத்தனை கடினமாகயிருந்தது.

நடந்தவைகளை நிவேதிகா தன் தந்தை, கேசவனிடம் சொல்லி முடிக்க, அவர் பெருமூச்சொன்றை உள்ளிழுத்து வெளியிட்டார்.

''நீ லவ் பண்ணறேன்னு சொல்லறப்போ சுத்தமா பிடிக்கலை. இப்போ எதுவுமே பிடிக்கலை?'' என அழுகையில் குலுங்கினார்.

அவள் தந்தையைச் சமாதானம் செய்ய விழையவில்லை. ''நீயே எல்லாத்தையும் கெடுத்து வச்சுட்ட'' என அவர் சொல்ல, அப்போதும் அவளிடத்தில் மௌனம்.

நடந்த அனைத்துக்கும் அவள் மட்டுமே காரணம். அது அவளறிந்த

இரகசியம்.

''காதலிக்கிறதுக்கு இருக்கிற தைரியம் அதை வீட்ல சொல்லறதுக்கும் இருக்கணும். நீ சொன்னப்போ நான் அப்படி நடந்துகிட்டதும் தப்பு. ஆனால் அந்தச் சமயத்துல, ஒரு சராசரி அப்பாவா என்னால என்ன செஞ்சிருக்க முடியும் சொல்லு?'' அவரும் மனவருத்ததைக் கொட்டினார்.

நிவேதிகா தன் காதலை முன்னரே சொல்லியிருக்கலாம் என்ற ஆதங்கம் அவர் பேச்சில் அப்பட்டமாக வெளிப்பட்டது. ஒத்துக் கொண்டிருப்பார் என்று சொல்ல முடியாது. ஆனால் முயற்சியாவது செய்திருக்கலாம் என இப்போது அவளுக்கும் தோன்றியது.

''திலீப் மாதிரி நீயும் போயிருந்தா அப்புறம் நானும் உன் அம்மாவும் எங்க வளர்ப்பு மேலே ஏதோ குறைன்னு வேதனையிலேயே போய்ச் சேர்ந்திருப்போம்.'' வேதனையில் வார்த்தைகள் தொடர்ந்து வெளிவந்தன.

தமிழினியன் சிறுபிள்ளைக்குச் சொல்வதைப் போல் அவளிடம் உதிர்த்த அதே வார்த்தைகள்.

''அப்பா... சாரிப்பா..'' அதற்குமேல் தொண்டைக் குழியிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. வலியொன்று குரல்வளையிலும், நெஞ்சிலும் குத்தீட்டியாய் இறங்கியது.

''நீ அவர்கிட்ட கேட்டதுக்காக மாப்பிள்ளை இப்பவும் உன்னை விக்ரமோட சேர்த்து வைக்க நினைக்கிறார் போல. என்ன செய்யணும்னு நீயே முடிவு பண்ணு...'' எனக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''அப்பா, காதல்னா ஒருத்தர் இன்னொருத்தரோட உணர்வுகளை மதிச்சு விட்டுக் கொடுக்கிறது என்கிறதை இனியன் எனக்கு நல்லாவே புரிய வச்சுட்டார்'' என்றாள்.

ஒரு தந்தையாக மகளின் மனம் புரிந்து போனது. ஆனாலும் இதைச் சரி செய்வதும் அவள் கைகளில் இருக்கிறது.

உன் நினைப்பை மாப்பிள்ளைக்குப் புரிய வைக்கறது உன் பொறுப்பு சன்னச் சிரிப்புடன் மகளின்தலையை வருடினார்.

இதுவரையில் தந்தையிடமிருந்து கிட்டாத ஒரு நெருக்கத்தையும், பிணைப்பையும் அந்நிமிடத்தில் மனதளவில் உணர்ந்தாள்.

''இல்லைப்பா.. அவரை எதுக்கும் கட்டாயப்படுத்தப் போறதில்லை. இனியன் சந்தோஷமா இருக்கணும்'' என்ற மகளின் தீர்மானமான பேச்சில் அர்த்தப் பார்வையை உதிர்த்தார் கேசவன்.

## 13

அடுத்தப் பத்து நாட்களும் எவ்வித ஏற்ற இறக்கங்களும் இல்லாமல் கழிய, தமிழினியன் வேலைக்குச் செல்ல ஆரம்பித்திருந்தான்.

வெகுநாட்கள் கழித்துச் சென்றதால் முடிக்கப்படாத பணிகள் மலைபோல் குவிந்திருந்தன. அனைத்தையும் உடனே செய்து முடிக்கும் வேகம் எழுந்தாலும் உடல் ஒத்துழைக்கவில்லை. விரைவில் சோர்ந்து போனான்.

அதனால் மாலையில் சீக்கிரமே வீட்டுக்கும் கிளம்பிவிட்டான். வீட்டினுள் நுழைகையில் உள்ளிருந்துகலகலவென்று சிரிப்புச் சத்தம் கேட்டது. அவன் தங்கை இப்படிச் சிரித்து எத்தனை நாட்களாகி விட்டன?


**கண்மணி**

கண்மணி தபாலில் பெற ஓராண்டு (உள்நாடு) சந்தா-ரூ.900 6 மாதம்-ரூ.450 மணியார்டர் மற்றும் காசோலை MURASU PUBLICATIONS என்ற பெயரில் அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி
**கண்மணி**
மாலைமுரசு பில்டிங்,
246, அண்ணா சாலை,
ஆயிரம் விளக்கு,
சென்னை-600 006.

சந்தா தொகையை NEFT/RTGS மூலம் செலுத்த:-
MURASU PUBLICATIONS
A/C NO. 6034172999
Indian Bank, Peters Road Branch
IFSC:IDIB000R047
நிர்வாகப்பிரிவு:
murasupublication@gmail.com
போன்: 044-28297225


உடன் சேர்ந்து சிரித்தது யாரென்று அவனுக்கு நன்றாகவே தெரியும். ஒருவித எதிர்ப்பார்ப்புடன் விழிகளை அவரசமாகப் படரவிட, அவளே தான்!பத்து நாட்கள் கழித்துப் பார்க்கிறான்.

தோன்றிய பரவசத்தை மறைத்தவன், முகத்தைக் கடுகடுவென்று வைத்தவாறு எதையும் கண்டு கொள்ளாது தனதறைக்குச் செல்ல மாடியை நோக்கி நகர்ந்தான்.

அவனைக் கண்டதும், ''அண்ணா, அண்ணி வந்திருக்காங்க. நீங்க பேசாமப் போனா எப்படி?'' எனத் தடுத்து நிறுத்தினாள் தர்ஷினி.

தெரியும்!தர்ஷினி இப்படிச்செல்வாள் என்று தெரியும். ஒருவித இதம் பரவ நின்று அவர்களைத்

திரும்பிப் பார்த்து அவளை விழிகளுள் நிரப்பிக் கொண்டான். நெஞ்சத்துத் தாகத்தையும் தணித்துக் கொண்டான்.

''இப்போ என்ன? ஆரத்தி எடுத்து வரவேற்கணுமா?'' என இதத்தைப் பதமாக மறைத்துக் கொண்டு எரிந்து விழுந்து வதம் செய்தான்.

பூகம்பமாய் வெளிவந்த வார்த்தைகளின் அதிர்வில் தன்னைப் போல் சோபாவில் இருந்து எழுந்துவிட்டாள் நிவேதிகா.

''ச்சே.. அசந்து போய் வீட்டுக்கு வந்தா நிம்மதியா இருக்க முடியுதா?'' மீண்டும் சுள்ளென்று வார்த்தைகளை எறிந்தான்.

''அண்ணா'' எனத் தர்ஷினி திகைத்துப் போய் நிற்க, பெற்றோர்கள் இருவரும், ''என்ன சத்தம்?'' என்றவாறே அங்கு வந்தனர்.

''அம்மா, நமக்கு நேரமே சரியில்லை'' என நிவேதிகாவைப் பார்வையால் சுட்டிக் காட்டியவன், ''இனிமேலே நீ இங்க வராம இருக்கிறது நல்லது'' என அமிலத்தில் தோய்த்த வார்த்தைகளை அவளை நோக்கி வீசினான்.

''தமிழ், என்ன பேசற?'' எனச் சதானந்தன் மகனைக் கண்டிக்க, ''தலையில அடிபட்டதுல ஏதாவது ஆகிடுச்சா?'' என அண்ணனை எதிர்த்தாள் ''தர்ஷினி''.

தர்ஷினி... என அவளை அமைதிப்படுத்திய நிவேதிகா, ''அவர்மேல தப்பில்லை. அவருக்கு எல்லாமே அதிர்ச்சியாயிருக்கும். அவர் சொல்லற மாதிரி எல்லாத்துக்கும் காரணம் நானோ என அவள் நிதானமாகச் சொல்ல,

''நீ இப்போ கிளம்பறியா?'' எனத் தமிழினியன் முகத்தைச் சுளித்தவாறே நின்று கொண்டிருந்தான்.

''வரேன்... ஐ ஆம் ரியலி சாரி'' என வந்த அழுகையை வாய்மூடி அடக்கியவாறே அங்கிருந்து கிளம்ப, ''வராம இருக்கிறதே நல்லது'' என விரட்டினான்.

''அப்பா, கல்யாணத்துக்குனு நாம்ம போட்ட நகையைத் திருப்பி வாங்கிடுங்க. அவங்களோடதையும் திருப்பிக் கொடுத்துடுங்க'' பிடிவாதமாக அவன் கூறவும், என்ன பேசுகிறாய் என அவனையே வெறித்துப் பார்த்தனர் குடும்பத்தினர்.

முன் எடுத்து வைத்த நிவேதிகாவின் கால்கள் அப்படியே சில கணங்கள் வேரோடிப் போயின.

தன் மகனா இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்

எனப்பார்வதிக்குமேநம்பமுடியவில்லை.

''தமிழ், இந்த விபத்துனால உன் உயிருக்கு ஏதாவது ஆபத்தா? அதான் இப்படி நடந்துக்கிறியா?'' என அவர் மருக, மொத்தக் குடும்பமும் உருகிப் போனது. அவனையும் சேர்த்தே!

அனைவரும் தமிழினியனின் அருகில் செல்ல, ''அத்தை, அவர் நல்லா ஆரோக்கியமா இருக்கார். அவர் கோபத்துக்கான காரணம் நான்.. தப்புப் பண்ணிட்டேன்...'' என நின்ற இடத்திலேயே தலையை மட்டும் திருப்பி, நிவேதிகா பதிலளித்தாள்.

''உன்னைப் போகச் சொல்லி ரொம்ப நேரமாச்சு. தப்பு யார் மேலன்னு நாங்க பார்த்துக்கிறோம். கிளம்பு...'' என இடையிட்டான் தமிழனியன்.

வாசல் கதவை நோக்கிக் கையை நீட்டி விரட்டியவனைத் தீர்க்கமாகப் பார்த்தவள், ''கிளம்பறேன்.. தேவையில்லாம டென்ஷன் ஆகாதீங்க. உங்க உடம்புக்கு ஆகாது'' என அதற்கு மேல் நிற்காமல் கிளம்பிவிட்டாள்.

''அண்ணா, உங்களுக்குள்ள என்ன பிரச்சனைன்னு தெரியாது, ஆனா நீங்க பண்ணறது பிடிக்கலை.உங்க ஹாஸ்பிடல் செலவுக்கு என்ன பண்ணறதுனு நாங்க திணறிட்டு இருந்தப்போ அண்ணி கஷ்டப்பட்டுப் பணம் புரட்டினாங்க தெரியுமா? நிவேதிகாவுக்கு ஆதரவாகக் கொடியைத் தூக்கினாள் தர்ஷினி.''

என்ன சொல்லற? எனத் தங்கையிடம் கேட்டாலும், பார்வை தந்தையின் மேலிருந்தது.

'ஆமாம்' என்பதாகத் தலையசைத்தவர், ''கோர்ட்ல கேஸ் போயிட்டிருந்தது. கையில அவ்வளவு பணமுமில்லை. வீட்டை விக்கலாம்னு இருந்தப்போ நிவி தெரிஞ்சவங்ககிட்ட பணத்தைப் புரட்டிக் கட்டினா'' என விளக்கமளித்தார் சதானந்தன்.

''ஏம்ப்பா என்கிட்டே சொல்லலை? ''என அவன் ஆதங்கப்பட'', உனக்குச் சரியானதும்பேசிக்கலாம்னு நிவி சொன்னாப்பா'' எனத் தந்தை சொல்வதைக் கேட்டவாறே மாடியேறிச் சென்றான்.

தனதறைக்குள் நுழைந்தவனை வரவேற்றது உடைந்து போயிருந்த அவன் மட்டும் தனித்திருந்த காபி கோப்பை. அவன் அவளுக்கு முழுவதுமாகக் கொடுத்தது. பாதி மட்டுமே திரும்பியிருந்தது. அவன் உயிரைப் போல!

'விதியே நம்மைப் பிரித்துவிட்டது' என ஒரு காகிதத்தில் எழுதி

அதனடியில் வைத்துவிட்டுப் போயிருந்தாள் நிவேதிகா.

★★★★★

நிவேதிகாவைத் தன் வீட்டிலிருந்து விரட்டியடித்துப்பத்து நாட்கள் முடிந்திருந்தன.

அன்றிலிருந்தே தமிழினியனின் நெஞ்சில் வெற்றிகரமாகஒரு வெற்றிடம்உருவாகிவிட்டதை உணர்ந்திருந்தான்.எதைக் கொண்டு நிரப்புவது என்று தெரியவில்லை.

அவளிடம் கோபக் கணைகளை வீசிவிட்டு நிம்மதியாகத் தன் வேலையைப் பார்த்துக் கொண்டும் போக முடியவில்லை. தவிப்புக் கூடியது. மனதின் முரண்பாட்டை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

அவனுக்கு எதற்கு இந்த பொல்லாத காதல் வந்து தொலைத்தது? அவள் தனக்கில்லை என்று தெரிந்த பின்பும் அவள் எப்படியும் போகட்டும் என்று அவனால் அன்றும்இருக்க முடியவில்லை. இன்றும் இருக்க முடியவில்லை. அவனது இயல்பான அக்கறை குணம் அப்படியிருக்க விடவில்லை.

அதனாலேயே அன்று விபத்திலிருந்து தன்னால் இயன்ற வரையில் போராடி அவளைக் காரிலிருந்துவெளியேற்றிவிட்டான். அதற்காக நன்றியுணர்வுடன் தன்னைத் தேடிக் கொண்டு அவள்வருவதையும் விரும்பவில்லை. அவளுக்கென்று ஒரு வாழ்க்கை காத்திருக்கிறது.

தன் பாதையிலிருந்து விலகினால் மட்டுமே அவள் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் பாதையில் பயணிப்பதைப் பற்றியே சிந்திப்பாள். தவறு செய்துவிட்டோம் என்ற குற்றவுணர்வில் அதைப் பற்றி யோசிக்கவே பயப்படுகிறாள்.

அதைத் தடுக்க வேண்டுமென்றே கோபத்தில் திட்டி அனுப்பி வைத்தான்.அவனது திட்டமெல்லாம் தவிடுபொடியாகிவிட்டது. முற்றிலும் புதிதான ஒரு பாதையில்பயணிக்கத் துணிந்துவிட்டாள். அவன் காதலுக்கு அர்த்தமில்லாமல் போனது என்றால் அவன் கோபத்துக்குமா அர்த்தமில்லை?'' விவாதத்துக்குத் தயாரானான்.

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால் அவளை நேரில் சந்தித்துப் பேசுவதே சிறந்தது என்றெண்ணிஅவளுக்கு அழைக்க, அழைப்பு எடுக்கப்படவில்லை. எத்தனையாவது அழைப்பு என்று கணக்கில்லை. தொடர்ந்து அழைத்தான்.

அவளை விரட்டியடித்தான். இல்லையென்று சொல்லவில்லை.

அதற்காக அழைப்பை எடுத்துப் பேச முடியாத அளவுக்குக் கோபமா என்று அவனுக்குச் சுசுறுசுறுவென்று எரிச்சல் சுரந்தது.

'முக்கியவிஷயம் பேசவேண்டும். அவசரம்!' குறுஞ்செய்தி ஒன்றைத் தட்டிவிட்டு நொடிக்கொருதரம் திரையைப் பார்க்க, அவள் அதைப் பார்த்ததற்கான அடையாளமே இல்லை.

அவள் பணிபுரியும் மருத்துவமனைக்குச் சென்று பார்க்கலாமா எனத்தோன்றிய எண்ணத்தையும்பணியிடத்தில் தொந்தரவு செய்ய வேண்டாம் எனஅழித்துவிட்டான்.

இப்படியே யோசித்துப் பைத்தியமாவதற்குப் பதிலாக மருத்துவமனை எண்ணுக்கு அழைத்துப் பார்க்கலாம் என அழைத்து விசாரிக்க, ''அவங்க மருத்துவ முகாமுக்கு விருதுநகர் பக்கம் போயிருக்காங்க'' என்ற தகவல் கிடைத்தது.

'பிளீஸ் கால் மீ. அவசரம்' அவளுக்கு மீண்டும் ஒரு குறுஞ்செய்தியைத் தட்டிவிட்டுப்பொறுமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் காத்திருந்தான். அவனை அதிகம் சோதிக்காமல் மறுநாளே அழைத்து ''உடம்புக்கு என்ன?'' என்று பதறினாள் நிவேதிகா.

யாரின் இடையூறும் இல்லாமல் இருக்கவே அவள் தன் சார்ஜரை வேண்டுமென்றே மறந்துவிட்டுச் சென்றிருந்தாள். வேலை விஷயம் மற்றும் பெற்றவர்களிடம் பேச உடனிருந்தவர்களின் அலைபேசியை உபயோகித்துக் கொண்டாள். அப்பொழுது தான் ஊர் திரும்பியிருந்தாள்.

உடம்புக்கு ஒன்றுமில்லை என்று உறுதிப்படுத்தியவன், அவள் ஊர் திரும்பியதை அறிந்து கொண்டு, ''உன்னை நேர்ல பார்க்கணும்'' என்றான்.

''நாளைக்கு வரேன் சற்று ஆழ்ந்த மௌனத்துக்குப் பிறகு பதிலளிக்க, இல்லை... இப்போவே என்றான் பிடிவாதமாக.

''இப்பவா? நேரமாகிடுச்சே தமிழ்'' என அவள் யோசனையுடன் இழுக்க, என் அவசரம் உனக்குப் புரியலையா? எங்க இருக்கிற ?இல்லை, நம்ம வீட்டுக்கு வா 'என அவன் படபடப்பைக் கைவிடவில்லை.

''இப்போ மட்டும் உங்க வீட்டுக்கு வரலாமா?'' அவளையும் மீறி கோபம் வெளிப்பட்டுவிட்டது.வீட்டை விட்டுப் போ என்று துரத்திவிட்டு இப்போது வா என்று சொன்னால்உடனே ஓடிவிடுவாளா

என்ன?

''ப்ச் வேதிகா, சாரி. நான் அப்படிப் பேசி இருக்கக் கூடாது. பிளீஸ்...வீட்ல யாருமில்ல.. தனியா பேசணும்...'' இறங்கி வந்து கெஞ்சினான்.

''இப்போ தான் கேம்ப்பிலிருந்து வந்தேன். டயர்ட்டா இருக்கு... அம்மா- அப்பாவும்கல்யாணத்துக்குப் போயிருக்காங்க...'' அவள் முடிக்கவில்லை, ''இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல அங்க இருப்பேன்'' என அறிவித்தான்.

''வேண்டாம். நானே.. நீங்க பத்திரம் என முடிக்கும் முன்னால் மீண்டும் இடையிட்டு, டாக்டர், எனக்கு நல்லா கார் ஓட்டத் தெரியும். நீங்க கண்டக்டர் வேலை பார்க்க வேண்டாம்'' என்றவன் சொன்னதை விடவும் பதினைந்து நிமிடங்கள் கழித்தே வந்தான்.

அவன் வந்த அரவம் கேட்டு வீட்டுக் கதவைத் திறந்தே வைத்திருந்தாள். அதுவரையில் அவன் பத்திரமாக வந்து சேர வேண்டும் என உள்ளூர தடதடத்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அவனை எப்போதும் பொத்திப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியுமா என்ற எண்ணமும் தோன்றி அவளை அமைதிப்படுத்தியது.

அவனைப் பார்த்ததுமே அவளையுமறியாமல் நெஞ்சுக்குள்ளிருந்து நிம்மதிப் பெருமூச்சொன்று வெளியேறியது.அவனுக்குத் தலையில் முடி கொஞ்சம் வளர்ந்திருந்தது. முகமும், உடலும் சற்று பூசினதைப் போலிருக்கப்பார்வதியின் கவனிப்பு என அவள் முகத்தில் சிறுமுறுவல் படர்ந்தது.

வீட்டினுள் நுழைந்தவாறே விழியசைத்து நோக்கியவனின் கண்களுக்கு அம்முறுவலே பட்டது.

வந்தவனை உபசரித்துத்தயாராக வைத்திருந்த அவனுக்குப் பிடித்தமான,'லெமன் டீ'யைக் கொடுக்க,இருக்கையில் அமர்ந்து அதை வாங்கி ஒரு வாய் உறிஞ்சினான்.

''விக்ரமுக்குக் கல்யாணம்'' கேள்வியா, தகவலா எனப் பிரித்தறியா வண்ணம் சொன்னவன் அவள் முகத்தை ஆராய்ச்சியுடன் ஏறிட,

''ம்ம்...தெரியும்.ரெண்டு வாரத்துல... நான் தான் பண்ணிக்கச் சொன்னேன்'' என்றாள் நிதானமாக. நின்று கொண்டே பேசினாள். அவன் அமரச் சொல்லியும் ஒரே இடத்தில் அமர்ந்து பயணம் செய்து வந்ததுஒரு மாதிரி இருக்கிறது என்று சொல்லிவிட்டாள்.

''நீ.. உன்.. காதல் என்னாச்சு?உங்ககல்யாணம்?'' திக்கித் திணறி

ஒருவாறு கேட்டு முடித்தான்.

''தெரிஞ்சு என்ன செய்யப் போறீங்க? முதல்ல உங்களுக்கு எதுக்குப் பதில் சொல்லணும்?'' பட்டென்று பொரிந்தாள்.

இதை அவன் எதிர்பார்க்கவில்லை போலும். அவளை ஆழ்ந்து நோக்கியவன், ''வேதிகா, உனக்கு என் மேலே இருக்கிறது காதலில்லை. வெறும் பரிதாபம். குற்றவுணர்வு. அதுக்குக் காதல்ன்னு முலாம் பூசிட்டு நம்ம ஒண்ணு சேர்ந்தாவாழ்க்கை இனிக்காது'' என அவளைச் சிறு குழந்தையாய்ப் பாவித்துப் பேசினான்.

''பரிதாபம், அக்கறையெல்லாம் இருந்தா உதவறதோட முடிஞ்சுப் போயிடும். காலம் முழுவதும் உங்களுக்கு ஃப்ரீ யா வைத்தியம் பார்ப்பேன் என்றாள் வெடுக்கென்று.

அவள் மனநிலை புரியாமலில்லை. அவளால் அவனுக்கு இப்படி ஆகிவிட்டது என்ற குற்றவுணர்வில் மருகி, தன்னை வதைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கும் நடந்த விபத்துக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என உணர்த்திவிட எண்ணியே அவள் வீடு வரையில் வந்திருந்தான்.

''ப்ச் வீணா விதண்டாவாதம் பண்ணாம விக்ரம்கிட்ட பேசு'' என அவன் அதட்ட, 'மாட்டேன்'எனத் தலையை இடமும் வலமுமாக ஆட்டி மறுத்தாள்.

''புரிஞ்சுக்கவே மாட்டியா?'' ஆயாசத்துடன் கேட்டவனின் கேள்விக்கு, ''காதல்னா என்னனு புரிஞ்சுக்கிட்டேன்இனியன்'' என்றழைத்து அவளையுமறியாமல் தித்திப்பை அவன் நெஞ்சில் வார்த்தாள்.

''அன்பு, பாசம், நேசம், நேயம், அதீத அக்கறைஎல்லாம் சேர்ந்தது காதல். நான் பண்ண நினைச்சது சுயநலத்தின் உச்சம்'' தொடர்ந்து விளக்கினாள்.

''நீதப்பு செஞ்சிருக்கன்னு பீல் பண்ணற. சீக்கிரம் சரியாயிடுவ'' என அவன் எடுத்துரைக்க, ''ஓகே. சீக்கிரம் நீங்க வேற ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோங்க. ஆல் த பெஸ்ட்'' என்றாள் தடாலடியாக.

''என்னால உன் வாழ்க்கை இப்படிப் பாதியில இருக்கு. அதை விட்டுட்டு எப்படி...?'' என அவன் முடிக்கவில்லை,

''அப்போ என்னால இப்படி ஆன உங்க வாழ்க்கையைஅந்தரத்துல விட்டுட்டு என் சுகம், என் வாழ்க்கைன்னு போகணுமா? என்ன

நியாயம்?'' என வாதாடினாள்.

பதில் சொல்ல வாயைத் திறந்துவிட்டு மூடிக் கொண்டான். இவள் ஒரு முடிவுடன் இருக்கிறாள். யோசித்துப் பேச வேண்டும். இல்லையென்றால் சதுரங்கத்தில் காய் நகர்த்துவதைப் போல் சாமார்த்தியமாகப் பேசிச் சாதித்துக் கொள்வாள்.

மெதுவாக டீயைக் குடித்துமுடித்துவிட்டு, ''ஆரம்பத்துல இருந்து தப்பாவே முடிவெடுப்பியா?'' என அமைதியாக வினவினான்.

''ஆரம்பத்துல தப்பா இருக்கலாம். இப்போ சரியா முடிவெடுத்திருக்கிறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்க இருந்த நீங்க மனசை மாத்திக்கலை? அதுமாதிரி விக்ரம் மனசும்மாறிடும்'' அவள் வார்த்தைகளைப் தேர்ந்தெடுத்துத் தெளிவாக உரைக்க,

''நான் எங்கே மாறினேன்?'' என அவசரமாகத் தெறித்து விழுந்தன அவன் வார்த்தைகள். அதைப் பொறுக்கி எடுக்கும் வழி தெரியாமல் சிலையாகிப் போனான்.

''அப்போ மாறலையா?'' எனக் கையைக் கட்டிக் கொண்டு 'அகப்பட்டுக் கொண்டாய்' என்பதைப் போல்அவனை ஊடுருவினாள்.நெஞ்சின் ஆழத்தில் இருப்பதையெல்லாம் படித்துவிடும் கூர்மையான விழிகளைச் சந்திக்கத் திராணியற்று அவன் கருமணிகள் தாழ்ந்து தரையை வெறித்தன.

கலைந்து போனாலும் வண்ணங்களின் குவியலாக நெஞ்சமெங்கிலும் அவளல்லவா கொட்டியும், ஒட்டியும் கிடக்கிறாள். அவளே வாழ்க்கைத் துணை என மொத்த நேசத்தையும் அவளுக்கே பட்டா போட்டுவிட்டானே.உயிரையும் கொடுக்க நினைத்தானே.

நிவேதிகாவை தன் பெற்றோர்கள் கை காட்டினார்கள் என்றாலும் பார்த்த மாத்திரத்தில் கனவின் நாயகியே கண் முன்னால் உயிர் கொண்டு வந்ததைப் போலுணர்ந்தானோ? தெரியவில்லை. அவனின் இரகசிய கனவுகளுக்கு விசேஷ உணர்வினைத் தந்துவிட்டாளோ? புரியவில்லை.

தடைகளற்று மளமளவென்று அவன் நெஞ்சமதில் படர்ந்துவிட்டாள். இத்தனைக்கும் அவளுடன் தனிமையில் பேசுகையில் கடுகளவும் அத்துமீறிப் பேசியதில்லை.

ஆனாலும் அவளுடன் வாழ்க்கையின் எல்லை வரையிலும் செல்லக் கூடாத இடங்களுக்கெல்லாம் கைகோர்த்து, விழி

சேர்த்துக்கனவுலகில் சஞ்சரித்துவிட்டானே.

'வேறொருவரைக் காதலிக்கிறேன்' ஒற்றை வரியில் கற்றையாய்க் கட்டிக் வைத்திருந்த நேசத்தை மொத்தமாய் அபகரித்துவிட்டாள்.

வலுக்கட்டாயமாக இறங்க அடம்பிடிப்பவளை இறக்கிவிட முடியாமலும், தன் உடைமை என்று சுமக்க முடியாமலும் திணறினான். இருந்தும்தன் எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றத்தைப் பரிச ளித்துவிட்டாள் என்ற ஒரே காரணத்தால் அவளுக்கு வலியைத் தர வேண்டுமென ஒருபோதும் நினைத்தானில்லை.

அவள் சந்தோஷமாக இருந்தால் போதும்என்றே உதவுவதாக வாக்களித்தான். ஆனால் விபத்து மொத்தத்தையும் புரட்டிப் போட்டுவிட்டது.

அருகிலிருந்து அவனை அக்கறையுடன் பார்த்துக் கொண்டவளின் கவனிப்பில் அடி நெஞ்சில் புதைந்திருந்தநுண்ணுணர்வுகளுக்குச் சுவாசமேற்றிஉயிர்ப்பாதை அமைத்துவிட்டாள்.

உடலும் உள்ளமும் பலகீனமாக இருக்கையில் அவனுமே அதை உள்வாங்கி அதில் பயணிக்க ஆரம்பித்துவிட்டான். அவனுள் அனுதினமும்ஏக்கத்தை விதைத்துவிட்டுச் சென்றிருக்கிறாள் எனத் தாமதமாகப் புரிய திகைத்துப் போனான்.

நிதர்சனம் மண்டையில் நச்சென்று அடித்துவிட, அவளை எட்டி நிற்கச் சொல்லி அடிக்கடி எச்சரித்தான்.

தன் சிந்தனையில் உழன்று கொண்டிருக்க, ''மனசுக்கு நெருக்கமா நினைச்சவங்களே என்னைப் புரிஞ்சுக்காதப்போஎங்கேயோ இருந்து வந்தநீங்க அந்தப் புரிதலைத்தந்தீங்க இனியன்'' எனத்தமிழினியனைச் சிந்தனைச் சுழலிலிருந்து மீட்டெடுத்தாள்.

உண்மை!காதலிக்கிறேன் என்றதும் அவளுக்குப் புரிய வைக்க முயற்சிக்காமல், 'இதுவே முடிவு' எனத் தந்தை அவள் மேல் பாரத்தை ஏற்றினார். ஆறுதல் கிடைக்கும் என்று விக்கிரமிடம் சென்றால் அவனோ இவளைத் தேற்றாமல்அவனது திட்டங்களுக்கு மகுடிக்கு மயங்கும் பாம்பாய் ஆடச் சொன்னான்.

அவளைப் புரிந்து கொண்டது தமிழினியன் ஒருவனே.படிப்பினால் மட்டுமே உலக அனுபவம் கிட்டிவிடாது என்பதை அவளுக்கு உணர்த்திவிட்டான். அவள் எதிர்பார்த்த ஆறுதலையும், அனுச ரணையையும் அவளுக்களித்தான்.

அவனுக்குக் காலம் முழுவதும் நன்றிக்கடன் பட்டிருப்பதாக

நினைத்துக் கொண்டிருக்கையில் அந்த விபத்து நடந்து மொத்த உணர்வுகளையும் புரட்டிப் போட்டுவிட்டது. விபத்து உடலுக்கு மட்டுமல்ல. அவள்நெஞ்சத்துக்குமே. இப்போது தேறித் தெளிவாகிவிட்டாள்.

வாயைத் திறக்கவே பயமாக இருந்தது தமிழினியனுக்கு. எதிர்காலமே இல்லாத இந்தப் பேச்செதற்கு? ஆனாலும் பேசித் தானே ஆக வேண்டும்.

''விக்ரம் போன் செஞ்சிருந்தார்''அவள் அதிர்வாள் என்றெண்ணிக் கூர்மையாகப் பார்க்க, ''தெரியும்'' என்று சொல்லிக்கூர்மையான ஆயுதத்தை அவனை நோக்கி வீசினாள்.

'எப்படி?'விடைகாணும் அவசரத்தில் அவள் விழிகளுக்குள் துழாவினான்.

''விக்ரமோட அப்பா போன் பண்ணியிருந்தார். சிகிச்சைக்குத் தந்த பணத்தையெல்லாம் நீங்க திருப்பிக் கொடுத்துட்டீங்களாமே. சொன்னார்'' என்றதும்,

உன் காதலை அடகு வச்சு என்னை மீட்டிருக்க வேண்டாம்னு தோணிச்சு என்றான் சுள்ளென்று.

## 14

''**கா**தலை அடகு வச்சிட்டதா நினைக்கறீங்களா இனியன்?'' ஊடுருவிய விழிகளுக்குள் சிக்காமல், ''விதண்டாவாதம் பண்ணிட்டிருக்க நேரமில்லை'' என்றான் பார்வையை விலக்கியவாறு.

''அன்பையும், பாசத்தையும் மீட்டுக்கிட்டேன்'' என அவள் பிசிறில்லாமல் உரைக்க, ''ப்ச் விக்ரம்கிட்டே பேசுப்ளீஸ்'' என வற்புறுத்தினான்.

''ஓஹ்... எல்லோரும் என்னைத் திட்டணும். நீங்க தியாகிப் பட்டம் வாங்கிப் பறக்கவிடணுமில்ல?'' எனக் கேட்டு முறைத்தவளிடம்,

''யாரும் உன்னைத்தப்பா பேசிடக் கூடாதுன்னு என்னைக் கல்யாணம் பண்ணிக்க நினைக்கறியா?'' என இடக்காகக் கேட்டான்.

இரு கைகளையும் முகத்தில் வைத்து அழுந்த தேய்த்தவள் மீண்டும் கையைக் கட்டிக் கொண்டு, அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உங்களுக்குப் புரியலையா இனியன்? சரி விடுங்க.. இப்போ கிளம்புங்க'' முதல்ல மெதுவாகச் சொன்னாலும் அவள் கோபம்

புரிய அவனின் வேகம் தடைப்பட்டது.

'ஏன் இப்படி?' என்பதைப் போல் பரிதாபமாகப் பார்த்தான். இருவரின் விழிகளும் ஆழமாய்க் கலந்து மீண்டன.

அவள் பேசப் போவதில்லை எனப் புரிந்தது. ''அதில்ல... விக்ரம்... என்ன சொல்லிச் சமாதானப்படுத்துவது'' எனத் தடுமாறினான்.

''புரிஞ்சது... ஏற்கனவே ஒருத்தனைக் காதலிச்சுக்கைவிட்டுட்டு வந்தவளென்னையும் விட்டுப்போயிடுவாளோன்னு யோசிக்கறீங்களா?'' எனத் தேளாய்க் கொட்டினாள்.

''வேதிகா, என்ன பேச்சு இது?'' பட்டென்று எழுந்து அவளை நெருங்கியிருந்தான்.

அவள் மனதை அறிந்திருந்தாலும் முதல் முறையாக வாய்விட்டு வெளிப்படுத்தியதும் தென்றல் தீண்டியதைப் போல் உணர்ந்தான். இத்தனை நாட்கள் அனுபவித்த வலிகளுக்கெல்லாம் வடிகாலானது செவி தீண்டிய சொற்கள்.

''கவலைப்படாதீங்க.உங்ககிட்ட நிறையப் பணமிருக்கிற வரைக்கும் எங்கேயும் போக மாட்டேன்' ' என்றவளின் கண்களில் முத்துக்கள் போல் நீர் கோர்த்து, இமையின் விளிம்பில் துருத்திக் கொண்டிருந்தன.

தயக்கத்தை உதறிவிட்டு, குளிர்ந்திருந்த அவள் கைகளை எடுத்துப்பொக்கிஷமாய்த் தன் கைகளுக்குள்பாதுகாத்துக் கொண்டான். இனிமேல் உன்னை விடப் போவதில்லை என்பதைப்பற்றிக் கொண்டதில் பறைசாற்றிவிட்டானோ?

கல்பாலத்தின் மேல் செல்லும் ரயிலைப் போல் உள்ளம் தடதடத்தது! இணக்கத்தில் கதகதக்கவும் செய்தது!இருவருக்குமே!

''சாரி வேதிகா.. என்மேலே இருக்கிற நல்லெண்ணம் போனா விக்ரம் பத்தி யோசிப்பேன்னு நினைச்சேன்'' என்றான்.

அன்றுஅவன்மருத்துவமனைவாசத்துக்குப்பிறகுவீடுதிரும்பியதும் விக்ரம் அவனை அழைத்து நிவேதிகாவின் மனநிலையையும், இனிமேல் தன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் எனக் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள் என்பதையும் ஆற்றாமையுடன் கூறியிருந்தான்.

அதனால் தமிழினியனே அவளுக்கு உறைப்பது போல் எடுத்துரைத்து அவர்களைச் சேர்த்து வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். ஆகையினால் தமிழினியன் கடுமையான

முகத்தைக் காட்ட வேண்டியதாகிவிட்டது.

''நான் விக்ரமை வெறுக்கலை. அவர்போற வழி வேற... அதுல நான் பயணிக்க நினைச்சதே தப்பு. எழுத்தாளர் ஜெயகாந்தன் என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? காதல் தோன்றுவதற்கும் மறைவதற்கும் அற்பமான காரணங்கள் போதும். ஆனால் அந்தக் காதல் மேன்மை அடைவதற்கும் மலிந்து'' போவதற்கும் காரணம் சம்மந்தப்பட்டவங்களைச் சார்ந்தது.

தாகத்துக்குத் தண்ணீர் மாதிரி உங்க காதலும்... அன்பும். ஆனால் எங்களுக்குள்ள இருந்தது, பாலும் காபித்தூளும் கலக்கிக் குடிக்கிற மாதிரிவலிமையான கருத்தை எளிமையாக விளக்கிவிட்டாள்.

''இன்னொரு ஏமாற்றத்தைத் தாங்கிக்கிற சக்தி எனக்கில்லை...'' கரகரத்து ஒலித்தவனின் குரலில் இவனுக்காக எதையும் இழக்கலாம் என மெழுகாய்உருகினாள்.

சுயநலமாகச்சிந்திக்கும் இவ்வுலகில்...அவளையும் சேர்த்தே தான்.. சுயநலமில்லாத அவனை எந்தப் புள்ளியில் பிடிக்க ஆரம்பித்தது என்று தெரியவில்லை. தன் வீட்டுப் பெண் என்றில்லாமல் அனைத்துப்பெண்களையும் மதிப்பவனைப்போற்றாமல் இருக்க முடியவில்லை.

எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல்தனக்கு உதவ முன்வந்ததே வாழ்க்கையின் இறுதி வரையிலும் புரிதலுடன் இருப்பான் என உணர்ந்து கொள்ளப் போதுமானதாயிருந்தது.

என்றைக்குத் தன் உயிரைத் துச்சமென மதித்துக் காப்பாற்றினானோ அப்பொழுதே அவள் சிந்தையில் அவன் நலனைத் தவிர வேறு எதுவுமிருக்கவில்லை. தாய் தந்தையிடமிருந்து கிடைக்கின்ற அதேநிபந்தனையற்ற அன்பை அன்று அவள் உளமாற உணர்ந்தாள்.

சின்னதில் இருந்தே மத்தவங்க சொன்னதைக் கேட்டு நடந்துக்குவேன். அதனால் விக்ரம் சொன்னதுக்கு எல்லாம் தலையாட்டினேன். ஆனால் தனித்துச் செயல்படற அந்தத் தைரியத்தை நீங்க ஹாஸ்பிடல்ல இருந்தப்போ வளர்த்துவிட்டீங்க இனியன். நான் நானா இருக்கிறேன்னு அப்போ தான் புரிஞ்சது.

அதனாலதான்தர்ஷினியைத் தொல்லை செஞ்சவனையும் என்னால தட்டிக் கேட்க முடிஞ்சது. எனக்கு என்ன வேணும் என்கிறதையும் தைரியமா இப்போ உங்ககிட்ட சொல்லவும் முடியுது. என் இயல்பை இயல்பா வெளிப்படுத்த முடிஞ்சது உங்களால மட்டுமே என அவள்

மனதில் இருப்பதை எல்லாம் கொட்ட ஆரம்பித்தாள்.

''நாங்க காதலிச்சோம். சேர்ந்தா சந்தோஷமா இருப்போம்னு நினைச்சோம். ஆனா காதல்ல சேர்ந்ததும் 'ஹேப்பிலி எவர் ஆஃப்டர்'ன்னு வாழ்க்கை அத்தோடு முடிஞ்சுப் போறதில்லை. எங்க ரெண்டு பேரோட சந்தோஷமும் முடிஞ்சு போயிருக்கும்னு புரிஞ்சிடுச்சு''

என்ன சொல்ல வருகிறாள் என அவள் விழிகளையே இமைக்காது பார்த்திருக்க, ''வாழ்க்கையில நேசத்தை விட அந்த நேசத்தோடு வர்ற கம்பாட்டிபிலிட்டி, அதாவது ஒருத்தருக்கு ஒருத்தர் இணக்கமா இருக்கிறது ரொம்ப முக்கியம் இனியன்'' என ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாக உச்சரித்தாள்.

உண்மை! காதல் ஈர்ப்பினால் தோன்றலாம். ஆனால் பொருந்தக்கூடிய தன்மையென்பது வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். அது இல்லையென்றால் காதலும் ஒருகட்டத்தில் அலுத்துப் போய்விடும். அதன்பின்னர் வாழ்க்கை ரசிக்காது.

''இனியன்,நம்ம போய்ச் சேருகிற இடம் முக்கியமாயிருந்தாலும் யாரோட போய்ச் சேருகிறோங்கிறது அதைவிடவும் முக்கியம். உங்க நிபந்தனையற்ற அன்பு எனக்குக்கிடைக்குமா?வாழ்க்கையின் எல்லை வரைக்கும் என்னோட வருவீங்களா?'' கேவலுடன் அவன் மார்பில் சரணடைந்தாள்.

தன்னை வெளிப்படுத்தியதில்,'அப்பாடா' என்ற உணர்வு அவனுள் தோன்றுவதை மறுப்பதற்கில்லை. ஒட்டிக் கொண்டிருந்த தயக்கதையும் மறப்பதற்கில்லை.

''நீங்க என்ன நினைச்சுக்கிட்டாலும் பரவாயில்லை. உங்கள் அன்புப் புயலில் விரும்பியே சிக்கிக்கிட்டேன்.மீளப் பிடிக்கல. விக்ரமோட என் அத்தியாத்துக்கு ஒரு முடிவுரையை எப்போவே எழுதிட்டேன்'' அவன் தயக்கத்தை இறக்குவதற்கு உதவினாள்.

''விக்ரம் சீக்கிரம் சரியாகிடுவார். ஆனால் ஏற்பட்ட காயம் உங்க மனசுல வடுவாத்தங்கிடும். அதுகூடாது.மனஉணர்வுகளையும், மனித உறவுகளையும் மதிக்கிற உங்க நேசம் உயிர் தரும் பந்தம் மட்டுமல்ல உறவுகளையும் தரும் சொந்தம்.அதை அநாதையாக்கவிரும்பலை.

''என்னையுமறியாம உன் மேல நிறைய அன்பு வச்சுட்டேன் வேதிகா

சாரி.. உங்களை ரொம்ப ஹர்ட் பண்ணிட்டேன் என்றவளை

இப்போது அணைத்துக் கொள்வதில் அவனுக்குத் தயக்கமுமில்லை.''

சாரி வேதிகா. உன்னைப் புரிஞ்சுக்காம...அவன் அணைப்பின் இறுக்கம் கூட, அந்தப் பிணைப்பில்அவளது வலிகளனைத்தும் இணைப்பிலிருந்து துண்டிக்கப்பட்டன.அவளுள் பூரணஅமைதி நிலவியது.

விக்ரமோட பேச்சுல அப்படி நடந்துக்கிட்டீங்க. நீங்க என்னை ஏத்துக்காமப் போனாலும் எந்த ஜென்மத்திலும் நாங்க ஒண்ணு சேர்ந்திருக்கவே முடியாது.

அவளைத்தள்ளி நிறுத்தி முகத்தை ஊடுருவ, நம்ம விபத்துக்கப்புறம் ஒருவித மனக்குழப்பத்துல இருந்தேன். அப்போ விக்ரமை பார்க்கறதைக் கூட உங்களுக்குச் செய்யற துரோகமா நினைச்சேன் எனச் சொன்னவளை மீண்டும் தனக்குள் புதைத்துக் கொண்டான்.

காதலுக்காக நிச்சயத்திருந்த திருமணத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் வேறொரு முடிவை எடுக்க நினைத்திருந்தவள்,தனக்கு ஒன்று என்றதும் அப்படியே நேர்மாறாக யோசித்திருக்கிறாளே. இது அன்பில்லாமல் என்னவாம்?

அவள் நினைத்திருந்தால்அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எளிதாகத்தப்பித்திருக்கலாம். செய்யவில்லை.அவளை இன்னுமே பிடித்துப் போனது.

நிமிடங்கள் மொழியின்றிக்கழிந்தன. நடந்த விபத்துத் திட்டமிட்டசதி இனியன்

என்னை மிரட்ட நினைச்சு விக்ரமோட அப்பா கார் பிரேக்கைக் கட் பண்ணியிருக்கிறார் மார்போடு ரகசியம் பேசியவளின் பேச்சில் அசையாதுஅதிர்ச்சியில் செயலிழந்து போனான்.

ஆம்! விக்ரம்-நிவேதிகாவின் இரகசியத் திட்டம் பற்றி அறிந்து கொண்டவர் தன் மகனை விட்டுவிடுமாறு நிவேதிகாவை மிரட்ட எண்ணி இரண்டு பேரை ஏவிவிட்டார். அவர்களும் நிவேதிகாவைத் தொடர்ந்து வந்தனர். அன்று துரதிர்ஷ்டவசமாகத்தமிழினியனும் மாட்டிக் கொண்டான். அந்த அடியாட்களுக்கு அவன் யாரென்று தெரியாது.

அவர்களின் இலக்கு நிவேதிகா. அன்று அவர்கள் உணவகத்துக்குள் சென்றதும் கார்'பிரேக்கை'கத்தரித்துவிட்டுக்காத்திருந்தனர்.

அன்று உணவகத்திலிருந்து வெளியில் வந்த பொழுது, 'கார் விழாம தாங்கிப் பிடிச்சிட்டிருந்ததுக்குத் தேங்க்ஸ் பாஸ்' எனக்கிண்டலடித்தது ஞாபகத்தில் நிழலாடியது.

இவர்கள் விபத்தில்சிக்கிக் கொண்டதும் திருப்தியுடன் விக்ரமின் தந்தையிடம் தகவலைப் பரிமாறினார்கள். விபத்தில் அவளுக்குப் பெரிதாக அடியில்லை என்றதும் சில நாட்களில் அவரே நிவேதிகாவை அழைத்து, இனியாவது விக்ரமை விட்டு ஒதுங்கி இருக்குமாறு மிரட்டினார்.

அச்சமயத்தில் தன் அன்னையை மருத்துவமனையில் சேர்த்திருந்தாள். பணப்பிரச்சனை பூதாகரமாக அச்சுறுத்திக் கொண்டிருந்த நேரமது.

தமிழினியனின் நிலைக்குக் காரணம் அவளென உழப்பிக் கொண்டிருந்தவளுக்கு மொத்த நாசத்துக்கும் காரணம்அவளே என்றறிய நேர்ந்ததும் கட்டுக்கடங்காமல் ஆத்திரம் பொங்கியது.

வெறுத்தாள்! தன்னையே வெறுத்தாள்! தன் காதலையும் வெறுத்தாள்! பின்னே அவளால் சம்மந்தமே இல்லாத தமிழினியன் துன்புறுவதைக்கண்கொண்டு பார்க்க முடியவில்லை. அவன் மட்டுமா? மொத்தக் குடும்பமும் அல்லல்படுகிறதே.

தமிழினியனைச்சந்திக்காமல் இருந்திருந்தால் சிந்திக்காமல்அப்போதேவுரசுத்தனமாக எதையாவது செய்து வைத்திருப்பாள். அது அனைவருக்கும் மேலும் தலைவலியையே இழுத்து வைத்திருக்கும். ஆனால் அவனைச் சந்தித்துவிட்டாளே. அதன் காரணமாக பகுத்தறிந்து பார்க்கும் நிதானம் அவளுள் பிறந்திருந்தது.

விக்ரமின் தந்தையைப் பற்றிக்காவல்துறையினரிடம் புகார்செய்தால் அவர் எளிதாகத் தப்பிவிடுவார். அதுவும் என்னவென்று புகார் கொடுப்பாள்? இவர் மகனைக் காதலித்ததால் இப்படிச் செய்துவிட்டார் என்றா?

ஏற்கனவே தனக்கு விக்ரமின் மேலிருந்த காதல் கற்பூரமாய் எங்கோ கரைந்து போயிருந்தது. அதைத் தேடி அலையகூடத் தோன்றவில்லை. இதில் அவள் வாயாலேயே காதல் என்று சொல்ல வேண்டுமா?

அதுமட்டுமல்லாமல் அப்படிச் செய்தால் ஒருவருக்கும் எந்தப் பிரியோஜனமுமில்லை. சம்மந்தப்பட்ட அனைவருக்கும்மனவருத்தமே மிஞ்சும்.தமிழினியனை மீட்டுக் கொடுக்குமா?

இதற்கொரு முடிவு கட்ட வேண்டும் எனச் சற்றுநேரம் சிந்தித்து விக்ரமின் தந்தையை நேரில் சந்தித்துப் பேசுவது என்ற முடிவை

எடுத்தாள்.

நேரில் பேச வேண்டும் என்றதும் அவரும் உடனே ஒப்புக் கொண்டார். மகன் வழியிலிருந்து இவள் ஒழிந்தால் போதும். பிறகு தன் பார்ட்னரின் மகளுக்குப் பேசி திருமணம் செய்துவிடலாம் எனக் காத்திருந்தார்.

அவரைச் சந்திக்க நேரில் சென்றவளிடம், ''முன்னாடியே போயிருந்தா உனக்கு இவ்வளவு சிரமமிருந்திருக்காது.சொல்லு, எவ்வளவு பணம் வேணும்?'' எனத் தெனாவெட்டாகக் கேட்டார்.

''கண்டிப்பா பணம் வேணும். ஆனா என் காதலுக்கு விலையா இல்லை. நீங்க செஞ்ச தப்புக்குத் தண்டனையா நீங்களே இனியனோட சிகிச்சைக்கான பணத்தைத் தரணும்''என்றாள்.

கேள்வியுடன் புருவம் சுருக்கிப் பார்க்க, ''உங்க மேலே புகார் செஞ்சு எதுவும் ஆகாது எனத் தெரியும். செஞ்ச தப்புக்குப் பிராயச்சித்தம் செய்ய ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு'' என்றாள் தெளிவாக.

கத்துவாள்; ஆர்ப்பாட்டம் செய்வாள் என எதிர்பார்த்து வந்தவருக்கு அவள் வேறு விதமாக வினையாற்றியதும் அவருக்குப் பேச்செழவில்லை. கூடுதலாக அவளுக்கும் அதே மருத்துவமனையில் வேலை வாங்கித் தர வேண்டும் எனக் கேட்டாள்.

தமிழினியனைஎத்தனை நாட்கள் அங்கே சிகிச்சையில் வைத்திருப்பார்களோ தெரியாது.அவள் உடனிருந்து கவனித்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்றே அப்படிக் கேட்டாள். அதுவுமில்லாமல் விக்ரமின் நண்பனின் மருத்துவனையில் இதற்குமேல் வேலை செய்வதும்உசிதமில்லை.

யோசனையில் இருந்தவரை, ஓர் உயிரைக் காப்பாத்த டாக்டரா எவ்வளவு போராடறோம்னு உங்களுக்குப் புரியாது.ரொம்ப ஈஸியா இப்படிப் பண்ணிட்டீங்க. உயிரைச்சீப்பா மதிக்கிற உங்க குடும்பத்துக்கும் எனக்கும் கண்டிப்பா ஒத்து வராது. இனிமேல் நீங்களோ, இல்லை, உங்க மகனோ எப்பவும் கமா போட நினைக்காதீங்க எனச் சொல்லி அவரை வியப்பில் ஆழ்த்தினாள்.

விக்ரம் மேலிருந்தகாதலையே காணவில்லை. உள்ளம் மரத்துப் போயிருந்தது. அதில் இவர் வேறு தொடர்ந்து பல ஆணிகளை மொத்தமாக அதன் மேலேயே இறக்கிவிட்டார். இதற்கு மேல் இவரே வந்து என் மகனைத் திருமணம் செய்து கொள் என்று கேட்டாலும் அவளால் கண்டிப்பாக ஒத்துக் கொள்ள முடியாது.

பிற்காலத்தில் எல்லாம் சரியாகிவிடும் என்ற எதிர்பார்ப்பில் விக்ரம் சொன்னதற்கெல்லாம் தலையாட்டியிருந்தாள். இப்போது யோசித்துப் பார்த்தால் எதுவும் சரியாகியிருக்காது எனத் தெளிவானது.

எதார்த்தத்துடன் வாழப் பழகியிருப்பாள். அவ்வளவே. அதில் கண்டிப்பாக உயிர்ப்பு இருந்திருக்காது. நல்லவேளை அப்படி ஒரு வாழ்க்கையை அவள் தேர்ந்தெடுக்கவில்லை. ஏற்கனவே அவள் மனம் முடிவு செய்திருந்ததற்கு இவர் மிகப்பெரிய முற்றுப்புள்ளியை வைத்துவிட்டார்.

தமிழினியன் சொன்னதைப் போல்காதலிக்க இரண்டு பேர் இருந்தால் போதும். ஆனால்வாழ்வதற்கு மத்த உறவுகளும் முக்கியம் என்பதை மனப்பூர்வமாகப் புரிந்து கொண்ட தருணமது.

காதல்னால மகனோட வாழ்க்கைக்கெடும்னு நீங்க தவிச்ச அந்த வேதனையைத் துடைச்சுட்டேன். ஆனா தமிழோடஅப்பா படற வலியையும், வேதனையையும்உங்களால துடைக்க முடியுமா? கண்டிப்பா முடியாது. அதனால் செஞ்ச தப்பையாவது சரி செய்யுங்க பொறுக்கி எடுத்த வார்த்தைகளால் உரைத்தாள்.

'இவளை ஏன்வேண்டாம்எனச் சொன்னோம்?' திடுமெனத் தோன்றியது அவருக்கு. அந்தஸ்து மோகம் பிடித்து ஆட்டுகிறதே. இனி எதையும் திருப்பிப் போட்டு செய்வதற்கில்லை என்றும் புரிந்து போனது அவருக்கு.

பெருமூச்சொன்றை வெளியிட்டபடியே அங்கிருந்து வெளியேறினார். கேட்டுக் கொண்டதைப் போலவே தமிழினியனின் மருத்துவச் செலவுக்குப் பணம் கட்டினார். அதே மருத்துவமனையில் அவளுக்கு வேலைக்கும் சிபாரிசு செய்தார்.

நடந்ததைச் சொல்லி முடித்த நிவேதிகா, நான் கேம்ப் போறதுக்கு முன்னாடி விக்ரமோட அப்பாவுக்கு ஸ்ட்ரோக் வந்து எங்க ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டு வந்தாங்கஇனியன். நானும் கூட அட்டென்ட் பண்ணினேன்.

எதுவும் செய்ய முடியாத முடக்கப்பட்ட நிலையில அவர் சிந்தின கண்ணீர் எல்லாத்துக்கும் பதில் சொல்லிடுச்சு.என்கிட்டேமன்னிப்பும் கேட்டார். மன்னிச்சு மறந்துட்டேன்.

அவருக்கு இப்போ நான் விக்ரமை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம் எனத் தெரியும். ஆனா எனக்கு இஷ்டமில்லை. எனக்காக உயிரைத் தர துணிஞ்ச நீங்கபோதும். வாழ்க்கை முழுவதும்'' என

அவனைத் தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

தமிழினியனுக்கும் இவ்விஷயம் தெரியும். அவரிடம் தான் பணத்தை வாங்கியிருக்கிறாள் என விக்ரம் மூலம் அறிந்து கொண்டிருந்தான்.

'பணத்துக்காக எங்க காதலை வித்துட்டா' என விக்ரம் சொன்னதைக் கேட்டதும் உடனே அவன் தந்தையை நேரில் சந்தித்துப்பணம் மொத்தத்தையும் சேர்த்துவிட்டு வந்தான். அப்போது அவர் மனதையும் அறிந்து கொண்டான்.

அன்று அவர் சொன்னது இன்னுமே அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. 'பணத்தைச் சேர்த்து வச்ச அளவுக்கு நல்ல குண த்தைச் சேர்த்து வைக்க மறந்துட்டேன் போல' என்றார். அவரைக் காலமே தண்டித்துவிட்டது.

இப்போது விக்ரமுடனான காதலுக்குத் தடையில்லை என்றபோதிலும் நிவேதிகாவின் எண்ணமும், விருப்பமும் வேறாக இருந்தது.

அதன்பிறகே தந்தையின்வற்புறுத்தலால் விக்ரம் திருமணத்துக்குச் சம்மதித்திருந்தான். நிவேதிகா விடாப்பிடியாக மறுத்து அவனை வேறொரு திருமணத்துக்குச் சம்மதிக்கவும் வைத்திருந்தாள். இருந்தாலும் விக்ரமால் அப்படியே விட்டுவிட முடியவில்லை. தமிழினியனைத் தூண்டிவிட்டிருந்தான்.

அவனும் நிவேதிகாவிடம் பேசிச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்ற முடிவுடன் இங்கே வந்திருந்தான். ஆனால் அவள் சொல்வதைப் போல் அவளால்அந்தப் பாதையில் பயணிக்கவே முடியாது.

''நீ எனக்கு இல்லைன்னு தெரிஞ்சப்பவே உன் விருப்பம் முக்கியமா பட்டது. இப்போ நீ விருப்படறதை நிறைவேத்தாம இருப்பேனா வேதிகா?'' மார்பின் மேல் அடைக்கலம் தேடி வந்தவளை மேலும் அணைப்பில் அடக்கிக் கொண்டான்.

''கலைந்து போகிற மேகமில்லை காதல் என அவளை அணைப்பில் வைத்திருந்தாலும் மெதுவாகச் சொல்ல, கார்கால மேகங்களுக்கு எங்கே மழையைப் பொழியணும்னு தெரியும் இனியன்'' என்றாள் உதடுகளில் நெளிந்த புன்னகையுடன்.

உண்மையே. காற்றில் உள்ள ஈரப்பதத்தை உள்வாங்கிக் கொண்டே கார்மேகங்கள் எடை கூடி மழையைப் பொழியச் செய்யும். அது போலவே அவனுள் உள்ள நேசத்தை உள்வாங்கிக் கொண்டு மனம்

நிறைந்து அவன் மேல் அன்பைப் பொழிகிறாள் அவனின் மேகம்.

''சாரிடா உன்னை ரொம்ப ஹர்ட் பண்ணிட்டேன் ''என அவன் மன்னிப்பை வேண்ட'', உங்களுக்கு யாரையும் ஹர்ட் பண்ணத் தெரியாது'' என்றாள்.

அவனின் எதிர்பார்ப்பில்லாத தூய்மையான நேசம் ஒன்றே வாழ்க்கையின் இறுதி வரைக்கும் போதும்.

இந்தப்பத்து நாளா உங்களை ரொம்பவும் மிஸ் பண்ணினேன். எனக்குள்ளே ஒரு வெற்றிடம் இனியன். பரிதாபம், பச்சாதாபம் எனஎன்ன வேணாலும் நினைச்சுக்கோங்க. ஆனா உங்களோட வாழணும். எனக்கு வாழ்க்கை தாங்க'' எனச் சொன்னதும், அவள் உச்சந்தலையின் மேல் கன்னத்தை வைத்து நின்றவன்,

''உன் வாழ்க்கையை நான் எங்கே பிடுங்கினேன்?'' என்றான் குறுஞ்சிரிப்பு உதடுகளில் நெளிய.

அவளை ஆசுவாசப்படுத்தவே அப்படிப் பேசுகிறான் எனப் புரிய, ''உங்கமேலே எனக்கு அன்பு பிறக்க என்ன காரணம் எனத் தெரியலை. ஆனால் கண்டிப்பா உங்களால அது விருட்சமாகி இருக்கு. என் முதல் காதல் பீங்கான் பாத்திரம் மாதிரி. உடைஞ்சது உடைஞ்சது தான்'' என்றாள்.

''அப்போ நம்ம உறவு என்ன எவர்சில்வர் சட்டி மாதிரியா? கீழே விழுந்து ஒடுங்கிப் போனாலும், ரெண்டு தட்டுத் தட்டி ஒடுக்கை எடுத்திடலாம்னு சொல்லறியா?'' என அவன் சிரிக்காமல் சொல்ல,

''இனியன்'' எனச் சிணுங்கிவிட்டு, ''நான் ரொம்பப் பெர்பெக்ட் கிடையாது... இருந்தாலும் இனி என் வாழ்க்கை இனியன் தான்'' என முடித்தாள்.

நேசத்தின் உறைவிடம் அதை உணருமிடமே! அவள் உணர்ந்து கொண்டாள். அவனிடத்தில்!

''பரவாயில்லை.. மிஸ்டர். பெர்பெக்ட் என்னைக் கல்யாணம் பண்ணி நீ மிஸ்ஸஸ். பெர்பெக்ட் ஆகிடு..'' எனச் சொல்ல, அவனது அலைபேசி ஒலித்தது. ண்ண்

அவளை அணைப்பில் வைத்தவாறே, ''அப்பா, அடுத்து எப்போ நல்ல முகூர்த்தம் வருதுன்னு பாருங்க'' எனப் பேச்சை ஆரம்பித்தான்.

**(முற்றும்)**

## என்னைப் பற்றி...

இதுவரையில் எனது எழுத்தில் 16 நாவல்கள் பதிப்பகத்தின் வழியாக வெளிவந்துள்ளன. அத்துடன் என் சிறுகதைகள் வார இதழ்களிலும் மின்னிதழிலும் வெளிவந்துள்ளன.பிரபல இதழில்நாவல் ஒன்று எழுத வேண்டும் என்ற எனதுநெடுநாள் ஆசை கண்மணி இதழின் வாயிலாக நிறைவேறியிருக்கும் இந்த தருணம் மிக மகிழ்ச்சியானது.

## நாவலைப் பற்றி...

அன்பான வாசகர்களுக்கு வணக்கம்.

வாழ்க்கையில் ஓர் ஆண் தவறு செய்து மனம் மாறி உணர்ந்து கொண்டதும் அதை இயல்பாக ஏற்று கொள்ளும் நாம் அதையே ஒரு பெண் செய்தால் அவ்வாறு ஏற்றுக் கொள்கிறோமா?

வாழ்க்கையில் ஒரு பெண் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தவறான முடிவுகள் எடுப்பதும் பின்னர் உணர்ந்து கொண்டு மனம் மாறுவதையும் இக்கதையில் சொல்லியிருக்கிறேன். நேசத்தின் உறைவிடத்தைக் கண்டுகொண்டு வாழ்க்கையில் தன் முடிவுகளை மாற்றிக் கொள்கிறாள். கதையின் நாயகன் போல் ஆண்கள் நம்மைச் சுற்றி இருக்கவே செய்கிறார்கள். பெண்களைப் புரிந்து கொள்ளும் ஆண்களுக்கு நன்றி!

வாசித்து மகிழுங்கள். உங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.



*அன்புடன்,*

**லாவண்யா பெருமாள்சாமி.**



# முளைக் கீரை வடை

**தேவையான பொருட்கள்:**

முளைக்கீரை- 1 கட்டு, கடலைப்பருப்பு, உளுந்து- 100 கிராம், பெரிய வெங்காயம்-1, மிளகு- 1 டீஸ்பூன், சீரகம்- ஒரு டீஸ்பூன், பச்சை மிளகாய்-1, பெருங்காயத் தூள்- சிறிதளவு, கறிவேப்பிலை, கொத்தமல்லி- சிறிதளவு, எண்ணெய், உப்பு- தேவையான அளவு.

**செய்முறை:**

கீரையை சுத்தம் செய்து பொடியாக நறுக்கி கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய், கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும். கடலைப் பருப்பு, உளுந்தை ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து, நன்றாக ஊறியதும் வடை மாவு பதத்தில் அரைத்து கொள்ளவும். அரைத்த மாவுடன் பொடியாக நறுக்கிய கீரை, வெங்காயம், கறிவேப்பிலை, பச்சை மிளகாய், பெருங்காயத்தூள், உப்பு சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் மாவை வடைகளாக தட்டி எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும்.

**-ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி.**







சீனாவில் நிலக்கரி பற்றாக்குறை உச்சம் பெற்றுள்ள நிலையில்... தற்போது கடும் மின்வெட்டு சூழல் உருவாகி இருக்கிறது. சுமார் 20-க்கும் மேற்பட்ட மாகாணங்கள் ஏறத்தாழ இருளில் மூழ்கியுள்ளன. நிலக்கரி பற்றாக்குறை மற்றும் கார்பன் உமிழ்வை குறைப்பதற்கான இலக்கை அடையும் நோக்கில் சீனா மின் பகிர்மானத்தை ரேஷன் முறையில் விநியோகிக்கத் தொடங்கியுள்ளது, மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# மின்சாரம்: தவிக்கும் சீனா... இந்தியா ?



வீடுகளில் மின்சாரம் இருக்கும் நேரத்தை விட இல்லாத நேரமே அதிகம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. பல மாகாணங்களில் பல மணிநேரம் மின் வெட்டு இருக்கிறது.

'பீக் ஹவர்ஸ்' எனப்படும் அதிகம் பேர் அதிகமாக மின் சாதனங்களை பயன்படுத்தும் நேரங்களில் மின் வெட்டு அதிகமாக அமல்படுத்தப்படுகிறது.

இதனால் லட்சக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கைப் பெரிதும் முடங்கியுள்ளது. மின்வெட்டால் அன்றாடப் பணிகளை மேற்கொள்வதில் கடும் இன்னல்களை கோடிக்கணக்கானோர் எதிர்கொண்டு வருகின்றனர். வடகொரியாவில் வாழ்வதைப் போல் இருப்பதாக புதிய மின்வெட்டுப் பிரச்சினை குறித்து சீன மக்கள் குமுறலை வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்னல்கள் இல்லங்களோடு முடிவடைந்துவிடவில்லை. தொழிற்சாலைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. ஆப்பிள் மற்றும் டெஸ்லா ஆலைகளும் செயல்படுவதற்கு போதுமான அளவு மின்சாரம் இல்லை. டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க், 'மின்வெட்டு மிக முக்கிய பிரச்சினை' என ட்வீட்

**உக்கிர மின்சாரப் பற்றாக்குறைக்கான நுழைவாயிலாக டெல்லி உருவெடுத்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் நிலக்கரி கையிருப்பு சொற்பமாகவே உள்ளது. இதைக் கொண்டு சில நாட்கள் மட்டுமே சமாளிக்க முடியும்.**

**தரமான நிலக்கரியை துரிதமாக இறக்குமதி செய்வதற்கும் போதுமான அளவுக்கு இருப்பு வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை போர்க்கால அவசரத்துடன் எடுக்கத் தவறினால் இன்னும் சில நாட்களிலேயே இந்தியா இருண்டுவிடும் என்பதை மின்துறை வல்லுநர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். இருப்பினும் அரசுத் தரப்பு மெத்தனமாகவே உள்ளது. அரசின் போக்கில் மாற்றம் ஏற்படாவிட்டால் விபரீத விளைவு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது.**



செய்யும் அளவுக்கு சிக்கல் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இதைவிட இந்த மின்வெட்டு காரணமாக, சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 1 சதவீதம் முதல் 3 சதவீதம் வரை சரிவடையும் சாத்தியம் மேலோங்கியுள்ளது என பல்வேறு பொருளாதார



ஆய்வு நிறுவனங்கள் கணிப்பு வெளியிட்டு உள்ளன.

இப்பின்னணியில் சில வெளிநாட்டு நிறுவனங்கள் அடுத்தகட்ட முதலீட்டுக்கு வேறு நாடுகளுக்குச் செல்ல இருப்பதாகவும் அமெரிக்கா-சீனா தொழில் குழு தெரிவித்துள்ளது.

சீனாவின் முக்கியமான உற்பத்தி நகரான குவாங்டாங் முழுவதும் கடும் மின் தட்டுப்பாடுகள் இருப்பதால் உணவு, ஜவுளி, எலெக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட பல வகையான உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஏற்றுமதியும் சற்று வீழ்ச்சி அடைந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஸ்டீல் உள்ளிட்ட இடைவிடாமல் மின்சாரம் தேவைப்படும் ஆலைகளுக்கும் போதுமான மின்சாரம் இல்லை என்பதால் அங்கு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

நிலக்கரி பற்றாக்குறை

**சீனாவின் மின்சாரத் தேவையில் சுமார் 50 சதவீதம், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியைக் கொண்டே பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.**

**இயற்கை எரிவாயு, காற்றாலை மற்றும் சூரிய சக்தி உள்ளிட்டவற்றிற்கு மாறுவதற்கான நடவடிக்கையை சீனா தீவிரப்படுத்தி வருகிறது. எனினும் தொழிற்சாலைகள் மற்றும் நகரமயமாக்கம் ஆகிய காரணங்களால் மின்சாரத் தேவை தொடர்ந்து உயர்ந்து வருவதால் சீனாவின் திணறல் உடனடியாக முடிவுக்கு வர வாய்ப்பில்லை.**

காரணமாக சீனா இருளில் மூழ்கியுள்ளதை தனிப்பட்ட ஒரு நாட்டின் பிரச்சினையாக கருதக் கூடாது. இதை அனைத்து நாடுகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் மொத்த மின் உற்பத்தியில் 70 சதவீதம் அளவுக்கு நிலக்கரியையே நம்பி இருக்கிறது என்று புள்ளி விவரம் தெரிவிக்கிறது. சீனாவைப் போலவே இந்தியாவும் இரு முக்கியப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது.

கொரோனா தொற்றுப் பாதிப்பில் இருந்து மீண்டு லாக்டவுன் கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டு மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பும் வேளையில் தொழிற்துறைக்கான மின்சாரத் தேவை அதிகரித்துள்ளது, இதேவேளையில் நிலக்கரி உற்பத்தியும் குறைந்துள்ளது.


நம் நாட்டில் நான்கில் மூன்று பங்கு நிலக்கரி உள்நாட்டில் இருந்து தான் உற்பத்தி செய்யப்படும் நிலையில், மழை வெள்ளம் சுரங்கப் பகுதிகளில் அதிகளவில் நிரம்பியுள்ளதாலும், நிலக்கரி போக்குவரத்து வழித்தடங்கள் பாதிக்கப்பட்டு உள்ளதாலும் இந்தியாவில் உற்பத்தி பாதித்துள்ளது.

ஒருபக்கம் நிலக்கரி தட்டுப்பாடு, மறுபக்கம் அதிகப்படியான மின்சாரத் தேவை, நடுவில் அதிகரித்து வரும் மின்சாரம் மற்றும் நிலக்கரி விலை ஆகியவை இந்தியாவைப் புரட்டிப்போடவிருக்கின்றன. இந்த நிலை மாறும் வரையில் இந்தியாவில் அதிகளவிலான மின் தடை இருக்கும் என

**அமெரிக்காவில் பனிக்காலம் துவங்கியுள்ள நிலையில் கட்டாயம் அடுத்த சில வாரத்தில் கச்சா எண்ணெய் உற்பத்தி மற்றும் எரிவாயு தடைபட்டு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே எண்ணெய் உற்பத்தித் துறையில் ஊழியர்களை பணியில் அமர்த்துவது அமெரிக்காவில் பெரும் போராட்டமாக இருக்கும் நிலையில் இந்த பனிக்காலம் அமெரிக்காவை உக்கிரமாக உலுக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

மின்சாரத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

செப்டம்பர் மாத முடிவில் நிலக்கரி இருப்பு 8.1 மில்லியன் டன்னாக மட்டுமே உள்ளது, இது கடந்த ஆண்டை விட 76 சதவீதம் குறைவு.



இதேபோல் சராசரி ஸ்பாட் மின்சாரத்தின் விலை செப்டம்பர் மாதத்தில் 63 சதவீதம் வரையில் உயர்ந்து ஒரு கிலோவாட் 4.4 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் ஏற்கனவே எரிபொருள் விலை அதிகமாகவுள்ளதால் நாட்டின் வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் வேகம் குறைந்துள்ளது.

இதேவேளையில் மின்சாரத்தின் விலையும் அதிகரித்துள்ள காரணத்தால் நாட்டின் பொருளாதாரத்தில் பெரிய ஓட்டை விழும் என்பது திண்ணம். இந்தியாவைக் காட்டிலும் சீனாவின் கட்டமைப்பு வலுவானது. ஜி ஜின்பிங் தலைமையிலான சீனாவே நெருக்கடிக்கு ஆளாகியுள்ள போது, நரேந்திர மோடி தலைமையிலான இந்தியா எப்படி சிக்கலை சமாளிக்கப் போகிறது என்பதே இப்போதைய ஒட்டுமொத்த மக்களின் கேள்வி.

**- துங்கம்புலரி**

**இங்கிலாந்தில் டிரக் மற்றும் டிரக் டிரைவர் பற்றாக்குறை காரணமாக சப்ளை சங்கிலி பாதிக்கப்பட்டு 90 சதவீத பெட்ரோல் நிலையத்தில் பெட்ரோல் முழுமையாக தீர்ந்துள்ளது.**


**இதனால் உணவுப் பொருட்கள் முதல் அனைத்து முக்கியமான பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.**

**ஒருபுறம் அத்தியாவசிய பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் மறுபுறம் மக்கள் பதற்றத்தின் காரணமாக இருப்பில் இருக்கும் பொருட்களை அளவுக்கு அதிகமாக வாங்கி வருகின்றனர். இதனால் மொத்த இங்கிலாந்தும் முடங்கும் நிலை உருவாகியுள்ளது.**

# ஆண்களை விஞ்சிய பெண்கள் !




உலகிலேயே விரல்விட்டு எண்ணத்தக்க சில நாடுகளில் மட்டுமே ஆண் எம்.பி.க்களை விட பெண்கள் எம்.பி.க்கள் அதிகமாக உள்ளனர். அதில் ஒன்று ஐஸ்லாந்து நாடு. இரவாண்டா நாடாளுமன்றத்தில் பெண்கள் 61.3 சதவீதம் உள்ளனர்.



இதற்கு அடுத்தபடியாக கியூபா நாடாளுமன்றத்தில் பெண்கள் 53.4 சதவீதம் உள்ளனர்.

ஐஸ்லாந்தில் அண்மையில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. மொத்தம் 63 எம்.பி.க்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் 33 பேர் பெண்கள் ஆவர். ஐஸ்லாந்து நாடாளுமன்றத்தில் பெண்கள் 52 சதவீதத்தினர் உள்ளனர்.

பிரதமர் காட்ரின் ஜாக்கோப்ஸ் டோட்டீர் தலைமையிலான இடதுசாரி பசுமை இயக்கம் சுதந்திரக் கட்சி, முற்போக்குக் கட்சி ஆகியவை அடங்கிய கூட்டணி 37 இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது.



பிக்டிஸ் பின்போகடோட்டீர்



ஜாக்கோப்ஸ் டோட்டீர்

நிகரகுவா நாடாளுமன்றத்தில் பெண்கள் 50.6 சதவீதத்தினர் உள்ளனர். மெக்சிகோவிலும் ஐக்கிய அரசு எமிரேக்சிலும் பெண் எம்.பி.க்கள் 50 சதவீதத்தினர் உள்ளனர். மற்ற எல்லா நாடுகளிலும் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே பெண் எம்.பி.க்கள் உள்ளனர்.

இந்தியாவில் மக்களவை எம்.பி.க்கள் 543 பேர் உள்ளனர். இதில் 78 பேர் மட்டுமே பெண்கள். இது 15 சதவீதத்திற்கும் குறைவு.

**-நிகரியவாதி**


**ஐஸ்லாந்தின் மக்கள்தொகை சுமார் 3.5 லட்சம் மட்டுமே. இங்கு கிறிஸ்தவர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். ஐஸ்லாந்தின் தலைநகர் ரெய்க்ஜாவிக். ஐரோப்பா கண்டத்தின் வடக்கு முனையில் உள்ள தலைநகர் என்ற சிறப்பும் ரெய்க்ஜாவிக்குக்கு உள்ளது.**

**இப்போது உலகில் நடைமுறையில் உள்ள நாடாளுமன்றங்களில் மிகவும் தொன்மையானது ஐஸ்லாந்தில் உள்ள நாடாளுமன்றம்தான். இது 'ஆல்திங்' என்று அழைக்கப்படுகிறது. உலகிலேயே முதல் முறையாக 1980-ம் ஆண்டு ஐஸ்லாந்தில்தான் பெண் அதிபர் பதவியேற்றார் என்பது வரலாறு ஆகும். இந்த சிறப்புக்கு உரியவர் பிக்டிஸ் பின்போகடோட்டீர்.**



கொஞ்சம் மருத்துவம்...
நிறைய மனிதம்-48





# சிவப்பு... வெள்ளை!

இரு தினங்களுக்கு முன்பாக வித்தியாசமான ஒரு பிரச்சினையுடன் ஒரு இளைஞன் வந்தான். அவன் கூறியது சற்றே வித்தியாசம் என்றாலும் கடந்த சில மாதங்களாக வழக்கமாக ஆகிவிட்ட ஒரு பிரச்சனைதான். அது என்னவென்றால், ‘20 நாட்களுக்கு முன்பாக கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டேன், அதுமுதல் சோர்வாகவே இருக்கிறது, அவ்வப்போது மயக்கமும் வருகிறது’ என்பது தான்.

-டாக்டர் அகிலாண்ட பாரதி






இதை ஏன் வழக்கமான அறிகுறி என்கிறேன் என்றால், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் அதற்கு அடுத்த சில மாதங்கள் வரையிலுமே உடலில் வேறு என்ன பிரச்சனை வந்தாலும் தடுப்பூசியைத் தான் காரணம் காட்டுகிறார்கள். உதாரணமாக, 'ஜூலை மாதம் தடுப்பூசி போட்டேன், இரண்டு நாட்களாக பல் வலிக்கிறது' என்கிறார்கள்.


டாக்டர்.அகிலாண்ட பாரதி

அது ஒரு புறமிருக்க, இளைஞனின் உடலை பரிசோதித்ததில், மிகவும் களைப்பாகக் காணப்பட்டான், நாக்கு, நகம், கண் பகுதிகள் வெளுப்பாக இருந்தன. நடக்கையில் மூச்சு வாங்கியது. அவனுடைய இரத்தத்தைப் பரிசோதிக்க, அதில் சிவப்பணுக்கள், வெள்ளை அணுக்கள், ஹீமோகுளோபின், தட்டணுக்கள் அனைத்தும் மிகவும் குறைந்து காணப்பட்டன. 12 கிராம் இருக்க வேண்டிய ஹீமோகுளோபின் அளவு நான்கு கிராமும், ஒன்றரை லட்சம் இருக்கவேண்டிய தட்டணுக்கள் எண்ணிக்கை 21,000மும் மட்டுமே இருந்தன.

''எல்லா வகை அணுக்களும் உற்பத்தியாகும் இடத்தில் ஏதோ ஒரு சிக்கல் இருக்கிறது. அதனால் மேலும் சில பரிசோதனைகள் தேவை. இது இருபது நாட்களுக்குள்ளாக வந்திருக்கக்கூடிய வாய்ப்பில்லை, குறைந்தது 6 மாதங்களுக்காவது உடலில் ஏதோ ஒரு அறிகுறி தோன்றியிருக்கும்'' என்று நான் விளக்கினாலும் 'அது எப்படி? தடுப்பூசி போட்ட பின்புதானே எனக்கு எல்லா அறிகுறியும் வந்தது'' என்றான் இளைஞன்.

பெரும்பாலான ரத்தத்தின் பிரிவுகள் உருவாகும் இடம் எலும்பு மஜ்ஜை. குழந்தை கருவில் உருவான புதிதில், அதாவது மூன்றாம் வாரத்திலேயே கருவில்



ஆங்காங்கே சில குறிப்பிட்ட இடங்களில் சில செல்கள் உருவாகின்றன. இவை வெள்ளை, சிவப்பு, தட்டணுக்கள் மூன்றையும் உருவாக்கும் வல்லமை படைத்த 'எல்லாம் வல்ல' செல்கள் (Multipotent hematopoietic stem cells). கருவில் இருக்கும் காலம் முழுவதும் இவை குறிப்பிட்ட படிநிலைகளை அடைகிறது. மண்ணீரல், கல்லீரல் உள்ளிட்ட பகுதிகளுக்குப் பயணித்து அங்கு சில மாற்றங்கள் அடைய, குழந்தை பிறப்பதற்கு சற்று முன்பாக இந்த உற்பத்தி செய்யும் பணியை எலும்பு மஜ்ஜை மற்றும் தைமஸ் சுரப்பி முழுவதுமாக எடுத்துக்கொள்கிறது.

ஆட்டு எலும்பு அல்லது கோழி எலும்பைக் கடிக்கும் பொழுது பார்த்திருப்பீர்கள், உள்ளே கருப்பாக வழவழவென்று ஒரு பொருள் இருக்கும். பெரியவர்கள், ''நல்லா உறிஞ்சி சாப்பிடு. அதுல நிறைய சத்து இருக்குது'' என்று கூறியிருப்பார்கள். அது தான் அணுக்கள் உருவாகும் இடம். எலும்பு மஜ்ஜையில் குறைபாடு ஏற்படும் பொழுது ஆதிகாலத்தில் ரத்தத்தை உருவாக்கிய இடங்களான கல்லீரல் மற்றும் மண்ணீரல் அணுக்களை உற்பத்தி செய்ய முயலும். அதனால் ரத்த அணுக்கள் தொடர்பான பிரச்சனையை சந்தேகப்படும் ஒரு நோயாளியைப் படுக்கவைத்து கல்லீரல் மற்றும் மண்ணீரல் அளவு பெரிதாக இருக்கிறதா என்று பரிசோதிப்பது முக்கியமான ஒரு சோதனை.

எல்லா அணுக்களும் உருவாவதற்கு, அதற்கான மூலப் பொருட்கள் சரியான முறையில் இருக்க வேண்டும். வெகுநாட்களாக உணவில் இரும்புச்சத்து இல்லை என்றால், ஹீமோகுளோபின் உற்பத்தி கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து இரத்த சோகை ஏற்படும். டெங்கு

**பெரும்பாலான பெரு வியாதிகளில் நமது உடல் நிச்சயமாக ஆரம்ப கட்டத்திலேயே சில சமிக்ஞைகளை நமக்கு அனுப்புகிறது.**

**அதைப் புறந்தள்ளாமல், சுய மருத்துவம் பார்க்கிறேன் என்று காலந் தாழ்த்தாமல், விரைவில் பரிசோதனை செய்தால் பெரிய பாதிப்புகள் வரும் முன்பாக அதிலிருந்து மீள முடியும்.**

போன்ற சில பிரச்சனைகளில் தட்டணுக்களின் குறைபாடு ஏற்படுவதை அறிவீர்கள். கதிர்வீச்சு, புற்றுநோய் சிகிச்சை போன்ற காரணங்களால் வெள்ளை அணுக்களில் அதிக அளவில் குறைபாடு ஏற்படுவது வழக்கம்.

சிவப்பு அணுக்கள் குறைவாக இருந்தால் ரத்தத்தில் ஆக்சிஜனைக் கடத்தும் திறன் குறையும். அதை சரி செய்வதற்காக இதயம் பலமுறை துடிக்கும். எனவே காரணமற்ற படபடப்பு ஒரு முக்கிய அறிகுறி. வெள்ளை அணுக்கள் குறைபாட்டால் எளிதாக பல தொற்றுக்கள் ஏற்படலாம். தட்டணுக்கள் குறைபாடால் ஈறுகளில் மூக்கில் ரத்தம் வெளியேறலாம். பெரும்பாலான நோயாளிகள் அதிக சோர்வு என்ற அறிகுறியைத் தான் கூறுவார்கள்.

திடீர் மனக் குழப்பம், சுய நினைவு இழத்தல், வலிப்பு, மூச்சுத்திணறல் இவை ரத்த அணுக்கள் குறைபாட்டில் ஆபத்தான அறிகுறிகள்.

அனைத்து அணுக்களும் குறைவது பெரும்பாலும் நம் நாட்டின் சூழலில் வைட்டமின் பி12 குறைபாட்டினால்



நிகழ்கிறது என்பது பெரும் ஆறுதல். ஏனெனில் இதை குணப்படுத்துவது மிக எளிது. மீண்டும் இதே பிரச்சனை வராமல் பார்த்துக் கொள்ளவும் முடியும். நம் நாட்டில் சிலர் தீவிர சைவ உணவு சாப்பிடும் பழக்கத்தை (vegans) கொண்டிருக்கின்றனர். பால், மோர், முட்டை கூட அருந்தாதவர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு Vit B12 குறைபாடு ஏற்படும். தைராய்டு, கல்லீரல் கோளாறுகள், சில மரபணு பிரச்சனைகள் இவற்றாலும் அனைத்து வகை அணுக்களும் குறையும் நிலை ஏற்படலாம்.

குறைபாட்டைப் போலவே எந்த ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகவோ, சேர்ந்தோ மிக அதிக எண்ணிக்கையில் இருப்பதையும் (increased blood cell count) சில வியாதிகளில் காணலாம்.

சில மாதங்களுக்கு முன்பாக வந்த நோயாளி ஒருவர், ''எனக்கு எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லை. அவ்வப்போது மேல் வயிற்றில் வலி மட்டும் ஏற்படுகிறது. ஆனால் கடந்த 4 மாதங்களில் சுமார் 15 கிலோ எடை இழந்திருக்கிறேன், ஆனால் நன்றாக சாப்பிடுகிறேன்'' என்று கூறினார். அவரது ரத்தத்தைப் பரிசோதனை செய்து பார்த்ததில் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை மிக அதிகமாக, லட்சங்களில் (சரியான எண்ணிக்கை ஒரு டெசிலிட்டர் ரத்தத்தில் 4000-11000 அணுக்கள் தான்) இருந்தது.

வெள்ளை அணுக்களில் செய்யப்படும் மற்றொரு சோதனையான அணுக்களின் வகைகளைப் பிரித்தறியும் differential count எண்ணிக்கையை கவனிக்க, அதில் அவருக்கு எலும்பு மஜ்ஜையில் புற்றுநோய் ஏற்பட்டிருக்கலாம் என்பது தெரியவந்தது.

முன்பு கூறியதுபோல, இப்படிப்பட்ட பிரச்சனைகள் ஒரு இருபது வருடங்களுக்கு முன்பு வந்திருக்குமேயானால் அவர்களுக்கு கீமோதெரபி சிகிச்சைகள் வழங்கப்படும். அதனால் நோயை ஓரளவு கட்டுக்குள் வைத்திருக்கலாம் (Remission), மீண்டும் சில மாதங்கள் அல்லது ஓரிரு ஆண்டுகள் கழித்து அந்த நோய் மறுபடி தலைதூக்கும்(Relapse). ஒரு நோயைப் பற்றிப் படிக்கும் போது அதைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கான அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான சாத்தியக்கூறு இத்தனை சதவீதம் (five year survival rate) என்றுதான் புத்தகங்களில் போட்டிருப்பார்கள்.

இப்போது அப்படி அல்ல. ரத்தப் புற்றுநோய் இருப்பதாகக் கண்டறிந்தவுடன் அந்த நோயாளிக்கு மரபணு பரிசோதனை (gene analysis) செய்யப்படுகிறது. அதன்பின் பொருத்தமான மாத்திரைகள் வாய் வழியாகவே வழங்கப்படுகின்றன. சாதகமான மரபணு அமைப்பு காணப்பட்டால் இந்த மாத்திரைகளால் நோயை முழுவதுமாக குணப்படுத்த முடியும்.


ஒரு மாதத்திற்கு சிலபல

ஆயிரங்களை வரை இந்த மாத்திரைகளுக்கான கட்டணம் விழுங்கலாம். அதனால் காப்பீட்டுத் திட்டங்கள் மூலமாகவோ, அரசு மருத்துவமனைகள் மூலமாகவோ இதை இலவசமாக பெற்றுக் கொள்ள முயலலாம். இப்போதைய சூழலில் தமிழகத்தில் புற்றுநோய்க்கான மண்டல மையங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு மாவட்டங்களுக்கு ஒரு மண்டல மையம் செயல்படுகிறது. இவற்றில் நிபுணர்களும் போதுமான அளவு இருக்கின்றனர். அரசு மருத்துவமனை என்பதால் கட்டணமும் கிடையாது.

நான் அரசு மருத்துவமனைக்குப் போக மாட்டேன், கூட்டமாக இருக்கும், அடிக்கடி அலைய வேண்டியதிருக்கும் என்பது போன்ற மனத்தடைகளை விலக்கினால் இரத்தப் புற்றுநோய் உள்ளவர்களாலும் பிறரைப் போல முழுமையான வாழ்நாள் வரைக்கும் ஆரோக்கியமாக வாழ முடியும்.

**-மனிதம் காப்போம்**

**ஹெமட்டாலஜி என்பது மிக முக்கியமான, தற்போது வேகமாக வளர்ந்து வரும் ஒரு மருத்துவப் பிரிவு. முன்பெல்லாம் சந்தோஷமாகப் போய்க் கொண்டிருக்கும் திரைப்படத்தில் திடீரென்று ஒரு திருப்பத்தை உருவாக்க வேண்டுமென்றால் முக்கியமான ஒரு கதாபாத்திரத்தை மருத்துவமனையில் நிறுத்தி, ''மனசைத் தேத்திக்கோங்க..உங்களுக்கு பிளட் கேன்சர்! இன்னும் ஆறு மாசம் தான் உயிரோட இருப்பீங்க'' என்று மருத்துவர் கூறுமாறு கதை அமைந்திருப்பதைப் பார்த்திருப்போம். பிளட் கேன்சர் என்பது ஒரே வகையிலானது இல்லை. நூற்றுக்கணக்கான வகைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட நோயாளிக்கு என்ன வகை வந்திருக்கிறது, என்ன சிகிச்சை தேவை என்பதைக் கண்டறிய, முதலில் ரத்தப் பரிசோதனை செய்வது, ரத்தத் தடவல்** (peripheral smear) **செய்து அதை நுண்ணோக்கி மூலமாகப் பார்ப்பது போன்ற எளிய பரிசோதனைகளே போதும்.**










நடிகராக மட்டுமில்லாமல் கிளாசிக்கல் டான்சராக, நடன ஆசிரியராக, டப்பிங் ஆர்டிஸ்டாக தொடர்ந்து பன்முகத்திறனை வெளிபடுத்தி வருகிறார்வினித் .பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள இவர் தனது 36 ஆண்டுகால திரையுலக பயணத்தின் அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

# லாக்டவுன் காலத்தை சரியாக பயன்படுத்தினேன்!

–நடிகர் வினித்



**நடிப்புத் துறையில் நுழைத்தது எப்படி?**

நான் 9-ம் கிளாஸ் படிச்சிட்டு இருந்தப்போ கமலமண்டலம் சரஸ்வதி கிட்ட கிளாசிக்கல் டான்ஸ் கத்துக்கிட்டேன். அவங்க மலையாளத்தில் பெரிய எழுத்தாளரான எம்.டி.வாசுதேவன் நாயரோட மனைவி. அவங்க என்னைப் பற்றி இயக்குனர் பரதன் கிட்ட சொல்லியிருக்காங்க.

1986-ம் வருஷம் பரதன் இயக்கத்தில் இளையராஜா இசையில்'னு பெரிய பேனர்'ல படம் ஆரம்பிச்சது. அப்போ எனக்கு மீசை முளைக்க ஆரம்பிச்ச வயசு, அதனால ஒட்டுமீசை வச்சு நடிக்க ஆரம்பிச்சேன்.

ஆனா, இடையில தயாரிப்பாளர் பிரச்சனையால அந்த படம் பாதியில் நின்னுடுச்சு.

மறுபடி 1989-ம் வருஷம் அந்த படம் வைஷாலிங்குற டைட்டிலில் ரிலீஸ் ஆச்சு. படம் தொடங்கும் போது ஸ்கூல் பையனா இருந்த நான் படம் ரிலீசாகும் போது காலேஜ் படிச்சிட்டிருந்தேன். இதுக்கு நடுவே மலையாளத்தில் குழந்தை நட்சத்திரமா பல படங்களில் நடிச்சேன். பல நடிகர்கள் சேர்ந்து நடிச்ச இடைநிலைகள் படத்தில் தான் என்னோட நல்ல அறிமுகம் நடந்தது. அதில், மம்முட்டி, மோகன்லால்'னு பெரிய நட்சத்திரங்கள் கூட சேர்ந்து நடிக்குற வாய்ப்பு கிடைச்சது. இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர் அந்த படத்தை தயாரிச்சது இன்னொரு சிறப்பு.




**தமிழில் அறிமுகம்எப்படி நிகழ்ந்தது?**

ஊட்டியில் இருக்குற குட் ஷெப்பர்டு ஸ்கூலில் பள்ளிப் படிப்பை முடிச்சிட்டு சென்னைக்கு வந்து பி.காம் முடிச்சேன். அதுக்கப்புறம் என்னோட சினிமா பயணம் கிட்டத்தட்ட முடிஞ்ச துன்னு தான் நினைச்சேன். கனத்த மனசோட சார்டன்ட் அக்கவுன்டன்ட் வேலைக்கு அப்ளை பண்ணிட்டு

காத்திருந்தேன்.

1991-ம் வருஷம் அது, அப்போ தான் வாழ்க்கையில் திடீர் திருப்பம் நடந்தது. என் அம்மாவை சென்னை சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷனில் வழியனுப்ப வந்தப்போ, இயக்குனர் பரதன் கிட்ட உதவி இயக்குனரா வேலை பார்த்த விஜயகுமாரை சந்திச்சேன். பழைய கதையை பேசிட்டு என்னோட போன் நம்பர் வாங்கிட்டு போனாரு.

மறுநாளே எனக்கு இயக்குனர் பரதன் கிட்ட இருந்து போன் வந்தது. எங்கே இருக்கன்னு அவர் கேட்டதும் எனக்கு திரில்லா இருந்தது. மலையாளத்தில் ஹிட் அடிச்ச 'தாகரா'படத்தை தமிழில் ரீமேக் பண்ணப் போறதா சொன்னார். அதுல ஹீரோவோட நண்பன் கேரக்டரில் நடிக்க தான் முதலில் கூப்பிட்டார். அங்க போனதும் திடீர்னு என்னை லீடு ரோலில் நடிக்க வைக்க ஓகே பண்ணிட்டார். அப்படிதான் 'ஆவாரம்பூ' படத்தில் நடிச்சு தமிழில் அறிமுகமானேன்.


குழந்தை மனைவியுடன் நடிகர் வினீத்

**மலையாளத்தில் உங்கள் சினிமா கேரியர் எப்படி ?**

ஆரம்ப கட்டத்தில், மலையாளத்தில் ரகுமானுக்கு அப்புறம், டீனேஜ் பையன் வேடத்தில் நடிக்க எனக்கு நிறைய வாய்ப்புகள் கிடைச்சது. பிரியதர்ஷன் இயக்கின 'இடநாழியில் ஒரு காலோச்ச'படத்தில் லீடு கேரக்டரில் நடிச்சப்போ நல்ல பேர் கிடைச்சது. 2000-க்கு பிறகு தான் தமிழ், தெலுங்கு படங்களில் படங்களில் பிஸி ஆனதால மலையாள படங்களில் அதிகமா நடிக்க முடியல.

அதே சமயம் 1993-ம் வருஷம் வெளிவந்த'மணி சித்திரதாள் 'படத்தில் நடிக்க சான்ஸ் கிடைச்சும், கால்ஷீட் பிரச்சனையால் அப்போ நடிக்க முடியல, ஆனா 13 வருஷம் கழிச்சு அந்த படத்தோட ரீமேக்கான 'சந்திரமுகி'யில் அந்த முக்கியமான ரோல் எனக்கு திரும்ப கிடைச்சது. மலையாளத்தில் 80'களில்




நிறைய நல்ல நல்ல கேரக்டர்கள் என்னைத் தேடி வந்தது. 10 வருஷத்துக்கு முன்னாடியே, நித்யா மேனனுக்கு அப்பா ரோலில் நடிச்சேன், அதுவும் வொர்க் அவுட் ஆச்சு. கேரள அரசு மற்றும் தமிழக அரசு விருதுகள், பிலிம்பேர் விருது மாதிரியான நிறைய அங்கீகாரம் கிடைச்சிருக்கு.

**தமிழில் உங்க ரீஎன்ட்ரி பற்றி?**

பரதன் கிட்ட அசிஸ்டெண்ட்டாக வொர்க் பண்ண ஷங்கர் சார் மூலமா 'ஜென்டில்மேன்' வாய்ப்பு கிடைச்சது. மே மாதம், காதல் தேசம் படங்கள், ஏ.ஆர். ரஹ்மான் இசையில் பெயர் சொல்லும் படங்களா அமைஞ்சது. தேவதை, வேதம், பிரியமான தோழி, சந்திரமுகின்னு பல நல்ல படங்களில் நடிச்சிருக்கேன். கடைசியா 'சர்வம் தாளமயம்' படத்தில் நடிச்சேன்.

**டப்பிங் ஆர்டிஸ்டா இப்போ கலக்குறீங்களே?**

ஆரம்ப காலத்தில் மலையாள படங்களில் நான் நடிக்கும் போது கிருஷ்ணசந்திரன் எனக்கு டப்பிங் கொடுத்தார். 15 வயசிலேயே நான் நடிக்க வந்ததால என் குரலில் அப்போ மெச்சூரிட்டி இல்லாம இருந்தது. ஆனா, போன வருஷம் சிறந்த டப்பிங் ஆட்டிஸ்ட்'க்கான மாநில விருது மோகன்லால் நடிச்ச 'லூசிபர்'படத் துக்காக



எனக்கு கிடைச்சது. அந்த படத்தில் விவேக் ஒபராய்க்கு நான் டப்பிங் பேசியிருந்தேன். அந்த படத்தை இயக்கின நடிகர் பிரித்திவிராஜ் என்கிட்ட வந்த கேட்டப்போ, கொஞ்சம் பதற்றம் இருந்தது. நாம நடிச்சு நாம டயலாக் பேசுறது ஓகே, ஆனா இன்னொருத்தர் நடிப்புக்கு நாம குரல் கொடுக்குறது கொஞ்சம் சவாலான விஷயம், அது நல்லபடியா வந்தது சந்தோஷம். இதுக்கு முன்னாடி 2016-ம் வருஷம் 'காம்போஜி '

படத்துக்காக சிறந்த நடன கலைஞருக்கான மாநில அரசு விருது வாங்கினேன்.



பிரியமான தோழி



சர்வம் தாளமயம்

**லாக்டவுன் உங்களுக்கு எப்படி போச்சு?**

நடனத்தின் மீதான என்னோட வேட்கை இன்னும் குறையல.

லாக்டவுன் நேரத்தில் ஊரே வீட்டுக்குள் முடங்கி கிடந்தப்போ ஒரு கலைஞனால என்ன செய்ய முடியும், கொச்சியில் இருந்த என்னோட நிறுவனத்தில் ஆன்லைன் கிளாஸ் ஆரம்பிச்சு நடன வகுப்புகள் சொல்லிக் கொடுத்தேன். என்னோட குரு டாக்டர். பத்மா சுப்பிரமணியம் அவர்களும் ஸ்பெஷல் கிளாஸில் கலந்துகிட்டு மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தது என்னோட பாக்கியம். ஒரு டான்சரா இந்த லாக்டவுன் காலத்தை நான் சரியா பயன்படுத்தியிருக்கேன்.

–தவா



தமிழ் (ஈழத்)

தலைவன் கதை –16

# விடுதலை புலிகளின் புத்தெழுச்சி!

யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்ட சபை தேர்தலையொட்டி ஜெயவர்த்தனே தூண்டுதலில் சீறி மாத்யூ, காமினி திசநாயகா போன்ற அமைச்சர்களால் பெரும் கலவரங்கள் உருவாக்கப்பட்டன. காரணம், தமிழ் இயக்கங்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக இருந்தன. ஐ.தே.க.வின் முக்கிய வேட்பாளரான தியாகராஜா 1981 மே 24ல் அவர் கொல்லப்பட்டார்.அதுமட்டுமல்ல, அக்கட்சிக்கு வெற்றி வாய்ப்பும் குறைவாகவே இருந்தது.

இதனால் ஆத்திரமடைந்த ஜெயவர்த்தனே வெற்றி வாய்ப்புகள், தேர்தல் பணிகளை கவனிப்பதற்காக அமைச்சர் சிறில் மேத்யூவையும் காமினி திசாநாயகவையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். அதுமட்டுமல்ல, பாதுகாப்பு அமைச்சக செயலர், கூடுதல் செயலாளர், அமைச்சரவை செயலரை கொண்ட சி றப்புக் குழுவை மே 30 ஆம் தேதி அனுப்பினார். ஏற்கனவே போலீசாரால் நிறைந்திருந்த யாழ்ப்பாணத்துக்கு, வெளி மாவட்டங்களிலிருந்தும் 500 போலீசார் அனுப்பப்பட்டனர்.



மறுநாள் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புக்காக வந்திருந்த 3 போலீசார் இளைஞர் சிலரால் சுடப்பட்டனர். அதில் இருவர் அதே இடத்தில் இறந்தனர்.

தமிழர்கள் கண்ட இடங்களில் அடித்து நொறுக்கப்பட்டனர். பலர் துடிதுடிக்க சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். தமிழறிஞர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். காந்திய இயக்கம் நடத்திக்கொண்டிருந்த டேவிட், ராஜசுந்தரம் ஆகியோரை கைதுசெய்து, சிறையில், தண்ணீரில் இரவு முழுவதும் முழு நிர்வாணமாக நிற்க வைத்தனர்.

உடனடியாக அங்கு விரைந்த ஆயுதப்படை போலீசார் தங்கள் ஆட்டத்தை தொடங்கினர். தெருவில் கண்டவர்களை எல்லாம் அடித்து துவைத்தனர். வீடுகள், கடைகள், பொருட்களையும் சேதப்படுத்தினர். 150க்கும் மேற்பட்ட கடைகள் கொள்ளையிடப்பட்டும் தீயிடப்பட்டும் நாசமாக்கப்பட்டன. அருகிலிருந்த கோயிலுக்கும் தீவைத்தனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி முன்னாள் எம்.பி வெற்றிவேல் யோகேஸ்வரன் வீட்டை

காவல்துறையே இடித்தது. தீயிட்டுக் கொளுத்தியது. அவர் மனைவியுடன் பின் வாசல் வழியாக தப்பினார்.

ஈழநாடு பத்திரிகை அலுவலகத்துக்கு தீயிட்டு, அதன் ஆசிரியர் எஸ். எம். கோபாலரத்தினத்தை கொடூரமாக தாக்கினர். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயமும் தீ வைத்துப் பொசுக்கப்பட்டது.

நான்கு தமிழர்கள் நடுவீதிக்கு இழுத்து வரப்பட்டு கடும் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணப் பெரிய கடை வீதியில் நின்றிருந்த திருவள்ளுவர் சிலை, ஔவையார் சிலை, சோமசுந்தரப் புலவர் சிலைகள் உடைத்தெறியப்பட்டன. போலீசாருடன் சேர்ந்து நூற்றுக்கணக்கான சிங்களக் காடையர்களும் கொள்ளை, சித்திரவதை, பொருட்சேதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாண விருந்தினர் விடுதியில் இருந்தபடி சிறில் மேத்யூ, காமினி திசாநாயக ஆகியோர் அவர்களை இயக்கிக்கொண்டிருந்தனர். அவசரகால சட்டம் அமலில் இருந்த நிலையில் தான் இந்த அட்டகாசம் நடந்தது.



பாலசிங்கம்

**1981** ஜூன் 1ல் மிக கொடூரமான சம்பவம் நடந்தது. ஓர் இனத்தை அழிக்க வேண்டுமென்றால், அதன் மொழியை முதலில் அழிக்கவேண்டும் என்பார்கள். அதற்கேற்ப திட்டமிட்ட சிங்கள காடையர்கள், ஆசியாவில் புகழ்பெற்ற அறிவுச்சுரங்கமாக இருந்த யாழ்பாண நூலகத்துக்கு தீவைத்தனர். 97000 நூல்கள், ஓலைச்சுவடிகள் எரிந்து சாம்பலாயின.

யாழ் நூலக எரிப்பின் மறுநாளான ஜூன் 2ல் அரசு ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பித்தது. ஆனாலும், அந்த சட்ட நடவடிக்கைகள் அரச பயங்கரவாதத்தை காடையர்கள் துணையுடன் கட்டவிழ்கவே உதவியது. கூடுதலான கொடூரச்செயல்கள் அரங்கேறின.

யாழ் நூலக எரிப்பில் சம்பந்தப்பட்ட சிறில் மேத்யூ சிங்களர் மத்தியில் ஒரு ஹீரோ ஆனார். அந்த தெம்பில் 1983 கருப்பு ஜூலை கலவரத்திலும் தீவிரமாக ஈடுபட்டார்.

இந்த 1981 கொடுஞ்செயலின் போது பிரபாகரன் தமிழ்நாட்டில் இருந்தார். காரணம், அதற்கு முன்பே பிரபாகரன் தலைக்கு

இலங்கை அரசாங்கம் 10 லட்சம் பரிசு அறிவித்திருந்தது. பிரபாகரன் தமிழ்நாட்டில் தலைமறைவாக இருந்தபோது மாத்தையா, சீலன், குண்டப்பா (ரகு) ஆகியோர் இயக்கத்தை வழிநடத்தினர். அவர்களில் மாத்தையாவே பிரபாகரன் இல்லாத போது இயக்கத்திற்கு தலைமை தாங்கினார்.

அவர்களில் ரகு, மாத்தையா மட்டுமல்ல, சதாசிவம் என்ற கிட்டுவும் 1978 இறுதியில் தான் இயக்கத்தில் இணைந்திருந்தனர்.

அதே காலகட்டத்தில்... கியூபாவில் 1979ல் நடந்த உலக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மாநாட்டில் விடுதலை புலிகள் பிரதிநிதிகளுக்கு உரையெழுதிக்கொடுத்து உள்நுழைந்தவர்தான் அண்டன் பாலசிங்கம்.

அதற்கு முன்பு அவர் பத்திரிகையாளர். வீரகேசரியின் ஆசிரியர். பிரிட்டீஷ் தூதரகப்பணியில் இருந்தவர். மனைவி இறந்த நிலையில் அடேல் என்ற ஆஸ்திரிய நர்ஸை திருமணம் செய்து கொண்டு லண்டனில் வாழ்ந்து வந்தார்.

அதற்கு பின்பே பொட்டு அம்மான், சூசை போன்றோர் இயக்கத்தில் சேர்ந்தனர். அதுவரை அரசியல் பணிக்காக


காங்கேசன் துறைமுகம்

ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்திருந்த பிரபாகரன், அதை மீண்டும் தொடங்கினார். இலங்கை ராணுவத்திற்கு எதிராக கடும் தாக்குதல்களைத் தொடுக்குமாறு உத்தரவிட்டார். இதையடுத்து விடுதலைப் புலிகள் மீண்டும் வேகத்துடன் கிளம்பினர். அதுவரை துரோகிகள், போலீசாரை மட்டுமே தாக்கிய அவர்கள் முதன்முதலாக 1981ல் ராணுவத்தை தாக்கி இலங்கை அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர்.

காங்கேசன்துறை வீதியில் இருந்த ராணுவ முகாமை தாக்கி 2 ராணுவ வீரர்களை கொன்றனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களை பறித்துச் சென்றனர். இதுதான் புலிகளின் முதல் ராணுவ எதிர்ப்புத் தாக்குதல்.

**–தொடரும்**

**வரிப்பையூரான்**

# அரசியல்ல... இது சாதாரணமப்பா


ஜோதி மணி

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக கே.எஸ். அழகிரி செயல்பட்டு வருகிறார். காங்கிரஸ் மேலிடம் அழகிரி மீது அதிருப்தி அடைந்துள்ளது என்று கூறப்படுகிறது. மாநில காங்கிரசுக்கு விரைவில் புதிய தலைவர் நியமிக்கப்படுவார் என்று சொல்லப்படுகிறது. பரிசீலனைப்பட்டியலில் ஜோதி மணி எம்.பி. உள்ளிட்டோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

சுற்றுச்சூழல் மாசுக்கு பிளாஸ்டிக்கும் முக்கிய காரணம் என்று கருதப்படுகிறது. பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிப்பதில் சிக்கிம் முதலிடத்தில் உள்ளது. வருகிற 2022ம் ஆண்டில் இருந்து சிக்கிம் மாநிலத்தில் பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டிலுக்குத் தடை என்று


சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங் அறிவித்துள்ளார். வட கிழக்கு மாநிலங்களில் மூங்கில் தண்ணீர் பாட்டில்கள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றை அதிகப்படுத்த ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இதனால் மூங்கில் சார்ந்த பொருளாதாரம் செழுமை அடையும்.

மத்தியப் பிரதேசத்தில் ஒரு மக்களவை, 3 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 30-ம் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. தேர்தல் பிரசாரத்தில் அனல் பறக்கிறது.காங்கிரஸ் மூத்த தலைவர் கமல்நாத்தின் (72) உடல்நிலையை சுட்டிக் காட்டி, அவரைவிட 10 வயது இளையவரான முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் விமர்சனம் செய்து வருகிறார். இதற்கு எனக்கு வயதாகிவிட்டது. அடிக்கடி நோய்வாய்ப்படுகிறேன் என்று முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் விமர்சனம் செய்து வருகிறார். இப்போது அவருக்கு பகிரங்கமாக ஒரு சவால் விடுகிறேன். என்னோடு ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்க அவர் தயாரா? என்று கமல்நாத் பதிலடி கொடுத்துள்ளார்.


சிவராஜ் சிங் சவுகான்


கமல்நாத்

# பீம்லா நாயக் அப்டேட்!



மலையாளத்தில் பிரித்விராஜ் மற்றும் பிஜூ மேனன் நடிப்பில் ஹிட் அடித்த 'ஐயப்பனும் கோஷியும்' படம் பல மொழிகளில் ரீமேக் ஆகிறது. தெலுங்கில் பவன் கல்யாண் , ராணா நடிக்க அவர்களுக்கு ஜோடியாக நித்யா மேனன், ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கின்றனர். இந்த படத்திற்கு 'பீம்லா நாயக்' என்ற டைட்டில் வைத்துள்ளனர்.

ஏற்கனவே 'பிங்க்' ரீமேக்கான 'வக்கீல் சாப்' படத்தில் நடித்த பவன் கல்யாண், தொடர்ந்து ரீமேக் படங்களில் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் இந்த படத்தின் 2வது சிங்கிள் அப்டேட் வெளியாகி ரசிகர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# பிரியங்காவின் செண்டிமெண்ட்!



பாலிவுட், ஹாலிவுட் என கலக்கிக் கொண்டிருக்கும் நடிகை பிரியங்கா சோப்ரா, தன்னை விட 10 வயது குறைந்த அமெரிக்க பாடகர் நிக் ஜோன்ஸை திருமணம் செய்து கொண்டார். நிக் கிருஸ்துவராக இருந்த போதும், தனது இந்து மத செண்டிமெண்ட்க்கு மரியாதை கொடுப்பதாக பிரியங்கா சொல்கிறார்.

'இறைவனை அடைய கடவுள் வழிபாடு தான் ஒரே வழி. நம்ம நோக்கம் அதைப் பற்றியே இருக்கணும். அந்த விஷயத்தில் அவரும் நானும் ஒரே மாதிரி யோசிப்போம். இதுதான் எங்க வாழ்க்கையின் சக்சஸ் பார்முலா' என்கிறார் பிரியங்கா.



# பாலியல் வக்கிரத்தால் சிதையும் குடும்பங்கள்!

காதல் சக்கரம் எளிதாய் சுழல மசகு போன்றது பாலுறவு. கணவன், மனைவி உறவில் தாம்பத்யம் என்பது பண்பான பெயரை தாங்கி நிற்பது. ஆனால், முறையற்ற பாலுறவு இச்சையில் சிக்கி, குடும்ப மாண்பை பலரும் குலைத்து விடுகின்றனர்.

சமீபத்தில், வரை கடந்த பாலுறவு காரணமாக கர்நாடகா தொழிலதிபரை அவரது குடும்பத்தினரே காருடன் எரித்துக்கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சாகர் பகுதியில் மூலிகைப்பொருள்களை தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வந்த வினோத்துக்கு வினுதா என்ற மனைவியும், விவேக், வினோத் என இரண்டு மகன்கள் உள்ளனர். செப்டம்பர் 29ஆம் தேதி தீர்த்தஹள்ளி வனப்பகுதியில் பாதி எரிந்த காருக்குள் வினோத் சடலமாக கிடந்துள்ளார்.

இதற்கிடையில் வினோத் காணாமல் போனதாக அவரது குடும்பத்தில் இருந்து யாரும் காவல்நிலையத்தில் புகார் தெரிவிக்கவில்லை. அது போலீசுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதுகுறித்து வினோத் மனைவி மற்றும் மகன்களிடம் விசாரணை மேற்கொண்டனர். தொழில் சம்பந்தமாக கடலோர பகுதிக்கு செல்வதாக அவர் கூறிவிட்டு சென்றதாக அவரது மனைவி கூறினார். அவரது மகன்கள் வேறுவிதமாக கூறினர்.

இதனையடுத்து போலீஸார் தங்களது விசாரணையை தீவிரப்படுத்தியதில், வினோத்துக்கு வேறு ஒரு பெண்ணுடன் தவறான பழக்கம் இருந்தது தெரியவந்தது. அந்தப்பெண் சொத்தை அபகரிப்பார் என்ற அச்சத்தில் அவரது மனைவி, மகன்கள், வினோத்தின் தம்பி மற்றும் உறவினர் ஒருவர் சேர்ந்து அவரை அடித்துக் கொலை செய்துள்ளனர். இரண்டு நாள்கள் கழித்து வினோத்தின் உடலை



தொழிலதிபர் வினோத்

காரில் எடுத்துச் சென்று எரித்துள்ளனர்.

திருப்பத்தூர் நாட்றம்பள்ளியைச் சேர்ந்த சிலம்பரசன் - பிரியங்கா தம்பதிக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். சிலம்பரசன் வேலைக்கு சென்ற இடத்தில் மற்றொரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டு, அப்பெண் 5 மாத கர்ப்பிணி ஆகியுள்ளார். இதனை பிரியங்கா தட்டிக் கேட்டதால் சிலம்பரசன், அவரது தந்தை ரவிசந்திரன் மற்றும் தாயார் கலா ஆகியோர் சேர்ந்து, பிரியங்காவை கழுத்தை நெரித்துக் கொன்று, உடலை மின்விசிறியில் தூக்கு மாட்டி தொங்க விட்டுள்ளனர்.

செஞ்சி ராஜகிரி கோட்டை மலை அடிவாரத்தில் உள்ள சிவன் கோவில் அருகே கடந்த மாதம் ஏழாம் தேதி வாலிபர் ஒருவர் இறந்து கிடந்தார். போலீஸ் விசாரணையில் விக்கிரவாண்டி அருகே


லியோபால்- சுஜித்ராமேரி


பிரியங்கா - சிலம்பரசன்

உள்ள பனையபுரத்தை சேர்ந்த ராஜேந்திரன் மகன் ராதாகிருஷ்ணன் (24) என்பதும், அவருக்கும் லியோபால் என்பவரின் மனைவிக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததும் தெரியவந்தது. இவர்களது கள்ளக்காதலுக்கு இடையூறாக இருந்ததால் இருவரும் சேர்ந்து லியோபாலை கொலை செய்து வீட்டின் பின்புறத்தில் உள்ள தோட்டத்தில் புதைத்தனர்.

இதனை தொடர்ந்து ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு ஜாமீனில் வந்த ராதாகிருஷ்ணன் செஞ்சிக் கோட்டையில் விஷம் குடித்து தற்கொலை செய்துள்ளார்.

இப்படி தகாத உறவால், உறவுக்குரியவர்கள் மட்டுமின்றி விவரம் புரியாத உயிர்களும் பலியாகின்றன.

பொள்ளாச்சியை சேர்ந்த மணிகண்டன் - சரோஜினி தம்பதிக்கு 3 வயதில் பெண் குழந்தை இருந்தது. கடந்த

14-ஆம் தேதி குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை எனக் கூறி, சரோஜினி அரசு மருத்துவமனைக்கு குழந்தையை எடுத்துச் சென்றுள்ளார். பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.


சரோஜினியின் குழந்தை

இது தொடர்பாக காவல்துறையினர் விசாரணை நடத்தியதில், சரோஜினிக்கும் பொம்மன் என்பவருக்கும் இடையே தொடர்பு இருப்பது தெரியவந்தது. திருமணத்தை மீறிய உறவுக்கு குழந்தை தடையாக இருந்ததால், குழந்தையை கொலை செய்துவிட்டு நாடகமாடியது அம்பலமானது.

**க**ர்நாடக மாநிலம் ஹலசூரு பகுதியை சேர்ந்த கீதா கணவரை பிரிந்து கடந்த 6 வருடங்களாக தனியாக தன் இரண்டு குழந்தைகளுடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில், அந்த பகுதியில் ஆட்டோ ஓட்டிய சக்திவேல் என்பவருடன் கீதாவுக்கு ஃபேஸ்புக் மூலம் பழக்கம் ஏற்பட்டு, கள்ளக்காதலாக மாறிவிட்டது.


சரோஜினி

சக்திவேல் அடிக்கடி வீட்டுக்கு வருவதும், தன் அம்மாவிடம் நெருங்கி பழகுவதும், கீதாவின் 17 வயதுமகனுக்கு பிடிக்கவில்லை. அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளான். பலமுறை தன்னுடைய அம்மாவிடமே இதை பற்றி தட்டி கேட்டு, சக்திவேல் வீட்டிற்கு வரும்போதெல்லாம் அவருடன் சண்டை போட்டு உள்ளான்.

அப்படித்தான் கடந்த 4-ம் தேதி இரவு, கீதாவை பார்ப்பதற்காக சக்திவேல் வீட்டிற்கு வந்துள்ளார். இதனால்சக்திவேலுடன் சண்டை போட்டுள்ளான் சிறுவன் . அதனால் ஆத்திரமடைந்த சக்திவேல், கிச்சனுக்கு சென்று கத்தியை எடுத்த வந்து சிறுவனை குத்தி கொன்று விட்டார்.

பெற்ற தாய் செய்த காரியத்தினால், சிறுவன் அநியாயமாக பலியாகிவிட்டான்.

**க**ள்ள உறவு மட்டும் பாலியல் வக்கிரமல்ல, அது

போன்ற சந்தேகமும் வக்கிரமான நினைவுதான். பலரும் தனது திறமையின்மையாலோ, இணையரின் ஈடுபாட்டாலோ, தவறாக நினைத்து கற்பனை செய்கின்றனர். சிந்தனை தாறுமாறாகவே அவர்களை கொல்லவும் துணிந்துவிடுகின்றனர்.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அடுத்த ஜோகிர்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி முருகன் (55). இவரது மனைவி சின்னபாப்பா (45) நடத்தையில் சந்தேகப்பட்டு தகராறு செய்துள்ளார்.

இந்த நிலையில் தனது தாயை காணவில்லை என அவரது இரண்டாவது மகன் நாகராஜ் தனது தந்தையிடம் கேட்டுள்ளார். அதற்கு தாயை கழுத்தை நெரித்து கொன்றுவிட்டதாக கூறியுள்ளார். அதிர்ச்சியடைந்த மகன் மகேந்திரமங்கலம் போலீஸ் ஸ்டேசனுக்கு தகவல் அளிக்க, முருகனை போலீசார் கைது செய்தனர்.

**கோ**வை வேலாண்டி பாளையம் மஞ்சேஸ்வரி காலனி பகுதியில் ஆட்டோ ஓட்டுநனரான ஆனந்தகுமாரை, 'ஏன் வேறு ஒரு


ஆனந்தகுமார்

பெண்ணுடன் பேசிக் கொண்டிருக்கிறாய்?' எனக் கேட்டு மனைவி தகராறு செய்துள்ளார். ஆனந்தகுமார் கத்தியால் மனைவியின் கழுத்தில்குத்தி கொலை செய்துவிட்டார்.

**ரா**மநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே, கணவர் மாடசாமியின் சந்தேகம் காரணமாக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து வாழ்ந்த மனைவி ராதிகா (26), உறவினர்கள் சமாதானம் செய்ததையடுத்து 6 வயது மகனுக்காக கணவருடன் சேர்ந்து குடும்பம் நடத்தினார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ராதிகாவின் கழுத்தில் அணிந்திருந்த தாலியை யாரோ அறுத்து சென்று விட்டனர். அதனால் சந்தேகம் அடைந்த மாடசாமி, தூங்கிக் கொண்டிருந்த ராதிகாவின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார்.

**தி**ருமணத்திற்கு முன்பு தவறான உறவுகளில் ஈடுபடுவதை விட திருமணம் நடந்த பின்பு அந்நியர்களோடு தொடர்பு கொள்வது மோசமானதாக அமையும். இதனால் குடும்பமே பாதிக்கப்படும். இதில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே. அவர்கள் கொலை

செய்யப்பட்டாலும், தற்கொலை செய்து கொண்டாலும் குழந்தைகள் அனாதைகளாகின்றன.

இப்படி நாளுக்கு நாள் குடும்பம் சார்ந்த குற்றங்கள் அதிகரிக்க காரணம் நேர்மறையான பார்வை இல்லாமை தான். கொலை செய்யக்கூடியவர்கள் எப்போதும் பொறாமை மற்றும் கட்டுப்படுத்தும் குணம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

இவ்வாறான வன்முறையின் அறிகுறி ஆத்திரம், கூச்சல். தீவிர உணர்ச்சிகரமான நடத்தைகளை கட்டுப்படுத்த இயலாமையே இதற்கு காரணம். கணத்தில் ஏற்படும் மனக்கிளர்ச்சி காரணமாகவே இது நடக்கிறது.

தகாத உறவில் இருப்பவர்களுக்கு அந்த உறவுதான் மகிழ்ச்சியை அளிப்பதாக எண்ணம் இருக்கும். தனது மகிழ்ச்சிக்கு தடையாக இருப்பது யார் என்று சிந்திக்கும் போது, முதலில் மனைவி அல்லது கணவரையே நினைக்கிறார்கள்.

தங்கள் துணை வேறொருவருடன் பழகும்போதும், அவர்கள் எதிர்பாலினத்தவருடன் அதிக


கூலித் தொழிலாளி முருகன்

நேரத்தை செலவிடும் போதும் ஏற்படும் அதீத பொறாமையும் ஆபத்துக்கு காரணமாகிறது.

ஜாதி, மதம், பணம் என பல பொருத்தங்கள் பார்ப்போர், ஒத்த மனப்பொருத்தம் உண்டா என்று பார்க்கத் தவறிவிடுகின்றனர். இதனால் முரண்பாடு ஏற்பட்டு, அது முற்றும் நிலையில், தனது விருப்பத்தோடு ஒத்துப் போகின்ற ஒருவரை தேடுகின்றனர்.

வறுமையும் இத்தகைய தவறுக்கு காரணமாகிறது. குடிகார, ஊதாரிக் கணவனால் ஏற்படும் வேதனைகளை வெளிப்படுத்தவும் ஆறுதல் தேடவும் புதிய துணையை பெண்ணும் ஏற்படுத்த முனைகிறாள். தாம்பத்ய வாழ்வில் நிறைவு காண முடியாத நிலையிலும் மாற்று பாதையில் பயணம் செய்யத் தொடங்கு கிறார்கள்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த பிரபல மன நல நிபுணர் சிநேகா பன்னீர் செல்வம், ‘‘எக்ஸ்ட்ரா மாரிட்டல் அஃபயர்ஸ் என்னும் இந்த நட்பு, கணவர், மனைவி தங்களுக்குள் உரையாட போதுமான நேரம் ஒதுக்காமை,

**தொடர்ச்சியான போதைப் பழக்கம் குடும்ப உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம். மனைவியை கொலை செய்த கணவர்களில் 60 சதவீதத்தினருக்கு மேல் போதைக்கு அடிமையான வர்களாக இருக்கின்றனர்.**

அன்பாக பேசாமை, நீண்ட இடைவெளியை ஏற்படுத்துதல் போன்றவற்றால் ஏற்படுகிறது.

எப்போதும் வேலை, பண சம்பாத்தியம் என்றிருக்கும் கணவரிடமிருந்தும் மனம் மாறுகிறார்கள். பாதுகாப்பான உணர்வின்மை சிலரை பாதை மாற வைக்கிறது. என் கணவரை போலன்றி இவர் வித்தியாசமானவராக இருப்பார் என்ற எதிர்பார்ப்பும் ஈடுபாட்டுக்கு காரணமாகிறது. குடிப்பழக்கம், உறவில் ஈடுபாடின்மை போன்றவையும் விலகிச்செல்ல காரணமாகிறது.

அதிகம் பழகிய பின்பு இது ஆழ்மனதில் பதிந்து அடிக்ஷன் ஆக்கிவிடுகிறது. மாற்று உறவின் பேச்சு திறமை, உறவுத் தன்மை போதைப்பழக்கம் போல் மனதை ஆட்கொண்டு விடுகிறது. இதனால், அதை விட்டுவிடுமாறு கண்டிக்கும்போது போதை தலைக்கேறினாற்போல் உணர்வு பெற்று கட்டுப் பாட்டை இழக்கிறார்கள். பின்விளைவை மறந்துவிடுகின்றனர்.

சில பெண்களுக்கு ஹைபர் செக்சுவல்பெர்சனாலிட்டி எனப்படும் அதீத மோக உணர்வு இருக்கும். இவர்கள் இயல்பாகவே ஒருவருக்கு மேற்பட்ட உறவை விரும்புகிறார்கள். ஆனால், நூற்றிலொருவர் தான்இப்படி இருப்பார்கள். சில சமூக வலைத்தளங்களும், போர்னோ வெப்சைட்டுகளும் இந்த வெறியுணர்வை தூண்டுகின்றன.

கணவரும் மனைவியும் மனம் விட்டு அடிக்கடி பேசிக் கொண்டால் இந்த பிரச்சினைக்கே இடமில்லை. ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டாலும், அன்பும் நல்லுறவும் கொண்டாலும் இந்த பேச்சுக்கே இடமில்லை. பாலுணர்வு உப்பு போலத்தான். உணவுக்கு உப்பு முக்கியம். ஆனால், உப்பையே உணமாக உண்ண முடியாது. இதை உணர்ந்து கொண்டால் பாலியல் வக்கிரத்தால் குடும்பம் சீர் குலையாது'' என்றார்.


**-நெல்லை பரிதி.**

# கேத்ரின் தெரசா கான்செப்ட்!



தமிழில் பீல்டு அவுட் ஆன போதும் தெலுங்கில் சில படங்களை கைவசம் வைத்திருக்கும் கேத்ரின் தெரசா, அம்சமாக சேலையை உடுத்தி சோபாவில் அமர்ந்தபடி போஸ் கொடுத்த போட்டோ ஒன்று இன்ஸ்டாவில் வைரல் ஆகியுள்ளது. அந்த புகைப்படத்தில் 'புடவை இல்லாமல் இண்டியன் லைஃப் ஸ்டைலில் வாழுறது கஷ்டம்' என்று கேப்ஷன் கொடுத்திருக்கிறார்.

# ராஷ்மிகாவின் பங்களா ஆசை!



கர்நாடகாவில் உள்ள குடகு பகுதியில் தன் பெற்றோருடன் பங்களாவில் வசித்து வந்த ராஷ்மிகா மந்தனா, தெலுங்கு பட வாய்ப்புகள் குவியத் தொடங்கியதால், ஐதராபாத்தில் உள்ள கச்சி ல்பவுல் என்ற பகுதியில் புதிய பங்களா வாங்கி அங்கு தங்கி சினிமாவில் நடித்து வந்தார்.

அடுத்து பாலிவுட் வாய்ப்புகள் அணிவகுக்கத் தொடங்கியதால், மும்பையில் அபார்ட்மெண்ட் பங்களா வாங்கி, தன் செல்ல நாய்க்குட்டியுடன் போட்டோ எடுத்து ட்வீட்டினார்.

இந்நிலையில், தற்போது கோவாவில் சொகுசு பங்களா வாங்கியிருக்கிறார் ராஷ். ஒரே வருடத்தில் அவர் மூன்று பங்களா வாங்கியிருக்கிறார். ஐதராபாத், மும்பை சரி, கோவாவில் அவர் பங்களா வாங்க என்ன காரணம் என கிசுகிசுகிறது சினிமா வட்டாரம்.

தேவியின் கண்மணி
மலர்-33 vol-33 மணி-38 Issue-38

Published by R.Kannan Adityan on behalf of Murasu Publications from No.246, Anna Salai, Thousand Light Chennai-6 and Printed by R.Kannan Adityan at Deviyin Kanmani Achagam, 246, Anna Salai, Thousand Light, Chennai-6 Editor:R.Kannan Adityan



மாலை முரசு தொலைக்காட்சியில்
முரசரங்கம்
உண்மையை அறிவோம்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை இரவு 7.00 மணிக்கு
மறு ஒளிபரப்பு இரவு 10 மணிக்கு
அன்றைய முக்கிய செய்தியின்
விவாத அரங்கம்
மறக்காமல் பாருங்கள் தொலைக்காட்சியில்
DTH அலைவரிசை எண்கள் :
TATA sky 1566
airtel 793
videocon 556
dishtv 556
146
TCCL 60
130
112
172
JAK 87
MV Digital (Puducherry) 563
Digizen 212
Ushai Digital (Madurai) 45
Gold Network 141
Whitefield Network 153
Sivakami Amman Digital 190
Apple Network 96
SrV Communication 108
CTN 27
Multistar Digital 165
Pollachi Digital 80
NGC Digital 232
Amma Cable 48
Sai TV 180
Pollachi Digital 80
NGC Digital 232
Amma Cable 48
Sai TV 180

Deviyin KANMANI-Tamil Weekly 20-10-2021 Registered With Registrar of News papers for India
Under No.49510/89 published every Wednesday of every Week.

